# காடவர் வன்னியர் வரலாறு



CPL 780668

மெய்யப்பன் பதிப்பகம்

நடன. காசிநாதன்

# காடவர் வன்னியர் வரலாறு

(கி.பி. 1076 - கி.பி. 1279)

தொல்லியலறிஞர்

**நடன. காசிநாதன்**

தமிழ்நாட்டரசு தொல்லியல் துறை மேனாள் இயக்குநர்

**மெய்யப்பன் பதிப்பகம்**

53, புதுத்தெரு, சிதம்பரம்-608001.

முதல் பதிப்பு : செப்டம்பர், 2012

திருவள்ளுவர் ஆண்டு : 2043

உரிமை : ஆசிரியர்க்கு

**விலை : ரூ. 100.00**

மெய்யப்பன் பதிப்பக வெளியீட்டு எண் : 449

நினைவில் வாழும்
நிறுவனர்



**ச. மெய்யப்பனார்**

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் 'தமிழவேள்' என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் 'செந்தமிழ்க் காவலர்' என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

'பதிப்புச் செம்மல்' என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

*கிடைக்குமிடங்கள்:*

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேலச் சன்னதி, சிதம்பரம் - 608001. ✆:04144-230069

31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600108. ✆:044-25361039

6, சிவஞானம் தெரு, தி. நகர், சென்னை - 600017. ✆:044-24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625001. ✆:0452-2622853

15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641001. ✆:0422-2397155

296/134, செரி சாலை, சேலம் - 636007. ✆:0427-4030709

28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620002. ✆:0431-2706450

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை – 600 021, தொலைபேசி : 25954528

# பதிப்புரை

குறுநில மன்னர்களின் வரலாற்றை உரிய சான்றுகளுடன் வெளிக்கொணர்வதில் இந்நூலாசிரியருக்குக் கொள்ளை ஆசை. குறுநில மன்னர் 1. களப்பிரர் (முதல் பதிப்பு 1981, இரண்டாம் பதிப்பு 2008) பற்றி எழுதத் தொடங்கி, 2. முத்தரையர் (முதல் பதிப்பு, 1976, இரண்டாம் பதிப்பு 1994, மூன்றாம் பதிப்பு, 2012), 3. வன்னியர் (முதல் பதிப்பு, 2001, இரண்டாம் பதிப்பு 2008), 4. வன்னியப் பாளையக்காரர்கள் (வன்னியர் மாட்சி, முதல் பதிப்பு, 2005, இரண்டாம் பதிப்பு, 2010), 5. சோழவேந்தர் பரம்பரை வன்னியப் பாளையக்காரர் வரலாறு (முதல் பதிப்பு 2004, இரண்டாம் பதிப்பு, 2009) 6.தென் பகுதிப் பாலையக் காரர்கள் (வன்னியர்) வரலாறு (2011) எனத் தொடர்ந்து ஆறு நூல்களைப் பல்வேறு குறுநிலத்தலைவர்கள் பற்றி எழுதியிருக்கிறார். **'காடவர் வன்னியர் வரலாறு'** என்னும் இந்நூல் எம் பதிப்பகத்தால் வெளியிடப் பெறும் நான்காம் நூலாகக் குறுநில மன்னர் வரிசையில் வெளிவருகிறது.

குறுநில மன்னர் வரலாறுகள் ஆங்கிலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் எம். எஸ். கோவிந்தசாமி அவர்களால் குறுகிய அளவில் எழுதப்பெற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப் பெற்றிருக்கிறது. இந்நூலின் ஆசிரியரான **தொல்லியலறிஞர் நடன. காசிநாதன் ஐயா** தான் குறுநில மன்னர்கள் பற்றி தமிழில் தொடர்ந்து தனித்தனி நூலாக எழுதி வருகிறார். ஆதலால் இவ்வாசிரியர் பெருமானைக் **'குறுநில மன்னர் வரலாற்றுக் குரிசில்'** என்றே அழைத்து நாம் பாராட்டலாம்

**'காடவர் வன்னியர் வரலாறு'** என்னும் இந்நூல் 'நடுநாட்டில்,' குறிப்பாகத் திருமுனைப் பாடி நாட்டில் ஆட்சிபுரிந்த ஒரு சிற்றரசர் பற்றியதாகும். அச்சிற்றரசில் சிறந்தவர்களாக விளங்கிய **முதலாம் கோப்பெருஞ்சிங்கனும் அவரது மகன் இரண்டாம் கோப்பெருஞ் சிங்கனும்** முறையே சிதம்பரம் தெற்குக் கோபுரத்தில் திருப்பணி புரிந்து கோபுரத்தில் நிலைகளை அதிகப் படுத்தியும், கிழக்குக் கோபுரத்தை எடுப்பித்தும் அறப்பணி புரிந்திருப்பது, நான் அவ்வூரைச் சார்ந்தவன் என்ற முறையில் எமக்குப் பெருமை சேர்ப்பதாக உள்ளது. இந்நூலாசிரியரும் எம் தந்தையும் நானும் தமிழ் நாட்டில் நன்கு அறிமுகமானவர்களாக இன்று விளங்குவதற்கு வழி வகுத்துத் தந்த சிதம்பரத்தையே சேர்ந்தவர்கள் என்பதால் எமக்கு மேலும் மகிழ்ச்சியைத் தருகிறது. ஆதலால் தான் இவர் சிதம்பரம் கோபுரங்களுக்கும், அவற்றில் செதுக்கப் பெற்றுள்ள நாட்டியக் கரணச் சிற்பங்களுக்கும், கோப்பெருஞ் சிங்கர்கள் சிற்பங்களுக்கும், கோபுரத்தை உருவாக்கித் தந்த சிற்பிகளுக்கும், காடவர் அரசுச் சின்னமான 'காளை' ச் சிற்பங்களுக்கும் உரிய முக்கியத்துவம் நூலில் தந்து நூலை உருவாக்கியிருக்கிறார். அதன் காரணமாகவும் இந்நூலாசிரியரை நாம் எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். வாழ்க அவர் புகழ்! வளர்க இவர்தம் நூலாக்கப்பணி !!

இவண்,

**ச. மெ. மீனாட்சி சோமசுந்தரம்.**

# நூலாசிரியர் முன்னுரை

**'காடவர் வன்னியர் வரலாறு'** என்னும் இந்நூல், தமிழ்நாட்டில் கி.பி. 11ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 13ஆம் நூற்றாண்டு முடிய நடுநாட்டுப் பகுதியில் (அதாவது தென்பெண்ணை ஆற்றுக்கும் வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட பகுதியில்), தொடக்கத்தில் ஒரு சிறு பகுதியைத் தங்களது ஆளுகைக்கு உட்பட்ட பகுதியாகக் கொண்டிருந்தவர்கள், தங்களது ஆட்சியின் இறுதிக் காலத்தில் காவிரி ஆற்றின் தென் பகுதியில் ஒரு குறிப்பிட்ட பகுதி முடிய தம் ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்திய குறுநில வேந்தர்களைப் பற்றியதாகும். சிற்றரசர்களாக உயர்ந்து ஆட்சி புரிந்த நேரத்தில் பெரும் சோழப் பேரரசையே நிலை குலையச் செய்யும் அளவுக்கு உயர்ந்தவர்கள் ஆவர்.

இவர்கள் முதலில் பெருகனூர் நாட்டுப் பிரிவில் இருந்த கூடலூர் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்தவர்கள் பிற்காலத்தில் தற்போதையக் கடலூர் மாவட்டத் தலைநகரான கூடலூரைத் தங்களது தலைநகரமாக ஆக்கிக் கொண்டனர். அவ்வாறு இருப்பினும் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கெடிலம் நதியின் தென்பகுதியில் அமைந்திருந்த சேந்தமங்கலத்தில், முதலாம் கோப்பெருஞ்சிங்கனின் தந்தை மணவாளப்பெருமாள் காலத்தில் கோட்டை, அரண்மனை, கற்கோயில் ஆகியவற்றை அமைத்துக் கொண்டு சிறப்புற ஆட்சி செய்திருக்கின்றனர்.

இக்காடவ அரசன் கோப்பெருஞ்சிங்கன் பற்றி, சோழர் கலை மற்றும் வரலாற்றுத் துறையில் புகழ்பெற்று விளங்கிய அறிஞர் எஸ் ஆர். பாலசுப்பிரமணியன் 1931–ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் ஓர் ஆய்வுக் கட்டுரையை எழுதியிருக்கிறார். அந்த ஆய்வுக் கட்டுரைக்கு (சங்கர பார்வதி அறக்கட்டளைச் சொற்பொழிவு) 'சங்கர பார்வதி பரிசு' வழங்கப்பட்டது. அச்சொற்பொழிவின் சுருக்கம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இதழின் (Journal of Madras University) 9,10 ஆம் தொகுதிகளில் வெளிவந்திருக்கிறது. அக்கட்டுரையை 1960 களில் சிறிது விரிவாகத் தமிழில் எழுதியிருக்கிறார். அது 14.1.1965இல் **'பேணு செந்தமிழ் வாழப்பிறந்த காடவன் கோப்பெருஞ்சிங்கன்'** என்ற பெயரில் சென்னை ஜீவன் அச்சகத்தால் 1965–ஆம் ஆண்டு நூலாக வெளியிடப்பட்டிருக்கிறது. அந் 'நூன்முகத்தில்' 'பேணு செந்தமிழ் வாழப்பிறந்த காடவன்' என்ற புகழ்பெற்ற கோப்பெருஞ்சிங்கன், இப்பதின்மூன்றாம் நூற்றாண்டில் (கி.பி. 1243–79) தமிழகத்தில் வாழ்ந்த பல்லவக்குரிசில் ஆவான். சோழ, பாண்டிய, போசள, காகதீய மன்னர்களோடு பல போர்கள் செய்து தன்னுடைய வீரத்தை நிலைநிறுத்தி அழிவுற்றிருந்த பல்லவ குலத்துக்குப் புத்துயிர் அளித்தான்" என்று எழுதியிருக்கிறார்.

இந்நூலுக்கு முகவுரை வழங்கிய அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரம், கோப் பெருஞ்சிங்கன், **'சோழ அரசினைச் சிதைத்தவன் என்ற நோக்கத் திலன்றிப், பழைய பல்லவப் பேரரசை மீட்டும் நிலை நிறுத்த முயன்றவன்'** என்ற புதிய கோணத்தில் ஆசிரியர் எழுதியிருக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியத் திருநாட்டின் நடுவண் அரசு தொல்லியல் பரப்பாய்வுத் துறை 1986–ஆம் ஆண்டில் தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி 12 இல் பல்லவர் கல்வெட்டுக்களை வெளியிட்டுள்ளது. அதே தொகுதியில் இரண்டாம் பிரிவில், **காடவர் கல்வெட்டுக்களை**, குறிப்பாக முதலாம் கோப்பெருஞ்சிங்கன் மற்றும் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் ஆகியோர் காலக் கல்வெட்டுக்களையும் மற்றும் பிறசேர்க்கை – அ, ஆ (Appendix - A,B) இல் காடவர் பற்றி குறிப்பிடப்பெறும் மற்ற மன்னர்கள் காலத்துக் கல்வெட்டுக்களையும் தந்திருக்கிறது. அதே நூலில் அறிமுக உரையில் காடவர் வரலாறு பேசப்பட்டிருக்கிறது. குறிப்பாக, அறிஞர் எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், காடவன் கோப்பெருஞ்சிங்கன் ஒருவனே என்று தெரிவித்திருந்த கருத்துக்கு மறுப்பாக, காடவன் கோப்பெருஞ்சிங்கன் என்ற பெயரில் இருவர் இருந்திருக்கின்றனர் என்று மறுத்து எழுதப்பட்டிருக்கிறது.

கோப்பெருஞ்சிங்களது கல்வெட்டுக்கள் அனைத்தையும் ஆய்ந்து பார்க்குமிடத்து நடுவணரசு தொல்லியல் துறை தெரிவித்திருக்கும் கருத்து சரியெனப்படுகிறது.

அண்ணாமலைப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியராக விளங்கிய டாக்டர் எம் எஸ. கோவிந்தசாமி தம் சோழர் காலக் குறுநில மன்னர்கள் (The role of feudatories in later Chola history), 1979 என்னும் நூலில் மேற்கூறப்பட்ட கருத்தை ஒட்டியே, காடவர்களது குறுகிய வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார் மேலும் அறிஞர் பெருமக்களான திருவாளர்கள் சோமசுந்தர தேசிகர், தி.வை சதாசிவ பண்டாரத்தார், கே வி எஸ் வைத்தியநாதன போன்றோர் காடவர்களது கல்வெட்டுக்கள் சிலவற்றை எடுத்து ஆய்வு செய்தும், சிறு கட்டுரைகள் எழுதியும் தங்களது பங்களிப்பைச் செய்திருக்கின்றனர்.

காடவர்களது வரலாற்றில் கருநாடக மாநிலத்து துவார சமுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த போசளர்கள் எத்தகைய பங்குப்பெற்றார்கள் எனபதைச் 'சகல வித்யாசக்ரவர்த்தின்' என்னும் புலவர் இயற்றிய 'கத்ய கர்ணாமிர்தம்' என்னும் நூல் (Gadyakarnamrta, Edited by Dr S.S. Janaki, 1981) விரிவாக விளக்கிச் சொலகிறது

காடவர்களின் தலைநகராக விளங்கிய சேந்தமங்கலத்தில் தமிழ்நாட்டரசு தொலலியல் துறை இந்நூலாசிரியரின் வழிகாட்டுதலில் 1995–ஆம் ஆண்டில் நிகழ்த்தப் பெற்ற அகழாய்வு அறிக்கையை டாக்டர் டி எஸ் ஸ்ரீதர் I.A.S, "Archaeological Excavations of Tamil Naud Vol-I" என்னும் நூலில் வெளியிட்டிருக்கிறார். அவ்வறிகைகை மூலம கி.மு 3ஆம நூற்றாண்டு முதல் சேந்தமங்கலப் பகுதி மக்கள் வாழ்விடப் பகுதியாக விளங்கியிருக்கிறது என்பது தெரியவந்திருக்கிறது.

மேற்கூறப்பெற்ற நூல்கள், கல்வெட்டுக்கள், ஆய்வுக் கட்டுரைகள், அகழாயவு அறிக்கை ஆகிய சான்றுகளின் அடிப்படையில் இந்நூலை நான் மேலும் விரிவாக எழுதியிருக்கின்றேன். இதில் முதல் இயலில் 'காடவர் – பல்லவர் ஒருவரே' என்றும், அவர்கள் 'பள்ளி' என்றழைக்கப் பெற்ற 'வன்னியரே' என்றும், பல சான்றுகளுடன் நிறுவியிருக்கிறேன். மேலும் கோப்பெருஞ் சிங்கனால் சிறைப்படுத்தப்பட்ட மூன்றாம் இராசராசனைச் சிறையிலிருந்து விடுவிப்பதற்கு போசள மன்னன் வீர நரசிம்மன், தானே நேரடியாகப் படை நடத்தி வந்தான் எனறு வரலாற்று ஆசிரியர்களால் கூறப்பட்டு வந்த கருத்தினை மறுத்து, வீர நரசிமமன் தன் படைத்தளபதிகளை அழைத்து, அவர்கள் காடவர் தலைநகரத்திற்குச் சென்று சோழ மன்னனை விடுவித்து வரவேண்டும் என்று ஆணைதான பிறப்பித்தான் அவன நேரிடையாக அப்போரில் பங்கு பெறவில்லை என்பதை விளக்கியிருக்கிறேன்.

இந்நூலின இரண்டாம் இயலில், கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் காடவர் காலச சமுதாயத்தில் நிகழ்ந்த பல அரிய நிகழ்ச்சிகளைத் தொகுத்து தந்திருக்கிறேன். மேலும் சிதம்பரத்து நடராசப் பெருமான் கோயிலின் தெற்குக் கோபுரத்தை, முதலில் கட்டியவன் பாண்டிய மன்னனே என்றும், பிற்கு அதனை முதலாம் கோப்பெருஞ்சிங்கன் திருப்பணி மட்டும் செய்து கோபுரத்தை மேலும் உயர்த்தினான் என்றும் குறிப்பிட்டிருக்கிறேன் அதேபோனறு சிதம்பரம் கோயிலின கிழக்குக் கோபுரத்தைக காடவ வேந்தன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் கட்டி முடித்தான் என்றும், அக்கோபுரத்து நுழைவாயில் உட்பக்க வடக்குச சுவரில் பெரிய அளவில் காணப்பெறும் இரு பெரிய மனிதச் சிற்பங்கள் முதலாம கோப்பெருஞ்சிங்கன மற்றும் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் என்று கொள்வதே சரியானதாகும் என்று கூறியிருக்கிறேன். அண்மையில் நான் சிதம்பரத்திற்குச் சென்று மீண்டும் ஒருமுறை இக்கோபுரத்தைப பார்வையிட்ட போது இக்கோபுரத்தில் தெற்குப் பக்க உட்பக்கத் தெற்குச் சுவரில் கீழ்ப் பகுதியில் இரு மனித உருவங்கள் செதுக்கப்பட்டிருப்பதைக் கண்டேன். அவர்களில் ஒருவர் தமது வலக்கையில் முழக்கோலை மார்போடு அணைத்துக் கொண்டிருக்கிறார். அவர் அக்கோயிலை உருவாக்கிய 'பெரும் சிற்பியாக' இருக்கலாம் அவருக்குப் பக்கத்தில் இருப்பவர்

அவருக்குத் துணையாக இருந்த சிற்பியாக இருக்கலாம். இவர்கள் பக்கத்தில் xʊ 'அளவுகோல்' காட்டப் பட்டிருக்கிறது. அதில் அளவுகளுக்கான கோடுகள் உள்ளன. இந்த அளவு கோலைக் கொண்டுதான் இக்கிழக்குக் கோபுரத்தை இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் அச்சிற்பிகள் கட்டித் தந்திருப்பார் என்று திடமாகக் கருதலாம். தற்போதுதான் இது முதன் முதலில் கண்டறியப்பட்டிருக்கிறது. இதே போன்று கோப்பெருஞ் சிங்கன்களின் சிற்பங்களுக்குக் கீழ் இடப்பக்கத்தில் இரு மனிதச் சிற்பங்கள் செதுக்கப் பெற்றுள்ளன. இவர்கள் அரசு அலுவலர்களாகவோ அல்லது நாட்டியம் கற்றுத்தரும் நட்டுவனார்களாகவோ இருக்கலாம். இதுவும் இந்நூலாசிரியரின் புதிய கண்டுபிடிப்பாகும். இக்கோபுரத்திலேயே நுழைவாயிலின் வெளிப்பக்கக் கிழக்குச் சுவரிலும் மேற்குச் சுவரிலும், தெற்கு மற்றும் வடக்குப்பக்கச் சுவர்களில் ஒவ்வொரு காளைச் சிற்பத்தைக் காண நேர்ந்தது. இநத காளைச் சிற்பங்கள் காடவர்களின் **'அரசு சின்னமான காளையின் உருவத்தை'** காண்பிக்கிறதோ என்ற ஐயம் எமக்கு எழுகிறது. இது பெரும்பாலும் காடவர்களின் அரசு சின்னத்தைத்தான் குறிக்கிறது என்று நம்ப வேண்டியுள்ளது. ஏனெனில் சிவன் கோயில்களில் சுற்றுச்சுவர்களில் வழக்கமாகக் காணப்பெறும் காளை உருவங்கள், தங்கள் கால்களை மடித்து வைத்துப் படுத்த நிலையில் தான் காணப்பெறும். ஆனால் இங்கு காணப்பெறும் காளைச் சிற்பங்கள் நின்ற நிலையிலேயே காணப்பெறுவது மேற்கூறப்பட்ட கருத்துக்கு வலுவூட்டுவதாக உள்ளது.

இந்நூலில் ஆறு பிற்சேர்க்கைகள் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. மேலும் நாற்பது நிழற்படங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவைகள் இந்நூலைப் படிக்கின்ற மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும். அறிஞர்களுக்கும் உறுதுணையாக அமையும். இந்நூல் உருவாவதற்கு எனக்கு உதவிய நூல்களை வெளியிட்டிருக்கின்ற நடுவணரசு தொல்லியல் துறை, தமிழ்நாட்டரசு தொல்லியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னை ஜீவன் ப்ரஸ், சென்னை குப்புசாமி சாஸ்திரி ஆய்வு நிறுவனம், சிதம்பரம் நடராசர் ஆலய நிர்வாகம் ஆகிய அனைத்திற்கும் மற்றும் நூலாசிரியர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் இந்நூலைக் குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாக அச்சிட்டு வெளியிட்டிருக்கின்ற மணிவாசக நூலக உரிமையாளர் எமது பெரும் மதிப்பிற்குரிய நண்பர் தமிழ்த்திரு. ச.மெ. மீனாட்சி சோமசுந்தரம் அவாகளுக்கும், எமது நெடுநாளைய நண்பர் மேலாளர் தமிழ்த்திரு குருமூர்த்தி அவர்களுக்கும் எனது அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் இந்நூலில் சேந்தமங்கலம் கோயில், கோட்டைச் சுவர் மற்றும் விண்வெளியிலிருந்து நிழற்படம் எடுத்த சேந்தமங்கலம் படம் ஆகியவற்றை எமக்கு தந்து உதவிய எமது பாசமிகு இளம்-ஆய்வாளர் திருமிகு. லெனின் அவர்களுக்கும், French Institute of Indology, Pondicherry க்கும இந்நூல் எழுதும் பணியில் எம்மை ஈடுபத்தி ஊக்கப்படுத்திய பா.ம க நிறுவனர் **மருத்துவர் ச.இராமதாசு ஐயா** அவர்கட்கும், மாநில வன்னியர் சங்கத் தலைவர், தமிழகச் சட்டமன்ற உறுப்பினர் **செ. குரு.** அவர்கட்கும், எமக்கு அனைத்து வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய எம் இல்லத்தார் மற்றும் பெயரப் பிள்ளைகள் ஆகியோருக்கும், மற்றும் இந்நூல் பற்றி என்னால் எழுதப்பெற்ற கையெழுத்துப் பதிவுகளை அழகாகக் கணினித் தட்டச்சு செய்து தந்திருக்கின்ற அன்புத் தம்பி திரு. மோகன் அவர்களுக்கும் எனது கனிவான நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

**இவண்**

**நடன. காசிநாதன்.**

# காடவர் வன்னியர் வரலாறு

# (கி.பி.1076 - கி.பி.1279)

## முதலாம் இயல்

## காடவர் வன்னியர் வரலாறு

### கூடலூரில் காடவச் சிற்றரசு

தமிழகத்தில் கி.பி.13–ஆம் நூற்றாண்டளவில் ஒரு சிற்றரசு நடு நாட்டில் (தற்காலத்தியக் கடலூர், விழுப்புரம் மாவட்டப் பகுதிகளில்) தலையெடுத்துத்து, தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த சோழர் வன்னியர் பேரரசுக்குப் பெரும் சவாலாக அமைந்திருந்தது. இச்சிற்றரசு தற்போதைய விழுப்புரம் மாவட்டம், சேந்தமங்கலத்தைத் தலைமை இடமாகக் கொண்டு மிகச்சிறந்த முறையில் தமது நிர்வாகத்தை நடத்தியிருக்கிறது. இவ்வாட்சியாளர்கள், சேரர், சோழர், பாண்டியர் போன்று தங்களைக் 'காடவர்' என்று அழைத்துக் கொண்டனர். இவர்கள் தொடக்கக் காலத்தில் கூடலூரில் தங்களது ஆட்சியை ஏற்படுத்தியிருக்கின்றனர். நாளாவட்டத்தில் தங்களது நாட்டின் தலைமையிடமாகச் சேந்தமங்கலத்தை ஆக்கிக் கொண்டிருக்கின்றனர்.

### பல்லவர் வழியினர்

இச்சிற்றரசர்கள், தாங்கள் பல்லவர் வழி வந்தவர் என்பதைத் தங்கள் கல்வெட்டுக்களில் வெளிப்படுத்தியிருக்கின்றனர். பல்லவர்களுக்கும் "காடுவெட்டி", 'காடவர்" என்ற பட்டப்பெயர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. "காடுவெட்டி" என்ற பட்டப்பெயர் கல்வெட்டுக்களிலும், "காடவர்" என்னும் பட்டப்பெயர் இலக்கியங்களிலும், காடவர் பாடல் கல்வெட்டுக்களிலும் ஆளப்பெற்றிருக்கின்றன.

## காடுவெட்டிகள், காடவர்

சங்க காலச் சோழ மன்னன் கலிகாலனான (கரிகாலன்) திருமாவளவன் தம்மைக் "காடுகொன்று நாடாக்கியவன்"[1] என்று கூறிக் கொண்டிருப்பது போன்று , பல்லவர்கள் தங்களைக் 'காடுவெட்டிகள்"[2] என்று அழைத்துக் கொண்டனர் போலும். காட்டை அழித்து நாட்டை உருவாக்கிய காரணத்தால் 'காடுவெட்டிகள்" என்ற பட்டத்தைப் பல்லவர் பெற்றிருப்பர். மேலும் அவ்வாறு திருத்தப் பெற்ற பகுதிகளில் தங்களது தொடக்கக்கால வாழ்க்கை அமைந்திருந்ததால், தங்களைக் "காடவர்" என்றும் அழைத்துக் கொண்டிருக்கின்றனர். கானவர் (காடவர்) மரங்களை வெட்டியும், அதனைத் தீயிட்டு அழித்தும் நிலங்களைப் பண்படுத்துவர் என்பதைக் குறுந்தொகைப்பாடல்[3] புலப்படுத்து கிறது. இவர்களது வழிவந்தவர்கள் என்ற காரணத்தால் சேந்தமங்கலத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த கோப்பெருஞ்சிங்கன் மரபினரும் தங்களைக் "காடவர்கோன்"[4] என்று சிறப்பாக அழைத்துக் கொண்டிருக்கின்றனர்.

காட்டைத்திருத்தி வாழ்ந்தவர் "காடவர்" என்று வழங்கப்பெற்றது போன்று, காட்டுப்பகுதியில் வாழ்ந்தவர் 'குவிரன்" என்று பெயர் பெற்றிருப்பது கி.மு. 5–4–ஆம் நூற்றாண்டுகளில் பொறிக்கப்பெற்ற தொன்மைத் தமிழ்க் கல்வெட்டுக்களிலும்[5], பானையோட்டுப் பொறிப்பு களிலும்[6] காண முடிகிறது. சங்க காலத்தில் "இடைக்காடனார்" என்றொரு புலவர் இருந்திருப்பது அகநாநூற்றால்[7] தெரிய வருகிறது. காட்டுப் பகுதியைச் சேர்ந்தவராக அப்புலவர் இருந்திருக்கலாம்.

1. பட்டினப்பாலை, வரி–284.
2. Dr T V. Mahalingam Inscriptions of the Pallavas, (1988), Intro, xiv, lviii, cx viii, S I I Vol XII, Intro p VII, Epi Indi, Vol VII, p 25n, Epi Carnatica, Vol VIII, Nagar 35
3. குறுந்தொகை, 214:1-2.
4. T V Mahalingam, Op Cit, cxxiii, S I I Vol XII, No 25, line 5
5. I Mahadevan, Early Tamil Epigraphy from the earliest times to the sixth century A D, (2003), Nos 23, 31 and 32, Natana. Kasinathan, Kalleluttukkalai (2009), pp 180, 181
6. கா. ராஜன, கொடுமணல் அகழாய்வு ஓர் அறிமுகம (1994), பககம், 6, (படம)
7. அகநானூறு, பாடல 284

குறிஞ்சி நிலத்துக்கும், மருத நிலத்துக்கும் இடையில் முல்லை நிலம் (காட்டுப் பகுதி) இருந்ததால்தான், அப்பகுதியில் வாழ்ந்தவர்கள் "இடையர்" (நடுவில் உள்ளவர்) என்று அழைக்கப் பெற்றிருப்பார்கள் என்று எண்ண முடிகிறது. அங்கு வாழ்ந்த மக்கள் ஆடு, மாடுகளை வளர்த்து வந்தனர். "அம்மந்தைகளை மேய்க்கும் இடையனது (நடுப்பகுதியில் வாழ்பவனது) கோலே அதிகாரத்திற்குரிய செங்கோலாயிற்று" என்று ந.சி. கந்தையா பிள்ளை எழுதியிருக்கிறார்[8].

மேலும், ''முல்லை நில வாழ்வுதான் மக்களின் சிறந்த வாழ்வுக்கு அடிப்படை என்று கூறலாம்'' என்று நா. ஆறுமுகம் கூறியிருக்கிறார்[9].

"இயற்கை வளம் நிறைந்த காடுகளைக் கொண்டது முல்லை நிலச் சமுதாயம். இங்கு வாழும் மக்கள் குழுக்களாக ஒன்றுகூடி வாழும் முறையைப் பின்பற்றியவர்கள். இவையே மனித நாகரிக முறைக்கு வித்திட்டது" என்கிறார் முனைவர் சு. சதாசிவம்[10].

## தொண்டையர்

ஆதலால்தான் காட்டு நிலப்பகுதியில் வாழ்ந்து வந்த "காடவர்", நாளாவட்டத்தில் ஆட்சியாளர்களாக மாறி, "தொண்டையர்" (தொண்டை மாலை அணிந்தவர்) என்ற பெயரிலும், "பல்லவர்" (தொண்டைத் தளிர் மாலையணிந்தவர்) என்ற பெயரிலும், தமிழ்நாட்டின் வடபகுதியில் ஆட்சி செலுத்தியிருக்கின்றனர்.

நமக்குத் தெரியவரும் 'காடவர்" முதல் மன்னர் 'ஐயடிகள் காடவர்கோன்" என்பவராவர். இவர் 63 நாயன்மார்களில் ஒருவராகக் குறிக்கப்பெறுகிறார்.

**"வையம் நிகழ் பல்லவர் தம் குல மரபின்**
**வழித்தோன்றி**
**வெய்யகலியும் பகையும் மிகை ஒழியும் வகை**
**அடக்கிச்**
**செய்யசடையவர் சைவத் திருநெறியால் அரசு**
**அளிப்பர்**
**ஐயடிகள் நீதியால் அடிப்படுத்தும் செங்கோலர்"**

8. முனைவர் சு சதாசிவம், பழந்தமிழர் வாழ்வும் வரலாறும், (2009), பக்கம்.18

9. மேற்கூறப்பெற்ற நூல், பக். 19.

10. மே.கூ. நூல், பக். 19.

இப்பாடலில், "திருத்தொண்டர் புராணம்" பாடிய சேக்கிழார் பெருமான், இம்மன்னரைப் "பல்லவர் குல மரபின் வழி வந்தவர்" என்றும், பெயர் "ஐயடிகள்" என்றும் தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார்[11].

இப்பெருமானே பிறிதோர் பாடலில்

**"பை அரவம் அணி ஆரம் அணிந்தார்க்குப் பா அணிந்த**
**ஐயடிகள் காடவனர் அடியிணைத் தாமரை வணங்கி"**

என்று பாடியுள்ளார்[12]. இதில் ஐயடிகள், காடவர் மரபைச் சார்ந்தவர் எனத் தெரிவித்துள்ளார். ஆதலால் "பல்லவர்" மரபும், "காடவர்" மரபும் ஒன்றே என்பது உறுதியாகிறது. திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும், "ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்"[13] என்று பாடியிருக்கிறார். இதேபோன்று உமாபதி சிவாச்சார்ய சுவாமிகளும்,

**"வையம் நிகழ் பல்லவர்தம் குலத்து வந்த**
**மாமணி மாநில முழுதும் மகிழ்ந்து காக்கும்**
**ஐயடிகள் காடவர்கோன் அருளால்"**

என்று கூறியிருக்கிறார்[14].

'ஐயடிகள் காடவர்கோன்' என்ற பல்லவ அரசர், பல நாடுகளை வென்றவர். வடமொழிப் புலவர், தமிழ்ப்புலவர் ஆகியோரை ஆதரித்தவர். சைவத்தைப் பரப்பியவர். முடிவில் அரசை வெறுத்து மகனுக்குப் பட்டமளித்துவிட்டு, சிவத்தலங்களைத் தரிசித்துத் தலத்துக்கொரு வெண்பாவாகப் பாடியவர். அந்நூல் "க்ஷேத்திர வெண்பா என்பது" என்று பெரிய புராணம் கூறுவதாக அறிஞர் மா. இராசமாணிக்கனார் தம் நூலில் எழுதியிருக்கிறார்[15].

"இவ்வடியார், வடமொழிப் புராணத்தில் "சிம்ஹாங்க, பாதசிம்ஹா, பஞ்சபாதசிம்ஹா" என்ற பெயர்களை உடையவராகக்

11. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம் (பெரியபுராணம்) (1999), ஐயடிகள் காடவர்கோன் நாயனார், பாடல் 1, (தொடர்ப் பாடல் எண் 4051).
12. சேக்கிழார், மே.கூ. நூல், பாடல் – 8, (தொடர்ப் பாடல் எண் 4058).
13. சுந்தரமூர்த்தி நாயனார், திருத்தொண்டத்தொகை, பாடல் –7.
14. திருத்தொண்டர் புராண உரைநடை, (1976), உமாபதி சிவாச்சாரியார், பக்கம். 101.
15. டாக்டர். மா. இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி (1958), பக்கம். 54.

காண்கிறார். மேலும் இவர் மகன் பீமவர்மன் என்று அந்நூல் கூறுகிறது. பல்லவர் பட்டியலில் பீமவர்மன், சிம்மவிஷ்ணு என்பவர்கட்குத் தந்தையர் மூன்றாம் சிம்மவர்மன் என்பது காண்கிறது. பஞ்சபாத என்பதன் தமிழ்மொழி பெயர்ப்பே **"ஐயடிகள்"** என்று காணப்படுவதால் இச்சிவனடியார் மூன்றாம் **சிம்மவர்மனே** என்பது அறிஞர் கருத்து. இம்முடிபு பொருத்தமாயின் சிம்மவிஷ்ணுவின் (575 – 600) தந்தையாரான சிம்மவர்மன் காலம் ஏறத்தாழக் கி.பி.550– 575 எனலாம்" என்று அறிஞர் மா. இராசமாணிக்கனார் தம் "சைவ சமய வளர்ச்சி" (1958) என்னும் நூலில், பக்கம் 54 – இல் கூறியுள்ளார்[16].

உமாபதி சிவாச்சார்யரால் எழுதப்பெற்ற கோயிற் புராணமும், சிதம்பர மான்மியமும் குறிப்பிடும் சிம்மவர்மன் என்ற அரசன் இக்காடவ மன்னனாகத்தான் இருக்கும். இவர் தம் **"க்ஷேத்திர வெண்பாவில்"** தில்லைச் சிற்றம்பலத்துக்கே முதலிடம் அளித்திருப்பதிலிருந்தே இதனை உணரலாம். இம்மன்னரின் உருவம்தான் தில்லை ஆடல் வல்லான் கோயில் உண்ணாழியை யொட்டியுள்ள மண்டப விதானத்தில் தீட்டப்பட்டிருக்கும் ஓவியமாகும். சிம்மவர்மனை, இரணியவர்மனாக மாற்றி, அவனுக்குச் சோழ நாட்டுக் கொடியான **"வியாக்ரக் கொடியை"** (புலிக்கொடி) வியாக்ர பாதர் தில்லையில், நடராசர் முன்பாக வழங்கிய நிகழ்ச்சியை சித்திரிப்பதாக உள்ள ஓவியக் காட்சிகளில் சிம்மவர்மனின் உருவம் வரைந்து, அவ்வுருவத்துக்குக் கீழே **"சிம்மவர்மன்"** என்று எழுதப் பெற்றிருக்கிறது[17]. இது எதைக் காட்டுகிறதென்றால் காடவ மன்னன் மூன்றாம் சிம்மவர்மன் காலத்திலேயே சோழநாடு காடவர்களின் ஆட்சிக்கு அடங்கிய நாடாக ஆகிவிட்டது என்பதையேயாகும். மூன்றாம் சிம்மவர்மனின் காலம் கி.பி.550. இவ்வாறுதான் வரலாற்றறிஞரும், தமிழறிஞருமான க.த. திருநாவுக்கரசு கருதியிருக்கிறார்[18].

இவர் காலத்துக்குப் பிறகு, தருமபுரி மாவட்டம், பலிஞ்சரஹல்லியில் காணப்பெறும் முதலாம் மகேந்திரவர்மப்

16. மே.கூ. நூல், பக்கம். 54.

17. நடன. காசிநாதன், சோழவேந்தர் பரம்பரை வன்னியப பாளையககாரா வரலாறு (2009), பக்கம். 108.

18. பேராசிரியா க. த. திருநாவுக்கரசு, மே.கூ.நூல, பககம்.100.

பல்லவன் காலத்தைய ஒரு நடுகல்லில், *"காடந்தையர்"* என்பார் குறிக்கப்பெற்றுள்ளனர். கல்வெட்டின் *வரிகள் கீழ்க்காணுமாறு* உள்ளன.

1) கோவிசைய மயீந்திரபருமற்கு
2) யாண்டைந்தாவது காடந்தைகள்
3) சேவகன் புதுப்பள்ளிகளோடு பொருத
4) ஞான்று பட்டா னெருமேதிகாரி[19]

இக்கல்வெட்டில் கூறப்பெறும் காடந்தைகள், காடவர்களின் (பல்லவர்களின்) கிளை வழியினராக இருக்கலாம். இவர்களின் அரசாட்சிப் பகுதியில் காடந்தைகள் ஒரு சிறு பகுதியை ஆண்டு வந்தவர்களாகலாம். இவர்கள் தங்கள் பகுதிக்குப் புதிதாக வந்து குடியேற முனைந்த பள்ளிகளை (வன்னியர்களை) எதிர்த்துப் போரிட்டிருக்கின்றனர். காடந்தைகளும் வன்னியர்களே என்றாலும் தங்கள் எல்லைக்குள் நுழைய முனைந்த அண்டைப் பகுதி வன்னியர்களைத் தடுத்துப் போர் புரிந்திருக்கின்றனர்.

இக்காடந்தைகள், முதலாம் பரமேசுவரவர்மன் கால இரு நடுகற்களிலும்[20] காணப்படுகின்றனர். கல்வெட்டு வரிகள் கீழே தரப்பட்டுள்ளன.

முதலாம் நடுகல்லின் வரிகள்:

1) கோவிசைய ஈச்சுவர பரும
2) ற்கு யாண்டு பதினேழ்மாவத
3) ன்கட் கணைஊர் மேற் படை வ
4) (ந்)த ஞான்று பட்டான் காடந்தை
5) கள் சேவகன் பூதூர் சாத்தன்

19. இரா. நாகசாமி, தருமபுரி நடுகற்கள், தொகுதி-2, கல்வெட்டு எண் 1973/26.

20 Epi Indi, Vol VII (1902-1903), page 24, Plates on Opposite Page

20 a நடுவணரசு கல்வெட்டுத் துறையினர் இக்கல்வெட்டின் 3,4-ஆம் வரிகளை "ன்கட் கணை ஊர் மாற்றுடை படுத் தான் அறுபட்டான் காட்டிறைகள்" என்று தவறாகப் படித்துள்ளனர்.

இரண்டாம் கல்வெட்டின் வரிகள்:

1) கோவிசைய ஈச்சுவர பரு (மற்கி)
2) யாண்டு பதினேழ்ழாவதன்கட்
3) காடந்தைகளுடை நாக்த (ளரத்துர்)
4) மேற் படை சென்ற ஞான்று பட்டான்
5) கட்டி கறக்கன்[20b]

மேற்காட்டப்பெற்றிருக்கின்ற இரு கல்வெட்டுக்களிலுமே **"காடந்தைகள்"**ஒரு குறு நிலப்பகுதியை ஆண்டு வந்தவர் களாகவே தெரிவிக்கப்பெற்றுள்ளனர்.

## காடவர்கோன் கழற்சிங்கர்

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டில் காணப்பெறும் முதலாம் நரசிம்மன் காலத்தியக் கல்வெட்டில் **"கடுவந்தையார் மகன் விற்சிதை"**[21] என்று ஒரு வீரனின் பெயர் காணப்பெறுகிறது. இவ்வீரன் காடந்தையரில் ஒருவனாக இருக்கலாம். பல்லவ மன்னன் கம்பவர்மன் காலக் கல்வெட்டு மூன்றிலும் **"காடந்தை நக்கன் சடையன்"** என்பான் குறிக்கப்பட்டுள்ளான்[22].

அடுத்து, காடவ மன்னர் என்று நமக்குத் தெரிய வருபவர் **"காடவர்கோன் கழிற்சிங்கர்"** ஆவார். இப்பெருமானைக், **"கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்"** என்று சுந்தரமூர்த்தி தம் திருத்தொண்டத் தொகையில் பாடியுள்ளார்[23]. இம்மன்னரும் பல்லவ குலத்தில் வந்தவர் என்றும், "காடவர் குரிசில்" என்றும், 63 நாயன்மார்களில் ஒருவர் என்றும் பெரியபுராணம் மூலம் அறிய முடிகிறது.

---

20 b இககல்வெட்டிலும் 3,4,5-ஆம வரிகளை அதது்றையினா "காட(டிறை)கள் செயி(க்)கவரசா மாற்றுடை சென்ற தான அறுபட்டான் க(ா)டடி கறககன்" என்று தவறாகப படித்திருககின்றனா.

21. இரா. நாகசாமி, செஙகம் நடுகறகள் (1972), கலவெட்டு எண. 1971/68.

22. S I I Vol XII, No.111, வநதவாசி வட்டம், கொடுஙகலூா.

23. சுநதரமூாத்தி நாயனாா, திருததொண்டத்தொகை, பாடல்-9.

'படி மிசை நிகழ்ந்த தொல்லைப்
பல்லவர் குலத்து வந்தார்
கடிமதில் மூன்றும் செற்ற
கங்கைவார் சடையார் செய்ய
அடிமலர் அன்றி வேறு ஒன்று
அறிவினில் குறியா நீர்மைக்
கொடி நெடுந்தானை மன்னர்
கோக்கழற்சிங்கர் என்பார்" என்றும்[24],

"காடவர் குரிசிலார் ஆம்
கழற்பெருஞ்சிங்கனார்தாம்" என்றும்[25],

திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்) கூறிச் செல்கிறது. இவ்விரு பாடல்கள் வழியும் பல்லவரும், காடவரும் ஒருவரே என்பது வெளிப்படை.

திருத்தொண்டர் புராண சாரம் இயற்றிய உமாபதி சிவாச்சார்ய சுவாமிகள் "காடவர் தம் குலமுவந்த கழலார் சிங்கர்"[26] என்று பாடியிருப்பதன் மூலம் கழற்சிங்கர் காடவர் குலத்தில் பிறந்தவர் என்று தெரிகிறது. ஆதலாலும் காடவர் குலம் என்றாலும், பல்லவர் குலம் என்றாலும் ஒன்றுதான் என்பது தேற்றம்.

'கழற்சிங்கர் பல்லவர் (காடவர்) குலத்தில் தோன்றியவர். சிவபக்தியில் சிறந்தவர். வடநாட்டு மன்னர்களை வென்றவர். நல்ல ஆட்சி புரிந்து வந்தர்.

இவர்தம் மனைவி, பரிவாரம் புடைசூழத் தலயாத்திரை செய்து வந்து திருவாரூரை அடைந்தார். அவர் பட்டத்துத் தேவி பூமாலை தொடுக்கும் மண்டபத்திலிருந்த ஒரு பூவை எடுத்து முகர்ந்தார். பூக்கட்டிக் கொண்டிருந்த செருத்துணை நாயனார் எழுந்து வந்து தேவியைப் பார்த்து "இம்மலர் தியாகராஜருக்குரியது. இதனை முகர்ந்தது முறையோ" என வெகுண்டு தேவியின் மூக்கை அரிந்தார். தேவியார் கீழே விழுந்து புரண்டுகிடந்தார். கழற்சிங்கர்

24. பெரியபுராணம், கழற்சிங்க நாயனார், பாடல்-1, (தொடர்ப பாடல் எண் 4101).
25. மே.கூ.நூல, கழறசிங்க நாயனார, பாடல்-2, (தொடர்ப் பாடல் எண் 4102).
26. திருத்தொண்டர் புராண உரைநடை (1976), பக்.107.

அங்கு வரும்போது தேவி விழுந்து கிடக்கும் வரலாற்றினை அறிந்து கொண்டு செருத்துணையாரைப் பார்த்து "இதற்கு நீர் தந்த தண்டனை போதாது. எடுத்த கையைத்தானே முதலில் வெட்ட வேண்டும்" என்று சொல்லித் தேவியின் கையினை வெட்டினார். தேவர்கள் பூமழை பொழிந்தனர். இப்படிச் சிவபக்தியில் சிறந்து விளங்கியிருந்து பின்னர் சிவபரம் பெற்றார்"[27] என்பது பெரியபுராணத்தின் கூற்று.

இப்பேரரசன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு சிவபக்தியோடு ஆட்சி புரிந்த இராஜசிம்மன் என்னும் இரண்டாம் நரசிம்மவர்மனாக இருக்கும் என்று அறிஞர் மா. இராசமாணிக்கனார் உரிய சான்றுகளோடு நிறுவியிருக்கிறார்.[28]

## காடவர் பற்றியக் கல்வெட்டுச் சான்று

இக்காடவ மன்னனுக்குப் பிறகு, காடவ மன்னர்களைப் பற்றித் தெளிவான குறிப்புகள் கல்வெட்டுக்கள் மூலம் தெரிய வருகின்றன. காடவ குலத்தவரான பல்லவர்களின் வழியில் உரிய வாரிசு இல்லாத நிலை இரண்டாம் பரமேஸ்வரன் காலத்துக்குப் பிறகு ஏற்பட்டது.

அப்பொழுது "மாத்ரகளும், கடகயாரும் (கடிகையாரும்) மூலப்ரக்ருதியும், காடவகுல ஹிரண்யவர்மரிடம் செல்க" என்று கூறியதற்கிணங்க சாமந்தர், உபயகுல பரிசுத்தர் ஆகியோர் ஹிரண்யவர்ம மஹாராஜாவிடம் சென்று பல்லவ அரசின் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று முறையிட்டபோது,

அவர் தம் குல மல்லர்களை அழைத்து அவர்களில் யார் அப்பொறுப்பை ஏற்க விழைகிறர்கள் என்று வினவியபோது, அவர்கள் யாவருக்கும் விருப்பம் இல்லை என்று தெரிவித்ததால், ஹிரண்யவர்மன், தம் குமாரர்களான ஸ்ரீமல்லன், ரணமல்லன், சங்கராமல்லன், பல்லவமல்லன் ஆகியோரிடம் வினவ, முதல் மூவரும் போக விரும்பவில்லை என்று மறுத்துவிட, பல்லவமல்லனான பரமேஸ்வரன் தான் செல்கிறேன் என்று கூறி தந்தைமுன் தொழுது நின்றான்.

---

27. மே.கூ.நூல, பக்கம. 107.

28. டாகடர மா. இராசமாணிககனார, சைவசமய வளாசசி (1958), பககஙகள, 109, 111.

காடவ குலம் சிறக்கத் தோன்றிய சத்யவானிடமிருந்து அச்சொல் கேட்ட ஹிரண்யவர்மன், தம் மகனின் பிரிவைத் தாங்கிக் கொள்ள இயலாமல்; தம் மகன் பன்னிரண்டு வயதே நிரம்பிய பாலகன், ஆதலால் அவன் செல்வதற்கு அனுமதிக்க மாட்டேன் என்று தெரிவித்தார். அருகிலிருந்த வித்ய ஆகமிகரான தரண்டி கொண்ட போசர், 'இப்பல்லவ மல்லன் மஹாவிஷ்ணுவின் மறுபிறவியாய் இந்நிலவுலகில் தோன்றியுள்ளான். இவன் சக்ரவர்த்தியாக ஆள்வதற்குத் தகுதியுடையவன், ஆதலால் இவனை அனுப்புவதற்குத் தயங்காதீர்" என்று ஆலோசனை சொல்ல, ஹிரண்யவர்மன் அதற்கு இசைந்து மகனை அனுப்புவதற்கு விருப்பம் தெரிவித்தான். இந்நிகழ்ச்சியைக் காஞ்சிபுரம் வைகுண்டப் பெருமாள் உண்ணாழிப் புறச்சுவரில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு[29], 'பிரம்மாதியாக வாராநின்ற பல்லவ வம்சத்துன் பரமேஸ்வரப் போத்தரையர் ஸ்வர்கஸ்தர் ஆவது ராஜ்யம் உத்சன்னம(லி)க" என்று தெரிவிக்கிறது.

தந்தையிடம் தொழுது விடைபெற்றுக் கொண்ட பல்லவ மல்லன் பல கிரி(மலை), நதி (ஆறு), வன-காகனங் (காடு)களைக் கடந்து வருவதை அறிந்த பல்லவதிரையர் (பல்லவ அதியரையர்) சேனைகளோடு எதிரே வந்து, பல்லவ மல்லனை யானைமீது ஏற்றிக் கொண்டு காஞ்சிபுர மாநகரத்துக்கு அழைத்துச் சென்றார்.

அவர் வருகின்றதையறிந்து மஹாசாமந்தரும், நகரத்தாரும், மூலப்ரக்ருதியும், காடக முத்தரையனும் (காடவ முத்தரையனும்) எதிரே வந்து வரவேற்று அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

மந்திரிமண்டலமும், மஹா சாமந்தரும், உபயகணத்தாரும், கடகயாருகளும் (கடிகையார்களும்) கூடி பல்லவமல்லனுக்கு, நந்திவர்மன் என்று அபிஷேகப் பெயர் சூட்டினர். பிறகு, கரிவை (குடை), சமுத்ரகோஷம் (முத்திரைச்சங்கு), கட்வாங்க கொடி (மனித கை எலும்புடன் தலை சேர்க்கப்பெற்று காணப்பெறுவது), காளைச் சின்னம் ஆகியவை மன்னனிடம் அளித்து, "விடேல் விடுகு" என்ற அரசு முத்திரையுடன் ஆணைகளைப் பிறப்பிக்கும்படி கேட்டுக் கொண்டனர்.

29. Dr. T V Mahalingam Inscriptions of the Pallavas, (1988), No 93, pp 325-329

**பல்லவமல்லன் ஆட்சிபெற்றது**

காடவ குல மன்னரான மூன்றாம் சிம்மவர்மனின் உடன்பிறப்பான பீமவர்மனின் பெயரன் பல்லவ மல்லன், காஞ்சிபுரம் வந்து அரசாளும் உரிமையை ஏற்றுக் கொண்ட செய்தி மேலே விளக்கமாகக் கூறப்பெற்றுள்ளது. இந்நிகழ்ச்சி காஞ்சிபுரம் வைகுந்தப் பெருமாள் கோயில் உட்சுற்றுவளாகத்தின் சுவர்களில் சிற்பங்களாக வடிக்கப்பட்டு காட்சி தருகின்றன. இதுபோன்ற சிற்பச்சான்று, தமிழகத்தைச் சார்ந்த வேறெந்த அரச பரம்பரையினருக்கும் காண இயலாத ஒன்றாகும்.

மேலே கூறப்பெற்ற கல்வெட்டு மற்றும் சிற்பத் தொகுதிச் சான்றுகளால் நந்திவர்மன் பல்லவமல்லன் முதல், தந்திவர்மன், மூன்றாம் நந்திவர்மன், நிருபதுங்கன், கம்பவர்மன், அபராஜிதன் ஆகியோர் முடிய, காடவ குல வேந்தர்களே யாவர்.

மூன்றாம் நந்திவர்மனைப் புகழ்ந்து பாடும் நந்திக்கலம்பகம்,

> **'கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ண ருளிச் செய்த**
> **கோமுற்றப் படை நந்தி குவலய மார்த்தாண்டன்**
> **காடவர்க்கு முன்தோன்றல் கைவேலைப் பாடி**
> ***காஞ்சிபுரமும் பாடி ஆடாமோ ஊசல்'*[30]**

என்று பாடியிருக்கிறது.

அம்மன்னன் காடவர்களுக்கு முன்னோனானவான் என்று தெரிவித்திருக்கிறது. இதன் மூலம் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காடவர் மரபைச் சேர்ந்தவன் என்பது தெள்ளத் தெளிவாகிறது. காடவர் என்றாலும், பல்லவர் என்றாலும் அவர்கள் வன்னியரே என்பது முன்பே நிரூபிக்கப் பெற்றுள்ளது.

மூன்றாம் நந்திவர்மனுக்குப் பிறகு ஆட்சி செய்த காடவ குல பல்லவ வேந்தர்கள் தங்கள் ஆட்சிப் பகுதியைத் தக்க வைத்துக் கொள்ளும் நிலையில் இல்லாமலிருந்திருக்கின்றனர். இவர்கள் ஆட்சியில் வலிமையற்றிருந்த பிற்காலச் சோழ மன்னர்களில் விசயாலயச் சோழன் ஓரளவுக்குப் படை வலிமை பெற்று காடவ

30. புலவர் முத்துப்பிள்ளை, நந்திக்கலம்பகம், பாடல், 29, பக்கம். 60

மன்னன் கம்பவர்மனை வெற்றி பெற்றிருக்கிறான் என்பது அண்மையில் தமிழ்நாட்டு அரசு தொல்லியல் துறையால் தெரியவந்துள்ள, மயிலாடுதுறை வட்டம் திருவிந்தளூர்ச் செப்பேட்டினால் புலப்படுத்தப்பட்டிருக்கிறது.[31] இப்பட்டயம் கிடைப்பதற்கு முன்பெல்லாம் விசயாலயன் முத்தரையர்களிட மிருந்துதான் சோழ நாட்டைக் கைப்பற்றினான் என்று கருதப்பட்டது. இதேபோன்று விசயாலயனின் மைந்தனான ஆதித்ய சோழன்தான் கம்பவர்மனின் மகனான அபராஜிதனை வென்று பல்லவரின் ஆதிக்கத்திலிருந்து சோழ நாட்டை மீட்டான் என்று எழுதப்பட்டு வந்தது. அக்கருத்தும் தற்பொழுது தவறாகிவிட்டது. பல்லவர்களிட மிருந்து சோழ நாட்டின் ஆதிக்கத்தை அபராஜிதனின் தந்தையான கம்பவர்மன் காலத்திலேயே விசயாலயச் சோழன் முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டான் என்பது தெரிய வருகிறது.

காடவ - பல்லவர்களின் அரசாட்சி முடிந்தாலும், அவர்களது வழியினர் சோழர்களின் ஆட்சியில் குறுநிலத் தலைவர்களாக விளங்கி, கி.பி.13-ஆம் நூற்றாண்டளவில் தனி ஆட்சி புரியத் தொடங்கியிருக்கின்றனர் என்பது அவர்களது 100க்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களால் புலனாகிறது.

எவ்வாறு சோழர்கள் தங்கள் வலிமை குன்றிய காலங்களில், அதாவது கி.பி.4-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.9-ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் முடிய, சில சமயம் பல்லவர்களுக்கும், சில காலம் பாண்டியர்களுக்கும் அடங்கியச் சிற்றரசர்களாய், பெரும்பாலும் பழையாறையிலும்[32], உறையூரிலும் வாழ்ந்து வந்தனரோ அதுபோன்று காடவ - பல்லவ மன்னர்களும் தங்கள் வலிமை குன்றிய பிறகு தொண்டை மண்டலத்தையொட்டிய நடு நாட்டுப் பகுதியில் சிற்றரசர்களாகச் செயல்பட்டிருக்கின்றனர். சோழர்களது ஆட்சி சீரழியும் நிலை ஏற்பட்டபொழுது, சோழப் பேரரசின்கீழ் ஆட்சி புரிந்த குறுநில மன்னர்களின் ஆதிக்கம் தலை தூக்கிய காலத்தில், காடவ - பல்லவர்களும் தங்களது தனித்த ஆட்சியைத் தொடங்கத் தலைப்பட்டனர். அப்பொழுதுதான் சோழ மன்னன் மூன்றாம்

31. நடன. காசிநாதன, சோழர் செப்பேடுகள் (2011), பக்கம் 135, சேகர் பதிப்பகம் வெளியீடு.

32. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, (1974), பக்கங்கள். 6-11.

இராசராசனை காடவ வேந்தன் முதலாம் கோப்பெருஞ்சிங்கன் சேந்தமங்கலத்தில் சிறைப்படுத்தியதும், போசள மன்னன் இரண்டாம் நரசிம்மன் சோழ மன்னனுக்கு ஆதரவாகப் படையெடுத்து வந்து கோப்பெருஞ்சிங்கனோடு போரிட்டு, அவனைத் தோற்கடித்துவிட்டு, சோழ வேந்தனை விடுவித்து மீண்டும் சோழ நாட்டை ஆளும்படிச் செய்ததுமாகும்.[33]

## நடுநாட்டில் காடவர் - பல்லவர்

காடவர் - பல்லவர் மீளவும் நடுநாட்டில் தலையெடுத்து ஆட்சி புரிந்த மன்னர்கள் பற்றிய சான்றுகளை முதலில் பார்க்கலாம். இவர்களைப் பற்றியச் சான்றுகளில் முதல் நிலையில் வைத்து எண்ணத்தக்கது கல்வெட்டுக்களேயாகும். இக்கல்வெட்டுக்களிலும் பெருமளவில் காணப்பெறுவது கோப்பெருஞ்சிங்கன் காலத்தவை யாகும்.[34] இக்காலத்தில் இக்காடவர்கள் தொடக்கத்தில் சோழர்கள் கீழும், பிறகு பாண்டியர்கள் கீழும் ஆட்சி புரிந்ததால் அவர்கள் காலத்தில் வெளியிடப்பெற்ற கல்வெட்டுக்களிலும்[35] இவர்கள் குறிக்கப்பெறுகின்றனர். எல்லாக் கல்வெட்டுக்களையும் கருத்தில் கொண்டால் ஏறக்குறைய 190 கல்வெட்டுக்கள் இவர்களைப் பற்றித் தெரிவிப்பவைகளாக உள்ளன.

## பாடற் கல்வெட்டுக்கள்

இக்காடவ பல்லவர்கள் 'பேணு செந்தமிழ் வாழப் பிறந்தவர்கள்" என்பதால் இவர்கள் பற்றி பல அரிய பாடல் கல்வெட்டுக்களும் கிடைத்துள்ளன. விருத்தாசலம்[36], திருவெண்ணைய்நல்லூர்[37], அத்தி[38], வைலூர்[39], திருக்கழுக்குன்றம்[40],

33. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், பேணுசெந்தமிழ வாழபபிறந்த காடவன் கோபபெருஞசிங்கன (1965), திருவயீந்திபுரக் கலவெட்டு, பககங்கள 88-89.
34. S.I.I Vol XII, Section II, Nos 118-265
35 Ibid, Appendix - B, Nos.1-37
36. S I I Vol XII, No 263 (A.R.E *74 of 1918)*
37 Ibid, No 264 (A R E 463 of 1921)
38 A.R E., 296 of 1912; S I I Vol XII, No 125
39. S I I. Vol XII, No 128 (A.R.E. 418 of 1922)
40 A.R.E *187 of* 1932 - 33

மோரிஜோனை[41], பூண்டி[42], ஆகிய இடங்களில் அவை பொறிக்கப் பெற்றுள்ளன. ஏழு ஊர்களில் காடவர்களைப் பற்றியப் பாடல்கள் கணிசமான அளவில் காணப்பெற்றாலும், இவர்களைப் பற்றிய ஒரு முழு இலக்கியம் கூடக் கிடைக்கப் பெறாமலிருப்பது வியப்பளிக்கிறது. இவர்கள் மீது பரணி, உலா போன்ற இலக்கியங்கள் எழுதப்பெற்று மறைந்து போயிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. மேலும் மேற்கூறப்பெற்ற பாடற் கல்வெட்டுக்களை யார் எழுதித் தந்தார்கள் என்ற செய்தியும் காணப்பெறவில்லை.

## கட்யகர்னாமிர்தம்

இக்காடவர்களில் கோப்பெருஞ்சிங்கன், சோழ மன்னன் மூன்றாம் இராசராசனைச் சிறைவைத்த செய்தியையும், அம்மன்னன் போசள வேந்தனால் மீட்கப்பட்ட செய்தியையும் மட்டும் தெரிவிக்கும் ஒரு இலக்கியம் கிடைத்துள்ளது. இவ்விலக்கியம் "கத்யகர்ணாமிர்தம்" என்ற கன்னட வரலாற்று நூலாகும்.[43] இந்நூலை யாத்தவர் 'கௗளகளப" என்னும் புலவராவர்.

இக்காடவர்களின் தோற்றம் பற்றியும், இவர்கள் எம்மரபில் வந்தவர் என்பது பற்றியும் சில மாறுபட்ட கருத்துக்கள் கூறப்படுகின்றன. இவர்களைப் பற்றித் தெரிவிக்கும் தொடக்கக் காலக் கல்வெட்டுக்கள்[44], இவர்கள் "பெருகனூர் நாட்டுக் கூடலூரில்" இருந்தவர்கள் என்று தெரிவிப்பதால், இக்கூடலூர் திருக்கோயிலூருக்கு அருகிலிருந்த கூடலூராக இருக்கலாம்.

## காடவர்களும் பல்லவர்களும் ஓரினமே

இக்காடவர்களுக்கும் பல்லவர்களுக்கும் தொடர்பில்லை. இவர்கள் பல்லவர்களினின்று வேறுபட்டவர்களென்றும், இவர்கள் "பள்ளிகள்" என்றும் பேராசிரியர் எம்.எஸ். கோவிந்தசாமி தம் நூலில் எழுதியிருக்கிறர்.[45] இக்கருத்து சரியாகப்படவில்லை.

---

41 Ibid, 178 of 1921, S I I Vol XII, No 127

42 S I I Vol VII, No 62

43 S I I Vol VII, No 2004 (374 of 1902)

44 S I I Vol XII, No 125 (A.R E No 296 of 1912)

45 Dr M S Govindasamy, The Role of Feudatories in Later Chola History (1979), p 103

ஏனெனில், இக்காடவர்களைப் பற்றித் தெரிவிக்கும் பாடற் கல்வெட்டுக்கள் இவர்களைக் "காடவர் பல்லவர்" என்றும், **"பல்லவர் காடவர்"** என்றும் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

வட ஆர்க்காடு (திருவண்ணாமலை) மாவட்டம், செய்யாறு வட்டம், அத்தியிலுள்ள அகஸ்தீஸ்வரர் கோயில் தெற்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள 'கூடல் ஆளப் பிறந்தானான காடவராயர் மகனார் தொண்டை மண்டலங் கொண்ட பல்லவாண்டாரான காடவராயர்க் கல்வெட்டின்[46] முதலிரண்டு பாடல்கள் **"பல்லவன் காடவன்"** என்றும், நான்காம் பாடல் **"காடவன் பல்லவன்"** என்றும் ஆறாம் பாடல் **"கடற்கச்சிப் பல்லவன் காடவன்"** என்றும், காடவர்களைப் பல்லவர்கள் என்றும் கூறுயிருக்கின்றன என்பது அறியற்பாலதாகும். ஆதலால் காடவர் வேறு பல்லவர் வேறு என்று கருதுவது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. மேலும், காடவ வேந்தர்கள் மணவாளப் பெருமானும், முதலாம் கோப்பெருஞ்சிங்கனும் தங்களை **அழகியப் பல்லவன் என்றும், பல்லவர் பெருமான்[47]** என்றும் அழைத்துக்கொண்டிருப்பதும் தாங்கள் பல்வர் வழி வந்தவர் என்பதற்குச் சான்று.

## பல்லவர்களும் பள்ளிகளுக்கும் உள்ள தொடர்பு

அடுத்தது 'பல்லவருக்கும்", 'பள்ளி"களுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று அதே பேராசிரியர் தெரிவித்திருக்கிறார். 'பல்லவர்" என்பது 'தொண்டையர்" என்பதைக் குறிக்கும். 'பள்ளி" என்பது 'வன்னியரைக்" குறிக்கும். பள்ளிகளான காடவர், தங்களைப் பல்லவர் என்று கூறிக் கொள்வதாலும் முஞ்நூற்றுப் பள்ளிகளான சம்புவரையர், தாங்கள் பல்லவர் வழி வந்தவர்[48] என்று தெரிவித்திருப்பதாலும் பல்லவரும் வன்னியரே என்பது உறுதி. சோமசுந்தர தேசிகரும் காடவர்கள் வன்னியர் என்றும், படையாட்சிகள்[49] என்றும் எழுதியிருப்பது சரியான முடிவே ஆகும்.

46 S I I Vol XII, No 257, S I I Vol VIII, Nos 69 and 351

47 S I I Vol XII, No 125

48 A.R E No 58 of 1908, No 106 of 1912

49 Pandit Somasundara Desigar, J I H, Vol XVII, p 314.

**காலத்தால் பிற்பட்ட கலிங்கத்துப்பரணி கூற்று தவறானது**

கலிங்கத்துப் பரணியில் 'கன்னடர், பல்லவர், கைதவர், காடவர், கர்ஜீயர், கோசலர்'' என்று கூறப்பெறும் வரிகளில்[50] 'பல்லவரும்'', 'காடவரும்'' தனித்தனியே கூறப்பெற்றிருப்பதால் அவ்விருவரும் வெவ்வேறானவர் என்று கருதுவதும் சரியல்ல. ஏனெனில், காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள் 'பல்லவர்'' அல்லது 'காடவர்'' என்றும், பீமவர்மன் வழி வந்த பல்லவர் கிளையினர் 'காடவர்'' அல்லது 'பல்லவர்'' என்றும் தெளிவாக வழங்கப் பெற்றிருந்தும் கலிங்கத்துப்பரணி ஆசிரியர் அவர்களை வெவ்வேறானவர் என்று கருதியிருப்பது தவறானதாகும்.

**பிற்காலக் காடவர் வரலாறு:**

கி.பி.10ஆம் நூற்றாண்டளவிலேயே கல்வெட்டுக்கள் மூலம் பிற்காலக் காடவர் தெரிய வருகின்றனர். அதாவது முற்காலக் காடவர்களுக்கு (கி.பி.6-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.9-ஆம் நூற்றாண்டு முடிய தொண்டை மண்டலத்தில் ஆட்சி புரிந்தவர்கள்) ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, பிற்காலக் காடவர்கள் பற்றியக் குறிப்பு காணப்படுகிறது.

**சக்திவிடங்கன்:**

பிற்காலக் காடவர்களில் முதன்முதலில் குறிப்பிடப்படுபவர் சக்திவிடங்கன் என்னும் காடவத் தலைவனாவான். இவன் பல்லவ மன்னன் பல்லவப் பெர்கடையார் மகளை மணமுடித்ததாகத் திருமலை திருப்பதி தேவஸ்தானக் கல்வெட்டு[51] ஒன்று புலப்படுத்துகிறது.

**மோகன் என்னும் இராசேந்திர சோழக்காடவராயன்:**

இக்காடவராயன், அரையன் முனையன் மோகன் என்னும் இராசேந்திர சோழக் காடவராயன் என்று கல்வெட்டில்[52] குறிக்கப்படுகிறான். இதன் மூலம் திருமுனைப்பாடிப் பகுதிக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தவன் என்பதும், இராசேந்திர

50. ஜயங்கொண்டார், கலிங்கத்துப்பரணி, பாடல் 329.

51 T D Inscriptions Vol I, Nos 8 and 9

52. A.R E 234 of 1939 - 40

சோழனுடைய ஆட்சிக் காலத்தில் சோழனுக்கடங்கியக் குறுநிலத் தலைவனாக விளங்கியவன் என்பதும் தெரிய வருகிறது.

முதலாம் குலோத்துங்கச் சோழனது தொடக்கக் காலப் பெயர் இராசேந்திரனே என்பதால் இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் இராசேந்திர சோழன் முதலாம் குலோத்துங்கனாக இருக்கலாம் என்று முனைவர் எம்.எஸ். கோவிந்தசாமி கருதியுள்ளார்.[53] அது சரியான கருத்தாகத் தெரிகிறது.

முதலாம் குலோத்துங்கச் சோழன் காலத்திலேயே மற்றொரு காடவர் தலைவனும் இருந்திருக்கிறான் என்பது இம்மன்னனின் 31ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டினால்[54] அறிய முடிகிறது. இவனது பெயர் **சேனாபதி ஆதித்தன் திருச்சிற்றம்பலம் உடையான் என்னும் கஞ்சனூர்க் காடவராயன்** என்பதாகும். இவனது பெயரிலிருந்து இக்காடவன் முதலாம் குலோத்துங்கனுக்குச் சேனாதிபதியாக பணிபுரிந்தவன் என்பது தெரிய வருகிறது.

காடவர் குலத்துதித்த "காடன் **மஹாதேவி சோழன் சோறுடையாள்**" முதலாம் குலோத்துங்கச் சோழனின் அரசியாக விளங்கியிருக்கிறாள் என்பதைத் திருவொற்றியூர்க் கல்வெட்டு[55] குறிப்பிடுகிறது. இதன் மூலம் காடவத் தலைவர்கள் சோழ மன்னர்களோடு மண உறவு கொள்ளும் நிலையில் வலிமையோடும், புகழோடும் விளங்கினர் என்பது *அறிய முடிகிறது*.

இப்பிற்காலக் காடவர்களில் ஐந்து மன்னர்களைப் பற்றி விருத்தாசலம், விருத்தகிரிஸ்வரர் கோயில் இரண்டாம் கோபுரத்தின் நுழைவாயில் வலது பக்கச் சுவரில் வெட்டப் பெற்றுள்ள கல்வெட்டும்[56], திருவெண்ணைநல்லூர் கிருபாபுரீஸ்வரர் கோயில் கோபுரத்தின் உட்பக்கச் சுவரின் நுழைவாயில் இடப்பக்கம் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டும்[57] விரிவாகத் தெரிவிக்கின்றன. இவ்விரண்டு கல்வெட்டுக்களும் ஒரு கல்வெட்டின் படிகள் ஆகும்.

53 Dr M S Govindasamy, *Op Cit*, p 104

*54. A.R E No 144 of 1925*

55 Ibid, No 111 of 1912

56 S I I. Vol XII, No 263 (A.R E No 74 of 1918)

57. Ibid, No 264, (A.R.E. No 463 of 1921)

## அழகிய வளந்தானாரான காடவராயர்: (கி.பி. 1076–1112)

மேற்கூறப்பெற்ற கல்வெட்டுக்களில் காடவர் குல முதல் மன்னனாகக் கூறப்படுபவர் அழகிய வளந்தானாரான காடவராயர் ஆவார். இக்காடவ மன்னன் பெரும்பாலும் முதலாம் குலோத்துங்கச் சோழனின் 42–ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி.1112) கல்வெட்டில்[58] குறிக்கப்பெறும் வீரநாதன் வளந்தானாக இருக்கலாம் என்று பேராசிரியர் எம்.எஸ். கோவிந்தசாமி கருதியுள்ளார்.[59] ஆதலால் இக்காடவர் ஆட்சிக்காலம் சுமார் கி.பி.1076-1112 என்று கணித்துள்ளார்.

இவ்வழகிய வளந்தானாரான காடவராயர் இலங்கையில் போர்புரிந்ததாகவும், கங்கர்களை எதிர்த்ததாகவும் மேற்கூறப்பெற்ற கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இலங்கை அநுராதபுரத்தில் முதலாம் விஜயபாகுவை எதிர்த்து, முதலாம் குலோத்துங்கன், கருணாகரன் தலைமையில் போரிட்ட பொழுது[60] இக்காடவ மன்னன் சோழர் படையில் பங்கு பெற்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அழகிய வளந்தானார், கங்கரோடு போர் புரிந்தார் என்று கூறப்பட்டிருப்பது கி.பி.1076–77–இல் சோழர் கல்யாணிச் சளுக்கியரோடு நடத்திய போரில் இவர் பங்கு பெற்றதைக் குறிப்பதாக இருக்கலாம் என்று பேராசிரியர் எம்.எஸ். கோவிந்தசாமி[61] கருதியிருக்கிறார். கங்கருக்கும், கல்யாணிச் சளுக்கியருக்கும் என்ன பொருத்தம் என்பது புரியவில்லை. ஆதலால் அழகிய வளந்தானார் அவர் காலத்தியக் கங்க அரசரோடு சோழர் நடத்திய போரில் பங்கு பெற்று போர் புரிந்திருக்கலாம் என்று கருதுவது சரியாகப் படவில்லை.

## ஆட்கொள்ளி காடவர் கோன்: (கி.பி. 1146)

இக் காடவர் பல மணிமுடியரசர்களை வென்று அவர்களது கால்களில் விலங்கு பூட்டியதால் அச்சிற்றரசர்கள் கலீர், கலீர் என்ற ஒலியோடு வீதிகளில் வருவர் என்று பாராட்டப் பட்டிருக்கிறார். இதன் மூலம் இவர் பல போர்களில் ஈடுபட்டு வெற்றி பெற்றவர் என்பது உறுதியாகிறது.

---

58 A R E No 352 of 1902

59 Dr M S Govindasamy, Op Cit , p 105

60. கலிங்கத்துப்பரணி பாடல் 64, "இலங்கை எறிந்த கருணாகரன்"

61 Dr M S Govindasamy, Op Cit , p 105

இவர் சோழ மன்னன் இரண்டாம் இராசராசன் காலத்தில் (கி.பி.1146 – 1162) வாழ்ந்திருக்கிறார். இவர் திருவெண்ணைநல்லூர் வைகுந்தத் தெம்பெருமானுக்குத் திருவாய்க்குலத்து ஆழ்வாரையும் (கண்ணபெருமான்), பிராட்டியாரையும் செய்து அளித்ததோடு, கோயில் வழிபாட்டுக்கு 20 மா நிலத்தை அனைத்து வகையான வரிகளையும் நீக்கி இறையிலியாக இராசராசனது 12–ஆம் ஆட்சியாண்டில் கொடை அளித்திருக்கிறார். இச்செய்தி இக்கோயிலில் காணப்பெறும் கோப்பெருஞ்சிங்கனின் 11–ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால்[62] புலனாகிறது.

இக்காடவராயனே, தீர்த்த நகரியில் உள்ள (பொழிற்றினை மாநகர்) சிவபெருமானுக்குத் திருஅமுது படைப்பதற்கும், திருவிளக்கேற்றுவதற்கும் தாம் வசூலித்து வந்த பெரும்பாடிகாவல் மற்றும் வெட்டி ஆகிய நில வரிகளைக் கொடையளித்து மகிழ்ந்திருக்கிறான். இச்செய்தியைக் கீழே கொடுக்கப் பெற்றுள்ள கல்வெட்டுப்பாடல் மூலம் அறிய முடிகிறது.

> 'கூடாத வன்புகழ்க் கூடல் மன் ஆட்கொள்ளிக்
> காடவர் கோன்
> சேடார் பொழிற்றினை மாநகர் ஈசரைச் சிந்தை செய்து
> பீடார் நிலத்துப் பெரும்பாடி காவல், வெட்டி தவிர்த்து
> நாடாரமுதுக்கும் நுந்தாவிளக்குக்கும் நாட்டினானே''[63]

## நாலுதிக்கும் வென்றாரான ஏழிசை மோகன் காடவராயர்:

ஆட்கொள்ளி காடவராயருக்கு இரு மகன்கள் இருந்திருக்கின்றனர் என்பது விருத்தாசலம்[64] மற்றும் திருவெண்ணைநல்லூர்[65] கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது. இவர்களில் மூத்தவர் பெயர் நாலு திக்கும் வென்றான் ஏழிசைமோகன் காடவராயன். இளையவர் பெயர் அரசநாராயணன் கச்சியராயன்.

62 S I I Vol XII, No 170, (A R E No 486 and 487 of 1921)

63 Ibid, No 262 (A R E No 115 of 1904)

64 S.I.I Vol XII, No 263

65 Ibid, No 264.

மூத்தவருக்கு "கூடல் ஆளப்பிறந்தான் மோகன் என்னும் நாலுதிக்கும் வென்றான் ராஜராஜ காடவராயன்" என்பது முழுப் பெயராகத் தெரிகிறது.[66]

மேற்கூறப்பெற்ற இருவரும் சோழ மன்னன் இரண்டாம் குலோத்துங்கச் சோழரின் சிற்றரசர்களாக விளங்கியிருக் கின்றனர். முதியவரான நாலுதிக்கும் வென்றான் ஏழிசை மோகன் காடவராயன் சோழருக்காகப் பல போர்களில் ஈடுபட்டு வெற்றி பெற்றிருப்பான் என்பது அவனது விருதுப் பெயரான "நாலுதிக்கும் வென்றான்" என்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம். இவன், புருந்தல் என்னும் மலைய விச்சாதிரநல்லூர் போன்ற தேவதான ஊர்கள் தமக்குச் செலுத்த வேண்டிய பெரும்பாடி காவல், சிறுபாடி காவல் ஆகிய வரிகளைக் கொண்டு, இறையானறையூர் (இலவானாசூர்) ஆன சோழ கேரளச் சதுர்வேதி மங்கலத்தில் எழுந்தருளியுள்ள ஊர் பாகங் கொண்டருளிய மகா தேவரைப் புரட்டாசித் திருவோண நட்சத்திர நாளன்று எழுந்தருளுவிப்பதற்கு (உலா வரச் செய்வதற்கு) வேண்டிய நிவந்தஞ் செய்தானென்று ஒரு கல்வெட்டு[67] கூறுகிறது. இக்குறுநில வேந்தன் இதே இறைவனுக்கு ஒரு திருமாளிகையையும் அமைத்திருப்பது மற்றொரு கல்வெட்டினால்[68] புலப்படுகிறது. இவன் மதம் கொண்ட யானைகளை அடக்கிச் செலுத்துவதில் வல்லவனாகத் திகழ்ந்திருக்கிறான்.[69]

இவனைப் பாடும் விருத்தாசலம் கல்வெட்டு கீழ்க்காணுமாறு கூறியிருக்கிறது.

> "பொருகாம னம்பு புகுந்துயிர்மே லன்றிச்
> செருகா விடையாமஞ் செல்லா – தொருகாலும்
> பாகாகா மாலியானைக் கண்டு பணிந்தானை
> மோகாகாவந்தி படா முன்"

66. ARE 166 of 1906
67. A R E , 166 of 1906
68. Ibid, 170 of 1906
69. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், தேறகூறப்பட்ட நூல, பக்கம். 22, S I.I. Vol.XII, No.263.

**அரசநாராயணன் கச்சியராயனான காடவராயர்:**

ஏழிசை மோகனின் இளையான் அரசநாராயணன் கச்சிராயனான காடவராயன் ஆவான். இவனைப் பற்றி விருத்தாசலம் கல்வெட்டு[70] கீழ்வருமாறு குறிப்பிடுகிறது.

**"துடக்கு மாரன் சொரிசரப் பாயல்மேற்**
**கிடக்குமிவ் வுலகென்பதுங் கேட்டுமே**
**வடக்கு மேருவுந் தெற்கு மலையமுங்**
**கடக்கு மாணையான் கச்சியராயனே**
**மும்மலை முன்பெறிந்தாய் பின்பு முரணிரட்டர்**
**தெம்மலை வாதாபி சென்றெறிந்தாய் – மெய்ம்மைச்**
**செருவரசே பின்னிச் சிலம்பா வெறிந்த**
**தொருவரைசே மேனாளுடன்று"**

"வடக்கிலுள்ள மேருமலையையும், தெற்கிலுள்ள மலைய மலையையும், கடந்து செல்லும் ஆணையை உடைய கச்சியராயனது ஆட்சியிலே, அவனுடைய நாடு ஆகிய இவ்வுலகம் மன்மதன் செலுத்தும் அம்பு படுக்கையின்மேல் கிடக்கும் என்றும் நாம் கேள்விப்படுகிறோம் என்றது, அவன் நாட்டு மக்கள் மன்மதனுடைய அம்புகளன்றிப் பகைவர்களின் அம்புகளைப் பெறாதார் என்றபடி" இப்பாடல் சூளாமணியில் காணப்பெறும் ஒரு பாடல் போல் காணப்பெறுவதாக எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் கருதியுள்ளார்[71].

அடுத்த பாடலின் பொருள்,

'ஒப்பற்ற அரசனே, உண்மையான களம் வகுத்துப் போரிடும் போர் வந்த அளவிலே, முன்பு சேரர், சோழர், பாண்டியர்களுக்குச் சொந்தமான கொல்லி, நேரி, பொதியில் என்ற மூன்று மலைகளையும் கைப்பற்றினாய். பின்பு மாறுபட்ட இரட்டர்களாகிய பகைவர்களின் மலையை, வாதாவி என்ற தலைநகருடன், படையெடுத்துச் சென்று தகர்த்தாய். இப்போது நீ உனது வெகுநாளைய உரிமையாகக் கொண்டிருக்கும் பின்னிமலையும், நீ உன் அரசாட்சியின் தொடக்கத்தில் வென்று கைப்பற்றியதுதானோ!'' என்பதாகும்.[72]

---

70 S I I Vol, XII, No 263

71. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், மேற்கூட் நூல், பக.22.

72. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், மேற்கூறப்பட்ட நூல், பக்கங்கள் 22-23.

மேற்குறிப்பிடப்பட்ட பாடல்களின் மூலம் அரசநாராயணன் கச்சியராயன் தமிழகத்தில் இருந்த சேர, சோழ, பாண்டியர் என்ற மூன்று பேரரசர்களையும், ராட்டிரகூட மன்னரையும் வென்றான் என்று அறிய முடிகிறது. ஆனால் இவ்வெற்றிக்குக் கல்வெட்டுச் சான்று வேறு யாதும் இல்லையென்றும், தக்கையாகப் பரணி மற்றும் இராசராச சோழனுலா ஆகிய இலக்கியங்களில், இரண்டாம் இராசராசன் சேரர்களையும், பாண்டியர்களையும் வெற்றி பெற்றதாகக் கூறப்படுகிறது என்றும், அவ்வெற்றிகளில் இக்காடவன் பங்கு பெற்றிருக்கலாம் என்றும் பேராசிரியர் எம்.எஸ். கோவிந்தசாமி கருதியுள்ளார்.[73] மேலும் இக்காடவன் ராட்டிரகூடர்களை வென்றதற்குப் போதியச் சான்று இல்லை என்று சுட்டிக் காட்டியிருக்கிறார். எப்படியிருப்பினும் விருத்தாசலம் கல்வெட்டும்[74], திருவண்ணாமலைக் கல்வெட்டும்[75] கூறுவதிலும் உண்மையில்லாமல் போகாது.

இக்காடவ உடன்பிறப்புகள் கோயில்களுக்குப் பல அறக்கொடைகள் வழங்கியுள்ளனர் என்பது கல்வெட்டுக்களினால் பெற முடிகிறது. மேலும் இவ்விருவரும் "பன்னாக முத்தரையன் ஆளப்பிறந்தான்" என்ற விருதுப் பெயரைப் பூண்டிருந்தனர் என்பதும் தெரிய வருகிறது.[76] பன்னாக முத்தரையனை வெற்றி பெற்றதால் இவ்விருதைக் கொண்டார்களா அல்லது அம்முத்தரையனின் கீழ் இவர்கள் ஆட்சி செய்ததால் பெற்றார்களா என்பது புலப்படவில்லை.

## வீரசேகரக்காடவராயன்:

அரச நாராயணன் கச்சியராயரான காடவராயரின் புதல்வன் வீரசேகரக் காடவராயன் ஆவான். இவனது முழுப் பெயர் "அரச நாராயணன் ஆளப்பிறந்தான் வீரசேகரனான காடவராயன் ஆகும். இவன் காலத்தில்தான், அதாவது "சகரையாண்டு ஆயிரத்து ஒரு நூற்றெட்டினால் (கி.பி.1186) ஆடிமாஸத்துப் பிற்பத்தில் கண்டராதித்தன் வாசலில்" இம்முக்கியக் கல்வெட்டு[77] பொறிக்கப்பெற்றுள்ளது.

73 Dr M S Govindasamy, The role of feudatories in later Chola History, (1979), p 107

74 S I I Vol XII, No 263

75 Ibid, No 264.

76 A R E No 45 and 46 of 1903

77 S I I Vol XII, No 263

இக்காடவன், "கண்டராதித்தன் வாசலுக்கு மேற்கே புறப்பட்டுக் கற்கடக மாராயன் கூடலும் அதியமானரடும் அழித்து வெற்றிக்கொடி உயர்த்த அனுமனும் பொறித்தான்" என்று இக்கல்வெட்டு இவனது புகழ் பாடுகிறது.

மேலும்,

'பாரளவல்ல பணைத்தோளளவு பகலவன் போந்
தேரள வல்ல நின் செங்கோலளவு திகிரிச்செங்கை
காரளவல்ல பர **வீரசேகர காடவநின்**
போரளவெவ்வள வாம்பர வேந்தர் புறத்தளவே.

தாரார் மணிப்புயந் தண்ணந் துழாய் மணநாறுஞ் சந்தக்
காரார் திருநிறஞ் செய்யாள் திருமண நாறுங்கச்சி
யாரார் திகிரிக்கையாளப் பிறந்தாற் கசஞ்சலற்குப்
பாரான் வட மன்னர் பொன்முடி நாறும் பதாம்புயமே.

**விடையளவிட்ட கொடி வீரசேகர காடவ** நின்
நடையளவிட்டது ஞாலங்க ளேழையும் வாழிநின்போர்ப்
படையளவிட்டது பத்துத் திசையும் பரிய முத்தக்
குடையளவிட்ட திரிசுடர் சூழண்ட கூடத்தையே".

என்று அக்கல்வெட்டு இவரது வெற்றிச் சிறப்பைப் பட்டியலிடுகிறது.

அதாவது, 'மேம்பட்ட வீரசேகர காடவனே, உன்னுடைய பருத்த தோள்கள் இவ்வுலகை மட்டும் அளவினை உடையன அல்ல, உன்னுடைய செங்கோல் நடக்கும் எல்லை சூரியனுடைய பொன்னாலாகிய தேர் சுற்றிவரும் மேருமலை மட்டுமன்று (அதைக்கடந்தும் உள்ளது). ஆக்ஞாசக்கரம் செலுத்தும் நின் கைகள் கொடையினால் மேகத்தை மட்டும் ஒத்தன அல்ல. (சுற்பகம், சிந்தாமணி முதலியவற்றையும் ஒக்கும்). நின் போர்களுக்கு ஓர் அளவு கிடையாது. தாண்டும் குதிரைகளையுடைய வலிமை சான்ற நின் பகைவர் புறமுதுகு காட்டி ஒடும் நிலையை நின் போர்கள் எல்லையாகக் கொண்டுள்ளன.

கலக்கமில்லாத தன்மையனான வீர சேகர காடவராயனுக்கு மாலையை அணிந்த அழகிய புயங்கள், அழகிய குளிர்ந்த திருத்துழாயின் நறுமணம் கமழும் சந்தனம் பூசிய கருமை பொருந்திய

அழகிய மார்பானது திருமகளுடைய இனிய நறுமணம் கமழும். காஞ்சியில் இருந்து கொண்டு, மற்ற எல்லா மன்னர்களின் ஆக்ஞா சக்கரங்களையும் கவர்ந்து அரசாளப் பிறந்த காடவனுடைய பாத தாமரைகள் நாடாளுகின்ற வடநாட்டு மன்னர்களுடைய அழகிய முடிமலர்களின் நறுமணம் கமழும்.

**காளையின் வடிவத்தைக் கொடியிலே கொண்டுள்ள வீர சேகர காடவனே! உனது புகழ் ஏழு உலகங்களையும் அளவிட்டுள்ளது. உன்னுடைய போர் செய்யும் படை பத்துத் திசைகளையும் அளவிட்டுள்ளது. பெரிய முத்துக்கள் தொங்கவிடப்பட்ட வெண்கொற்றக் குடை, சூரியன், சந்திரன் என்ற இருசுடர் சுற்றிவரும் அண்டப் பகுதிகளையே அளவிட்டுவிட்டது. நீ வாழ்க" என்று பாராட்டுகின்றன அப்பாடல்கள்.**

## ஏழிசை மோகன் எனும் ஜனநாதக் கச்சியராயன்: (கி.பி.1170–1200)

வீர சேகரக் காடவராயனுக்குத் தமையன் ஒருவன் 'ஏழிசை மோகன் என்னும் ஜனநாதக் கச்சியராயன்' இருந்திருக்கிறான் போன்று தெரிகிறது. இவன் இரண்டாம் இராசாதிராசன் காலத்திலும், மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்திலும் வாழ்ந்திருக்கிறான்.

வீரசேகரக் காடவராயனும் ஜனநாதக் கச்சியராயனும் ஒருவரே என்று கூறிய கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் கூற்றைப் பண்டிட் சோமசுந்தர தேசிகர் மறுத்து இருவரும் வெவ்வேறானவர் என்று தெரிவித்திருக்கிறார்.[78]

இச்சனநாதக் கச்சியராயன் மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் குறிக்கப்பெறும் அரசநாராயணன் ஏழிசை மோகன் என்னும் சனநாதக் கச்சியனன் என்றும்,[79] இவனே மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் 'ஆளப்பிறந்தான்' என்னும், எதிரிலி சோழச் சம்புவராயர்க்கு,[80] எதிர்ப்பாக செங்கேணி அத்திமல்லன் என்னும் குலோத்துங்கச் சோழச் சம்புவராயரோடு அரசியல் உடன்படிக்கை

78 J I H , Vol XVII, p 323, Epi Indi Vol XXVII, p 91

79 A R E No 157 of 1906.

80. Ibid, No 254 of 1919

செய்துகொண்ட அரசநாராயணன் ஆளப்பிறந்தானாவான் என்றும் பேராசிரியர் எம்.எஸ். கோவிந்தசாமி எழுதியிருக்கிறார்.[81]

வீரசேகரக் காடவராயன் கற்கடகமாராயன் கூடலை அழித்தான் என்று கூறப்பெறுவது, கற்கடகமாராயன் ஆட்சி செய்த தீர்த்தமலைப் பகுதியாகும் என்று எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் சரியாகக் கருதியிருக்கிறார்.[82] இக்காடவன் அதியனை வென்றது தர்மபுரியிலாகலாம் என்று கருதப்படுகிறது. இக்காடவ வேந்தர்கள், தங்களுடையதாகக் கூறிக்கொள்ளும் "கூடலூர்", "திருமுனைப்பாடிக் கீழாமூர் நாட்டுக் கூடல்" என்பதால் அது இந்நாளில் உள்ள கடலூர் மாவட்டத் தலைநகரான கூடலூரேயாகும் என்பது உறுதி. இதைத்தான் நடுவண் அரசு கல்வெட்டுத் துறையினரும்[83], பேராசிரியர் எம்.எஸ். கோவிந்தசாமியும்[84] கூறியிருக்கின்றனர்.

## ஏழிசைமோகன் மணவாளப்பெருமாள்: (கி.பி.1200–1211)

வீரசேகரக் காடவராயனுக்குப் பிறகு ஏழிசைமோகன் மணவாளப் பெருமாள் என்னும் வாணிலை கண்ட பெருமாள் இருந்திருக்கிறான். இவனுக்குப் பல பெயர்கள் வழங்கப்பெற்றிருக்கின்றன. இராஜராஜக் காடவராயன்,[85] அசலகுலோத்துங்கன்,[86] அசல குலோத்தமன்,[87] உலகுய்யகொண்ட காடவராயன்,[88] ஆட்கொண்ட நாயகன்[89] ஆகியவை அப்பெயர்களாகும். இக்காடவ வேந்தன் முதன் முதலில் தம்மைச் "சகல புவனச் சக்ரவர்த்திகள்"[90] என்று அழைத்துக் கொண்டவன்.

மணவாளப் பெருமாள்தான் அத்தி கல்வெட்டில் குறிக்கப்பெறும் தொண்டைமண்டலங்கொண்ட பல்லவாண்டரான காடவராயர் என்று

81 Dr M S Govindasamy, Op Cit, P.109

82. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், மேற்கூறப்பட்ட நூல், பக்கம் 13.

83 S I I Vol XII, Intro P VIII

84 Dr M S G., Op Cit , P 110

85 S I I Vol VII, No.146

86 A.R E No 484 of 1937 - 38

87 S.I I Vol VIII, No.121

88 A R E No 56 of 1922

89 Ibid, No.54 of 1903

90. Epi Indi Vol XXIV, No 6

எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் கூறியிருப்பதற்குப் போதிய சான்று இல்லை என்று எம்.எஸ். கோவிந்தசாமி மறுத்துள்ளார்.[91] மேலும், இம்மணவாளப் பெருமாளை இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனின் தந்தையான 'ஜீயமகிபதி' என்று கொள்வதற்கும் இவரின் காலம் இடம் தரவில்லை என்று அப்பேராசிரியரே கூறியுள்ளார்.[92]

மணவாளப் பெருமாள்தான் முதலாம் கோப்பெருஞ்சிங்கன் என்று வி. வெங்கடசுப்ப அய்யரும், தி.வை. சதாசிவ பண்டாரத்தாரும் கூறியிருப்பதும் அவர்களுடைய விருதுப் பெயர்களைக் கொண்டு கருதிப் பார்த்தால் சரியாகப்படவில்லை என்று இவரே எழுதியிருக்கிறர்.[93]

இம் மணவாளப் பெருமாள் முதலாம் கோப்பெருஞ்சிங்கனின் தந்தை என்பதும், அவருடைய மனைவி திருவெண்ணைநல்லூர் அழகியப் பல்லவ விண்ணகர் எம்பெருமான் கோயிலை எடுப்பித்தவர் என்பதும், அக்கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டால் புலனாகிறது.[94] இதே கோயிலில் காணப்பெறும் மற்றொரு கல்வெட்டு அழகிய பல்லவன் கோப்பெருஞ்சிங்கதேவரின் தாயார், பெரிய பிராட்டியாரை எழுந்தருளுவித்தாள் என்று குறிப்பிடுகிறது. இதில் குறிப்பிடப்படும் அழகியப் பல்லவ கோப்பெருஞ்சிங்கன் முதலாம் கோப்பெருஞ் சிங்கனேயாவான்.

மேலே கூறப்பெற்றுள்ள இரு கல்வெட்டுக்களும், இக்கோயில் கலனாகிவிட்ட காரணத்தால், இரண்டாம் கோப்பெருங்சிங்கன் காலத்தில் இக்கோயில் மீண்டும் புதுப்பிக்கப்பெற்றபோது பொறிக்கப்பெற்றன என்று மற்றொரு கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது.[93] இச்செய்தியால் முதலாம் கோப்பெருஞ்சிங்கன், அவன் மகன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் என்று இரு கோப்பெருஞ்சிங்கன்கள் இருந்திருப்பது உறுதியாயிற்று. இது மட்டுமல்லாமல் சிதம்பரம் கீழைக்கோபுரம் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனால் எடுப்பிக்கப்பெற்றது என்பது ஆந்திர மாநிலம், கர்நூல் மாவட்டத்திலுள்ள மர்காபூர் வட்டம்,

91 Dr M S Govindasamy, Op Cit , p 111

92 Ibid

93 Ibid

94 A R.E No 484 of 1921 and 487 of 1921

த்ரிபுராந்தகம் என்னும் ஊரில் காணப்பெறும் அம்மன்னன் காலக் கல்வெட்டால்[95] தெரிய வருகிறது. இக்கீழைக் கோபுரத்தின் நுழைவழியின் வலப்பக்க (வெளியிலிருந்து உள்ளே நுழையும்போது) உட்சுவரில் இரு அரசர் சிற்பங்கள் கும்பிட்ட நிலையில் செதுக்கப்பெற்றுள்ளன. ஒரு உருவம் பெரிதாகவும், மற்றொரு உருவம் சிறியதாகவும் காணப்பெறுகின்றன. இவ்விரு உருவங்களும் முதலாம் கோப்பெருஞ்சிங்கன் மற்றும் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் உருவங்களாக இருக்கலாம். இவ்வுருவங்கள் மூலமும் இரு கோப்பெருஞ்சிங்கன்கள் இருந்திருக்கின்றனர் என்பது ஐயத்திற்கிடமில்லாமல் ஆகிறது.

மணவாளப் பெருமாள் பெரும் போர் வீரனாகத் திகழ்ந்திருப்பான் போன்று தெரிகிறது. இவன் தம் காலத்தில், தற்போதைய விழுப்புரம் மாவட்டம், கெடில நதியின் தென் கரையில் உள்ள *"சேந்தமங்கலம்"* என்ற நகரை அமைத்து, ஆங்கு ஒரு கோட்டையையும், அக்கோட்டையினுள் தம் பெயரால் அமைந்து "வாணிலை கண்டீசுவர முடைய நாயனாருக்கு" ஒரு கோயிலையும் கட்டியிருக்கிறான் என்பது சேந்தமங்கலத்துக் கோயிலில் காணப்பெறும் கல்வெட்டால் புலனாகிறது.

இக்கோயில் நாயனாருக்கு தம் பெயரால் "ஏழிசை மோகன் சந்தி" என்ற படையலுக்கும், பூரட்டாதி திருநாளுக்கும் (இவன் பிறந்த நட்சத்திரமாகலாம்), திருநந்தாவிளக்கு பத்துக்கும், மோகனூர் மாறனார் ஊரிலிருந்து கிடைக்கும் அனைத்து ஆயங்களையும் திருநாமத்துக்காணி இறையிலியாக இம்மன்னன் கொடை வழங்கியிருக்கிறான்.[96] இம்மணவாளப் பெருமாள் முதன் முதலில் தனித்த ஆட்சி புரியத் தொடங்கியிருக்கிறார் என்பதும் சேந்தமங்கலத்து கல்வெட்டாலேயே உறுதியாகிறது. ஏனெனில், இவர் தம் பெயராலேயே ஆணைகளை வழங்கியிருப்பதால் புலனாகிறது.[97] இக்காடவப் பெருவேந்தன் கி.பி. 1211–இல் மறைந்திருக்க வேண்டும் என்று பேராசிரியர் எ.எஸ். கோவிந்தசாமி எழுதியிருக்கிறார்[98].

---

95 S I I Vol XII, No 170

96 S I I Vol XII, No 247

97. நடன. காசிநாதன், காலசுவடுகள, (1973), பக்கங்கள் 51-52; Epi Indi. Vol.XXIV, No.6.

98 Dr M S *Govindasamy*, Op Cit , P 113

## முதலாம் கோப்பெருஞ்சிங்கன் (கி.பி. 1212–1231)

ஏழிசை மோகன் மணவாளப் பெருமாளை அடுத்து முதலாம் கோப்பெருஞ்சிங்கன் ஆட்சிக்கு வந்திருக்கிறான். இக்காடவன் **"அழகிய சீயன்"** என்ற விருதுப் பெயரைக் கொண்டவன் என்றும் **"தெள்ளாறு"** என்னுமிடத்தில் சோழப் பெருவேந்தனைப் போரில் வென்று, அவனது பரிச்சின்னங்களைக் (Paraphernalia) கைப்பற்றியதோடு, அம்மன்னனைச் சிறையிலிட்டு, சோழ நாட்டைத் தன் வசமாக்கிக் கொண்டான் என்றும் திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், வாயலூர் என்னும் ஊரில் உள்ள கல்வெட்டு[99] உணர்த்துகிறது.

அக்கல்வெட்டின் தொடக்க வாசகம் கீழ்வருமாறு:

> **"ஸ்வஸ்தி ஸ்ரீ சகல புவனச் சக்கரவர்த்தி ஸ்ரீ கோப்பெருஞ்சிங்கன் சோழனைத் தெள்ளாற்றில் வென்று சகல பரிச்சின்னமும் கொண்டு, சோழனைச் சிறையிட்டு வைத்து சோணாடு கொண்ட அழகிய சீயன்"**

என்பதாகும்.

கல்வெட்டின் பிற்பகுதி பாக்களால் ஆக்கப்பட்டிருக்கிறது.

> "பொன்னி நாடனு முரிமையும் அமைச்சரு
> மிருப்பதுன் சிறைக் கோட்டம்
> பொருப்பிரண்டென வளர்ந்த தோள்
> வலியினாற் கொண்டு சோணாடு.
> கன்னி காவிரி பகீரதி நின்பிரியா
> தெண்டுறை வாவி காவல்
> மன்னவர் திரையுட னுணங்குவ
> துன்பெருந் திருவாசல்
> வென்னிடாத போர்க் கன்னடர் வென்னிடப்
> பொருததுன் பெருஞ்சேனை

99 Epi Indi, Vol XXIII, pp 174-182

**விளங்கு செம்பொனி னம்பலக் கூத்து நீ**
**விரும்பிய தேவாரம்**

**பின்னி காவல அவனி நாராயண**
**பேணு செந்தமிழ் வாழப் பிறந்த**
**காடவ கோப்பெருஞ்சிங்க நின்**
**பெருமை யார் புகழ்வாரேய்.**

## கோப்பெருஞ்சிங்கனின் கொடி இலச்சினை

இவ்வாறு இக்கல்வெட்டு நீண்டு செல்கிறது. இக்கல்வெட்டு மூலம், கோப்பெருஞ்சிங்கனின் கொடி விடைக் (காளைக்) கொடி. அவனது இலச்சினையும் காளையேயாகும். இவனால் தோற்கடிக்கப் பெற்ற மன்னருடைய மார்பிலும், தோளிலும் இவனுடைய இலச்சினையாகிய காளையின் உருவத்தை வரைந்தான்.

## கோப்பெருஞ்சிங்கன் விருதுகள்

இம்மன்னன் தம்மைத் "திரிபுவனத் திராசாக்கள் தம்பிரான்" என்று அழைத்துக் கொண்டான்.

சோழர்கள் தங்களைத் 'திரிபுவனச் சக்கரவர்த்திகள்' என்று கூறிக்கொண்டனர். இக்காடவன் 'மூவுலக இராசாக்களின் தலைவன்" என்று அவர்கள் விருதைவிட மேலான விருதைப் பூண்டுக் கொண்டிருக்கிறான். சோழர்கள் 'மூன்று உலகத்துக்குத்தான் சக்கரவர்த்தி" என்று அழைத்துக் கொண்டனர். இக்காடவனோ தம்மைச் 'சகலபுவனச் சக்கரவர்த்தி" (அனைத்து உலகங்களுக்கும் சக்கரவர்த்தி) என்றும் அழைத்துக் கொண்டிருக்கிறான்.

## கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டுக்கள்

கோப்பெருஞ்சிங்கன் பற்றி தெரிவிக்கும் கல்வெட்டுக்கள் கி.பி.1213லிருந்து கி.பி.1279 முடிய காணப்படுகின்றன. சுமார் 66 ஆண்டு காலம் இவன் பற்றி தெரிவிக்கின்றன. ஒரு மன்னன் இவ்வளவு நீண்ட காலம் ஆட்சி செய்திருக்க முடியுமா என்பது ஒரு சார் வரலாற்றாசிரியர்களிடம் எழுந்த வினா. மற்றொரு

சாரரான பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி[100], பேராசிரியர் ஆர். சத்தியநாதய்யர்[101] எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்[102] ஆகியோர்; ஒரே ஒரு கோப்பெருஞ்சிங்கன் அவ்வளவு நீண்ட காலம் ஆட்சி செய்திருக்க முடியும் என்று கருத்து தெரிவித்திருக்கின்றனர்.

## கோப்பெருஞ்சிங்கன் இருவர்

ஆனால் நடுவணரசு கல்வெட்டுத் துறையினர் கோப்பெருஞ்சிங்கன் என்ற பெயரில் இரு காடவ மன்னர்கள் ஆட்சி புரிந்திருக்கின்றனர் என்றும், முதலாம் கோப்பெருஞ்சிங்கனின் மகன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் என்றும் தக்க சான்றுகளுடன் எழுதியிருக்கின்றனர்.[103] இக்கருத்துக்கான முக்கியச் சான்றுகளாக மூன்று கல்வெட்டுக்களைக் காட்டியுள்ளனர். புதுவை மாநிலத்திலுள்ள வில்லியனூர், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை, கடலூர் மாவட்டம், சிதம்பரம் ஆகிய ஊர்களிலிருந்து அவை கிடைத்திருக்கின்றன.

வில்லியனூர்க் கல்வெட்டு அவனியாளப் பிறந்தார் கோப்பெருஞ்சிங்கதேவரின் ஆறாம் ஆட்சியாண்டில் எழுதப் பெற்றிருக்கிறது. இக்கல்வெட்டு திரிபுவன வீர தேவரின் (குலோத்துங்கசோழர் III) 37–ஆம் ஆண்டு தொடங்கி, அழகிய சீயர் கோப்பெருஞ்சிங்கதேவரின் 11ஆம் ஆட்சியாண்டு முடிய உள்ள காலத்தில் அக்கோயில் கணக்குகளைத் தணிக்கை செய்தது பற்றி தெரிவிக்கிறது.[104] இக்கல்வெட்டின் காலத்தவனாகிய கோப்பெருஞ் சிங்கதேவர், தமக்கு முன்பிருந்த அழகிய சீயர் கோப்பெருஞ்சிங்க தேவரைக் கல்வெட்டில் குறிப்பிட்டிருப்பதால், இரு கோப்பெருஞ் சிங்கர்கள் இருந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது.

---

100 K A Nilakanta Sastri, The Collas, p 416, Fn No 162

101 Dr S Krishnaswamy Aiyangar Commemoration, Volume, p 215

102. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், Op Cit, பக்கங்கள் 35-64

103 A.R E 1906, Part II, p 63, A R E 480 of 1902, S I I Vol VIII, No 69, Epi Indi, Vol XXIII, No 27 and S I I Vol XII, Introduction

104 A R E No.186 of 1936 - 37.

## மூன்று முக்கிய கல்வெட்டுகள்

திருவெண்ணைநல்லூர்க் கல்வெட்டும்[105] அவனியாளப் பிறந்தான் 11–ஆம் ஆண்டில் எழுதப்பெற்றிருக்கிறது. இது இரு கல்வெட்டுக்களைக் குறிப்பிடுகிறது. *ஒன்று இரண்டாம் இராசராசன்* காலத்தில் பொறிக்கப் பெற்றதும், மற்றொன்று மூன்றாம் குலோத்துங்கச் சோழனின் 35–ஆம் ஆண்டில் (கி.பி.1213) பொறிக்கப் பெற்றதும் ஆகும். இரண்டாம் கல்வெட்டில் **"அழகிய பல்லவன் கோப்பெருஞ்சிங்கன்"** குறிக்கப்பட்டுள்ளான்.

திருவெண்ணைநல்லூரின் மற்றொரு கல்வெட்டு[106] கூடல் ஆளப்பிறந்தான் கோப்பெருங்சிங்கனையம், அவரது மகன் ஆட்கொண்ட தேவனையும் குறிப்பிட்டுள்ளது. இக்கல்வெட்டுக்கள் மூலமும் இரு கோப்பெருஞ்சிங்கன்கள் ஆட்சி புரிந்திருப்பது உறுதியாகிறது.

கோப்பெருஞ்சிங்கன்கள் இருவரா அல்லது ஒருவரா என்ற ஐயப்பாட்டில், எல்லோரும் ஏற்கத்தக்க வகையில் ஒரு முடிவைத் தருவது சிதம்பரம் கல்வெட்டாகும்.[107] இக்கல்வெட்டு கோப்பெருஞ்சிங்கதேவரின் *19–ஆம் ஆட்சியாண்டில் வெட்டப்* பெற்றிருக்கிறது. இது வேசாலிபாடிப் பற்றில் உள்ள பூபால சுந்தர் *சோழ நல்லூரில்* **"சொக்கச் சீயன் கழுகு திருநந்தவனம்"** அமைக்கப் பெற்றதைத் தெரிவிக்கிறது.

இக்கல்வெட்டின் இறுதியில், சோழகோன் என்னும் அலுவலர், இக்கல்வெட்டைப் பெரியதேவரின் 15–ஆம் ஆட்சியாண்டில் முதன் முதலில் இந்நந்தவனம் அமைப்பதற்கான கொடை பற்றித் தெரிவிக்கும் கல்வெட்டு உள்ள கோயில் சுவரிலேயே வெட்டி வைக்கவும் என்று கோயில் நிர்வாகிகளுக்கு ஆணை வழங்கியதாகக் கூறப்பட்டிருக்கிறது. நற்பேறு காரணமாக இதில் குறிப்பிடப்பெறும் பெரிய தேவர் காலத்தில் வெட்டப்பெற்ற கல்வெட்டும் அதே சுவரில் இன்றும் காணப்பெறுகிறது. *"பெரியதேவர்" காலத்தில் வெட்டப்பெற்ற* அக்கல்வெட்டு, சகலபுவனச் சக்ரவர்த்திக் கோப்பெருஞ்சிங்கனின்

105 S I I Vol XII, No 170.

106. Ibid, Vol VIII, No 69

107. Ibid, Vol XII, No 215

15–ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப் பெற்றிருக்கிறது. இது **"சொக்கச்சீயன் கழுகு திருநந்தவனத்"தைக் குறிப்பிடுகிறது.**

சிதம்பரம் கல்வெட்டுக்களிலிருந்து, 'பெரிய தேவர்" என்று குறிப்பிடப்படுபவர், இரண்டாம் கோப்பெருஞ்சிங்கதேவரின் தந்தையான 'சகலபுவனச் சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்கனையே" குறிப்பிட்டுள்ளது என்பதும், முதலாம் கோப்பெருஞ்சிங்கன், இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் என்று இரண்டு கோப்பெருஞ் சிங்கன்கள் இருந்தனர் என்பதும் வெளிப்படை. மேலும், இருவரின் கலடவெட்டுக்களிலும் தரப்பெற்றுள்ள பஞ்சாங்கக் குறிப்புகளும் மேற்கொண்ட கருத்துக்கு உறுதுணையாகிறது. இது மட்டுமல்லாமல் "முதலாம் கோப்பெருஞ்சிங்கன்", "அழகிய சீயன்" என்ற விருதுப் பெயரோடு அழைக்கப்பெறுவதும் மற்றொரு அசைக்க முடியாத சான்றாகிறது.[108]

## இருவர் என்பதற்கு மேலும் ஒரு சான்று

இரு கோப்பெருஞ்சிங்கன்கள் இருந்தனர் என்பதற்கு மேலும் ஒரு கல்வெட்டுச் சான்று திருவண்ணாமலையிலிருந்து தெரிய வந்திருக்கிறது.[109] இக்கல்வெட்டு நடுவணரசு கல்வெட்டாய்வாளரால் சான்றுகளாகக் காட்டப்பட்டுள்ள மூன்று கல்வெட்டுக்களிலும் முக்கியமானதாகத் தெரிகிறது. முதலாம் கோப்பெருஞ்சிங்கனும், அவரது திருக்குமாரன் வாடாவாகை காடவ குமாரனும், திருவண்ணாமலைக் கோயில்களுக்குச் செய்த சிறந்த திருப்பணிகளை மிக அழகாகப் பாடல் வடிவில் விளக்குகின்றது. கோப்பெருஞ்சிங்கனுக்கு ஒரு மகன் இருந்தான் என்பதும், அவன் இயற்பெயர் "ஆட்கொண்ட தேவன்" என்பதும் இக்கல்வெட்டால் உறுதியாகிறது.

## காடவ மன்னனின் மெய்க்கீர்த்தி

சோழர்களுக்கு இருந்த மெய்க் கீர்த்திபோன்று இப்பாடல் கல்வெட்டு கோப்பெருஞ்சிங்கனுக்கும், அவர் மகன் ஆட்கொண்ட தேவருக்கும் விளங்குகிறது. இக்கல்வெட்டு,

108 S I I Vol XII, Introduction, p X

109 S I I. Vol VIII, No.69. (A.R.E 480 OF 1902)

'கார்வளர்மேனிக் கமலக் கண்ணன்
பார்வளருந்திப் பல்லவர் பெருமான்
சகலபுவனச் சக்கரவர்த்தி
கூடலவனியாளப் பிறந்தான்
கோப்பெருஞ்சிங்கன் குரை கழற் காடவன்

என்று தொடங்கி, முதலில் இக்காடவன் அண்ணாமலையாருக்கும், உமையம்மைக்கும் கொடையளித்த அணிகலன்களையும், திருவாசிகை, சிங்காசனம் போன்றவற்றையும் புகழ்ந்துரைக்கிறது.

## கோயில் திருப்பணிகள்

"காவலர் தம்பிரான் கண்ணாரமுத
ரருண மால்வரைப் பெருமாள் தமக்குச்
செய்த திருப்பணி தெரிந்தெடுத்துரைப்பிற்
காதிற் கம்பியும் கதிர் மணி மகுடமும்
செங்கதி ரெரிக்கு மங்க சுத்தமும்
பாகு வலையமும் பைம்பொற்பல தொழிற்
திருவுடை யாடையுந் திருக்கழற் கீழிடும்
பேதை பாதமும் பிறங்கிருட் கண்டமு
மிள ஞாயிற்றினெழினிறந் தோன்ற
வளர் மாணிக்க வாளிவெயிலரும்பிய
விரிகடலவனியாளப் பிறந்தான்
திருவாசிகையும், சிங்காசனமும்
கற்பக விருக்கமு முத்தின் பந்தலு
மோடரி மைக்க ணுமை யிசை பாடி
ஆடிய வதிருங் கழற்பெரு மாளுக்
கினமா ணிக்க மிலங்கச் செய்த
பரதம் வல்ல பெருமாளென்னுந்
திருவாசிகையுஞ் சிறந்த செங்கதி
ரொளி விளங்கு மாணிக்கமுந் துளங்கும்
வயிரமுங் கட்டிய பொலன் தருக்கூட
மஞ்சனமுங் கண்ணாரமுதர் காமக் கோட்டத்
துண்ணாமுலையா முமையவள் தனக்குப்
பருமணி நிரைத்த திருவுடை யாடையும்
வென்றிவேல் கொண்டு குன்றெறி முருகன்
செந்நிற மேனியுந் தேவியர் மேனியு

மைஞ்ஞிறத் தோகை வண்ணமு மடையப்
பொன்னிற மாக்கிய பொற்பணி பலவு
மல்லை காவல னிச்சங்க மல்லன்
பல்லவ வேந்தன் பரதம் வல்லன்
கூடலவனியாளப் பிறந்தான்
செய்தன விப்பணி யடங்கவு மிவன் சிறந்
தூழி காலம் வாழி"

என்று கூடல் அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன் செய்தத் திருப்பணிகளை எடுத்துக் கூறி அவனுக்கு வாழ்த்துக் கூறியுள்ளது.

அடுத்து,

"................ இவன் மகன்
வாடாவாகை காடவ குமாரன்
வான்புகழ் மல்லையு மயிலையுங் காஞ்சியுந்
தண்டக நாடுந் தண்புனற் பாலியும்
பெண்ணையுங் கோவலும் மெவுகையு முடையவ
னெண்ணருஞ் சிறப்பில் யாவரு மதித்த
விருதரில் வீரன் விறல் வீராசனி
கரிய நாதன் காதற் குமரன்
குடதிசைக் கருநடர் தென்புலங் குறுகவும்
வடதிசைத் தெலுங்கர் வடக்கிருந் தழியவும்
போர்பல கடந்து பொருந்தா மன்னவ
ராரெயிற் சேர்ந்துார் மலையரணழித்து
நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்
வெல்புகழனைத்து மேம்படத் தங்கோன்
வாகையுங் குரங்கும் விசையமுந் தீட்டிய
வடல்புனை நெடுவே லாட்கொண்ட தேவன்"

அண்ணாமலையாருக்குச் செய்தத் திருப்பணிகளோடு, பிற நற்செயல்களையும் ஒவ்வொன்றாக வரிசைப்படுத்துகிறது இப்பாடற் கல்வெட்டு.

"வென்றிபுனைதோ ளாட்கொண்ட தேவன்
வேணாவுடையானென்னும் பெயரா
லீணாள் வாழ நிலை பெறச் செய்த"

பல திருப்பணிகள் கீழே கூறப்படுகின்றன.

1. பெருமாள் அமருந் திருமண்டபம்
2. திருப்பள்ளியறை
3. திருவமுதேற்றும் பெருமண்டபம்
4. திருக்காக் கள்ளியும் (பொருள் புரியவில்லை)
5. அவனியாளப் பிறந்தான் திருமண்டபம்
6. நிச்சங்கமல்லன் பெரும்பண்டாரம்
7. நெடுந்தெரு
8. காங்கயன் மடம்
9. வாள்வல பெருமாள் திருநெடுந்தோப்பு
10. தமிழ்நாடு காத்த பெருமாள் தடாகம் (தீர்த்தமாகிய அமுத நன்னதி அனைத்திலும் தூய்மையானது).
11. காடவ குமாரன் தோப்பு
12. அவனியாளப் பிறந்தான் தோப்பு (தந்தை பெயரால் அமைக்கப் பெற்றது).
13. சேனைத் தலைவன் தோப்பு
14. அம்மை (உண்ணாமுலையம்மை) மடம்
15. அய்யன் (அண்ணாமலையார்) ஏரி
16. வாள் வல்ல பெருமாள் கிணறு
17. காடவ குமாரன் தடாகம் (தம் பெயரில் அமைத்தது)
18. பெருமாள் ஏரி
19. பரதம் வல்ல பெருமாள் தோப்பு
20. வீரராயன் தோப்பு
21. நிச்சங்கமல்லன் ஏரி
22. காங்கயன் தடாகம்
23. காங்கயன் மடம்

மேலே குறிப்பிடப் பெற்றிருக்கின்ற பல திருப்பணிகளைப் புரிந்திருப்பதாலும், பாவை பாகன் (சிவபெருமான்) சேவடித் தாமரையைத் தம் தலைமீது அணிந்தும், நெற்றியில் திருநீறு இட்டும், ஆகம நன்னெறியைத் தம் உள்ளத்தில் கொண்டும், பிற

சமயங்களின் கொள்கைகளைக் கடிந்து ஆணை பிறப்பித்தும், நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் முழு முதற்கடவுளாய் வேடங்கொண்டு, ஆயிரம் முகத்தையுடையாளாக (பல பிரிவுகளாக)க் கங்கையாறு பாய்ந்து வந்ததை, பிறை சூடியத் தம் முடிமேல் தாங்கியவரின் ஐந்தெழுத்தை (சிவாய நம என்னும் மந்திரத்தை) ஓதியத் திருத்தொண்டர் இவர் என்றெண்ணி நாற்பத்தெண்ணாயிரவரும் (நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும்) இக்காடவன் இனிமையாக வாழவேண்டும் என்று திருவருள் வழங்கினர் என்று இக்கல்வெட்டு முடிகிறது.

## கல்வெட்டின் பொருள்

இக்கல்வெட்டின் வழி கோப்பெருஞ்சிங்க தேவனுக்கு ஆட்கொண்ட தேவன் என்று ஒரு மகன் இருந்ததுவும், அவர்கள் இருவரும் திருஅண்ணாமலையாருக்கும், உண்ணாமுலையம்மைக்கும் மற்றும் தாம் ஆளும் நாட்டுக்கும் பல நற்பணிகளைப் புரிந்துள்ளனர் என்பதும் புலனாகிறது. காடவ குமாரன் ஆட்கொண்ட தேவன் தானும் பின்னாளில் கோப்பெருஞ்சிங்கன் என்னும் பெயரைச் சூட்டிக் கொண்டு ஆட்சி செய்திருக்கிறான் என்று உணரமுடிகிறது.

சிதம்பரத்தில் காணப்பெறும் மற்றொரு கல்வெட்டு[110] இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனுடைய 3-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டிருக்கிறது. இதில் "பெரிய தேவர்", அதாவது தம் தந்தை முதலாம் கோப்பெருஞ்சிங்கனின் மூன்று மற்றும் நான்காம் ஆட்சியாண்டுகளில் சிதம்பரம் கோயிலுக்குப் பகக் கொடைகள் வழங்கியது குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் "பெரிய தேவர்" முதலாம் கோப்பெருங்சிங்கனேயாவான் என்பது உறுதி.

## மிக முக்கிய முன்னூர்க் கல்வெட்டு

இரு கோப்பெருஞ்சிங்கர்கள் ஆட்சி செய்தனர் என்பதற்கு மேலும் ஒரு கல்வெட்டுச்[111] சான்று கிடைத்திருக்கிறது. இக்கல்வெட்டு விழுப்புரம் மாவட்டம், முன்னூரிலிருந்து கிடைத்துள்ளது. இது அழகிய பல்லவன் வீரராயன் என்னும் கச்சியராயனின் மூன்றாம் ஆட்சியாண்டில் வெட்டப் பெற்றிருக்கிறது. இதில் இம்மன்னன், அய்யதேவர், அதாவது தம் தந்தை முதலாம்

110 S I I. Vol. XII, No 215

111 S I I Vol XII, No 134.

கோப்பெருஞ்சிங்கன் அளித்திருந்த கொடை தம் காலத்திலும் தொடரும் என்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டாலும் தந்தை, மகன் என்று இரு கோப்பெருஞ்சிங்கர்கள் இருந்தமை ஐயத்திற்கிடமில்லாது உறுதியாகிறது.

## முதலாம் கோப்பெருஞ்சிங்கனின் ஆட்சிப்பகுதி:

இக்காடவனுடைய கல்வெட்டுக்கள் தற்போதைய கடலூர் மாவட்டம் விருத்தாசலம், செங்கற்பட்டு மாவட்டம் ஆத்தூர், விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர், திருவண்ணாமலை மாவட்டம் அத்தி, புதுச்சேரி மாநிலம் திரிபுவனி, திருவண்ணாமலை மாவட்டம் வைலூர், நாகப்பட்டிணம் மாவட்டம் ஆக்கூர், செங்கற்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம், வேலூர் மாவட்டம் மோரிஜோனை ஆகிய இடங்களிலிருந்து தெரிய வந்துள்ளன.

இவற்றிலிருந்து முதலாம் கோப்பெருஞ்சிங்கனது ஆட்சிப் பரப்பு வடக்கே வேலூர் மாவட்டம் வரையிலும், தெற்கே நாகப்பட்டிணம் மாவட்டம் வரையிலும், மேற்கே திருவண்ணாமலை மாவட்டம் வரையிலும், கிழக்கே கடலூர் மாவட்டம் முடியவும் விரிந்திருந்தது என்று அறிய முடிகிறது.

## இம்மன்னன் கல்வெட்டுக்கள்

இம்மன்னன் காலத்தைச் சார்ந்தது என்று இதுவரை 13 கல்வெட்டுக்கள் தெரிய வந்துள்ளன. இவ்வேந்தனின் 3ஆம் ஆட்சி ஆண்டு தொடங்கி, 5, 6, 8,10–ஆம் ஆட்சியாண்டு முடிய கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இப்பதின்மூன்று கல்வெட்டுக்களில் மிக முக்கியமானவைகளாகக் கருதத்தக்கவை செங்கற்பட்டு மாவட்டம், ஆத்தூர், கடலூர் மாவட்டம், விருத்தாசலம், திருவண்ணாமலை (பழைய வடார்க்காடு) மாவட்டம், அத்தி, வைலூர் ஆகிய இடங்களைச் சார்ந்தவைகளாகும். அத்தி கல்வெட்டு முழுவதும் பாடலாகவும், வைலூர்க் கல்வெட்டு உரைநடையும், பாடலும் கலந்ததாகவும் காணப்பெறுகின்றன.

முதலாம் கோப்பெருஞ்சிங்கனுடைய ஆத்தூர்க் கல்வெட்டு[112] இம்மன்னனை **"அழகிய சீயன் அவனி ஆளப்பிறந்தான்**

112 Ibid, No 119

காடவன் கோப்பெருஞ்சிங்கன்" என்று குறிப்பிடுகிறது. தில்லை நடராசர் கோயில் "தெற்குக் கோபுரத் திருவாசல் சொக்கச் சீயன் திருநிலை எழுகோபுரமாகச் செய்யத் திருப்பணிக்கு உடலாக", ஜயங்கொண்ட சோழ மண்டலத்து, ஊற்றுக்காட்டுக் கோட்டத்து ஆற்றூர் நாட்டு ஆற்றூரான ராஜராஜநல்லூர் நிலம் முன்னூற்றொன்றே முக்கால் வேலியும், புஞ்சை நிலமும் கொடையளித்தது பற்றி இக்கல்வெட்டு வெட்டப் பெற்றிருக்கிறது. இக்கல்வெட்டின் ஒரு படியைக் காஞ்சிபுரம், திருவேகம்பமுடையார் கோயிலிலும் வெட்டும்படி அரசனே ஆணை பிறப்பித்திருக்கிறான் என்பதும், மன்னனே நேரடியாகத் தம் கையொப்பம் இட்டு ஆணை பிறப்பித்திருக்கிறான் என்பதும் இக்கல்வெட்டினால் தெரிய வருகிறது.

## தில்லை எழுநிலைக் கோபுரம்

இக்கொடையானது தில்லை ஆடவல்லான் திருக்கோயிலின் தென்கோபுரத்தை எழுநிலை மாடமாக (எழுகோபுரமாக)த் திருப்பணி மேற்கொள்வதற்காக அளிக்கப் பெற்றதாகும். கல்வெட்டு வாக்கியப்படி பார்த்தால், முன்னமே அங்கிருந்த கோபுரத்தை எழுநிலையாக உயர்த்தித் திருப்பணி செய்யப் பெற்றது இக்கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் என்பது உணரலாகிறது. ஆதலால்தான் இக்கோபுரத்தில் பாண்டியன் குலச் சின்னமான இருகயல், செண்டு ஆகியவை அங்கு பொறிக்கப் பெற்றிருப்பது காண முடிகிறது. நடுவண் அரசு தொல்லியல் துறையினர் கருதியிருப்பது போன்று பாண்டியன் ஒருவன் காலத்தில் இக்கோபுரம் அமைக்கப் பெற்று குறைந்த நிலைகளை (மாடங்களை) உடையதாக இருந்திருக்கும்[113]. காடவ மன்னன், ஆடல்வல்லான்மீது தாம் கொண்டிருந்த அளப்பரிய பற்றின் காரணமாக இக்கோபுரத்தினை மேலும் உயர்த்தித் திருப்பணி புரிந்திருக்கலாம். மற்றொரு முக்கியச் செய்தியையும் இக்கல்வெட்டு தருகிறது.

## காடவர் ஆட்சிப்பகுதி

அதாவது முதலாம் கோப்பெருஞ்சிங்கனின் ஐந்தாம் ஆண்டிலேயே (கி.பி.1236 - 37) அம்மன்னன் பல்லவர்களின் தலைநகரமான காஞ்சிபுரத்தினை ஒட்டியுள்ள ஊற்றுக் காட்டுக்

113 Ibid, Introduction

கோட்டத்தில் அமைந்திருந்த ஆற்றூரான ராஜராஜ நல்லூரின் நிலங்களைக் கொடையளித்திருக்கிறானெனில், தம் ஆட்சிக்கு முன்பாகவே அப்பகுதிகள் காடவர்களின் ஆட்சிக்குள் அடங்கி யிருந்திருந்தன என்பது தெளிவாகிறது.

## முதலாம் கோப்பெருஞ்சிங்கனின் வெற்றிச் சிறப்பு

இதே ஆற்றூரின் முக்தீஸ்வரர் கோயிலிலேயே பொறிக்கப் பெற்றுள்ள மற்றொரு கல்வெட்டு[114] கோப்பெருஞ்சிங்கனின் குடும்பம், பண்பு, வெற்றிகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவுகிறது. இக்கல்வெட்டின் வடமொழிப் பகுதியில் இம்மன்னனைப் **"பல்லவகுல பாரிஜாத, காடவகுல சூடாமணி, அவனிபாதன ஜாத"** என்றெல்லாம் புகழ்கிறது. இப்பகுதியின் தொடக்கம் ஒரு செப்பேட்டு முத்திரையில் காணப்படும் வாக்கியம் போன்று எழுதப்பெற்றிருக்கிறது. **"ஏதத் தரைலோக்ய பூபால மௌலி மாணிக்க மண்டநம். ஸ்ரீமந் கோ நரஸிம்ஹஸ்ய கட்கமல்லஸ்ந ஸாஸநம்"** என்று காணப் பெறுகிறது.

## முதலாம் கோப்பெருஞ்சிங்கனின் விருதுகள்

இக்கோப்பெருஞ்சிங்கன், *சோழர், பாண்டியர், சேதிராயர்,* கருநாடக அரசர், ஆந்திர அரசர்கள் ஆகியவர்களைவிட உயர்ந்தவன் என்று இக்கல்வெட்டு கூறுகிறது. இம்மன்னன் கண்டகோபால னோடு போரிட்டது பற்றியும், இவனது நாட்டின் விரிந்த பரப்பு பற்றியும் பேசுகிறது. **"கண்ட பண்டாரலுண்டக, க்ஷிரபகாத க்ஷீண நாயக, காவேரிகாமுக, பெண்ணாநதி நாத"** என்றெல்லாம் இவனது விருதுப் பெயர்கள் காணப்பெறுவதால், வடக்கே ஆந்திரப் பகுதியிலிருந்து, தெற்கே சோழ நாட்டுக் காவேரிப் பகுதிவரை இவனது ஆட்சிப் பகுதி விரிந்திருந்தது என்பது புலனாகிறது. இவனுக்கிருந்த வேறு சில விருதுகளான **"கட்கமல்லன், பரத மல்லன், சாகித்யரத்னாகரன், மல்லாபுரிவல்லபன், காஞ்சிபுரிகாந்தன்"** போன்றவற்றையும் இக்கல்வெட்டால் உணர முடிகிறது. இவ்வேந்தன் காஞ்சியையும் (த்தரிமண்), மத்ய தேசத்தையும் (நடுநாடு) வெற்றி பெற்றதையும் *வடமொழிப் பாடல் புலப்படுத்துகிறது.*

114 Ibid, No 120 (A R No.286 of 1921)

விருத்தாசலத்தின் விருத்தகிரீஸ்வரர் கோயில் கல்வெட்டு[115] முதலாம் கோப்பெருஞ்சிங்கனின் ஆறாம் ஆட்சி ஆண்டில் எழுதப் பெற்றிருக்கிறது. இதில் மன்னன் "ஆளப்பிறந்தான் அழகிய சீயன் கோப்பெருஞ்சிங்கன்" என்றும், அவன் திருமுனைப்பாடியின் கீழுள்ள கீழ் ஆமூர் நாட்டுக் கூடலைச் சேர்ந்தவன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கூடல், தற்காலத்தியக் கடலூர் மாவட்டத்தின் தலைமையிடமான கடலூராக இருக்கலாமெனக் கருதப்படுகிறது.[116]

## அத்திக் கல்வெட்டு

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், அத்தியின் அகஸ்தீஸ்வரர் கோயிலில் வெட்டப் பெற்றிருக்கும் கல்வெட்டு பாடல் கல்வெட்டாக உள்ளது.[117] இதில் ஆறு பாடல்கள் தமிழ் மொழியில், கட்டளைக் கலித்துறையில் எழுதப் பெற்றிருக்கின்றன. இப்பாடல்கள் கூடல் ஆளப்பிறந்தானான காடவராயர் மகனார் தொண்டை மண்டலங் கொண்ட பல்லவாண்டாரான காடவராயர் மீது பாடப் பெற்றிருக்கின்றன. இப்பல்லவாண்டானாரான காடவராயர் முதலாம் கோப்பெருஞ்சிங்கன் என்று கொள்ளப்படுகிறது. அவ்வாறு பாடல்களும் கீழே தரப்பட்டுள்ளன:

1 **'துங்கோ நகர்பெறத் தம்புவிதாம் பெறத்தான் வணங்கிய**
**செங்கோல் வளைக்கை யரிவையரோடும் அடியுங் கையும்**
**பங்கேருக மன்ன பல்லவன் காடவன் பார் முழுதா**
**னெங்கோ னனுமதந் தோளிலிடா மன்ன ரெம்மன்னரே.**

2. **பொருதிக் கிலுஞ் சென்று போர் வென்ற பல்லவன்**
**காடவர்கோன்**
**கருதிப் பொரச் சென்று சேவூரினிற் றிருக்கண் சிவக்கப்**
**பருதிக்கு மேலுமுயர் பினக்குன்றிற் பரந்திழிந்த**
**குருதிப் புனல் தொண்டை நன்னாட டங்கலுங்**
**கொண்டதுவே.**

115 S I I, Vol XII, No 121

116 Ibid, Introduction

117 S I I Vol XII, No 125 (A.R.E 296 of 1912)

3. கூராழி யேந்திய பல்லவற்குக் கூடல் மன்னவற்குப்
பாராழி சூழ்ந்திசை பரிக்குப் பந்தி பண்டடைந்த
நீராழி வேழங்க ணீராடு மாமடு நின்ற கொற்றப்
போராழி வெற்பிவன் செங்கோல் நடக்கும் பெருவழியே

4. தொழுதியலா மன்னர் தொண்டைத் திருநாடு
கொண்டவரூர்
கழுதிய லக்கண்ட காடவன் பல்லவன் காசினிமேற்
பழுதிய லாத்தனிச் செங்கோல் நடாத்திப்
பராக்ரமஞ்சென்
றெழுதிய தூணங்க ளெண்டிசை சூழ்ந்த வெழுகிரியே.

5. கைம்மலை வெள்ளக் கடற்படைப் பல்லவன் காடவர்தஞ்
செம்மலை வந்து பணியா வடமன்னர் சேனை விட்டுத்
தம்மலை விட்டுப் புறமலை வேலித் தலத்துளஞ்சா
தெம்மலை யெச்சுரத்துப் புகுவார் புக்கிருப்பதற்கே.

6. வண்டற் புனற்பெண்ணை நாடுடையான்
வடவேங்கடவெற்பன்
தொண்டைத் திருநாடு தோள்வலியாற் கொண்ட
தொண்டை மன்னன்
கண்டற் கடற்கச்சிப் பல்லவன் காடவன் கரிருளிற்
பண்டப் பிரமவர்க் கன்பிலாப் பொற்பதாம் புயனே".

இக்கல்வெட்டுப் பாடலின் தலைப்பில் கோப்பெருஞ் சிங்கன் "பல்லவாண்டார் என்னும் காடவராயர்" என்று குறிக்கப்பட்டுள்ளார். இவர் இப்பாடல்களில் "பல்லவன் காடவன்" என்றும், (முதல், இரண்டாம், ஐந்தாம் பாடல்கள்), "கூடல் மன்னவன்" (மூன்றாம் பாடல்), 'காடவன் பல்லவன்" (நான்காம் பாடல்), "பெண்ணை நாடுடையான்", "வடவேங்கட வெற்பன்", "தொண்டை மன்னன்", "கச்சிப் பல்லவன்", "காடவன்" (ஆறாம் பாடல்) என்றும் பாராட்டப் பட்டுள்ளார். இக்கல்வெட்டும் பல்லவரும், காடவரும் ஒருவரே என்பதை உறுதி செய்கிறது.

## பெருவழிக்கருகில் இவன் கல்வெட்டு

இக்கல்வெட்டின் மூன்றாம் பாடல், அத்தியிலுள்ளவாறே வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், ரங்கம் பேட்டைக்கு அருகிலுள்ள 'மோரிஜோனை" என்னுமிடத்திலும் ஒரு பாறை மேல் எழுதப் பெற்று காணப்படுகிறது.[118] இப்பாறை ஒருவேளை இவன் காலத்தில் இருந்த பெருவழியின் ஒரு பக்கம் இருந்திருக்கலாம் போன்று தெரிகிறது. கோயம்புத்தூர் மாவட்டம், சுண்டைக்காமுத்தூர் பாறையில் வெட்டப் பெற்றிருக்கும் **"இராசகேசரிப் பெருவழி"** கல்வெட்டு[119] போன்றும், தர்மபுரிக்கு அருகில் ஒரு நிலைக் கல்லில் பொறிக்கப் பெற்றிருக்கும் **"அதியமான் பெருவழி"**க் கல்வெட்டு[120] போன்றும் மோரிஜோனைப் பாறைக் கல்வெட்டும் ஒரு பெருவழிக்கும் பக்கத்தில் இருந்திருக்கலாம்.

அத்திக்கல்வெட்டின் முதல் பாடல், செங்கற்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் அப்படியே பொறிக்கப் பெற்று காணப்பெறுகிறது.[121]

## கருத்து வேறுபாடு

முதலாம் கோப்பெருஞ்சிங்கனின் இவ்வத்திக் கல்வெட்டு, அம்மன்னனின் எந்த ஆட்சியாண்டில் பொறிக்கப் பெற்றது என்பது குறிக்கப்படவில்லை. ஆதலால் இது முதலாம் கோப்பெருஞ்சிங்கனைச் சார்ந்தது என்று நடுவணரசு கல்வெட்டுத் துறையினரும்[122], இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனைச் சேர்ந்தது என்று பேராசிரியர் எம்.எஸ். கோவிந்தசாமியும்[123] தங்கள் நூல்களில் எழுதியிருக்கின்றனர். இக்கல்வெட்டு முதலாம் கோப்பெருஞ்சிங்கனைச் சார்ந்தது என்று கொள்வதே சரியெனப்படுகிறது. இம்மன்னன்தான் தம் ஆட்சிப் பகுதியை விரிவுபடுத்தியவனாவான்.

---

118. Ibid, No 127

119 T.S. Sridhar, I.A.S., Select Inscriptions of Tamilnadu, (2006), Plate VIII, 6, Plate Page 12

120 Ibid, Plate X, C, Plate Page 15

121 S I I Vol XII, No 130 (A R E 187 of 1932 - 33)

122 S I I Vol XII, Introduction, p XII

123. Dr M S Govindasamy, Op Cit, p 141

## சேலூர்ப்போர்

இவன் நிகழ்த்திய பல போர்களில் சேலூர்ப் போர் இக்கல்வெட்டின் இரண்டாம் பாடலில் கூறப்பெற்றுள்ளது. இப்போர் யாரோடு நிகழ்த்தப் பெற்றது என்பது கல்வெட்டில் கூறப்படாவிட்டாலும், இப்போர் பெரிய அளவில் நிகழ்ந்த போராகத் தெரிகிறது. ஏனெனில், இப்போரின் முடிவில் "சூரிய மண்டலத்தின் உயரத்தைவிட அதிகமாகக் குவிக்கப்பட்ட பிணங்களின் குன்றுகளிலிருந்து பரவியோலடிய இரத்தமாகிய நீர் தொண்டை நாடு முழுவதையும் சூழ்ந்து கொண்டது" எனறு பாடப் பெற்றிருக்கிறது. ஆதலால் இப்போரின் முடிவில் தொண்டை நாட்டுப் பகுதி முழுவதும் இவனது ஆட்சியின் கீழ் வந்துவிட்டதாகத் தெரிகிறது. அவ்வாறெனில், அதுவரை பல்லவப் பேரரசுக்குப் பின்பு ஆட்சி செய்து வந்த சோழர் ஆட்சியையும், அவருக்குத் துணையாக வந்து தமிழகத்தில் சில பகுதிகளைத் தம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்திருந்த போசளரது ஆட்சியையும் முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டு வந்ததையே இச்சேலூர்ப் போர் புலப்படுத்துவதாகக் கருதலாம். இச்சேலூர் விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்திலமைந்திருக்கும் மேல்சேலூராக இருக்கலாம் என்று வி. வெங்கடசுப்ப ஐயர் கருதியிருக்கிறார்.[124]

## கோப்பெருஞ்சிங்கன் மூன்றாம் இராசராசனை வென்றது

இப்போருக்கு முன்பாகவே முதலாம் கோப்பெருஞ்சிங்கன் சோழப் பெருமன்னன் மூன்றாம் இராசராசனை வென்று தம் தலைநகரான சேந்தமங்கலத்தில் சிறையிட்டிருக்கிறான். இச்செய்தி வைலூர்க் கல்வெட்டால் புலனாகிறது.[125] இக்கல்வெட்டின் தொடக்க வாசகம் கீழே தரப்படுகிறது.

> **"ஸ்வஸ்தி ஸ்ரீ சகல புவனச் சக்கரவத்தி ஸ்ரீ கோப்**
> **பெருஞ்சிங்கன் சோழனைத் தெள்ளாற்றில்**
> **வென்று சகல பரிச்சின்னமுங் கொண்டு**
> **சோழனைச் சிறையிட்டு வைத்து**
> **சோணாடு கொண்ட அழகிய சீயன்"**

124 S I I Vol XII, No 125, Summary, p 62

125 Ibid, No 128 (A R E No 418 of 1922, Epi Indica, Vol XXIII, pp 180 - 181)

இவ்வுரைநடை வாக்கியங்களைத் தொடர்ந்து ஐந்து பாடல்களில் முதலாம் கோப்பெருஞ்சிங்கனின் புகழ் போற்றிப் பாராட்டப்பட்டுள்ளது. முதல் பாடல் "பன்னிருசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தத்திலும்", இரண்டாம் பாடல் "நேரிசை வெண்பாவிலும்", மூன்றாம் பாடல் "கலி விருத்தத்திலும்", "நான்காம் மற்றும் ஐந்தாம் பாடல்கள்" "எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தத்திலும்" பாடப்பெற்றிருக் கின்றன. வைலூர்க் கல்வெட்டின் பாடல் வரிகளைக் கீழே காணலாம்.

"பொன்னி நாடனு முரிமையும் அமைச்சரு
மிருப்பதுன் சிறைக் கோட்டம்
பொருப் பிரண்டென வளர்ந்த தோள்
வலியினாற் கொண்டு சோணாடு
கன்னி காவிரிபகீரதி நின்பிரியா
தெண்டுறை வாவி காவல்
மன்னவர் திரையுட னுணங்குவ
துன்பெருந் திருவாசல்
வென்னிடாத போர்க் கன்னடர் வென்னிடப்
பொருததுன் பெருஞ்சேனை
விளங்கு செம்பொனினம்பலக் கூத்துநீ
விரும்பிய தேவாரம்
பின்னிகாவல அவனி நாராயண
பேணுசெந்தமிழ் வாழப்பிறந்த
காடவ கோப்பெருஞ்சிங்கநின்
பெருமையை யார் புகழ்வாரேய்.

திரையிட்டிருமின்கள் தெவ்வேந்தர் செம்பொன்
திரையிடாப் பூம்புகார்ச் சோழன் சிறைகிடந்த
கோட்டந்தனை நினைமின் கோப்பெருஞ் சிங்கன் கமல
நாட்டங் கடை சிவந்த நாள்.

மீளிவன் கொண்ட விடை வேந்தர் மார் பினும்
தோளினுந்தீட்டிய தொண்டை மன்னவர்
வாளில் வென்றிடு சிறைவளவன் தூங்கிய
நாளினம் பெரியதின்னாளெனப் புலம்புமே
அறை கடலினிசையுடனே யண்டர் வேயினாம்
பல்லிசை செவிகவர அந்திமாலை

நிறைமடி யினிலவென்னு நெருப்பு பட்டால்
நீரிலை நின்றாற்றுவளோ திருபதுங்கா
பிறைபொருத கனமகர கிம்புரி வன்கோட்டுப் 780668
பெருங்களிற்றுச் சோழனையு மமைச்சரையும்
பிடித்துச்
சிறையிலிடக் களிறுவிடு மிண்டன் சீயா
திரிபுவனத் திராசாக்கள் தம்பிரானே

ஒருநாளும் விடியாத நெடிய கங்கு
லூழியென நீண்டுவர உலகிற் புன்கண்
மருண்மாலை யிதுமுன்னே வந்ததென்றால்
மடந்தையிவ ளாற்றுவளோ மல்லைவேந்தே
பொருமாலை முடியரசர் கன்னிமாதர்
போற்றிசெயும் புவன முழுதுடையார் தாமுந்
திருமாதும் புணர்புயத்து மிண்டன் சீய
திரிபுவனத் திராசாக்கள் தம்பிரானே"

இக்கல்வெட்டுப் பாடல்கள் மூலம், முதலாம் கோப்பெருஞ் சிங்கனால் சோழவேந்தன் தோற்கடிக்கப்பெற்று சிறையிலடைக்கப் பெற்றதும், அவனால் தோற்கடிக்கப் பெற்ற மன்னர்களின் மார்பிலும், தோளிலும் "விடை" (காளை)ச் சின்னத்தைப் பொறித்ததும், போரில் வெல்ல முடியாத கன்னடரை கோப்பெருஞ்சிங்கன் படை வென்றதும் தெரியலாகிறது. அதுமட்டுமல்லாமல் கோப்பெருங்சிங்கனுக்கு வழங்கி வந்த "காடவ கோப்பெருஞ்சிங்கன்", "தொண்டை மன்னவர்", 'மிண்டன் சீயன்", "திரிபுவனத்து இராசாக்கள் தம்பிரான்", "மல்லை வேந்தன்" போன்ற விருதுப் பெயர்களையும் அறிய முடிகிறது.

## திருக்குறள் வரிகளோடு ஒப்பீடு

"திரையிட்டிருமின்கள் தெவ்வேந்தர் செம்பொன் திரையிடாப் பூம்புகார்ச் சோழன் சிறைகிடந்த கோட்டந்தனை நினைமின்" என்ற பாடல் வரிகள் திருக்குறளின் 'படைச்செருக்கு' அதிகாரத்திலுள்ள முதல் பாடலான,

"என்ஐமுன் நில்லன்மின் தெவ்விர் பலர் என்ஐ
முன்நின்று கல் நின்றவர்" (குறள் பாடல். 771)

என்பதை நினைவூட்டுவதாக உள்ளது.

## திருவயிந்திபுரம் கல்வெட்டு, கத்யகர்ணாமிர்தம் நூல் தான்றுகள்

முதலாம் கோப்பெருஞ்சிங்கனால், தம் தலைநகரான சேந்தமங்கலத்தில் சிறையிலடைக்கப்பட்ட மூன்றாம் இராசராசச் சோழனைச் சிறையிலிருந்து விடுவித்து, மீண்டும் சோழப் பேரரசனாக முடிசூட்டி ஆட்சி புரியச் செய்த போசள மன்னன் இரண்டாம் நரசிம்மனது படையெடுப்பைப் பற்றி, கடலூர் மாவட்டம், திருவயிந்திரத்துக் கல்வெட்டும், சகல வித்யாசக்ரவர்த்தினுடைய 'கத்யகர்ணாமிர்த'மும்[126] விரிவாக விளக்குகின்றன.

முதலில் திருவயீந்திபுரக் கல்வெட்டைப் பார்க்கலாம்.

1. "ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு 15 ஆவதின் எதிராம் ஆண்டு பிரதாப சக்கரவர்த்தி ஹொய்சண ஸ்ரீ வீர நரசிம்ம தேவன், சோழ சக்கரவர்த்தியைக்

2. கோப்பெருஞ்சிங்கன் சேந்தமங்கலத்தில் பிடித்துக் கொடு இருந்து, தன் படையை இட்டு ராஜ்யத்தை அழித்துத் தேவாலயங்களும் விஷ்ணு ஸ்தானங்களும் அழிகையிலே, இப்படித் தேவன் கேட்டரு

3. ளி, 'சோழ மண்டல பிரதிஷ்டாசாரியன் என்னும் கீர்த்தி நிலை நிறுத்தி அல்லது எக்காளம் ஊதுவதில்லை,' என்று தோரண சமுத்திரத்தினின்றும் எழுந்து வந்து, மகாராஜ்ய நிர்மூலமாடி, இவனையும் இவன் பெண்டு பண்டாரமும் கைக்கொண்டு,

4. பாச்சூரிலே விட்டு, கோப்பெருஞ்சிங்கன் தேசமும் அழித்துச் சோளச் சக்கரவர்த்தியையும் எழுந் தருளிவித்துக் கொடு,' என்று தேவன் திருவுளமாய் ஏவ, விடை கொண்டு எழுந்த ஸ்வஸ்தி ஸ்ரீமான் மகாபிரதானி பிரம விகுவாசி

5. தண்டின கோபன் ஜகதொப்ப கண்டன் அப்பண தன்னக்கனும், சமுத்திர கோபய்ய தன்னக்கனும்

126 Epi Indica, Vol VII, 160 ff

கோப்பெருஞ்சிங்கன் இருந்த எள்ளேரியும் கல்லியூர் மூலையும், சோழகோன் இருந்த தொழுதகையூரும் அழித்து,

6. வேந்தன் முதலிகளில் வீரகங்க நாடாள்வான், சீனத்தரையன், ஈழத்து ராஜா பராக்கிரம பாகு உள்ளிட்ட முதலி 4 பேரையும் கொன்று, இவர்கள் குதிரையும் கைக்கொண்டு, கொல்லி சோழகோன் குதிரைகளையும் கைக்கொண்டு, பொன்

7. னம்பல தேவனையும் கும்பிட்டு, எதுத்து வந்த தொண்டைமாநல்லூர் உள்ளிட்ட தமக்கூர்களும் அழித்து... வெட்டிவித்து திருப்பாதிரிப் புலியூரில் வீற்றிருந்து, திருவதிகை, திருவெக்கரை உள்ளிட்ட ஊர்

8. களும் அழித்து, வாரணவாசி ஆற்றுக்குத்தெற்கு, சேந்தமங்கலத்துக்கும் கிழக்கு கடலிலே அழியூர்களும், குடிக்கால்களும் சுட்டும் அழித்தும், பெண்டுகளைப் பிடித்தும், கொள்ளை கொண்டும், சேந்தமங்கலத்தே எடுத்து

9. விடப்போகிற அளவிலே, கோப்பெருஞ்சிங்கன் குழைந்து சோழச் சக்கரவர்த்தியை

எழுந்தருளி விக்கக் கடவதாக தேவனுக்கு விண்ணப்பம் செய்ய, இவர் விட்டு, நமக்கு

ஆள்வரக் காட்டுகையிலே, சோழ சக்கரவர்த்தியை எழுந்தருளுவித்து, கொடுபோந்து

ராஜ்யத்தே புகவிட்டதுஉ."

மேலே எழுதப்பெற்றிருக்கின்ற கல்வெட்டு வரிகளின் விவரத்தை முதலில் காண்போம்.

1. இக்கல்வெட்டு மூன்றாம் இராசராசனின் 16-ம் ஆம் ஆட்சி ஆண்டில் (15+1=16) எழுதப்பெற்றிருக்கிறது. இது மூன்றாம் இராசராசன், கோப்பெருஞ்சிங்கன் சிறையிலிருந்து மீட்கப்பட்ட பிறகு

எழுதப் பெற்றதாகத் தெரிகிறது. மேலும் இக்கல்வெட்டு கடலூருக்கு மிக அருகாமையிலுள்ள திருவயிந்திபுரத்தில் உள்ள தேவநாயகப் பெருமாள் கோயில் மேற்குப் பிரகாரச் சுவரில் வெட்டப்பெற்று காணப்படுகிறதால், திருவயிந்திபுரத்தில்தான் அம்மீட்பு நிகழ்ச்சி நடைபெற்றிருக்க வேண்டும் என்று எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் கருதியிருப்பது[127] சரியெனப்படுகிறது. மேலும் இக்கல்வெட்டு போசள அரசன் வீரநரசிம்ம தேவனின் படைத்தளபதிகளான அப்பண மற்றும் சமுத்ர கோப்பைய ஆகியோரின் தூண்டுதலால் பொறிக்கப் பெற்றிருக்கலாம் என்று இ.ஹுல்ட்ஷ் கருதியிருக்கிறார்.[128]

2. "சோழச் சக்கரவர்த்தியைக் கோப்பெருஞ்சிங்கன் சேந்தமங்கலத்தில் சிறைப்பிடித்ததோடு, தம் படைகொண்டு சோழ இராச்சியத்திலிருந்த தேவாலயங்களையும், (சிவன் தலங்கள்), விஷ்ணு தலங்களையும் அழித்ததை போசளச் சக்கரவர்த்தி ஸ்ரீ வீரநரசிம்மதேவன் கேள்விப்பட்டார். உடன் "சோழ மண்டல பிரதிஷ்டாசாரியன்" என்னும் மன்னரின் கீர்த்தியை மீண்டும் நிலைநிறுத்தும் வரை எக்காளம் ஊதுவதில்லை என்ற உறுதியுடன், "தம் தலைநகரமான தோரசமுத்திரத்திலிருந்து படை எடுத்துச் சென்று, மகர (மகத) இராச்சியத்தை நிர்மூலமாக்கி, அந்நாட்டு மன்னனையும், பெண்டிரையும், கருவூலத்தையும் கைப்பற்றி பாசசூரிலே விட்டுவிட்டு; கோப்பெருஞ்சிங்கன் நாட்டையும் அழித்து, சோழச் சக்கரவர்த்தியையும் சிறையிலிருந்து விடுவித்து வா" என்று மன்னர் ஆணையிட; மன்னனிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு அப்பண தண்டநாயக்கனும், சமுத்திர கோப்பயதண்டநாயக்கனும் கோப்பெருஞ்சிங்கன் தங்கியிருந்த எள்ளேரியையும், கல்லியூர் மூலையையும், சோழகோன் இருந்த தொழுதகையூரையும் அழித்து, கோப்பெருஞ்சிங்கன் வேந்தன் முதலிகள் (படை முதல்வர்களான) வீரகங்கநாடாழ்வான், ஜினத்தரையன், ஈழத்து ராஜா பராக்கிரமபாஹு உள்ளிட்ட படை முதலி (நான்கு) பேரையும் (கொல்லி சோழக்கோனையும் சேர்த்து) கொன்று, இவர்கள் குதிரையையும் கைக்கொண்டு, கொல்லி சோழக்கோன் குதிரைகளையும் கைக்கொண்டு, (சிதம்பரத்தில்) பொன்னம்பல தேவனையும்

127. Dr.S S. Janaki, Gadyakarnamrta of Sakala Vidyachakravartin, (1981), pp.75-78

128. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், மேற்கூறப்பெற்ற நூல், பக்கம். 90.

(நடராசரையும்) கும்பிட்டுவிட்டு, மீண்டும் படை நடத்தி தொண்டைமாநல்லூர் உள்ளிட்ட (கோப்பெருஞ்சிங்கனுடைய) ஊர்களையும் அழித்து, இடைப்பட்ட காடுகளையும் வெட்டிவித்து, திருப்பாதிரிப்புலியூரிலிருந்து சென்று திருவதிகை, திருவக்கரை உள்ளிட்ட ஊர்களையும் அழித்து, வாரணவாசி (கெடிலம்) ஆற்றுக்குத் தெற்கு, சேந்தமங்கலத்துக்குக் கிழக்கு, கடலிலே (அழி) ஊர்களும், குழி (கால்)களும் (கொடிகால்-வெற்றிலை பயிரிடப்படும் நிலங்களுள்ள ஊர்களும்) எரித்தும், அழித்தும், தங்களாக்கிக் கொண்டும், சேந்தமங்கலத்துக்குப் படை எடுத்துப் போகிற நேரத்தில்; கோப்பெருஞ்சிங்கன் பயந்து, சோழச் சக்கரவர்த்தியை விடுவிப்பதாக போசள மன்னனுக்கு விண்ணப்பம் செய்ய கோப்பெருங்சிங்கன் அனுப்பிய தூதர் வந்ததால், சோழச் சக்கரவர்த்தியை விடுவித்துக் கொண்டு அழைத்துச் சென்று, அவரது சோழ நாட்டிலே சேர்க்கப்பெற்றது.''

3. இக்கல்வெட்டு இடையிடையே சிதைந்திருப்பதாலும், மொழிநடையில் சிறு வேறுபாடு காணப்பெறுவதாலும், தோரசமுத்திரத்திலிருந்து படையெடுத்து வந்தது மன்னனா அல்லது மன்னனது தண்ட நாயக்கர்களா என்பது தெளிவில்லாமல் இருக்கிறது. ஆனால் நடுவணரசு கல்வெட்டுத்துறை,[129] எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்[130] மற்றும் டாக்டர் எம்.எஸ். கோவிந்தசாமி[131] ஆகியோர் தோரசமுத்திரத்திலிருந்து படை நடத்திச் சென்றது வீர நரசிம்மன்தான் என்றும், போகும் வழியில் மகத நாட்டை அழித்து, அந்நாட்டு மன்னனையும், பெண்டிரையும், கருவூலத்தையும் கைக்கொண்டு, பாச்சூர் சென்று, அங்கிருந்து கோப்பெருஞ்சிங்கன் நாட்டை அழித்து வாருங்கள் என்று தம் தண்டநாயகர்களுக்கு ஆணையிட்டுள்ளான் என்று எழுதியுள்ளனர்.

4. சோழச் சக்கரவர்த்தியான மூன்றாம் இராசராசன் சிறைபிடிக்கப்பட்டான் என்று கேள்விப்பட்டதும், தம் தண்ட நாயக்கர்களை அழைத்து, "தம் தலைநகரான தோரசமுத்திரத் திலிருந்து படையெடுத்து வந்து, மகத நாட்டை அழித்து,

129 Epi Indica Vol VII, No 23, p 161

130 Epi Indica. Vol VII, No 23, p 161

131 எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், மேற்கூறப்பெற்ற நூல், பக்கங்கள் 89–90.

அந்நாட்டு மன்னன், பெண்டிர் மற்றும் கருவூலம் ஆகியவற்றைப் பாச்சூரில் விட்டுவிட்டு, கோப்பெருஞ்சிங்கன் நாட்டை அழித்து, சோழச் சக்கரவர்த்தியை விடுவித்து வா" என்று மன்னன் ஆணையிட்டதாகக் கொள்வதே இக்கல்வெட்டின் சரியான பொருளாகத் தெரிகிறது.

5. ஏனெனில், போசள மன்னன் வீரநரசிம்மன் பாச்சூரில் தங்கினார் என்றோ, அங்கிருந்து தண்ட நாயகர்களுக்கு ஆணை பிறப்பித்தார் என்றோ கல்வெட்டில் வாசகம் இடம் பெறவில்லை என்பதாலாகும்.

6. வீரநரசிம்மன் தம் இரு தண்டநாயகர்களைப் படையெடுத்து வரும்படிச் செய்து, மூன்றாம் இராசராசனை எதிர்க்கும் சாமந்தர்களைத் (குறுநில மன்னர்களை) தோற்கடித்து, சோழ அரசனை சிறையிலிருந்து விடுவித்து வாருங்கள் என்று ஆணையிட்டான் என்றுதான் கத்யகர்ணாமிர்தம்[132] தெரிவிக்கிறது.

7. இவ்வாணையை வெளியிடுகையில், மன்னன் தன் தலைநகரமான தோரசமுத்திரத்தில் இல்லை. ஏனெனில் மன்னன் முன்னமேயே மூன்றாம் இராசராசனின் வேண்டுகோளுக்கிணங்கி[133] தமிழ்நாட்டு மகேந்திரமங்கலத்தக்குச் சென்று அங்கேயே தங்கியிருந்ததாகவும், அங்கு தங்கியிருந்தபோதுதான், சோழச் சக்கரவர்த்தி, கோப்பெருஞ்சிங்கனால் சிறைபிடிக்கப்பெற்ற செய்தி தம் தூதுவர்களால் தெரிவிக்கப்பெற்றதாகவும் கத்யகர்ணாமிர்தம் நூல் விவரிக்கிறது.

8. கல்வெட்டின் சரியான புரிதலும் மேற்கூறப்பெற்ற செய்தியைத்தான் உணர்த்துவதாகத் தெரிகிறது. கல்வெட்டில் "தோரசமுத்திரத்தினின்றும் எடுத்து வந்து" என்று கூறப்பெறுவது மன்னன் "தம் தண்டநாயகர்களைத் தோரசமுத்திரத்திலிருந்துப் படை எடுத்து வந்து" மகத நாட்டை அழித்துவிட்டு, அந்நாட்டு மன்னரையும், பெண்டிரையும், பொருளையும், பாச்சூரில் விட்டுவிட்டு, கோப்பெருஞ்சிங்கன் நாட்டை அழித்து, சோழ மன்னனை விடுதலை செய் என்று வீரராமநாதன் மகேந்திரமங்கலத்திலிருந்து கொண்டு

132 Dr M S Govindasamy, Op Cit, p 130

133. Dr S S Janaki, , Op Cit, (1981) p 76

கட்டளைப் பிறப்பித்ததைத்தான் உணர்த்துகிறது.[134] ஆதலால், திருவயிந்திபுரம் கல்வெட்டில் காணப்பெறும் குழப்பத்தைக் **கத்யகர்ணாமிர்தம்** தெளிவாக்கி விடுகிறது.

**9.** திருவயிந்திபுரம் கல்வெட்டில் மறைமுகமாகக் கூறப்பெறும் மற்றொரு செய்தியும் **கத்யகர்ணாமிர்தத்தில்** வெளிப்படையாகவே கூறப்பெற்றிருக்கிறது. அதாவது, துோரசமுத்திரத்திலிருந்து புறப்பட்டு வந்த படை, வரும் வழியில் மகர (மகத) நாட்டை அழித்து, அந்நாட்டு மன்னன், பெண்டிர், பொருள் ஆகியவற்றைக் கைக்கொண்டு, என்று கல்வெட்டு கூறுகிறதே தவிர, மகத மன்னன் பாண மன்னர்களில் ஒருவனா? அல்லது அந்நாட்டை ஆட்சிபுரியும் வேறு மன்னனா? என்பது தெளிவாக இல்லை. இத்தெளிவின்மையையும், **கத்யகர்ணாமிர்தம்,** அம்மன்னன் "அதிகமான்" என்று தெளிவாக்கியிருக்கிறது.[135] அதியரின் ஆதிக்கத்தில்தான் அம்மகதப்பகுதி அப்பொழுது இருந்திருக்கிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அதியர், தருமபுரியைத் தலைநகரமாகக் கொண்டு மகதப் பகுதியையும் சேர்த்து ஆட்சி செய்திருப்பர் போன்று தெரிகிறது. ஆதலால்தான் கோப்பெருஞ்சிங்கனின் முன்னோனான **ஆளப்பிறந்தான் வீரசேகரனான காடவராயன்** அதியனை வெற்றிபெற்றதாகக் கூறிக் கொண்டிருக்கிறான்.

திருவயிந்திபுரம் கல்வெட்டு, கோப்பெருஞ்சிங்கன் எள்ளேரி மற்றும் கல்லியூர்மூலை ஆகிய இடங்களில் தங்கியிருந்ததாகவும், சோழகோன் தொழுகையூரில் தங்கியிருந்ததாகவும், ஆதலால் அவ்வூர்களை போசளர் தண்டநாயகர்கள் அழித்ததாகவும் கூறுகிறது. எள்ளேரியும், கல்லியூர்மூலையும் சிதம்பரத்துக்குத் தென்மேற்குத் திசையில் அமைந்திருக்கின்றன. தொழுகையூர் என்பது, தற்பொழுது விழுப்புரம் திருச்சி நெடுஞ்சாலையில், விருத்தாசலத்துக்கு அருகில் உள்ள "தொழுதூராக" இருக்கலாம்.[136]

கோப்பெருஞ்சிங்கனின் படைத்தலைவர்களில் (முதலிகள்) வீரகங்கநாடாழ்வான், சீனத்தரையன், ஈழத்து ராஜா பராக்கிரமபாகு

134 Dr S S Janaki, , Op Cit, p 76

135 Ibid

136 S I.I Vol XII, No 263

உள்ளிட்ட நான்கு பேரைக் கொன்று, அவர்களின் குதிரைகளையும், கொல்லி சோழகோன் (நான்காவது படைத்தலைவனாக இருக்கலாம்) குதிரைகளையும் போசளர் படை கைக்கொண்டது என்று கூறப்பெற்றிருக்கிறது. இதன் மூலம் கோப்பெருஞ்சிங்கன் ஒரு பெரும்படையைக் கொண்டிருந்தான் என்பது நிரூபணமாகிறது.

கோப்பெருஞ்சிங்கனிடமிருந்து சோழச் சக்கரவர்த்தியை மீட்ட போரில் பங்கேற்ற போசளர் தண்டநாயகர்களான அப்பண்ண, கோப்பய ஆகியோருக்கு கர்நாடகப் பகுதியான அரகெரேவில், கி.பி. 1233-இல் வீரநரசிம்மன் நிலக்கொடை வழங்கியிருப்பதால்,[137] இதற்கு முன்பாகச் சோழ மன்னன் விடுவிக்கப்பட்டுவிட்டான் என்பது உறுதியாகிறது.

போசள மன்னன் வீரராமநாதனுடைய தண்டநாயக்கர்களால் கோப்பெருஞ்சிங்கனின் நாட்டின் ஒரு பகுதி அழிக்கப்பட்டு, சோழச் சக்கரவர்த்தி மூன்றாம் இராசராசன் சிறையிலிருந்து விடுவிக்கப் பெற்று, அவனை அழைத்துக்கொண்டு போய் சோழநாட்டில் விட்டு விட்ட பிறகு, மீண்டும் அவர்களோடு கோப்பெருஞ்சிங்கன், தற்போதையப் பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூரில் போர்புரிந்து போசள படைத்தளபதிகளான கேசவ, ஹரிஹர தண்டநாயக மற்றும் சிலரையும் சாகடித்திருக்கிறான். மேலும் அவர்களது பெண்டிரையும், பொருளையும் கவர்ந்து கொண்டிருக்கிறான். இப்போர் பற்றி இவனது 10-ம் ஆம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பெற்றிருக்கும். (கி.பி. 1241-1242) கல்வெட்டில் குறிக்கப்படுகிறது.[138] அப்போரினால் தமக்கேற்பட்ட பாவத்தைப் போக்கிக்கொள்ளுமுகத்தான் (பிராயச்சித்தமாக) விருத்தகிரி கோயிலுக்குச் சில அணிகலன் களைக் கொடையாக வழங்கியிருக்கிறான்.

இதன் தொடர்ச்சியாக, மேலும் சில போசளர் படைத் தலைவர்களைக் கோப்பெருஞ்சிங்கன் சிறைபிடித்தான் என்ற செய்தி நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், ஆக்கூர் தான்றோன்றீஸ்வரர் கோயில் மண்டபத்தின் அடிப்பகுதியில்

137 எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் தம் நூலில் இத்தொகுதியை "தோசூர்" என்று குறிப்பிட்டுள்ளார். பக்கம். 90.

137a Epigraphia Carnatica, Vol XII, Gubbi 45

138 S.I.I Vol XII, No 124

பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டால்[139] புலனாகிறது. இக்கல்வெட்டு கோப்பெருஞ்சிங்கனின் வெற்றிகளைப் பறைசாற்றும் ஒரு உலாபோன்று காணப்படுகிறது.

**ஆக்கூர்க் கல்வெட்டு**

கல்வெட்டின் வாசகம் கீழே தரப்படுகிறது.

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸகலபுவன சக்கரவத்திகள் ஸ்ரீகோப்பெருஞ்சிங்கதேவர்(க்குல)

2. அழகிய பல்லவரான வீரப்ரதாபர் போசளர்களையும் சிறை கொண்டருளிப் பாண்டி

3. யர்களைத் திறை கொண்டருளி மீண்டு எழுந்தருளிச் சோழ மண்டலம் பாத்தருளிக் காவேரி ஆற்

4. றுக்குத் தென்கரையே கிழக்கு நோக்கி எழுந்தருளி திருப்பதிகளெல்லாம் கும்பிட்டருளி தேவ

5. தானங்களும் திருவிடையாட்டங்களும் இறையிலி விட்டருளித் திருப்பணிகள் எல்லாம் செ

6. சய்வித்தருளி ஜயங்கொண்ட சேழாவள நாட்டு ப்ரமதே........ லே எழுந்தருளி(ப்பு)

7. குந்தருளி இம்மண்டலம் பற்றடைத்த இவர்கள் நாடு செய்தபடி.... பால்லானா... லே அழிந்துகிடந்த படியை(ய்)

8. க்கண்டருளி இம்மண்டலத்து நெடுங்கோடி காசு சிகை இழந்தருளி இநாட்டுக்கு இருபத்து நாலு கோடி காசு

9. சிகை இழந்தருளி நெடுங்காலங் கிடந்த (கு)றைகளை வெட்டிவிட்டருளிக் காருண்யம் பண்ணி அருளி தேசாந்திரங்

10. களிற் போன இவர்கள், தந்தாம் ஊர்களும்(ம்) காணிகளும் மனைகளும் பெறுகவெ(ன்று) திருவுள்ளமான படியா

139 Ibid No 129

11. லே கெங்கை பரியந்தமாகப் போன ஜனங்கள் நேராகப் புகுந்து தந்தாம் ஊர்களும் காணிகளு

12. ம் பெற்று ஒரு குறைகள் அற இருக்கும்படி செய்தருளினார் அழகிய பல்லவரான வீரப்ரதாபர் இப்

13. படியே ரக்ஷித்தருள வேணும்.

முதலாம் கோப்பெருஞ்சிங்கன் பெரம்பலூரில் போசளரின் கேசவ போன்ற தண்டநாயகர்களை வென்று, கொன்றதைத் தொடர்ந்து, விருத்தாசலத்தில் பிராயச்சித்தம் (பாபவிமோசனம், கழுவாய்) செய்த பின்பு, பாண்டியர்களிடமிருந்து வரி பெற்றுக்கொண்டு அமைதியாக ஆட்சி நடத்தியிருக்கிறான்.

## கோப்பெருஞ்சிங்கன் தலயாத்திரை

அவ்வமைதிக் காலத்தில்தான் சோழமண்டலத்தில் தலயாத்திரை செய்திருக்கிறான். அந்த தலயாத்திரையைத்தான் கல்வெட்டு "சோழ மண்டலம் பார்த்தருளி" என்று கூறியிருக்கிறது. இந்தகால கட்டத்தில் சோழ நாடு இவனது ஆட்சிப் பகுதியின் ஓர் அங்கமாக அடங்கிவிட்டது.

ஆதலால்தான் இம்மன்னன், காவிரியின் தென்கரையில் கிழக்கு நோக்கிச் சென்று அங்கிருந்த திருப்பதிகளையெல்லாம் வணங்கிவிட்டு, சிவன் கோயில்களுக்குத் தேவதானங்களும், வைணவக் கோயில்களுக்குத் திருவிடையாட்டங்களும் வரி நீக்கித் தந்து, பழுதடைந்த திருத்தலங்களுக்கெல்லாம் திருப்பணிகள் செய்து முடித்தபிறகு, ஜயங்கொண்ட சோழவளநாட்டுப் பிரமதே(யமான) ஆக்கூருக்குச் சென்றிருக்கிறான்.

அப்பொழுது அப்பகுதியில் வாழ்ந்த மக்களில் சிலர் நெடுங்காலமாய் அரசுக்குச் செலுத்தவேண்டிய காசு மற்றும் நெல்? செலுத்தாதிருந்ததினால் தங்கள் ஊர்களை விட்டு (பிழைப்புத்தேடி பிற பகுதிகளுக்குச் செல்லுதல்) சென்றுவிட்டதால், அவர்களது குறைகளைக் கேட்டறிந்து, வெளியூர் சென்றிருந்தவர்களைத் திரும்பவும் தத்தம் ஊர்களுக்குத் திரும்பி வரச்செய்து, அவர்களுக்கு அவர்களது நிலங்களையும் தந்து, ஒரு குறையும் இல்லாது வாழச் செய்த காருண்ய (அருட்) சீலராக மன்னன் விளங்கியிருக்கிறான்.

முதலாம் கோப்பெருங்சிங்கனுக்கே உரிய சிறப்புப் பெயர்கள்

1. ஆளப்பிறந்தான் இராஜகம்பீரக் காடவராயன் என்னும் அழகியப் பல்லவன்
2. திரிபுவனத்திராஜாக்கள் தம்பிரான்
3. நிருபதுங்கன்

முதலாம் மற்றும் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன்களின் பொதுவான சிறப்புப் பெயர்கள்

1. பல்லவர் பெருமான்
2. சகலபுவன சக்கரவர்த்தி
3. கூடல் அவனியாளப் பிறந்தான்
4. காவலர் தம்பிரான்
5. பரதம் வல்ல பெருமாள்
6. மல்லைக் காவலன்
7. நிசங்க மல்லன்
8. அழகிய சீயன்
9. அவனி நாராயணன்
10. செந்தமிழ் வாழப் பிறந்த மிண்டன் சீயன்
11. நிருபதுங்கன்
12. சொக்கச்சீயன்
13. காடவன்
14. தொண்டை மன்னவன்
15. மல்லை வேந்தன்
16. சீயன்
17. சாடும்பெருமாள்
18. திரிபுவனத்திராசாக்கள் தம்பிரான்

## முதலாம் கோப்பெருஞ்சிங்கனது வாழ்க்கை வரலாறு

இம்மன்னன் மணவாளப் பெருமாளுக்கும் சீலாவதிக்கும் பிறந்தவன். இவன் ஆவணித் திங்கள் திருவோண நட்சத்திரத்தில் பிறந்தவன்.[140] தமிழ் மொழி மீது அளவு கடந்த பற்று கொண்டவனாக விளங்கியிருக்கிறான். "பேணு செந்தமிழ் வாழப் பிறந்த காடவ கோப்பெருஞ்சிங்கன்" என்ற பட்டப் பெயரைப் பூண்டவன்.

தமிழை வளர்ப்பதற்காகவே பிறந்திருக்கும் காடவக் கோப்பெருஞ்சிங்கன் என்பது இதற்குப் பொருளாகும். தெள்ளாறெறிந்த நந்திவர்மனாகியப் பல்லவ மன்னன் மீது பாடப்பெற்ற நந்திக் கலம்பகத்தின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவன் என்பது வைலூர் கல்வெட்டினால்[141] புலனாகிறது. இவன் காலத்தில் தமிழ்மொழி உன்னத நிலையில் விளங்கியிருக்கிறது என்பது இவனது வெற்றிச் சிறப்புகள் பற்றி பொறிக்கப்பெற்றிருக்கின்ற பாடல் கல்வெட்டுக்களால் புரிந்துகொள்ள முடிகிறது.

தமிழ் மொழியைப் பேணி வளர்த்தது போன்றே ஆடற்கலையையும் வளர்த்திருக்கிறான். அதன் காரணமாகத்தான் இவனுக்குப் "பரதம் வல்லபெருமாள்" "பரதம் வல்லான்"[142] என்ற விருதுப் பெயர்கள் வழங்கப்பெற்றிருக்கின்றன. இவ்வேந்தன் கட்டடக் கலையிலும், சிற்பக்கலையிலும் பெருவிருப்புடையவன் என்பது தில்லை ஆடவல்லான் கோயில் தெற்குக் கோபுரத்தைத் திருப்பணி செய்திருப்பதனால் அறியமுடிகிறது. மேலும் இவன் திருவெண்ணெய்நல்லூர் கோயிலில் எடுப்பித்திருக்கின்ற பல கட்டடங்களினாலும் புலனாகும். இவனது தந்தை மணவாளப் பெருமாள், சேந்தமங்கலத்தில் கட்டியிருந்த வாணிலை கண்டீச்சுரர் கோயில் திருக்காமக்கோட்டமுடைய நாச்சியார்க்கு இம்மன்னனின் அலுவலர் கொடை அளித்திருப்பதால், அம்மன்

140 S I I Vol XII, No 230 (A.R E. 170 of 1918)

141. Epi Indica. Vol XXII, No 27

142 S I I Vol VII, No. 69

சந்நதி, கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் அமைக்கப் பெற்றிருக்கலாம்.[142A]

இவன் இறைப் பற்று மிக்கவன் என்பதும், இரக்கக் குணம் கொணட்வன் என்பதும், நாகபட்டினம் மாவட்டம் ஆக்கூர் கல்வெட்டினால்[143] உணர முடிகிறது.

இவனது அரசியல் நிர்வாகத்திலும், போர்க்காலங்களிலும் இம்மன்னனுக்கு உறுதுணையாகச் சோழகோன், நீலகங்கரையன் போன்ற சிறந்த நிர்வாகிகளைப் பெற்றிருந்தான் என்றும், இவனைத் தொடர்ந்து இவனது மகன் சிறந்த ஆட்சியை நடத்துவதற்கு முதலாம் கோப்பெருஞ்சிங்கன் கால்கோள் அமைத்துத் தந்திருந்தான் என்றும் கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன.

## இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் (கி.பி. 1243–1279)

இவ்வேந்தன் முதலாம் கோப்பெருஞ்சிங்கனின் மகனாவான். இவனது இரண்டாம் ஆட்சி ஆண்டிலிருந்து 36 ஆட்சியாண்டு முடிய கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. இம்மன்னனுடையது என்று தெளிவாக அடையாளம் காணப்பெற்ற கல்வெட்டுக்கள் மொத்தம் இதுவரை 115 கண்டறியப்பட்டுள்ளன.[144] மேலும் 15 கல்வெட்டுக்களை இவன் காலத்தியதே என்று நடுவணரசு கல்வெட்டுத் துறையினர் முடிவு செய்துள்ளனர்.[145] இவனது இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[146] கி.பி. 1244 – இல் பொறிக்கப்பெற்றிருப்பதால் இவன் ஆட்சிக் கட்டிலேறிய முதலாண்டு கி.பி. 1243 என்பது புலப்படும். இதற்கு மேலும் ஒரு சான்று காஞ்சிபுரம்[147] கல்வெட்டொன்றாலும் அறிய முடிகிறது. இக்கல்வெட்டால் இவனது ஆட்சி கி.பி. 1243–இல் தொடங்கப்பெற்றது என்பது தெரிகிறது. மேலும் இவன் கி.பி. 1279 முடிய ஆட்சி புரிந்துள்ளான் என்பதை பிறிதொரு கல்வெட்டு புலப்படுத்துகிறது.[148]

---

142A நடன காசிநாதன, காலசசுவடுகள, (1973), பககஙகள் 11-12

143 S I I Vol VII, No 69

144 S I I Vol XII [illegible] p XII

[illegible]

146 Epi Indica Vol VII, p 165

147 S I I Vol XII, Nos 244, 245

148 S I I Vol VII, No 69

இக்கோப்பெருஞ்சிங்கன்தான் "காடவகுமாரன்" என்று திருவண்ணாமலைக் கல்வெட்டில்[149] புகழப்படுகிறான். "வாள்வல்ல பெருமாள், வீரராயன், விருதரில் வீரன், ஆட்கொண்ட தேவன், காங்கேயன், வீரராயன், வேணாடுடையான், நிசங்கமல்லன், தமிழ்நாடு காத்தபெருமாள், பரதம் வல்ல பெருமாள், கனகசபாபதி சபா சர்வகார்ய சர்வகால நிர்வாகனன், *பரதமல்லன், ஸாகித்யரத்னாகரன், பல்லவகுல பாரிஜாத,* காடவகுல சூடாமணி, அவநிருபாலநஜாத, கண்ட பண்டார லுண்டக, சேதிராஜ கிரிதுர்க மிகித, க்ஷீராபகா தக்ஷிண நாயக, காவேரிகாமுக, பெண்ணாநதிநாத, மல்லாபுரி வல்லப, காஞ்சிபுரிகாந்த, ஜகதேகவீர, சோழ, பாண்டிய, சேதிராயர், கர்நாடக அரசர், ஆந்திர அரசர், கண்டகோபாலர் ஆகியோரை வென்றவன், வீரர் வீரன், பல்லவாண்டார், ஏழிசை மோகன், அழகிய பல்லவன் என்னும் கச்சியராயன், அழகிய பல்லவன் என்னும் தமிழ்நாடு காத்தான், ஆனைக்கு அரசு வழங்கும் பெருமாள், வீரப்ரதாபர், புவனைகவீரன், அழகிய பல்லவன், சர்வஞ்ஞன், க்ருபாநமல்லன், காடவகுலதிலகன், கர்மராஜமனமர்தனன், சோழகுல கமலாகர திவாகரன், பாண்டியராய ஸ்தாபன சூத்ரதாரன், சகல குணரத்னாகரன், மஹாராஜஸிம்ஹன், *அவன்ய வனசம்பவ,* கோநந்திபன்மன், கச்சிநாயகன் ஆகிய விருதுகளைப் பெற்று பெரும் புகழோடு விளங்கியிருக்கிறான்.

இவ்வேந்தனுடைய கல்வெட்டுக்கள் பெருமளவில் கடலூர், *விழுப்புரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு மாவட்டங்களிலும்,* குறைந்த அளவில் தஞ்சாவூர், நாகப்பட்டினம், வேலூர் ஆகிய மாவட்டங்களிலும் கண்டறியப்பட்டிருக்கின்றன. ஆந்திர மாநிலத்தில் சித்தூர், கர்நூல் மற்றும் கோதாவரி மாவட்டங்களிலும் இவன் காலத்தியக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பெற்றுள்ளன. ஆதலால் இவனது ஆட்சிப் பகுதி சில சமயங்களில் வடக்கே கோதாவரி மாவட்டம் திராக்ஷராமா வரையிலும், தெற்கே கும்பகோ[illegible]க்கு அருகிலுள்ள திருவி[illegible]டியவும் பரவியிருந்தது என்பது அறிய முடிகிறது.

149. S I I Vol XII, No 247




விண்கலம்
(Space craft) எடுத்த
நிழற்படத்தில்
சேந்தமங்கலம் அமைவு



ஆபத்சகாயேசுவரர் கோயில், (வாணிலை கண்டீசுவரமுடைய நாயனார் கோயில்) சேந்தமங்கலம், கி.பி. 13–ஆம் நூற்றாண்டு



வாணிலை கண்டீசுவரமுடைய
நாயனார் கோயில் உள்தோற்றம்



அக்கோயிலின் மற்றொரு உட்புறத்தோற்றம்



கோயில் புறச்சுவர்



கோட்டைச் சுவர்



கோட்டைச் சுவர் மற்றொரு தோற்றம்



கோயில் உள்ளே உள்ள ஒரு செங்கற் சுவர்



கோயிலின் புறத்தே உள்ள
தற்காலத்திய பிள்ளையார் கோயில்



சிதம்பரம் நடராசர் கோயில் கிழக்குக் கோபுரம்,
இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலம்



சிதம்பரம் நடராசர் கோயில்
தெற்குக் கோபுரம்
பிற்காலப் பாண்டியர்,
முதலாம் கோப்பெருஞ்சிங்கன் காலம்.



சிதம்பரம் நடராசர் கோயில்
மேற்குக் கோபுரத் தோற்றம்
கி.பி. 12-ஆம் நூற்றாண்டு



நாட்டியக் கரணச்
சிற்பங்களுக்கு நடுவில்
துர்க்கை தெய்வமும்
அடியவர்களும்
கிழக்குக் கோபுரம்



நாட்டியக் கரணச் சிற்பங்கள் ஒரு தோற்றம்,
கிழக்குக் கோபுரம், நடராசக் கோயில், சிதம்பரம்.

PLATE I.—Dancing figures in the East gopura, Nataraja temple, Chidambaram.



நாட்டியக் கரணச் சிற்பங்கள், நடராசர் கோயில் கிழக்குக் கோபுரம், சிதம்பரம்.



மேலதின் தொடர்ச்சி

PLATE II.—Dancing figures in the East gopura, Nataraja temple, Chidambaram.—cont.



மேலதின் தொடர்ச்சி

PLATE II.—Dancing figures in the East gopura, Nataraja temple, Chidambaram.—cont.



மேலதின் தொடர்ச்சி

PLATE III.—Dancing figures in the East gopura, Nataraja temple, Chidambaram.—*cont.*



மேலதின் தொடர்ச்சி

PLATE III.—Dancing figures in the East gopura, Nataraja temple, Chidambaram.—*cont.*



மேலதின் தொடர்ச்சி

PLATE IV.—Dancing figures in the East gopura, Nataraja temple, Chidambaram.—*cont.*



91. 92. 93.

மேலதின் தொடர்ச்சி



நடராசர் கோயில் தெற்குக் கோபுரத்தில் உட்பகுதி
விதானத்தில் பாண்டியர் மீன்சின்னம், சிதம்பரம்.



சிதம்பரம் நடராசர் கோயில் கிழக்குக் கோபுரத்தைக் கட்டுவித்த சிற்பிகள் மற்றும் முழக்கோல்



சிதம்பரம் நடராசர் கோயில் கிழக்குக் கோபுரத்தில் உள்ள காடவர் அரசு சின்னம் "காளை"



அருணாச்சலேசுவரர் வீதியுலா, திருவண்ணாமலை,
திருவண்ணாமலை மாவட்டம்.



தீப ஒளியுடன் அருணாசலேசுவரர் கோயில்,
பறவைப் பார்வைத் தோற்றம், திருவண்ணாமலை.




Fig. 3 Ground Plan of the Wall

அகழாய்வில் வெளிப்படுத்தப் பெற்ற

கோட்டைச் சுவர், சேந்தமங்கலம்



Fig. 4 LATERITE STONE - WELL

அகழாய்வில் வெளிப்படுத்தப் பெற்ற

செம்புறாங்கல்லால் அமைக்கப் பெற்ற கிணறு



கீழைக் கோபுரத்தை எடுப்பித்த
இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் சிற்பமும்
அவரது தந்தை
முதலாம் கோப்பெருஞ்சிங்கன் சிற்பமும்
இரு நாட்டியக் கரணச்
சிற்பங்களுக்கு நடுவில் அலுவலர்
(நட்டுவனார்?) சிற்பங்களும்



Fig.12 Graffiti Symbols



Fig.13 Iron objects

வளர்ச்சி பெற்ற உருவ எழுத்து (Graffiti)
பொறித்த பானையோடுகள்,
இரும்புப் பொருட்கள்.
சேந்தமங்கலம் அகழாய்வில் கிடைத்தவை.



Fig.11 Graffiti Symbols



Fig.15 OTHER OBJECTS

வளர்ச்சி பெற்ற உருவ எழுத்து (Graffiti)
பொறித்த பானையோடுகள்.
1. தாயக்கட்டை
2. பாண்டிய அரசு முத்திரை
3. வாளின் ஒரு பகுதி
சேந்தமங்கலம் அகழாய்விலும்
களஆய்விலும் கிடைத்தவைகள்.




Fig.14 Terracotta objects

சுடுமண் பொருட்கள்
நூல் நூற்க உதவும் தக்களிகள் மற்றும் காதணிகள்

No. 920, Public, 4th August 1914. 81

| Name. | Description in Sanskrit verse. | Corresponding No. of verse in the Bharatiya Natyasastra. |
|---|---|---|
| [1] Śakaṭāsyam .. | निषण्णांगस्तु चर[ण]म् प्रसा[र्य] तलसंचय[•]न[।•] | |
| | [2] उद्वाहितमुरः कृत्वा शकटास्यम् [3][योज]येत् [॥•] | 158 |
| [3] Gaṁgāvataraṇam .. | ऊर्ध्वांगुलितलः पादस्त्रिपताकावधोमुखौ [।*] | |
| | हस्तौ [4]शिरस्सन्नतश्च गंगावतरणन्त्विति [॥*] | 159 |

[1] ... gives the name as Śakaṭākhyam.
[2] ,, has उद्घाटित.
[3] ,, gives the name as Raṅgāvataraṇam
[4] ,, reads शिरः सकसं न

மேலதின் தொடர்ச்சி

[1]Descriptive list of different dancing postures from Chidambaram; illustrated in Plates I to IV (opp. p. 80, below).

| No. of sketch on plate. | Name. | Description in Sanskrit verse. | Corresponding No. of verse in the Bhāratīya Nāṭyaśāstra. |
|---|---|---|---|
| 1 | Vṛiśchikarēchitam .. | वृश्चिकचरणं कृत्वा स्वस्तिकौ च करावुभौ [।॰]<br>रेचितौ विप्रकीर्णौ च [2]कुर्य्याद्वृश्चिकरेचिते [।।॰] | 99 |
| 2 | Vṛiśchikam .. | बाहुशीर्षाञ्चितौ हस्तौ पादः पृष्ठाञ्चितस्तदा [।॰]<br>दूरसन्नतपृष्ठश्च [वृश्चिकं] [तत्प्रकीर्तितम्॰] [।।॰] | 100 |
| 3 | Vyaṁsitam .. | आलीढं स्थानकं यत्र करा वक्षसि रेचितौ [।॰]<br>ऊर्ध्वाधो विप्रकीर्णौ च व्यंसितं करणञ्च तत् [।।॰] | 101 |
| 4 | Pārśvanikuṭṭakam .. | हस्तौ तु स्वस्तिकौ पार्श्वे तथा पादो निकुट्टितः [।॰]<br>यत्र तत् करणं ज्ञेयम् बुधैः पार्श्वनिकुट्टकम् [।।॰] | 102 |
| 5 | Lalāṭatilakam .. | वृश्चिकचरणं कृत्वा पादस्यांगुष्ठकेन तु [।॰]<br>ललाटे तिलकं कुर्य्याल्ललाटतिलकञ्च तत् [।।॰] | 103 |
| 6 | Krāntakam .. | पृष्ठतः कुञ्चितं कृत्वा व्यतिक्रान्तक्रमन्ततः [।॰]<br>आक्षिप्तौ [च क]रौ कार्य्यौ क्रा[न्तकं] करणे द्विजाः [।।॰] | 104 |
| 7 | Kuñchitam .. | आद्यः पादो नतः कार्य्यस्सव्यहस्तश्च कुञ्चितः [।॰]<br>उत्तानो वामपार्श्वस्थस्तत् कुञ्चितमुदाहृतम् [।।॰] | 105 |
| 8 | [2] Chakramaṇḍalam .. | प्रलम्बिताभ्यामुबाहुभ्याम् यत् गात्रेण नतेन च [।॰]<br>अभ्यन्तरापविद्धं स्याच्च्ज्ञेयश्चक्रमण्डलम् [।।॰] | 106 |
| 9 | Bhramarakam .. | आक्षिप्तस्वस्तिकः पादः करौ चोद्वेष्टितौ तथा [।॰]<br>त्रिकस्य चलनाच्चैव ज्ञेयम् भ्रमरकञ्च तत् [।।॰] | [illegible] |
| 10 | Chaturam .. | अञ्चित स्यात् करो वामस्सव्यश्चतुर [illegible] तु [।॰]<br>[द]क्षिणः कुट्टितः पादश्चातुरन्तत् [illegible] [।।॰] | [illegible] |

[1] The list includes 93 figures numbered consecutively and three [illegible] three latter figures were omitted by mistake and consequently do not [illegible] while it enumerates 108 postures in vv. 33 to 53 of the printed [illegible] postures. Of these latter six are supplied by Nos. [illegible] noted that the *Bhāratīya Nāṭyaśāstra* makes a mistake in [illegible] wrongly the second half of v. 42 (in the list) and [illegible] as much as they do not supply us with the [illegible] Gajakrīḍitaka, Garuḍapluta, [illegible] are found in the *Bhāratīya Nāṭyaśāstra*. [illegible] compartments of the pillars of the E. Gopura of the [illegible] dance Parivṛitta is omitted both in the [illegible] The numbers attached to the [illegible]

ஒவ்வொரு கரணச் சிற்பத்துக்கும் உரிய நாட்டிய சாத்திரப்பாடல், கல்வெட்டாக அச்சிற்பத்தின் கீழே தரப்பெற்றுள்ளது. நடராசரின் கோயில் கீழைக் கோபுரம், சிதம்பரம்.

| No. of sketch on plate. | Name. | Description in Sanskrit verse. | Corresponding No. of verse in the Bhāratīya Nāṭyaśāstra. |
|---|---|---|---|
| 11 | Bhujamgāñchitakam | भुजंगत्रासितः पादो रेचितो दक्षिणः करः [।०]<br>लताख्यश्च करो वामो भुजंगाञ्चितकम् भवेत् [॥०] | 93 |
| 12 | Daṇḍakarēchitam .. | विक्षिप्तं हस्तपादश्च समन्ताद्यत्र दण्डवत् [।०]<br>रेच्यते तद्धि करणं ज्ञेयन्दण्डकरेचितम् [॥०] | 94 |
| 13 | Vṛiśchikakuṭṭitam .. | वृश्चिकश्चरणं कृत्वा द्वावप्यथ निकुट्टितौ [।०]<br>विधातव्यौ करौ तत्तु ज्ञेयं वृश्चिककुट्टितम् [॥०] | 95 |
| 14 | Kaṭibhrāntam .. | सूचीन्दत्त्वापविद्धश्च दक्षिणश्चरणन्न्यसेत् [।०]<br>रेचिता च कटिर्य्यत्र कटिभ्रान्तन्तदुच्यते [॥*] | 96 |
| 15 | Latāvṛiśchikam .. | अञ्चितः पृष्ठतः पादः कुञ्चितोर्द्ध्वतलांगुलिः [। *]<br>लताख्यश्च करो वामस्तल्लतावृश्चिकम् भवेत् [॥०] | 97 |
| 16 | Chhinna-karaṇam .. | अलपद्मः कटीदेशे छिन्नपर्य्यायशः कटीन् [।०]<br>वैशाखस्थानकेनेह तच्छिन्नकरणं भवेत् [॥०] | 98 |
| 17 | Pādapaviddhakam .. | कार्य्यौ नाभितटे हस्तौ प्राङ्मुखौ खटिकामुखौ [।०]<br>सूचीविद्धावपक्रान्तौ पादौ पादापविद्धके [॥०] | 87 |
| 18 | Valitam .. | अपविद्धो भवेद्धस्तस्सूचीपादस्तथैव च [।*]<br>तथा त्रिकं विवृत्तञ्च वलितन्नाम तत् भवेत् [॥*] | 88 |
| 19 | Ghūrṇitam .. | वर्त्तिताघूर्णितस्सव्यो हस्तो वामश्च डोलितः [।*]<br>स्वस्तिकापसृतः पादः करणं घूर्णितञ्च तत् [॥*] | 89 |
| 20 | Lalitam .. | करिहस्तो भवेद्वामो दक्षिणश्च विवर्तितः [।*]<br>बहुशः कुट्टितः पादो ज्ञेयन्तल्ललितम् बुधैः [॥*] | 90 |
| 21 | [1] Daṇḍapaksham .. | ऊर्द्ध्वजानु विधायाथ तस्योपरि लतान्न्यसेत् [।*]<br>दण्डपक्षश्च तत् प्रोक्तं करणन्त[त्त्व]वेदिभिः [॥*] | |
| 22 | Bhujamgatrastarēchitam. | भुजंगत्रासितं कृत्वा यत्रोभावपि रेचितौ [।*]<br>वामपार्श्वस्थितौ हस्तौ भुजंगत्रस्तरेचितम् [॥*] | |
| 23 | Nūpuram .. | त्रिकं सुवलितं कृत्वा लतारेचितकौ करौ [।*]<br>नूपुरश्च तथा पादं करणे नूपुरे न्य[से]त् [॥*] | |
| 24 | Vaiśākharēchitam .. | रेचितं हस्तपादश्च कटिग्रीवा च रेचिता [।*]<br>. . . . . स्थानकेनैतत् भवे[द्वै]शाखरेचितम् [॥*] | |
| 25 | Arddhasvastikam .. | स्वस्तिकौ चरणौ कृत्वा कटिहस्तश्च दक्षिणम् [।*]<br>वक्षस्थाने तथा वाममर्द्धस्वस्तिकमादिशेत् [॥*] | 79 |
| 26 | Añchitam .. | व्यावृत्तपरिवृत्तस्तु स एव तु करो यदा [।*]<br>अञ्चितो नासिकाग्रे तु तदाञ्चितमुदाहृतम् [॥*] | 80 |

[1] This and the next three are enumerated in the printed work *Bhāratīya Nāṭyaśāstra* in vv. 39 and 40, but not described.

மேலதின் தொடர்ச்சி

| No. of sketch on plate. | Name. | Description in Sanskrit verse. | Corresponding No. of verse [illegible] |
|---|---|---|---|
| 27 | Bhujaṅgatrāsitam .. | कुञ्चितं पादमुत्क्षिप्य त्र्यश्रमूरुं विवर्त्तये[त्] [।°]<br>कटीजानुविवृत्त्या च भुजंगत्रासितम् भ[वेत्] [॥°] | 81 |
| 28 | Ūrddhvajānu .. | कुञ्चितम् पादमुत्क्षिप्य जानु स्तनसमन्यसेत् [।°]<br>प्रयोगवशगौ हस्तावूर्द्ध्वजानु प्रकीर्त्तितम् [॥°] | 82 |
| 29 | [Ni]kuñchitam .. | [वृश्चिकं चरणं कृत्वा करं पार्श्वे निकु°]ञ्चयेत् [।°]<br>[नासाग्रे दक्षिणश्चैव ज्ञेयं तत्तु°] [नि]कुञ्चितम् [॥°] | 83 |
| 30 | Mattalli .. | वामदक्षिणपादाभ्यां घूर्णमानोपसर्पणैः [।°]<br>उद्वेष्टितापविद्धैश्च हस्तैर्मत्तल्ल्युदाहृतम् [॥°] | 84 |
| 31 | Arddhamattalli .. | स्खलितापसृतौ पादौ वामहस्तश्च रेचितः [।°]<br>सव्यहस्तः कटिस्थः स्यादर्द्धमत्तल्लि तत् स्मृतम् [॥°] | 85 |
| 32 | Rechitanikuṭṭitam .. | रेचितो दक्षिणो हस्तः पादस्सव्यो निकुट्टितः [।°]<br>दोला चैव भवेद्वामस्त[द्रे]चितनिकुट्टितम् [॥°] | 86 |
| 33 | ¹ Dikswastikam .. | पार्श्वयोरग्रतश्चैव यत्र श्लिष्टः करो भवेत् [।°]<br>[स्वस्ति]कौ हस्तपादाभ्यां तद्दिक्स्वस्तिकमुच्यते [॥°] | 74 |
| 34 | Alātakam .. | अलातचरणं कृत्वा व्यंसयेद्दक्षिणं करम् [।°]<br>ऊर्द्ध्वजानुक्रमं कुर्य्यादलातकमिति स्मृतम् [॥°] | 75 |
| 35 | [Kaṭisamam] .. | स्वस्तिकापसृतः पादः करौ नाभिकटिस्थि[तौ] [।°]<br>पार्श्वमुद्वाहितश्चैव [करणन्तत्कटीसमम्°] [॥°] | 76 |
| 36 | Ākshiptarechitam .. | हस्तो हृदि भवेद्वामस्सव्यश्चाक्षिप्तरेचितः [।°]<br>रेचितश्चापविद्धश्च तत् स्यादाक्षिप्तरेचितम् [॥°] | 77 |
| 37 | Vikshiptākshiptakam | विक्षिप्तं हस्तपादन्तु तस्यैवाक्षेपणम् पुनः [।°]<br>यत्र तत् करणं ज्ञेयं [वि]क्षिप्ताक्षिप्तकं [द्वि]जाः [॥°] | |
| A | ²Nikuṭṭakam .. | निकुट्टितौ यदा हस्तौ स्वबाहुशिरसोऽन्तरे[।°]<br>पादौ निकुट्टितौ चैव ज्ञेयन्तत्तु निकुट्टकम् [॥°] | |
| B | Arddhanikuṭṭakam .. | अञ्चितौ बा[हु]शिरसि हस्तस्त्वभिमुखाङ्गुलिः[।°]<br>निकुट्टितार्द्ध[यो]गेन भवेदर्द्धनिकुट्टकम् [॥°] | |
| 38 | Kaṭichchhinnam .. | पर्य्यायशः कटिश्छिन्ना बाह्वोः शिरसि [illegible]<br>पुनः पुनश्च करणं कटीच्छिन्नम् तु [illegible] | [illegible] |
| 39 | Arddharechitam .. | अपविद्धः करस्सूच्या पादश्चैव [illegible]<br>संनतं यत्र पार्श्व[न्तु] तद् [illegible] | [illegible] |

¹ Two [illegible]

மேலதின் தொடர்ச்சி

| No. of sketch on plate. | Name. | Description in Sanskrit verse. | Corresponding No. of verse in the Bharatiya Natyasastra. |
|---|---|---|---|
| 40 | Vakshasvastikam .. | स्वस्तिकौ चरणौ यत्र करौ वक्षसि रेचितौ [।*] | |
| | | निकुञ्चितन्तथा वक्षो वक्षस्वस्तिकमेव तत् [॥*] | 71 |
| 41 | Unmattam .. | अञ्चितेन तु पादेन रेचितौ तु करौ यदा [।*] | |
| | | उन्मत्तं करणं तत्तु विज्ञेयं [नृ]त्तकोविदैः [॥*] | 72 |
| 42 | Svastikam .. | [1]हस्ताभ्यामथ पादाभ्याम् भवतस्स्वस्तिकौ यदा [।*] | 73 |
| | | तत् स्वस्तिकमिति प्रोक्तं करणं करणार्थिभिः [॥*] | |
| 43 | Prishthasvastikam .. | विक्षिप्तोत्क्षिप्तबाहुभ्यां स्वस्तिकौ चरणौ यदा [।*] | |
| | | अपक्रान्तार्द्धसूचीभ्यां तत् पृष्ठस्वस्तिकम् भवेत् [॥*] | |
| 44 | Talapushpaputam .. | वामे पुष्पपुटः पार्श्वे पादोऽग्रतलसञ्चरः [।*] | |
| | | तथा च सन्नतम् पार्श्वन्तलपुष्पपुटम् भवेत् [॥*] | 59 |
| 45 | Vartitam .. | कुञ्चितौ मणिबन्धे तु व्यावृत्तपरिवर्त्तितौ [।*] | |
| | | हस्तौ निपतितौ चोर्वोर्वर्त्तितं करणन्तु तत् [॥*] | 60 |
| 46 | Valitōru .. | शुकतुण्डौ यदा हस्तौ व्यावृत्तपरिवर्त्तितौ [।*] | |
| | | [ऊरू] च वलितौ यस्मि[न्] वलितोरु तदुच्यते [॥*] | 61 |
| 47 | Apaviddham .. | आवर्त्य शुकतुण्डाख्यमूरुपृष्ठे निपातयेत् [।*] | |
| | | वामहस्तश्च वक्षस्थो ह्यपविद्धन्तु तत् भवेत् [॥*] | 62 |
| [illegible] | Samanakham .. | श्लिष्टौ [स]मनखौ पादौ करौ चापि प्रलंबितौ [।*] | |
| | | देहस्स्वाभाविको यत्र भवेत् समनखन्तु तत् [॥*] | 63 |
| [illegible] | Līnam .. | पताकाञ्जलि वक्षस्थम् प्रसारितशिरोधरम् [।*] | |
| | | [2]नि[भ]ञ्चितांसकूटञ्च तल्लीनं करणं स्मृतम् [॥*] | 64 |
| [illegible] | Svastikarēchitam .. | स्वस्तिकौ रेचिताविद्धौ विश्लिष्टौ कटिसंस्थितौ [।*] | |
| | | यत्र तत् करणं ज्ञेयम् बुधैस्स्वस्तिकरेचितम् [॥*] | 65 |
| [illegible] | Maṇḍalasvastikam .. | स्वस्तिकौ तु करौ कृत्वा प्राङ्मुखोर्द्ध्वतलौ समौ [।*] | |
| | | तथा च मण्डलं स्थानम्मण्डलस्वस्तिकन्तु तत् [॥*] | 66 |
| [illegible] | [illegible] .. | पादसूच्या यदा पादो द्वितीयस्तु प्रविध्यते [।*] | |
| | | कटिवक्षस्थितौ हस्तौ सू[चीवि]द्धन्तदुच्यते [॥*] | 130 |

[illegible] No. 43 is described with the first half of 42 and the second half of 43, but in [illegible] called Svastika and Prishthasvastika are mentioned. The omission of Svastika [illegible] is supplied by the list before us.

[illegible] स्वस्तिक [illegible] and is marked as 1. The *Bharatiya Natyasastra* also begins with [illegible] and cannot, consequently, be [illegible] the numbers of [illegible]

மேலதின் தொடர்ச்சி

| No. of sketch on plate. | Name. | Description in Sanskrit verse. | Corresponding No. of verse in the *Bhâratiya Nâṭyaśâstra*. |
|---|---|---|---|
| 53 | [Hariṇaplutam] .. | अतिक्रान्तक्रमं कृत्वा [स][मुत्प्लुत्य निपात*]येत् [।*]<br>जंघाञ्चिता परिक्षि[सा] [तद्विन्द्याद्धरिणप्लुतम्*] [॥*] | 135 |
| 54 | Atikrāntam .. | अतिक्रान्तक्रमं कृत्वा पुरस्तात् सम्प्रसारयेत् [।*]<br>प्रयोगवशगौ हस्तावतिक्रान्ते प्रकीर्त्तितौ [॥*] | 119 |
| 55 | Vishṇukrāntam .. | पुरः प्रसारितः पादः कुञ्चितो गगनोन्मुखः [।*]<br>करौ च रेचितौ यत्र विष्णुक्रान्तन्तदुच्यते [॥*] | 152 |
| 56 | [1] Āvartam .. | प्रसार्य्य कुञ्चितम् पादम् पुनरावर्त्तये[द्रु]तम्[2] [।*]<br>[प्र][योगवश*]गौ हस्तौ तदावर्त्तमुदाहृतम् [॥*] | 112 |
| 57 | [3] Ḍōlapadam .. | कुञ्चितम् पादमुत्क्षिप्य पार्श्वात्पार्श्वन्तु डोलयेत् [।*]<br>प्रयोगवशगौ हस्तौ डोलापादं प्रकीर्त्तितम् [॥*] | 113 |
| 58 | [4] Vivṛittam .. | आक्षिप्तं हस्तपादञ्च त्रिकंचैव विवर्त्तयेत् [।*]<br>रेचितौ च तथा हस्तौ विवृत्ते करणे द्विजाः [॥*] | 114 |
| 59 | Pārśvakrāntam .. | पार्श्वक्रान्तक्रमं [कृ]त्वा पुरस्तादथ पातयेत् [।*]<br>प्रयोगवशगौ हस्तौ पार्श्वक्रान्तन्तदुच्यते [॥*] | 116 |
| 60 | Ardhasūchi .. | [5] अलपल्लवशिरोहस्तस्सूचीपादश्च दक्षिणः [।*]<br>यत्र तत् करणं ज्ञेयमर्द्धसूचीति नामतः [॥*] | 129 |
| 61 | Nagāpasarpitam .. | [6] स्वस्तिकापसृतौ पादौ शिरश्च परिवाहितम् [।*]<br>रेचितौ च तथा हस्तौ स्यातान्नागापसर्पिते [॥*] | 157 |
| 62 | Talasamsphōṭitam .. | द्रुतमुत्क्षिप्य चरणम् पुरस्तादथ पातयेत् [।*]<br>तलसं[स्फो]टितौ हस्तौ तलसंस्फोटिते म[तौ] [॥*] | 122 |
| 63 | [Vṛi]shabhakrīḍitam | [प्रयुज्यातालकं पूर्वं*] हस्तौ चापि हि रेचयेत् [।*]<br>[कुञ्चितावञ्चितौ चैव*] [वृ]षभक्रीडिते सदा [॥*] | [illegible] |
| 64 | Daṇḍapādam .. | [नूपुर*]चरणं कृत्वा दण्डपादम् प्रसारयेत् [।*]<br>[क्षिप्त*]विद्धकरश्चैव दण्डपादन्तदुच्यते [॥*] | [illegible] |
| 65 | Nivēśa-karaṇam .. | करौ वक्षःस्थितौ कार्य्यावुरो निर्भुग्नम् एव च [।*]<br>मण्डलं स्थानकञ्चैव निवेशकरणं तु तत् [॥*] | [illegible] |

[1] *BM. Nāṭ.* calls this Ārtava in the enumeration.

[2] „ reads °येद्द्रुतम्.

[3] „ „ Dōlapadakam in the enumeration.

[4] „ „ Virṛita

[5] „ has

மேலதின் தொடர்ச்சி

| No. of figure in plate. | Name. | Description in Sanskrit verse. | Corresponding No. of verse in the Bharatiya Natyasastra. |
|---|---|---|---|
| [illegible] | Prēṅkhōlitam .. | डोलापादक्रमं कृत्वा समुत्प्लुत्य निपातयेत् [।*]<br>परिवृत्तन्त्रिकश्चैव तत् प्रेङ्खोलितमुच्यते [॥*] | 136 |
| [illegible] | Gṛiddhrāvali [nakam] | [पृष्ठप्रसा*]रितः पादः किञ्चिदञ्चितजानुकः [।*]<br>[यत्र प्रसारितौ बाहू तत् *] [स्यात्] गृद्ध्रावली[नकं] [॥*] | 126 |
| [illegible] | Nitamba-karaṇam.. | [भुजा*][वूर्द्ध][विनिष्क्रा*]न्तौ हस्तौ चाभिमुखांगुळी [।*]<br>[बद्धा चारी तथा*] चैव नितम्बे करणे भवेत् [॥*] | 137 |
| [illegible] | [Lō]litam] .. | रेचितावञ्चितौ हस्तौ लोलितं . . . . [।*]<br>. . . . . . श्च . . . लोलि . . [॥*] | |
| [illegible] | Skhalitam .. | डोलापादक्रमं कृत्वा हस्तौ तदनुगावुभौ [।*]<br>रेचितौ घूर्णितौ चापि स्खलितं करणं [भ]वेत् [॥*] | 138 |
| [illegible] | [Sarpi]tam .. | अञ्चितास्स्यतः पादशिर[श्च] परिवाहितम् [।*]<br>[रेचि]तौ च तथा [हस्तौ तत्स*][र्पि]तमुदाहृतम् [॥*] | 133 |
| [illegible] | Vidyutbhrāntam .. | पृष्ठतो वलितम् पादं शिरो वृष्ट्म् प्रसारयेत् [।*]<br>सर्व[तोमण्डला*]विद्धं विद्युद्भ्रान्तन्तदुच्यते [॥*] | 118 |
| [illegible] | Sannatam . | उत्प्लुत्य चरणौ कार्य्यावग्रतस्स्वस्तिकस्थितौ [।*]<br>सन्नतौ च [त]था हस्तौ सन्नतन्तदुदाहृतम् [॥*] | 127 |
| [illegible] | Vivarttitakam .. | आक्षिप्तं हस्तपादश्च त्रिकश्चैव विवर्तितम् [।*]<br>[द्वितीयो रेचितो] हस्तो विवर्त्तितकमेव तत् [॥*] | 120 |
| [illegible] | Sūchi .. | कुञ्चितं पादमुत्क्षिप्य कुर्य्यादग्रस्थितम् भुवि [।*]<br>[प्रयोगवशगौ हस्तौ] तत् सूचि परिकीर्त्तितम् [॥*] | 128 |
| [illegible] | Siṁhavikrīḍitam .. | अला[तश्च*] पुरस्कृत्य द्वितीयश्च द्रुतक्रमम् [।*]<br>ह[स्तौ] पादानुगौ चै[व] सिंहविक्रीडितम् [स्मृतम्] [॥*] | 141 |
| [illegible] | Argalam .. | पृष्ठतः प्रसृतः पादो द्वौ [ताला]र्द्धमेव च [।*]<br>तथैव चानुगो हस्तः [पु]रतस्त्वर्गळं तु तत् [॥*] | 110 |
| [illegible] | Urōmaṇḍalikam .. | स्वस्तिकापसृतौ पादावपविद्धक्रमौ यदा [।*]<br>उरोमण्डलिनौ हस्तावुरोमण्डलिकन्तु तत् [॥*] | 107 |
| [illegible] | Karihastakam .. | वामो वक्षस्थितो हस्तः प्रोद्वेष्टित[तलो परः*] [।*]<br>अञ्चितश्चरण[श्चै]व प्रयोज्यः करिहस्तके [॥*] | 139 |

[illegible]

மேலதின் தொடர்ச்சி

| No. of sketch on plate. | Name. | Description in Sanskrit verse. | Corresponding No. of verse in the Nāṭyaśāstra. |
|---|---|---|---|
| 80 | Siṁhakampitakam .. | पृष्ठप्रसर्पितः पादस्तथा हस्तौ निकुञ्चितौ [।°]<br>पुनस्तथैव कर्तव्यौ [1]सिंहाक[र्षि]त[के] द्विजाः [॥°] | 142 |
| 81 | Udghaṭṭitam .. | पादावुत्घट्टितौ कार्य्यौ तलसंघट्टितौ करौ [।°]<br>[2]नतं तु पार्श्वं कर्तव्यं बुधैरुत्घट्टि[ते[3] सदा॰] [॥°] | 155 |
| 82 | [4][Maṇikākrīḍitam] .. | तलसञ्चरपादाभ्यामुत्प्लुत्य प[तनं भ°] वेत् [।°]<br>सन्नतं वलितं गात्रम् [मनिका][क्रीडितं तु तत्°] [॥°] | 149 |
| 83 | [5]Sambhrāntam .. | [करमा°][वर्त्तितं कृ]त्वा ह्यूरुपृष्टे(ष्ठे) निकुञ्चयेत् [।°]<br>[करु°][श्चै]व तथा विद्धस्सम्भ्रान्तं करणन्तु तत् [॥°] | 153 |
| 84 | Janita .. | एको वक्षस्थितो हस्तो द्वितीयश्च प्रलम्बितः [।°]<br>तलाग्रसंस्थितः पादो जनिते करणे भवेत् [॥°] | 146 |
| 85 | [7]Upasṛitakam .. | व्याक्षि[प्तश्चर°]णः कार्य्यो हस्तस्तस्यैव [चानुगः॰] [।°]<br>[आनतं च तथा गात्रं तथोपसृतकं भवेत्°] [॥°] | 144 |
| 86 | Pārśvajānu .. | एकस्समास्थितः पाद ऊरुपृष्ठे स्थितोपरः [।*]<br>मुष्टिहस्तश्च वक्षस्थः [पा]र्श्वजानु तदुच्यते [।।°] | 125 |
| 87 | [Madaskhalitakam] | करौ प्रलम्बितौ [कार्यौ°] शिरश्च परिवाहितम् [।*]<br>पादौ च वलि[ताविद्धौ मदस्खलित°]के द्विजाः [॥°] | 151 |
| C | [Vishkambham] .. | [अप°]विद्धः करस्सूच्या [पा][दश्चैव निकुट्टि°]तः [।°]<br>[वक्षस्थश्च करो वामो विष्कंभे करणे भवेत्°] [॥°] | 154 |
| [8]88 | Vikshiptam .. | विक्षिप्तं हस्तपादञ्च पार्श्वतः पृष्ठतोपि वा [।°]<br>एकमार्गगतं यत्र तद्विक्षिप्तमुदाहृतम् [॥॰] | 111 |
| 89 | Udvṛittam .. | [आ]क्षि[प्तह]स्तमाक्षिप्तदेहमाक्षिप्तपादकम् [।॰]<br>[उद्वृत्य गात्रमि°]त्येतदुद्वृत्तं करणं स्मृतम् [॥॰] | 143 |
| 90 | Ūrūdvṛittam .. | करमावृत्तकरणमूरुपृष्ठेस्थितन्यसेत् [।॰]<br>जंघाञ्चिता तथोद्वृत्ता ह्यूरूद्वृत्तन्तु तत् भवेत् [॥॰] | 150 |
| 91 | [Ākshiptam] .. | व्याक्षिप्तं हस्तपादन्तु क्रियते यत्र वेगतः [।°]<br>[व्याक्षिप्तं करणं नाम विज्ञेयं तद्द्विजोत्तमाः॰] [॥॰] | 108 |

[1] Bhā. Edn. reads सिंहकंपितके.
[2] „ „ „ तिल°.
[3] „ „ „ नितंब°.
[4] „ „ „ °स्वाटिते.
[5] „ „ „ Maṇikākrīḍam in the enumeration.
[6] „ „ „ Saṅkrāntam „ „
[7] „ „ „ Apasṛitakam „ „
[8] One compartment below No. 88 is occupied by two modern pictures which do not belong to the series. People consider them to be the sculptors who cut the dancing figures.

மேலதின் தொடர்ச்சி

இவன் ஆட்சிக் காலம் முதலாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தைவிட உன்னதமான காலமாக விளங்கியிருக்கிறது. இம்மன்னன் சோழப் பெருவேந்தன் மூன்றாம் இராசேந்திரன் அரசுக் கட்டிலேறுவதற்கு உறுதுணையாக இருந்திருகிறான். இச் செய்தி திரிபுராந்தகம் கல்வெட்டால் புலனாகிறது.[150] இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் ஆந்திரப் பகுதியில் ஒருசமயம் காகதிய மன்னன் கணபதிக்கு அடங்கியவனாகவும், மற்றொரு சமயம், தனியுரிமை பெற்றவனாகவும் திகழ்ந்திருக்கிறான் என்பதை முறையே திராக்ஷராமம்,[151] திரிபுராந்தகம்[152] கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்து கின்றன.

காகதிய மன்னன் கணபதிக்கு அடங்கியிருந்த காலத்தில் திராக்ஷராமமில் உள்ள பூமிநாதர் கோயிலுக்குக் காடவர் தலைவன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனாகிய மஹாராஜசிம்ஹன் **"காடகமஹோத்சவம்"** என்னும் விழாவைக் காகதியமன்னன் கணபதியைப் பாராட்டும் முகமாக ஏற்படுத்தியிருக்கிறான். மேலும் அவ்விறைவனுக்குக் கல்பவிடப சிம்ஹாசனம், ஊஞ்சல், மகரதோரணம் போன்றவற்றைப் பொன்னால் செய்து கொடை வழங்கியிருக்கிறான். இக்கொடைகளையளித்தபோது தாம் **"கணபதி மஹாராஜாவின் ஆணையைச் செயல்படுத்துபவன்"** என்று காகதிய கணபதியின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டவன் என்பதைப் பட்டவர்த்தனமாகத் தெரிவித்திருக்கிறான். ஆனால் திரிபுராந்தகம் கல்வெட்டுக் காலத்தில் இரண்டாம் கோப்பெருஞ் சிங்கன் காகதிய மன்னன் கட்டுப்பாட்டுக்கடங்காத நிலையைப் பெற்றுவிட்டான் என்று தெரிகிறது. இக்கல்வெட்டு ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, நாகரி ஆகிய மூன்று மொழிகளில் பொறிக்கப்பெற்றிருக் கிறது. இவற்றில் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் ஜீயமஹி பதிக்கும், சீலாவதிக்கும் பிறந்தவன் என்று கூறப்படுகிறான்.

150 Ibid, XII, No 247

151. Ibid, IV, Nos. 1341, 1342, 1342 B

152 Ibid, XII, No 247

கிரந்தக் கல்வெட்டைப் பார்ப்போம்

1. ஸகலபுவநசக்ரவர்த்திநா காடககுலதிகல கர்ணாடராஜமாந் மர்த்தநேந சோளகுல கமலாகர திவாகரேண பாண்ட்யராய ஸ்தாபநா ஸூத்ர தாரேண ஸ்கலகுண கண ரத்நா

2. கரேண ஸமஸ்த ஜநோபகரணீ பூத ஸாம்ராஜ்ய ஸம்பதா ஸ்ரஸ ஸாஹித்ய ஸாம்யாத்ரிகேண பரதாரணவ கர்ணதாரேண பவித்ரகீர்த்திநா கநகஸபாபதி நாத சரணார விந்தமதுகரா

3. யமாநேந ஸர்வஜ்ஞ கட்கமல்லேந கல்யாணவ் யோமரங்கே நிரதிஸய பராநந்த ரூபேண ந்ருத்யந் வாமே பாகே ஹிமாத்ரேர்துஹிதரி ஸத்தம் வக்ஷ்ய வீக்ஷ்ய ஸ்திதாயாம்....

என்று இக்கல்வெட்டு நீள்கிறது.

இக்கல்வெட்டை வெளியிட்டிருக்கின்ற நடுவணரசு கல்வெட்டுத்துறையினர், இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனின் தந்தையான "ஜீயமஹிபதி" தமிழில் "அழகிய சீயன்" என்று அழைக்கப்பட்டிருக்கிறான் என்று கூறியிருப்பதோடு, இக்கல்வெட்டு, கோயிலுக்குக் கொடை வழங்கியது பற்றிக் குறிப்பிடவில்லை யென்றும், மன்னனின் புகழ் வெகுவாகப் பாராட்டப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

## திரிபுராந்தகக் கல்வெட்டு

இக்கல்வெட்டில் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காடவ குலத்தின் திலகம் என்றும், அவன்யவன சம்பவன், சர்வுஞ்ஞன், கட்கமல்லன், நிசங்கமல்லன் என்றும் பாராட்டப்பட்டிருக்கிறான். கர்நாடக அரசனின் கர்வத்தை அடக்கியவன், சோழரின் தாமரைக் குளத்துக்குச் சூரியன் என்றும் மன்னன் கூறிக்கொள்கிறான். தாம் சிதம்பரம் நடராசர் மீது மிகுந்த பற்று கொண்டவன் என்பதால், பிற மன்னர்களை வென்று. அவர்களது நாடுகளிலிருந்து கவர்ந்து வந்த செல்வங்களைக் கொண்டு நடராசர் கோயில் கீழைக்கோபுரத்தை தென்மேரு

போன்று எடுப்பித்து அதற்குத் தம் பெயரையே சூட்டி மகிழ்ந்தான். அக்கோபுரத்தின் நான்கு பக்கங்களிலும் சிற்பங்கள், மாடங்கள் போன்றவற்றை அமைப்பதற்குத் தாம் நான்கு திசைகளிலும் பெற்ற வெற்றியினால் கொண்டுவந்த பொருள்களையும் தம் "துலாரோஹண" [துலையில் (தராசில்) தம் எடைக்கு எடையாகப் பொன்னை நிறுத்தல்,] விழாவில் பெற்ற பொருளையும் பயன்படுத்தியிருக்கிறான். இம்மன்னன் பிற கோயில்களான திராக்ஷராமம் கோயில், காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில், வீரட்டானம் (திருக்கோவலூர்க் கோயில்), ஸ்வேதஜம்பு (வெண்நாவல்) கோயில் (திருவானைக்கா), மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், காளஹஸ்தி கோயில் ஆகிய கோயில் களுக்கும் கொடை வழங்கியிருக்கிறான் என்று இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. ஆனாலும் இம்மன்னனின் கல்வெட்டுக்கள் யாதும் திருவானைக்கா, மதுரை, காளஹஸ்தி ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களில் காணப்பெறவில்லை. திருப்பதியில் இவ்வேந்தனது கல்வெட்டு காணப்பெற்றுள்ளது. அதில் இவன் "காஞ்சி நாயகன்" என்ற விருதுப் பெயருடன் கூறப்பெற்றுள்ளான்.

திராக்ஷராமத்தில் உள்ள இவனது கல்வெட்டு சகம் 1184 (கி.பி. 1262) – இல் பொறிக்கப்பெற்றிருக்கிறது. திராக்ஷராமத்தில் இவன் வழங்கிய கொடை திரிபுராந்தகக் கல்வெட்டில் குறிக்கப்படுவதால், திராக்ஷராமக் கல்வெட்டு பொறிக்கப்பட்ட ஆண்டுக்குப் பின்புதான் திரிபுராந்தகக் கல்வெட்டு வெட்டப் பெற்றிருத்தல் வேண்டும்.

## போசள ஆதிக்கம் ஒழிந்தது

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் போசளர்கள் வலுவிழந்து விட்டனர். தமிழ் நாட்டில் அவர்களது ஆதிக்கம் அற்று விட்டது என்றே கூறலாம். ஏனெனில் இம்மன்னன் தம்மைக் "கர்நாடக பூபமாந மர்தின்"[153] என்று அழைத்துக்கொண்டிருப்பதாலும், கர்நாடக மன்னர்களின் அரசிகளுடைய அணிகலன்களை கழற்றிக் கொண்டதாக கூறிக்கொள்வதாலும்[154] கருநாடக நாட்டின் பொருட்களைக் கவர்ந்து தாம் துலாபாரம் நிகழ்த்திக்

153 S I I Vol VI, No 1342B.

154 Ibid, No 342

கொண்டாதாலும், அவ்வாறு கிடைத்த பொருட்களைச் சிதம்பரத்தின் கீழைக் கோபுரத்தின் மேற்குப் பக்கச் சுவற்றை அலங்கரிப்பதற்குப் பயன்படுத்திக் கொண்டதாகக் கூறிக் கொள்வதாலும் ஆகும்.

## காடவர்களுக்கும் சம்புவராயர்களுக்கும் உள்ள தொடர்பு

நடுவணரசு கல்வெட்டுத்துறையினர் சம்புவராய மன்னர்களில் சிலர் கோப்பெருஞ்சிங்கனின் விருதுகளான *ஆளப்பிறந்தான், அழகிய சீயன், சீயன்* பல்லவாண்டான், பல்லவன் போன்றவற்றைத் தரித்திருப்பதைக் காண்கையில் காடவர்களுக்கும், சம்புவராயர் களுக்கும் யாதோ ஒருவகையில் ஒற்றுமையிருந்திருக்கும் என்று கணிக்க வாய்ப்பேற்படுகிறது என்றும், இதன் உண்மைத் தன்மையை எதிர்காலத்தில் ஆய்வுகள் தான் தீர்மானித்தல் வேண்டும் என்றும் எழுதியுள்ளனர்.[155]

## காடவர், சம்புவராயர் ஒற்றுமை

நடுவணரசு கல்வெட்டுத்துறையினரின் ஊகம் சரியானதே என்பது காடவர் மற்றும் சம்புவராயர் கல்வெட்டுக்களினால் உறுதியாகிறது. கடலூர் மாவட்டம் ஸ்ரீமுஷ்ணம் கல்வெட்டொன்று,[156] உறுமூர் என்னும் சோழ பாண்டியச் சதுர்வேதி மங்கலமான எறும்பூரில் காணியுரிமை பெற்றிருந்த பள்ளியான ஆளப்பிறந்தான் ஏழிசை மோகன் என்னும் குலோத்துங்க சோழக் காடவராயன் தமக்குக் கிடைத்து வந்த பாடிக்காவல் மற்றும் வரிகளையும் தாமும் தம் குடும்பத்தினரும் நலமுடன் வாழ விருதராஜ பயங்கரவளநாட்டு, மேற்கா நாட்டு இருங்கோளப் பாடியைச் சேர்ந்த விளந்தைக் கூற்றத்திலமைந்த திருமுட்டம் இறைவனுக்குக் கொடை வழங்கியதைக் குறிப்பிடுகிறது. விருத்தாசலம், திருநாவலூர் கல்வெட்டுகளும் இவனைப் *பள்ளி* என்று தெரிவிக்கின்றன.[157] இக்கல்வெட்டில் கொடை வழங்கியதாகக் கூறப் பெறும் ஆளப்பிறந்தான் ஏழிசை மோகன், ஆட்கொள்ளியின் மகன்களில் ஒருவனான நாலுதிக்கும் வென்றான் ஏழிசை மோகன் காடவராயனாக

155 S I I Vol XII, Introduction, p XIV

156 Ibid, Appendix-B, p 169, A.R.E 232 of 1916.

157 A R E 374 of 1902, S I I Vol. VII, 150, 1004

இருக்கலாம் என்று எம்.எஸ். கோவிந்தசாமி கருதியிருப்பதே[158] சரியான முடிவாகும். இவன் இக்கல்வெட்டில் பள்ளி என்று குறிக்கப் பட்டுள்ளான். இதேபோன்று சம்புவராய அரசர்களும் முஞ்னூற்றுப் (முன்னூாப்) பள்ளி என்று கூறிக்கொண்டிருக்கின்றனர்.[159]

## சீய சம்புமன்

ஆதலால் காடவர்களும் சம்புவாரயர்களும் ஓர் இனத்தைச் சார்ந்தவர்களேயாவார். மேலும் காடவர் தங்களைச் சம்புகுலத்தவர் என்று கூறிக்கொண்டிருப்பது, வேலூர் மாவட்டம், ஆரணி வட்டம் பூண்டி பொன்னிநாதர் கோயில் கல்வெட்டால்[160] புலனாகிறது. அக்கல்வெட்டில் "சீய சம்புமன்" தம் பெயரால் "வீர வீர சினாலயம்" (ஜினாலயம்) என்று ஒரு சமண ஆலயத்தை ஏற்படுத்தியது குறிக்கப்பட்டுள்ளது. "வீர வீர" என்ற பெயர் அரசநாராயணன் ஆளப்பிறந்தான் வீரசேகரக் காடவராயருக்கோ அல்லது இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனுக்கோ இருந்திருக்கும். இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனுக்கு "வீரர் வீரன், விருதரில் வீரன், வீரராயன் வேணாடுடையான்" போன்ற விதுகள் வழங்கப் பெற்றிருக்கின்றன.[161] ஆதலால் பெரும்பாலும் இப்பூண்டிக் கல்வெட்டு இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனைக் குறிப்பதாகக் கருதலாம். அக்காடவனைச் "சம்புமன்" சம்பு அரசன் அதாவது (சிவனை) வழிபடுபவன் என்று கல்வெட்டு தெரிவிக்கிறது. சம்புவரையர்களும், சம்புவை, சிவனை வழிபட்டவர்களேயாவர். காடவர், சம்புவரையர் ஆகியோர் இலச்சினைகளில் காளைச் சின்னம் இடம் பெற்றிருந்திருக்கிறது என்பது ஈண்டு நோக்கத் தக்கது. சம்புவரையர், பல்லவர் வழி வந்தவர் என்பது அவர்களது பட்டப் பெயர்களால் அறியலாம்.

## நன்னனது மலையில் கல்வெட்டு

காடவகுமாரனாகிய இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன், பல அரசர்களை வென்று அவர்களது கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்ட பிறகு, நன்னனது மலையில் (தற்காலத்தில் திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள பர்வத மலையில்), தமது

158 Dr M S Govindasamy, Op Cit, p 107

159 A R E 227 of 1902 A.R E 422 of 1922

160 S I I Vol. VII, No 62

161 Dr M S Govindasamy, Op Cit, p 140

வெற்றிச் சிறப்பையும், அனுமன் கொடியையும் பொறித்து வைத்தான் என்று திருவண்ணாமலைக் கல்வெட்டு[162] பகர்கிறது. இக்கல்வெட்டு இவன் புரிந்திருக்கின்ற பல அறப்பணிகளைப் பட்டியலிட்டிருப்பதை முன்பே பார்த்துள்ளோம்.

இவன் காலத்திய அரசு அலுவலர்களாகச் "சோழகோன் என்னும் பெருமாள் பிள்ளை, அவன் உடன் பிறந்தான் வேணாடுடையான் மற்றும் நீலகங்கரையார்" ஆகியோர் இருந்திருக்கின்றனர். இவர்களை இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனின் மைந்தர்கள் என்று கே.எஸ். வைத்யநாதன் கருதியிருப்பது[163] ஏற்பதற்கில்லை என்று எம்.எஸ். கோவிந்தசாமி சரியாக எழுதியிருக்கிறார்.[164]

## இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனுக்குப் பிறகு

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனுக்குப் பிறகு இக்காடவர் குலத்தில் யார் ஆட்சிபுரிந்தனர் என்பதை அறிய முடியவில்லை. கி.பி. 14 – ஆம் நூற்றாண்டில், பல்லவன் என்னும் ராஜநாராயணக் காடவராயன் என்பவன் ஒருவன் இருந்தான் என்பது விழுப்புரம் மாவட்டம் எலவானாசூருக்கு அருகிலுள்ள மேலப்பாளையத்தில் உள்ள ஒரு கல்வெட்டினால்[165] தெரிய வருகிறது. இவன் இராஜநாராயணச் சம்புவராயரின் கீழ் அலுவலனாகப் பணிபுரிந்திருக்கலாம்.

### கச்சியராயர்கள்

கடலூர் மாவட்டம் விருத்தாசலத்துக்கு மூன்று கிலோ மீட்டர் தொலைவில், மணிமுத்தாற்றின் வடகரையில் கச்சிராய நத்தம் என்ற ஊரில் கச்சிராயர்கள் கோட்டை அமைத்துக்கொண்டு ஆட்சி புரிந்திருக்கிறார்கள். இவ்வூருக்கு "ராஜபாளையம்" என்ற பெயர் வழங்கப் பெற்றிருக்கிறது.

162 S I I Vol VIII, No 69

163 Epi Indica. Vol XXVII, p.91

164 Dr M S. Govindasamy, Op Cit, p.147

165 A R E 508 of 1937-38

## முகாசா பரூரில் கோட்டை

சில ஆண்டுகளுக்குப் பிறகு யாது காரணத்தாலோ இப்பாளையக்காரர்கள் கச்சிராயநத்தத்திலிருந்து புறப்பட்டு விருத்தாசலத்திலிருந்து 12 கி.மீட்டர் தொலைவிலுள்ள முகாசாபருருக்குச் சென்று, அங்கு கோட்டை, கொத்தளம் அமைத்துக்கொண்டு, அங்கிருந்து ஆட்சி புரிந்திருக்கின்றனர்.[166] இவர்கள் கி.பி. 14-ஆம் நூற்றாண்டிலிருந்து ஆட்சி செய்திருக்கின்றனர் என்பது கல்வெட்டுக்களால் புலனாகிறது. இக்கச்சிராயர்கள் காடவராயர்களின் வழிவந்தவர்கள் என்று கருதலாம்.

## கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் கச்சிராயர்கள்

முகாசாபரூர் கச்சிராயர்கள் (கச்சி +அரையர்கள்) கி.பி. 14-ஆம் நூற்றாண்டிலேயே கல்வெட்டுக்களில் காணப்பெறுகின்றனர். கி.பி. 1313 – இல் வெட்டப்பெற்றுள்ள மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டொன்றில் "பருவூர் உடையார் தேவர் கச்சிராயர் பிள்ளைகளில் காளத்திரிநாதர்" குறிப்பிடப்படுகிறார்.[167]

திருவெண்ணை நல்லூரிலுள்ள இராச நாராயணச் சம்புவராயன் கல்வெட்டிலும்[168] விருத்தாசலத்திலுள்ள மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்துக் (கி.பி. 1360)க் கல்வெட்டிலும்[169] "இருங்கோளப்பாடி நாட்டுப் பருவூருடையயான் தேறையராயன் பொன் வழங்கினான் மகன் கட்டி தேவனான சுந்தரபாண்டியக் கச்சியராயன்" குறிக்கப்பட்டுள்ளான். மேற்கூறப்பெற்றுள்ள கல்வெட்டுக்கள் மூலம் தேவர்கச்சிராயர், தேறையராயன் பொன் வழங்கினான், கட்டி தேவனான சுந்தரபாண்டியக் கச்சியராயன் என மூன்று கச்சிராயர்கள் தெரிய வருகின்றனர். இக்கச்சிராயர் வழிவந்தோர் இன்றும் முகாசாபரூரில், நஞ்சை நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாக வசதியாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களது கொடியிலும் அனுமன் உருவமே காணப்பெறும் என்றும் கூறுகிறார்கள்.

---

166 நடன. காசிநாதன், வன்னியர் மாட்சி, இரண்டாம் பதிப்பு (2010), பக்கங்கள் 142&145

167 A.R.E 136 of 1906

168 Ibid, 457 of 1921

169. Ibid, 89 of 1918

இவர்களுக்கு உறவினர்களாகக் கள்ளக்குறிச்சிக்குப் பக்கத்திலுள்ள திருக்கணங்கூரிலும், கடலூருக்கு அருகிலுள்ள தியாகவல்லியிலும் கச்சிராயர்கள் வாழ்ந்து வருகின்றனர்.[170] இவர்களும் தங்களை வன்னியப் பாளையக்காரர்கள் என்றே கூறிக்கொள்கின்றனர். கடலூர் மாவட்டம் பெண்ணாகடத்துக்கு அருகில் வாழ்ந்துவரும் வன்னிய மரபினர் தங்களைக் கடந்தையர் என்று அழைத்துக் கொள்கின்றனர். இவர்கள் காடந்தைகள் வழிவந்தவர்களாக இருக்கலாம் என்று ச. கிருஷ்ணமூர்த்தி தம் திருக்கடந்தை வரலாறும் உரையும் (1999) என்னும் நூலில் எழுதியுள்ளார்.

சுமார் கி.பி. 12 –ஆம் நூற்றாண்டில் தலையெடுத்த காடவர் அரசு இன்றைய 21–ஆம் நூற்றாண்டு வரையிலும், வரலாற்றில் இடம்பெறக் கூடியச் சிறப்பைப் பெற்றுத் திகழ்வது, தமிழ்நாட்டு மக்களை, குறிப்பாக வன்னியப் பெருமக்களை பெருமையும், பூரிப்பும் கொள்ளச் செய்வதாகும்.

○○○

170 நடன. காசிநாதன், தொன்மைத் தமிழும் தொன்மைத தமிழரும் (2009), பகக்ங்கள் 126–137

# இரண்டாம் இயல்

# காடவர் காலச் சமுதாயம்

## காடவர் மரபு கி.பி. 11-ஆம் நூற்றாண்டு முதல் இக்காலம் முடிய

*காடவர் வன்னியர் வரலாறு* கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் இறுதிக்கால் பகுதியில் (கி.பி. 1076) தொடங்கி, கி.பி.13-ஆம் நூற்றாண்டின் இறுதிக்கால் பகுதியில் (கி.பி. 1279) முடிவுக்கு வந்திருந்தபோதிலும், அவர்களின் சந்ததியினர் தற்காலத்திலும் பல இடங்களில் **"கச்சிராயர்"** என்ற பெயரிலும் **"கடந்தையர்"** **(காடந்தையர்)** என்ற பெயரிலும் வாழ்ந்து வருவது கண்கூடு. காடவர்களது சுமார் 200 ஆண்டுகால ஆட்சியின்போது மக்கள் எந்த நிலையில் இருந்தனர் என்பது பற்றியும், காடவர் ஆட்சிமுறை எந்த ஆட்சி அமைப்பைப் பின்பற்றி நடைபெற்றது என்பது பற்றியும், இவர்கள் காலத்தில் புதுமைகள் யாதாயினும் நிகழ்ந்ததா என்பது பற்றியும் ஆராய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

## காடவர் ஆட்சிப் பகுதி

காடவர் தொடக்கத்தில் *பெறுகனூர் நாட்டுப் பகுதியில்* **(விழுப்புறம் மாவட்டம்)** தங்கள் ஆட்சியைத் தொடங்கி, பின்பு முதலாம் கோப்பெருஞ்சிங்கன் **தந்தையான மணவாளப் பெருமாள் காலத்தில்,** திருநாவலூரை ஒட்டியுள்ள **சேந்தமங்கலத்தில்** அரண்மனை, கோட்டை மற்றும் கோயில்கள் அமைத்து, அதனைத் தங்கள் தலைமையிடமாக ஆக்கிக்கொண்டு தங்களது ஆட்சி நிர்வாகத்தைச் செலுத்தியிருக்கின்றனர். தொடக்கக் காலத்தில், முன்னாளில் சேரர், சோழர், பாண்டியர் ஆகியோருக்கு உரிமையான கொல்லி, நேரி, பொதியில் என்ற மூன்று மலைகளையும் **அரசநாராயணக் கச்சியராயன்** கைப்பற்றினான் என்று கவிஞர்

உயர்வு நிவிர்சியாகப் பாடியிருக்கின்றார். மேலும் வாதாவியைத் தலைநகராகக் கொண்ட மேலை மற்றும் கீழைச் சளுக்கியர் களையும், கங்கர்களையும், ஈழத்தரசர்களையும், கற்கடக மாராயனையும், மழநாட்டு அதியமானையும் வென்றனர் என்றும் காடவர் பாராட்டப்பெற்றிருக்கின்றனர். அரச நாராயணனின் மகனான ஆளப்பிறந்தான் வீரசேகரனான காடவராயன் காலத்தில் இவர்களது அரசுக் கொடியாக அனுமன் கொடி விளங்கியிருக்கிறது. இவனது மலையாகப் பின்னிமலை கூறப்பட்டிருக்கிறது.

இம்மன்னன் காஞ்சிபுரத்தில் இருந்து கொண்டு, பிற மன்னர்களின் ஆணைச் சக்கரங்களைப் பறித்துக்கொண்டு, அவர்களுடைய முடிகளின்மீது தம் திருவடிகள் படுமாறு செய்தவன் என்றும் புகழப்படுகிறான். அவ்வாறெனில் அவன் காலத்தில் காஞ்சிபுரமும் அவனது சொந்தத் தலைநகரமாகத் திகழ்ந்திருப்பதாகத் தெரிகிறது. அவனது கொடியாகக் காளைக் கொடியும் பயன்படுத்தப்பட்டிருப்பதால், பல்லவர்களது கொடியான காளைக் கொடி அவனது உரிமைக் கொடியாகவே திகழ்ந்திருக்கிறது.

விருத்தாசலம் கல்வெட்டுப் பாடல்களின் இறுதியில் "வல்லவரையன் சத்தியம்" என்று எழுதப்பெற்றிருப்பது, வல்லவரையன் என்ற அரசு ஆணையைக் குறிப்பதாகக் கருதலாம். சளுக்கியர்களை வென்றதால் காடவர்களும் "வல்லவரையர்" என்ற விருதைப் பெற்றிருந்தார்கள் என்பதைப் புலப்படுத்துவதாகவும் எண்ணலாம்.

## காடவர் ஆட்சி எல்லை

காடவர்களின் ஆட்சிப் பகுதி வடக்கே கிருட்டிணை ஆற்றுப் பகுதி வரையிலும், தெற்கே தஞ்சை மாவட்டம் நன்னிலம் பகுதி முடியவும், மேற்கே சேலம், தருமபுரி பகுதிகள் வரையிலும், கிழக்கே செங்கற்பட்டு மாவட்டம் தொடங்கி, கடலூர் மாவட்டம் முடியவும் உள்ள கடற்கரைப் பகுதி முழுவதிலும் பரவி விரிந்திருக்கிறது.

## காடவர் ஆட்சி நிர்வாக அமைப்பு

ஆட்சி நிர்வாகத்தின் தலைவனாக அரசனும், படைகளை நடத்திச் சென்று பிற மன்னர்களை வெற்றிபெற முதலிகளும் இருந்திருக்கின்றனர். இவனது படை முதலிகளில் முக்கிய முதலியாக

விளங்கியவன் "அரைசூருடையான் செங்கனிவாயன் சோழகோன் ஆன பெருமாள்பிள்ளை" என்பவனாவான். சிதம்பரம், விருத்தாசலம் பகுதிகளில் இவனது ஆணைப்படியே பல கொடைகள் அளிக்கப்பெற்றிருக்கின்றன.

இவனது இளவல் "பெருமாள் வேணாடுடையான்" என்பவன் மற்றொரு முக்கிய முதலியாவான். கோப்பெருஞ்சிங்கனின் ஆட்சியின் இறுதிக்காலங்களில் இம்முதலி ஆணையின் பேரில் பல கோயில் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. குறிப்பாகத் திருவயிந்திபுரக் கோயில் மேலைக்கோபுரம் இவனால் எடுப்பிக்கப் பெற்றிருக்கிறது.

## காடவர் அலுவலர்கள்

கோப்பெருஞ்சிங்கன் காலத்தில், எதிரிலி காங்கேயன் பொத்தப்பிச் சோழன், கச்சியராயன், சீனத்தரையன், பஞ்சநதிவாணனான நீலகங்கரையன், இவரது மகன் அருணகிரிப் பெருமாள், சிலம்பணிந்தான் கூத்தாடுவானான சேதியராயன்; தென்னவன் பிரமராயன்; திருமலையழகியானான் வீரகள் வீரப்பல்லவரையன், தொண்டைமான் குருகுலத்தரையன் இராசராச தேவனம்மையன், வாளவராயன் (S.I.I. Vol. XII, No.189.) ஆகியோரில் பிற முதலிகளாகவும், சிலர் ஓலைநாயகர்களுமாகவும் இருந்திருக்கின்றனர். மேலும், சிங்களராயர், இராஜவிராயர், இராஜேந்திர சோழ ப்ரமமாராயர் ஆகியோர் கேள்வி முதலிகளாகவும், விழுப்பாதராயர் திருமந்திர ஓலையாகவும் காணப்படுகின்றனர். (S.I.I. Vol. XII, No.234.) இவர்களோடு வாரியத்தாரும் கரணத்தாரும் பேசப்படுகின்றனர். (S.I.I. Vol. XII, No.156.)

## காடவர் நாட்டுப் பிரிவுகள்

சோழ மன்னர்கள் காலத்தில் எவ்வாறு நாடு வகை செய்யப் பெற்றிருந்ததோ அதேபோன்று இவர்கள் காலத்திலும், இவர்கள் ஆட்சி புரிந்த பகுதி வகை செய்யப்பெற்றிருந்தது. ஆட்சிப்பகுதி, மண்டலம், வளநாடு, கோட்டம் அல்லது கூற்றம், நாடு, ஊர் என்று பிரிக்கப்பட்டிருந்தது. ஆட்சிப்பகுதி பிரிக்கப் பெற்றிருந்த விபரம் கீழே தரப்படுகிறது.

| வ. எண். | மண்டலம் | வளநாடு | கோட்டம்(அ)கூற்றம் | நாடு | ஊர் |
| --- | --- | --- | --- | --- | --- |
| 1. | சேதி மண்டலம் (S.I.I. Vol. XII, No.236.) | | — | | ஆலூர் |
| 2. | ஜயங்கொண்ட சோழ மண்டலம் | | எயிற் கோட்டம் (S.I.I. Vol. XII, No.212.) | | காஞ்சிபுரத்து திருவத்தியூர் (S I I Vol XII, No.212.) |
| 3. | ஜயங்கொண்ட சோழ மண்டலம் | | களத்தூர்க் கோட்டம் (S.I.I. Vol. XII, No.187.) | செங்குன்ற நாடு (S.I I. Vol XII, No.187.) | திருக்கச்சூர் (S I.I Vol. XII, No.187.) |
| 4. | ஜயங்கொண்ட சோழ மண்டலம் | | களத்தூர்க் கோட்டம் (S.I.I. Vol. XII, No.243.) | செங்குன்ற நாடு (S.I.I. Vol. XII, No.243.) | திருக்கழுக்குன்றம் (S.I I. Vol. XII, No.243.) |

| வ. எண். | மண்டலம் | வளநாடு | கோட்டம்(அ)கூற்றம் | நாடு | ஊர் |
| --- | --- | --- | --- | --- | --- |
| 5. | ஜயங்கொண்ட சோழ மண்டலம்? | | கள்த்தூர்க் கோட்டம் (S.I.I. Vol. XII, No.183.) | வல்வநாடு (S.I.I. Vol. XII, No.183.) | திருவுடைச்சுரம் (Ibid, No.183 ) |
| 6. | ஜயங்கொண்ட சோழ மண்டலம் (Ibid, No.190.) | | காலியூர்க் கோட்டம் (Ibid, No.190.) | காசிரம்பேடு நாடு (Ibid, No.190.) | புல்லபாக்கமான தர்மசூரச் சதுர்வேதி மங்கலம் (Ibid, No.190.) |
| 7. | — | — | வெண்குன்றக் கோட்டம் (Ibid, No.190.) | வாதவூர்நாடு (Ibid, No.190.) | கொட்டையூர் (Ibid, No.190.) |
| 8. | ஜயங்கொண்ட சோழ மண்டலம் (Ibid, No.198.) | — | காலியூர்க் கோட்டம் (Ibid, No.198.) | — | தனியூர், உத்தரமேரூர் என்னும் ராஜேந்திரசோழச் சதுர்வேதி மங்கலம் (Ibid, No.198.) |

| வ. எண். | மண்டலம் | வளநாடு | கோட்டம்(அ)கூற்றம் | நாடு | ஊர் |
|---|---|---|---|---|---|
| 9. | ஜயங்கொண்ட சோழ மண்டலம் (Ibid, No.161.) | — | — | ஒய்மாநாடு (Ibid, No.161.) | முஞ்ஞூரான இராஜநாராயணச் சதுர்வேதி மங்கலம் (Ibid, No.161.) |
| 10. | — | பாண்டிகுலா சனி வளநாடு | தஞ்சாவூர்க் கூற்றம் (Ibid, No.148.) | — | குருதையாடி (Ibid, No.148.) |
| 11. | — | குலோத்துங்க சோழ வளநாடு (Ibid, No.148.) | — | பனையூர்நாடு (Ibid, No.148 ) | செம்பியன் குருதையாடி (Ibid, No.148.) |
| 12. | மலைமண்டலம் (Ibid, No.169.) | — | — | — | — |

| வ. எண். | மண்டலம் | வளநாடு | கோட்டம்(அ)கூற்றம் | நாடு | ஊர் |
|---|---|---|---|---|---|
| 13. | —— | மிலாடாகிய ஜனநாத வளநாடு (Ibid, No.203.) | குறுக்கை கூற்றம் (Ibid, No.203.) | —— | நென்மலியான மிலாட மஹா தேவிச் சதுர்வேதி மங்கலம் (Ibid, No 203 ) |
| 14. | —— | மிலாடாகிய ஜனநாத வளநாடு (Ibid, No.203.) | —— | —— | திருக்கோவலூர் (Ibid, No 203.) |
| 15. | —— | மிலாடாகிய ஜனநாத வளநாடு (Ibid, No.213.) | குறுக்கை கூற்றம் (Ibid, No.213.) | —— | திருக்கோவலூர் (Ibid, No 213.) |
| 16. | —— | மிலாடாகிய ஜனநாத வளநாடு (Ibid, No.234.) | பரனூர்க் கூற்றம் (Ibid, No.234.) | —— | ப்ரமதேயம் இறையானரை யூரான ஸ்ரீசோழ கேரளச் சதுர் வேதி மங்கலம் (Ibid, No.234.) |

| வ. எண். | மண்டலம் | வளநாடு | கோட்டம்(அ)கூற்றம் | நாடு | ஊர் |
|---|---|---|---|---|---|
| 17. | ஜயங்கொண்ட சோழ மண்டலம் (Ibid, No.119 ) | — | ஊற்றுக்காட்டுக் கோட்டம் (Ibid, No 119.) | ஆற்றூர்நாடு (Ibid, No.119.) | ஆற்றூரான ராஜராஜ நல்லூர் (Ibid, No 119.) |
| 18. | ஜெயங்கொண்ட சோழ மண்டலம் (Ibid, No.133.) | — | ஊற்றுக்காட்டுக் கோட்டம் (Ibid, No 133.) | பாலையூர்நாடு (Ibid, No.133 ) | பாலையூரான ராசேந்திரசோழ நல்லூர் (Ibid, No 133.) |
| 19. | — | உய்யக் கொண்டார் வளநாடு (Ibid, No 211.) | — | — | அம்பர் (Ibid, No.211.) |
| 20. | — | ஜயங்கொண்ட சோழ வளநாடு (Ibid, No.211.) | — | திருவழுந்தூர் நாடு (Ibid, No.211 ) | கூடலூர் (Ibid, No.211.) |

| வ. எண். | மண்டலம் | வளநாடு | கோட்டம்(அ)கூற்றம் | நாடு | ஊர் |
|---|---|---|---|---|---|
| 21. | — | இராஜாதி ராஜ வளநாடு (Ibid, No.211.) | — | வெண்ணையூர் நாடு (Ibid, No.211.) | ஒலையாமங்கலம் (Ibid, No.211.) |
| 22. | ஜயங்கொண்ட சோழ மண்டலம் (Ibid, No.190 ) | — | தாமர் கோட்டம் (Ibid, No 190.) | — | தனியூர் சக்கரமுதூர் (Ibid, No 190.) |
| 23. | — | நித்தவினோத வளநாடு (Ibid, No 148 ) | ஆலூர்க் கூற்றம் (Ibid, No.148.) | — | விழியூர் (Ibid, No.148.) |
| 24. | — | நடுநிலை நாடான (நடு நாடான) இராச ராச வளநாடு (Ibid, No.174.) | — | — | ஆலம்பாடியான குலோத்துங்கச் சோழ நல்லூர் பிடாகை வீரநாராயண நல்லூர் (Ibid, No.174.) |

| வ. எண். | மண்டலம் | வளநாடு | கோட்டம்(அ)கூற்றம் | நாடு | ஊர் |
|---|---|---|---|---|---|
| 25. | — | ராஜாதிராஜ வளநாடு குறுக்ஞ்சி வளநாடு (Ibid, No 174.) | — | — | பொன்மேய்ந்த பெருமாள் மங்கலம் (Ibid, No.174 ) |
| 26. | — | இராஜாதிராஜ வளநாடு (Ibid, No.194 ) | — | திருமுனைப்பாடி திருவெண்ணெய் நல்லூர் நாடு (Ibid, No.194 ) | பிரமதேயம் திருவெண்ணெய் நல்லூர் (Ibid, No.194.) |
| 27. | — | இராஜாதிராஜ வளநாடு (Ibid, No.132.) | — | திருவாலிநாடு (Ibid, No 132 ) | திருப்புன்கூர் (Ibid, No.132.) |
| 28. | — | பாண்டிகுலாசனி வளநாடு (Ibid, No.132.) | — | கிளியூர் நாடு (Ibid, No.132.) | குறுச்சி (Ibid, No.132.) |

| வ. எண். | மண்டலம் | வளநாடு | கோட்டம்(அ)கூற்றம் | நாடு | ஊர் |
|---|---|---|---|---|---|
| 29. | — | ராஜாதிராஜ வளநாடு (Ibid, No.201.) | — | திருவிந்தளூர் நாடு (Ibid, No.201.) | வடசேமங்கலம் (Ibid, No.201 ) |
| 30. | — | உய்யக்கொண்டார் வளநாடு (Ibid, No.211.) | — | — | அம்பர் (Ibid, No.211.) |
| 31. | — | ஜயங்கொண்ட சோழவள வளநாடு (Ibid, No.211.) | — | திருவழுந்தூர் நாடு (Ibid, No.211.) | கூடலூர் (Ibid, No.211.) |
| 32. | — | ராஜராஜ வளநாடு (Ibid, No.207.) | குறுக்கை கூற்றம் (Ibid, No.207.) | — | பிரமதேயம் சிற்றிங்கூர் (சித்தலிங்கமடம்) (Ibid, No.207.) |

| வ. எண். | மண்டலம் | வளநாடு | கோட்டம்(அ)கூற்றம் | நாடு | ஊர் |
|---|---|---|---|---|---|
| 33. | — | ராஜராஜ வளநாடு (Ibid, No.141) | — | திருமுனைப்பாடி திருவெண்ணை நல்லூர் நாடு (Ibid, No.141) | பிரமதேயம் திருவெண்ணை நல்லூர் (Ibid, No.141) |
| 34. | — | ராஜராஜ வளநாடு (Ibid, No.141) | — | பனையூர் நாடு மாவலூர் நாடு (Ibid, No.141) | பிரமதேயம் ஜனநாதச் சதுர்வேதிமங்கலம் (Ibid, No.141) |
| 35. | — | ராஜராஜ வளநாடு (Ibid, Nos.140, 195, 206) | — | திருவெண்ணை நல்லூர் நாடு (Ibid, Nos.140, 195, 206) | திருவெண்ணை நல்லூர் (Ibid, Nos.140, 195, 206) |
| 36. | — | ராயராய வளநாடு (ராஜராஜ வளநாடு) (Ibid, No.199) | — | திருவிந்தளூர் நாடு (Ibid, No.199) | பட்டான (பற்றான) ராஜராஜ குளத்தூர் (Ibid, No.199) |

| வ. எண். | மண்டலம் | வளநாடு | கோட்டம்(அ)கூற்றம் | நாடு | ஊர் |
|---|---|---|---|---|---|
| 37. | — | ராஜராஜ வளநாடு (Ibid, No.163) | — | வாணகோப்பாடி, உடைக்காட்டு நாடு (Ibid, No.163) | நெற்குன்றமான வயிரமேகச் சதுர்ப்பேதி மங்கலம் (Ibid, No.163) |
| 38. | — | — | — | வாணகோப்பாடி நாடு (Ibid, No.164) | சென்னையான வீரராசேந்திர சோழபுரம் (Ibid, No.164) |
| 39. | — | ராஜராஜ வளநாடு (Ibid, No.196) | — | வாவலூர் நாடு (Ibid, No:196) | திருவாமாத்தூர் (Ibid, No 196) |
| 40. | சோழ மண்டலம் | உய்யக்கொண்டார் வளநாடு (Ibid, No.176) | — | அம்பர் நாடு (Ibid, No.176) | அம்பர் (Ibid, No.176) |

| வ. எண். | மண்டலம் | வளநாடு | கோட்டம்(அ)கூற்றம் | நாடு | ஊர் |
|---|---|---|---|---|---|
| 41. | — | பாண்டிகுலாசனி வளநாடு (Ibid, No.228) | ஆற்காட்டுக் கூற்றம் (Ibid, No.228) | — | பெருமங்கலம் (Ibid, No.228) |
| 42. | — | விருதராய பயங்கர வளநாடு (Ibid, No.228) | — | மண்ணி நாடு (Ibid, No.228) | திருமங்கலக்குடி (Ibid, No.228) |
| 43. | — | விருதராய பயங்கர வளநாடு (Ibid, No.222) | — | நல்லாற்றூர் நாடு (Ibid, No.222) | திருக்கோடிகா (Ibid, No.222) |

## திருமுனைப்பாடிப் பிரிவு

காடவர் தொடக்கத் தலைநகரான கூடல் அமைந்திருந்த பகுதி திருமுனைப்பாடியிலடங்கியப் பகுதியாகும். அப்பிரிவு பெண்ணையாற்றின் தென்கரையில் அமைந்திருந்தது (A R.Nos 376 of 1908 and 308 of 1921) என்பதும், அப்பிரிவுக்கு வெவ்வேறு காலங்களில் ராஜேந்திரசோழ வளநாடு (A R No 533 of 1921) என்றும், ராஜேந்திர சிம்ஹ வளநாடு (A.R No. 517 of 1921) என்றும் பெயர் வழங்கப்பெற்றிருந்திருக்கிறது. அத்திருமுனைப்பாடிப் பகுதி வெவ்வேறு காலகட்டங்களில் கங்கை கொண்ட சோழ மண்டலம் *அல்லது வளநாட்டிலும் (A.R.Nos. 380 of 1921, 375 of 1908 and* 136 of 1933-34), ஜயங்கொண்ட சோழமண்டலத்திலும் (A R.Nos. 393 and 513 of 1921), ராஜராஜ வளநாட்டிலும் (A.R.Nos. 414, 423 and 533 of 1921), ராஜேந்திர சோழ வளநாட்டிலும் (A.R.No. 392 of 1921) சேர்ந்திருந்திருக்கிறது.

## திருமுனைப்பாடி நாட்டுப் பிரிவுகள்

திருமுனைப்பாடிப் பிரிவில் மட்டும் அடங்கியிருந்த நாட்டுப் பிரிவுகள் கீழ் வருமாறு:

1. ஆன்மூர் நாடு (A.R.No. 380 of 1921)
2. அரசூர் நாடு (Ibid, No. 414 of 1921)
3. அவியனூர் நாடு (Ibid, No. 419 of 1921)
4. தாமர் நாடு (Ibid, Nos. 371 of 1908 and 382 of 1909)
5. எமப்பேரூர் நாடு (Ibid, No. 513 of 1921)
6. இடையாற்று நாடு (S I.I Vol. XII, No. 147)
7. கயவபாக்கை நாடு (A.R.No. 31 of 1903)
8. கீழ் ஆமூர் நாடு (S I.I. Vol. XII, No. 121)
9. கூடல் நாடு (S.I.I. Vol. XII, No. 121)
10. குறுக்கை கூற்றம் (A.R.No. 372 of 1908)
11. மேல் ஆன்மூர் நாடு (Ibid, No 397 of 1910)
12. மேலூர் நாடு (Ibid, No. 350 of 1902)

13. முடியூர் நாடு (Ibid, No. 189 of 1906)
14. பனையூர் நாடு (Ibid, No. 271 of 1936-37)
15. பேரிங்கூர் நாடு (Ibid, No 378 of 1909)
16. பெருகனூர் நாடு (Ibid, No. 46 of 1903)
17. திருவெண்ணை நல்லூர் நாடு (Ibid, No. 423 of 1921)

**திருமுனைப்பாடிப் பிரிவின் ஊர்கள்**

திருமுனைப்பாடிப் பிரிவில் அமைந்திருந்த ஊர்களின் பட்டியல்:

1. அதிராஜமங்கல்யபுரம் (அதாவது திருவதிகை) (A.R. No. 380 of 1921)
2. அரசூர் (Ibid, No. 414 of 1921)
3. ஏமப்பேரூர் (Ibid, No. 517 of 1921)
4. கிராமம் (Ibid, Nos 189 of 1906, 736 of 1905)
5. களத்தூர் (Ibid, No. 371 of 1908)
6. கணிச்சம்பாக்கம் (Ibid, No. 515 of 1921)
7. கிளியூர் (Ibid, Nos. 382,400 of 1909)
8. கூடல் (S.I.I. Vol. XII, Nos. 121 and 124)
9. மேலைப்பனைப்பாக்கம் (Ibid, No 147)
10. நாலூர் (A R No. 513 of 1921)
11. நெய்வானை (Ibid, Nos. 371 372 of 1908)
12. பேரிங்கூர் (Ibid, No. 102 of 1906)
13. ரணதீரமங்கலம் (Ibid, No. 419 of 1921)
14. திருக்கோயிலூர் (Ibid, No. 308 of 1921)
15. திருமுடியூர் (Ibid, No. 736 of 1905)
16. திருநாமநல்லூர் (S.I.I Vol. VII, No 999)
17. திருவாமூர் (A.R. No. 137 of 1933-34)
18. திருவெண்ணைநல்லூர் (Ibid, No. 423 of 1921)
19. ஊற்றுக்குறுச்சியான ஆதனூர் (S.I I. Vol. XII, No. 121)

## கோட்டம் அல்லது கூற்றம்

கோப்பெருஞ்சிங்கன் காலக் கல்வெட்டுக்களிலிருந்து, பெரும்பாலும் தொண்டைமண்டலப் பகுதியில்தான் "கோட்டம்" அல்லது "கூற்றம்" பிரிவைக் காணமுடிகிறது. சோழ மண்டலப் பகுதியில் "கோட்டம்" என்ற பிரிவே காணப்பெறவில்லை. ஒரே ஒரு "கூற்றம்" பிரிவு தெரியவருகிறது. (குஞ்சாவூர்க் கூற்றம், (S I.I. Vol. XII, No. 148)

## மண்டலங்கள்

மண்டலங்கள், 1. ஜெயங்கொண்ட சோழமண்லம், 2. சேதி மண்டலம், 3. மலைமண்டலம் ஆகிய மூன்று மண்டலங்கள் இவர்களது கல்வெட்டுக்களில் பேசப்படுகின்றன. வளநாடுகள், 1. பாண்டி குலாசனி வளநாடு, 2. குலோத்துங்க சோழ வளநாடு, 3. மிலாடாகிய ஜனநாத வளநாடு, 4. உய்யக்கொண்டார் வளநாடு, 5. ராஜாதிராஜ வளநாடு, 6. நித்தவினோத வளநாடு, 7. நடுநிலை நாடான இராசராச வளநாடு, 8. ராஜாதிராஜ வளநாடு குறுஞ்சி வளநாடு, 9. ராஜராஜ வளநாடு ஆகிய ஒன்பது வளநாடுகள் குறிக்கப்பெற்றுள்ளன. 'இராஜாதிராஜ வளநாடு குறுஞ்சி வளநாடு' (S.I I. Vol XII, No. 174) என்பது "இராஜாதி ராஜ வளநாடான குறிஞ்சி வளநாடு" என வழங்கப்பெற்றிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

## திருவெண்ணைநல்லூர்

மேலும் திருமுனைப்பாடி என்று ஒரு பிரிவு இருந்திருக்கிறது. இது சில கல்வெட்டுக்களில் 'திருமுனைப்பாடி திருவெண்ணை நல்லூர் நாடு' (S I I. Vol. XII, No. 141) என்று குறிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவில் மொத்தம் 17 நாடுகள் அடங்கியிருந்திருக்கின்றன. இப்பிரிவில் இருந்த நாடுகளில் அமைந்திருந்த ஊர்களாக மொத்தம் 19 ஊர்கள் தெரியவந்துள்ளன.

## கூற்றங்கள், நாடுகள், கோட்டங்கள் எண்ணிக்கை

கோட்டங்களாக, 1. ஆமூர்க்கோட்டம், 2. எயிற்கோட்டம், 3. களத்தூர்க்கோட்டம், 4. காலியூர்கோட்டம், 5. வெண்குன்றக்

கோட்டம், 6. ஊற்றுக்காட்டுக் கோட்டம், 7. தாமர் கோட்டம் ஆகிய ஏழு கோட்டங்கள் காணப்படுகின்றன. கூற்றங்களாகத், 1.தஞ்சாவூர்க் கூற்றம், 2. குறுக்கைக் கூற்றம், 3. பரனூர்க் கூற்றம், 4. ஆவூர்க் கூற்றம் ஆகிய நான்கு கூற்றங்களும்; நாடுகளாக,

1. செங்குன்ற நாடு
2. வல்லநாடு
3. காசிரம்பேடு நாடு
4. வாதவூர் நாடு
5. ஒய்மா் நாடு
6. பனையூர் நாடு
7. ஆற்றூர் நாடு
8. பாலையூர் நாடு
9. திருவழுந்தூர் நாடு
10. வெண்ணையூர் நாடு
11. வாதவூர் நாடு
12. திருமுனைப்பாடி திருவெண்ணைநல்லூர் நாடு
13. திருவாலிநாடு
14. கிளியூர் நாடு
15. திருவிந்தளூர் நாடு
16. வாணகோப்பாடி உடைக்காட்டு நாடு
17. வாணகோப்பாடி நாடு
18. வாவலூர் நாடு
19. அம்பர் நாடு

என்று அனைத்துப் பிரிவுகளிலுமிருந்த 19 நாடுகள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

## வேளாண்மைக்கு முதலிடம்

காடவர்கள் தங்கள் ஆட்சிப் பகுதியில் விளைநிலங்கள், பனமடங்கு பெருகுதல் வேண்டும் என்பதற்காகப் பல சீர்திருத்தங்களைச் செய்திருக்கின்றனர்.

விழுப்புரம் மாவட்டம் திருவக்கரை சந்திர மௌலீஸ்வரர் கோயில், இரண்டாம் பிரகாரத்தில் உள்ள ஆயிரக்கால் மண்டபத்தின் தெற்குப் பக்க அடிப்பகுதியில் வெட்டப்பெற்றுள்ள கல்வெட்டு[1] காடவன் அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன் என்னும் சர்வஞ்ஞன், கட்கமல்லன், ஒழுகரை ஏரிக்கு மதகு அமைத்ததோடு, அவ்வேரிக்கு நீர் கொண்டுவரும் வாய்க்காலையும் வெட்டிவித்து, உதவியிருக்கிறான். நீர் கொண்டு வரும் வாய்க்காலின் பெயர் "த்ரிபுவந நருப நாத" (மூவுலக அரசர்களுக்குத் தலைவன்) என்பது அக்கல்வெட்டின் பிற்பகுதியில் உள்ள வடமொழிப் பகுதியில் எழுதப்பெற்றிருக்கிறது.

முதலாம் கோப்பெருஞ்சிங்கனது மகன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் தம் ஆட்சியில் ஏற்படுத்திய பல நீர்நிலைகள் பற்றியச் செய்தியைத் திருவண்ணாமலைக் கல்வெட்டில்[2] காணமுடிகிறது. 'தமிழ்நாடு காத்த பெருமாள் தடாகம்', 'அய்யன் ஏரி', 'வாள்வல்ல பெருமாள் கிணறு', 'காடவ குமாரன் தடாகம்', 'பெருமாள் ஏரி', 'நிச்சங்கமல்லன் ஏரி', 'காங்கயன் தடாகம்' ஆகிய நீர் நிலைகளை அமைத்து, தம் குடிமக்கள் வேளாண்மையை மேலும் விரிவாக்க உதவி புரிந்திருக்கிறான். கோயில்களுக்கு முன்பாகவோ அல்லது ஊர்களிலோ அமைக்கப்பெறும் குளத்தைத் "தடாகம்" என்றும், வயல்களுக்கான நீர்ப்பாசனத்திற்குத் தேவைப்படும் பெரிய நீர்நிலையை "ஏரி" என்றும் பெயரிட்டிருக் கின்றனர். இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் இரு பெரிய ஏரிகள் ஏற்படுத்தப்பெற்றிருந்தனவாக அறிய முடிகிறது. ஒன்று "பெருமாள் ஏரி". இது கடலூருக்கு அருகில் அமைந்திருக்கிறது. இவ்வேரி, சோழர் காலத்தில் முதலாம் பராந்தகன் காலத்தில் சிதம்பரத்திற்கருகில் உள்ள காட்டுமன்னார்கோயிலுக்கு வடக்கே அமைக்கப்பெற்றிருந்த "வீரநாராயண ஏரியைப்" போன்றது. மற்றொன்று "நிச்சங்கமல்லன் ஏரி". இது எங்கு அமைந்திருந்தது என்பது தெரியவில்லை.

முதலாம் கோப்பெருஞ்சிங்கன் என்று நடுவணரசுக் கல்வெட்டுத் துறையினரால் நிறுவப்பட்டுள்ள சகலபுவனச் சக்கரவர்த்தி

1. S I I. Vol XII, No 246

2 Ibid, Vol VIII, No 69

காடவன் அவனி ஆளப்பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன், புதுச்சேரிக்கு அருகிலுள்ள திருபுவனமாதேவி என்னும் ஊரின் "ஏரிக்கரை பல இடங்களிலும் உடைந்து, ஏரியும் துகுந்து, மதகுகளும் முறிந்து, கலிங்கு மடைகளும் அழிந்து கிடக்கையில், உடைந்த மடைகளும் அடைத்து, ஏரியும் கல்லி, கரையும் கற்கட்டி, மதகுகளுமட்டுவித்து, கலிங்குகளும் செய்தபடி" என்று திரிபுவனியின் வரதராஜப்பெருமாள் கோயில் கல்வட்டு[3] குறிப்பிடுகிறது. மேலும் அம்மன்னனே திரிபுவனமா தேவியின் குளக்கரையில் ஹேரம்ப கணபதிக்கு ஒரு கோயிலையும் கட்டுவித்தான் என்று இக்கல்வெட்டு புலப்படுத்துகிறது. ஹேரம்ப கணபதிக்கு ஐந்து யானைத் தலைகள் அமைந்திருக்கும். தமிழ்நாட்டில் மிகப் பழமையான ஹேரம்ப கணபதிச் சிற்பம், மதுரைக்கருகேயுள்ள திருப்பரங்குன்றத்துக் குடைவரைக் கோயிலில் காணப்பெறுகிறது.[4]

விழுப்புரம் மாவட்டம் (பழைய தென்னார்க்காடு மாவட்டம்), திருக்கோவலூர் வட்டம், அங்கனூரின் தென்மேற்கில் அமைந்துள்ள கம்ப்ளிமோட்டுக் கொல்லையில் இருக்கும் குன்றில் எழுதப் பெற்றிருக்கும், சகலபுவநச்சக்கரவர்த்தி கோப்பெருஞ்சிங்க தேவனின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு,[5] அரசனுடைய சாமந்த முதலி சேனை நரசிங்கபண்மன், தம் பாட்டி மோகியார் நன்மைக்காக ஒரு குளம் வெட்டி அமைத்ததைத் தெரிவிக்கிறது.

இதேபோன்று, இதே மாவட்டம், இதே வட்டம் வேலூரின் தென்பகுதியில் ஒரு புஞ்சை நிலத்தில் நடப்பெற்றிருக்கும் கல்லில் காணப்பெறும் மற்றொரு கல்வட்டு[6], சோழ மன்னன் திரிபுவனச் சக்ரவர்த்திகள் ராஜராஜதேவரின் ஏழாம் ஆட்சியாண்டில் எழுதப் பெற்றிருக்கிறது. முன்னாளில் ஆளப்பிறந்தான் மோகனனான ராஜராஜகாடவராயனால் மேலூர் தேவதானக் கிராமத்தில் ஆளமஞ்சி உட்பட பல வரிகளை இறையிலி செய்ததை, இம்மன்னான ராஜராஜ சோழன் காலத்திலும் உறுதிசெய்யப் பெற்றதை இக்கல்வெட்டு

3 S I I Vol XII, No 126

4 In the summary of the inscription given for S I I Vol XII, No 126

5 A.R.E., No 379 of 1937-38

6 Ibid, Vol No 295 of 1939-40

உணர்த்துகிறது. மேலும் இவ்விறையிலி ஆளப்பிறந்தான் ஏரியாலும், ஆட்கொண்டான் வாய்க்காலாலும் நீர் பாய்ச்சப்பெறும் பகுதிக்கு மட்டும் பொருந்தும் என்றும் கூறப்பெற்றிருக்கிறது. இக்கல்வெட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள சோழமன்னன் மூன்றாம் இராஜராஜனாக இருக்கலாம்.

விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், அரகண்டநல்லூர் ஒப்பிலாமணீஸ்வரர் கோயில் மண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் கோப்பெருஞ்சிங்கனின் 24-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, அவ்வூரின் "ஏரிக்கரை அழிய உடைந்து நெடுநாள் பாழ்கிடக்கையில் திருக்கோவலூர் வாணிகன் நாகத்தம்பையன் எடுத்தபாதம் படியானை இக்கோயிலில் தானத்தோம் வேண்டிக்கொண்டு, இவனும் இவ்வேரி அடைத்து தருகிறோமென" என்று அரகண்டநல்லூர் ஏரிகரை உடைந்தபோது, அது சீர் செய்து அடைக்கப்பெற்ற செய்தி தெரிய வருகிறது.

## நிலப்பிரிவு

நிலங்கள், நீர்நிலம், கொல்லை நிலம், திருநந்தவனம்[7], புன்சை நிலம்[8], விளைநிலம்[9], ஊர்ப்படி நிலம் (ஊரையொட்டிய நிலம்)[10] வளாகம் நிலம்[10A] கமுகு நிலம்[11], ஓடை நிலம்[12], திருநாமத்துக்காணி, திருவிடை யாட்டம்[13], பிடாரிபட்டி, துர்க்கைப்பட்டி, பள்ளிச்சந்தம்[13A] அகரம் சதுர்வேதி மங்கலம் நிலம், மடக்கு, விரிவு[14], நாற்றாங்கால் நிலம்[15], கழனி (நஞ்சை நிலம்) புல் நிலம்,[15A] பரப்பு, மடக்கு, சேர்வை[16], திருநந்தவனப் புறம்[17], தோட்ட நிலம்[17A], திருவிளக்குப்பட்டி[18], படைப்பற்று, நன்செய் நிலம்[19], பட்டவருத்தி நிலம்[20], கடிகையார்

---

7 S.I I Vol XII, No 142
8 Ibid, No 163, 189, 206
9 Ibid, No 148
10 Ibid, No 151
10 A Ibid, No 156
11 Ibid, No 156.
12 Ibid, No 157
13 Ibid, No 135
13A Ibid, No 119
14 Ibid, No 172
15. Ibid, No 175
15A Ibid, No 170
16 Ibid, No 175
17. Ibid, No.175.
17A Ibid, No 135
18 Ibid, No 176.
19 Ibid, No.209
20. Ibid, No 119.

இறையிலி நிலம்[21], காவல்பேறு[22] திருப்பள்ளியெழுச்சிப்புறம்[23], திருப்பாவாடைப்புறம்[24], ஊர்ப்படி நிலம் (ஊரை ஒட்டியுள்ள நிலம்)[25] திருப்பண்ணிகாரப்புறம்[26], சீகாரியப் பேறு[27] திருவிளக்குப்புறம்[28], திருக்கை வழக்கம்[29] தாக்கு நிலம்[29A], அடம்படிக் கண்டம், ஆற்றங்கரைக் கண்டம், தகழிக்கண்டம் உட்பட நிலம்[29B] ஆகிய நில வகைகளை காடவர் ஆட்சிக்காலத்தில் காணமுடிகிறது.

## நிலப்பிரிவு விளக்கம்

நிலங்களில் 'நீர் நிலம்' என்றால், வாய்க்கால் வழியாக நீர்பாய்ந்து விளைச்சல் தருகின்ற நிலமாகும். இந்நிலத்தை "விளைநிலம்" என்று கல்வெட்டு குறிப்பிடுகிறது. மேலும் 'நன்செய்' நிலம் என்றும் அழைக்கப்பெற்றிருக்கிறது.

கொல்லை நிலம் என்பது தற்பொழுது "வானம் பார்த்த பூமி" என்று மக்களால் அழைக்கப்பெறும் "புன்செய்" நிலப் பகுதியாகும். இந்நிலப்பகுதியில் மழை பெய்தால்தான் பயிரிடமுடியும். புன்செய்ப் பயிர்களான கேழ்வரகு, கம்பு, எள்ளு, கொள்ளு போன்ற பயிர்கள் விளைவிக்கக்கூடியவை.

'திருநந்தவனம்' என்பது இறைவனுக்குப் பூசை செய்வதற்காகப் பூக்கள் வழங்கும் பூஞ்செடிகளை வளர்க்கக் கூடிய இடமாகும். இதுவும் பெரும்பாலும் புன்செய் நிலமாகவே அமையும். 'ஊர்ப்படி நிலம்' என்பது, ஊரின் நடுவில் அமைந்துள்ள நிலப்பகுதியோ அல்லது ஊரையொட்டி அமைந்துள்ள நிலப்பகுதியோ ஆகும். இந்நிலப்பகுதியும் பெரும்பாலும் திருநந்தவனமே அமைக்கப் பயன்படுவதாகும்.[30] திருநந்தவனம் அமைக்கும் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் "திருநந்தவனக் குடிகள்"[30A] என்று அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

21. Ibid, No 119
22 Ibid, No 120
23. Ibid, No 132
24 Ibid, No.149, 154, 171, 172.
25 Ibid, No 151
26 Ibid, No 160.
27 Ibid, No 187
28 Ibid, No 189.
29. Ibid, No 189
29A Ibid, No 142
29B Ibid, No 179.
30 Ibid, No.151
30A. Ibid, No 157

"விளாகம் நிலம்" என்று ஒருவகை நிலம் பேசப்படுகிறது. கடலூர் மாவட்டம், தீர்த்தநகரியில் உள்ள சிவாங்குரேஸ்வரர் கோயிலில் காணப்பெறும் கல்வெட்டு[31], "திருத்திணை நகருடையாற்குத் திருநாமத்துக் காணியான உள்ளோடையில் ஜனநாதநல்லூர்க் கருத்தடங்கண்ணியார் விளாகம் நிலம், நல்லாலியான திருமாலை சேர நின்றான் விளாகம் நிலம், பாலனூரான பெரியநாச்சியார் விளாகம் நிலம், அகரம் பொன்மேய்ந்த சோழச் சருபேதி மங்கலத்துப் பிடாகை கொலத்துச் சிவபாதசேகர விளாகம் கமுகு நிலம்" என்று சில விளாக நிலங்களைத் தெரிவித்துள்ளது. இவ்விளாகங்களில் பெரும்பாலும் கமுகு (பாக்கு) பயிரிடப்படும் போன்று தெரிகிறது.

'ஓடை' என்பது வெள்ளக்காலங்களில் புதிதாக உடைப்பெடுத்து நீர் ஓடும் காலுக்கு "ஓடை" என்று பெயர். அப்பகுதியில் பின்னாளில் அமைந்துவிடுகின்ற நிலப்பகுதிக்கு "ஓடை நிலம்" என்று பெயர் ஏற்பட்டிருக்கும் எனத் தெரிகிறது.

'திருநாமத்துக்காணி' மற்றும் 'திருவிடையாட்டம்' ஆகியவை கல்வெட்டுக்களில் மிகுதியாகக் குறிக்கப்பெறும் நிலப்பகுதிகளாகும். 'திருநாமத்துக்காணி' என்பது சைவ சமயம் சார்ந்த கோயில்களுக்கும், 'திருவிடையாட்டம்' என்பது வைணவ சமயம் சார்ந்த கோயில்களுக்கும் கொடையளிக்கப்பெற்ற நிலப்பகுதிகளாகும். சமண மதம் சார்ந்த வழிபடு தலங்களுக்கோ, பௌத்தமதம் சார்ந்த வழிபடுதலங்களுக்கோ அளிக்கப்பெறும் கொடை நிலங்களுக்குப் "பள்ளிச்சாந்தம்" என்ற பெயர் காணப்படும். 'பிடாரி பட்டி' என்பது 'பிடாரி' தெய்வத்துக்கும், 'துர்க்கைபட்டி' என்பது துர்க்கைத் தெய்வத்துக்கும் வழிபாட்டுக்காக விடப்படும் நிலப்பகுதிகளாகும். "அகரம் சதுர்வேதி மங்கலம் நிலம்" என்பது நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர்கள் வாழும் பகுதி அமைப்பதற்காகக் கொடுக்கப் பெறும் கொடை நிலமாகும்.

நில வகைகளில் மடக்கு, விரிவு என்னும் வகைகளும் குறிக்கப்பெற்றுள்ளன. இவை நேர்த்திசையில் அமைந்திருக்கும் நிலத்தோடு படுக்கை [illegible] வேறுதிசையில் திரும்பி அமைந்திருக்கும்

31 Ibid, No 156

நிலப்பகுதிக்கு 'மடக்கு' என்று பெயர் ஏற்பட்டிருக்கலாம். சில நிலங்களின் எல்லை விரிவாக்கம் செய்யப்பெற்றதால், அது 'விரிவு' என்றும், அல்லது 'பரப்பு' என்றும் கூறப்பெற்றிருக்கலாம். அதேபோன்று ஒரு நிலத்தோடு மேலும் சில நிலப்பகுதி சேர்க்கப்பெறும்போது அந்நிலப்பகுதி 'சேர்வை' என்றும் அழைக்கப்பெற்றிருக்கலாம்.

"திருநந்தவனம்" எனப்படுவது பூஞ்செடிகள் அமையப்பெற்ற நிலப்பகுதியாகும். "திருநந்தவனப்புறம்" என்பது திருநந்தவனம் புதிதாக அமைப்பதற்கோ அல்லது திருநந்தவனத்தை நன்கு பராமரிப்பதற்காகவோ அளிக்கப்பெறும் கொடை நிலப்பகுதியாகும்.

'நாற்றங்கால் நிலம்' என்பது விளை நிலத்தில் பயிரிடுவதற்காக முதலில் விதைகளை விதைத்து பயிர் விளைவிக்கும் நிலப்பகுதிக்குரியப் பெயராகும். இதில் விளைந்த பயிருக்கு 'நாற்று' என்று பெயர். நாற்றுக்கள் விளைகின்ற நிலப்பகுதிக்கு "நாற்றங்கால் நிலம்" என்ற பெயர் ஏற்படலாயிற்று.

கோயில்களில் திருநந்தாவிளக்குகள் அமைத்து நன்கு பராமரிப்பதற்காக வழங்கப்பெறும் நிலப்பகுதிக்குத் "திருவிளக்குப் பட்டி" என்றும், "திருவிளக்குப் புறம்" என்றும் பெயர்கள் வழங்கப்படலாயிற்று. "படைப்பற்று" என்பது, போர்க்காலங்களில் எதிரி அரசர்களோடு போரிடுவதற்குத் தயார் நிலையில் தம் படையை வைத்திருப்பதற்காக, படையினருக்குத் தேவைப்படும் அனைத்துச் செலவினங்களையும் ஈடுசெய்துக்கொள்வதற்காக நிலம் வழங்கப்பெறுவது மரபு. அவ்வாறு வழங்கப்பெற்ற நிலத்துக்குப் "படைப்பற்று" என்று பெயர்.

கோயில்களில் பூசை செய்யும் பிராமணர்கள், தங்கள் சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்துக்கொள்வதற்காகக் கொடை வழங்கப்பெறும் நிலப்பகுதிக்குப் "பட்டவிருத்தி (பட்டர் விருத்தி)" என்று பெயர்.

"கடிகையார் இறையிலி நிலம் மூன்றேகாலும்" என்று கல்வெட்டில்[32] குறிக்கப் பெற்றுள்ளது. இந்நிலம் 'கடிகை' என்னும் கல்வி [illegible]த்தில் உள்ளாருக்குக் [illegible]ப்பெற்ற நிலமாகலாம்.

32 Ibid, No 119

கோப்பெருஞ்சிங்கன் முதலிகளுள் ஒருவரான நீலகங்கரையர் தாம் பெறக்கூடிய காவல் பேற்றை மட்டும் தமக்கு வைத்துக்கொண்டு, அரிபாடிகாவல் வரியை (நெல் அரிகளைக் காவல் காப்பதற்காகப் பெறப்படும் வரியை) இறைவனுக்கு நீர்வார்த்துக் கொடுத்ததை மற்றொரு கல்வெட்டு[33] புலப்படுத்துவதால், "காவல்பேறு" என்பது மக்களைக் காத்து வருவதற்காக முதலிகளுக்கு, அரசனால் வழங்கப்பெற்ற நிலக் கொடையாக இருக்கலாம்.

"திருப்பள்ளியெழுச்சிப் புறம்" என்பது இறைவன் திருப்பள்ளியறைக்குப் புறப்பட்டுச் செல்லும்போது நடத்தப்படும் பூசை வழிபாட்டுக்கு உடலாக (முதலாக) நிலக்கொடை அளிக்கப் படுவதாகும். இவ்வாறான கொடை திருப்புன்கூர் சிவலோகமுடைய நாயனார் கோயிலில் அளிக்கப்பெற்றிருக்கிறது.[34] இதேபோன்று "திருப்பாவாடைப்புறம்" இறைவனுக்கும், இறைவிக்கும் சாத்தும் ஆடைகளுக்காக அளிக்கப்பெறும் நிலக்கொடை. இந்த ஆடைகளைப் 'புடைவை'[35] என்றும் 'பரிசட்டம்'[35A] என்றும் கல்வெட்டுக்கள் தெரிவிக்கும்.

சிதம்பரத்தில் உள்ள "திருக்காமக் கோட்ட முடைய பெரிய நாச்சியார் கோயில் அந்தப்புரப் பெருமாள் திருவாசலுக்கு வடபக்கத்து எழுந்தருளியிருக்கும் "அண்டாபரண தேவர்க்குத் திருப்பண்ணி காரப்புறமாக"வும், சிறப்பாகத் "திருத்தோள் மாலையும்" செய்து சாத்தவும் நிலக்கொடை வழங்கப்பெற்றிருக் கிறது. "திருப்பண்ணியாரப்புறம்" என்பது அவ்வண்டாபரணத் தேவருக்கு திருப்பண்ணியாரம் (இனிப்புப் பண்டங்கள்) செய்து படைப்பதற்காக வழங்கப்பெற்ற நிலக்கொடையாகும்.

"சீகாரியப் பேறு" என்பது கோயில்களில் 'சீகாரியம்' (கோயில் நிர்வாகம்) செய்பவர் பெறும் கொடை நிலமாகும். "திருவிளக்குப் புறம்" என்பது கோயில்களில் திருவிளக்கு எரிப்பதற்காக கொடை அளிக்கப்பெறும் நிலப்பகுதியாகும். இதுவும் "திருவிளக்குப் பட்டி" போன்றதே ஆகும்.

---

33 Ibid, No 120

34 Ibid, No 132

35 Ibid, No 202.

35A S I I Vol XII, No 154

"திருக்கை வழக்கம்" என்பது ஒருவகை நிலக் கொடையாகும். வேளாளர் வழங்கியிருக்கின்ற கொடைபற்றி கம்பர் பெருமான் **"திருக்கை வழக்கம்"** என்னும் நூலில் எழுதியிருக்கிறார். இந்நூலை அடிப்படையாகக் கொண்டு திருவெண்ணைநல்லூர்க் கல்வெட்டில்[36] இச்சொல் பயன்படுத்தப் பெற்றிருக்கிறது என்று கருதலாம். வன்னியர், தங்களைப் பற்றி பாடிய புலவர் பெருமக்களுக்கு வழங்கியிருக்கின்ற கொடை பற்றி கம்பராலேயே **"திருக்கைவளம்"** என்னும் ஒரு நூலும் எழுதப்பெற்றிருக்கிறது.

மேற்கூறப்பெற்ற திருவெண்ணைநல்லூர்க் கல்வெட்டு

> "வீரகள் வீரப் பல்லவரையன் சாகையில் எனக்கு தேவர் திருக்கை வழக்கமாக தந்தருள (நானும் உடையார்) ஆட்கொண்ட தேவர்க்கு திருவிளக்குப் புறமாக விட்டருள வேணுமென்று விண்ணப்பஞ்செய்ய அப்படி செய்கவென்று திருவுளமாகையில் இன்னிலம் ஒன்பது மாவரையும் திருவிளக்குப்புறமாக விட்டு"

என்று கூறிச் செல்கிறது. மேற்கூறப்பெற்ற கல்வெட்டு வரிகளிலிருந்து "திருக்கை வழக்கம்" என்பது, நற்செயல்கள் புரிந்த ஒருவர் இறந்தபின்பு அவரது வாரிசுக்கு அளிக்கப்பெறும் கொடைநிலம் என்பதாகத் தெரியவருகிறது. போரில் வீரதீரச் செயல் புரிந்து இறந்துவிட்ட ஒருவரின் வாரிசுக்கு "இரத்தப்பட்டி", அல்லது "நீத்தோர்பட்டி" அளிப்பது போன்று "திருக்கை வழக்கம்" மரபு கி.பி 13-ஆம் நூற்றாண்டில் நிலவியதாகத் தெரிகிறது. முதலாம் கோப்பெருஞ்சிங்கன், இன்றைய பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூரில் (பெரும்பலூர்) போசளரை எதிர்த்துப் போரிட்டு, அவர்களது தண்ட நாயர்களைக் கொன்றற்குப் பிறகு அவர்களுடைய பெண்டிர் மற்றும் கருவூலம் ஆகியவற்றைக் கவர்ந்தற்குப் பிராய்ச்சித்தமாக (பரிகாரமாக), திருமுதுகுன்றமுடைய நாயனார் திருமேனியில் சாத்தியருள, "அவனி ஆளப்பிறந்தான்" என்னும் திருநாமத்தால், தங்கத்தால் செய்த நெற்றிப் பட்டத்தையும், இந்நாயனார்க்கு நெய் ஆடி அருள 200 பசுக்களையும், பால் ஆடி அருள 90 பசுக்களையும் கொடையளித்திருக்கிறான்.[37]

36 S I I Vol XII, No.189

37 S I I Vol XII, No 124

"தாக்கு நிலம்" என்று ஒருவகை நிலம் இருந்திருக்கிறது. இயற்கையின் சீற்றங்களால் ஏற்படும் புயல் மற்றும் வெள்ளம் ஆகிய சீரழிவுக்கு (தாக்குதலுக்கு) உட்படுத்தப்பட்ட நிலமாக இருக்கலாம்.

## நிலப் பெயர்

பண்டைக் காலம் தொட்டு நிலங்கள் சிலவற்றுக்குச் சில பெயர்கள் வழங்கி வந்திருப்பதைக் கல்வெட்டுக்கள் புலப்படுத்துகின்றன. சோழர் காலச் செப்புப்பட்டயங்களிலும் சில நிலங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. சோழர்களது வழக்கத்தை அனைத்துச் செயல்களிலும் பின்பற்றிய காடவர் ஆட்சிக்காலத்திலும் சில நிலங்கள் சில பெயர்களால் அழைக்கப் பெற்றிருந்தமையை அவர்கள் காலத்தியக் கல்வெட்டுக்கள் காட்டி நிற்கும்.

அவ்வாறான சில நிலங்களின் பெயர்களைக் கீழே காணலாம். சிதம்பரத்துக்கு அருகிலுள்ள கடைவாய்ச் சேரியின் பிடாகை (சிற்றூர்) சண்டேஸ்வரநல்லூரில், குலோத்துங்கச் சோழ பிரமமாராயன் பிராமணியிடமிருந்து (மனைவியிடமிருந்து) விலைக்குப் பெற்ற **"சிவகாமசுந்தரி விளாகம் என்று பேர் உடைய ஊர்ப்படி நிலம்"** நாலுமாவும் என்று நிலத்தின் பெயரைச் சிதம்பரம் கல்வெட்டொன்று[38] கூறுகிறது.

பண்ணங்ககுடிச்சேரி ஆன பரகேசரிநல்லூர் திருக்களாஞ்செடி உடையார் திருநாமத்துக்காணி ஆக விற்றுக்கொடுத்த நிலம், இவ்வூர் மேல்பிடாகை கங்கை கொண்ட சோழப்பேரிளமை நாட்டு இளநாங்கூரான சுந்தரசோழப் பாண்டிய நல்லூர் கொள்ளம் பள்ளம் என்னும் பேருடைய நிலம்[39], தனியூர் பெரும்பற்றப்புலியூர் ஆலச்சன் பொன்னம்பலக் கூத்தனால் விற்றுத்தரப் பெற்றிருக்கிறது.

சிதம்பரம் நடராசர் கோயில் மூன்றாம் பிரகாரத்து மேற்குச் சுவரின் நுழைவாயில் இடப்பக்கம் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டில்[40] **"நெற்குப்பை என்று பேருடைய நிலமும்", "மாம்பட்டு என்று**

38 S I I Vol XII, No 151

39 Ibid, No 166

40 Ibid, No 172

பேருடைய நிலமும்" குறிப்பிடப்பட்டுள்ளன. அதே சுவற்றில் உள்ள மற்றொரு கல்வெட்டில்[41] **"நாழிகை வட்டிலென்று பேருடைய நிலமாய் சோழகோன் திருஓடை என்னும் பேரால் செய்த ஊர்ப்படி (நிலம்)"** குறிக்கப் பெற்றிருக்கிறது.

சிதம்பரம் நடராசர் கோயில் மஹிஷாசுரமர்த்தனி சந்நிதியின் கிழக்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் கல்வெட்டில்[42] "திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார் கோயில் அந்தப்புரப் பெருமாள் திருவாசல் வடபக்கத்து எழுந்தருளியிருக்கும் அண்டா பரணதேவர்க்குப் பெரும் பற்றப்புலியூர் வராக்கியன் தேவன் (வைராக்கியன் தேவன்) திருச்சிற்றம்பல முடையான் ஸர்வேஸ்வரன் உடைய பிள்ளை **திருப்பள்ளித்தாம திருநந்தவனமும், திருநந்தவனப்புறமுமாக** இவ்வூர் கீழ்பிடாகை (கீழ்ச்சிற்றூர்) கிடாரங்கொண்ட சோழப் பேரிளமை நாட்டுக் குமார மங்கலமான தில்லை அழக நல்லூரில் விளை நிலமும், வடதலையில் நத்தமும், தென்தலையில் குளமுங் கரையும் உள்ப்பட **"வடவனாறு என்று பேருடைய நிலம்"** நாலுமாக்காணி கொடை வழங்கப்பெற்றது கூறப்பெற்றுள்ளது.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், முன்னூர் ஆடவல்லேஸ்வரர் கோயில் தெற்குச்சுவர் உட்பக்கத்தில் பொறிக்கப்பெற்றுள்ள ஒரு கல்வெட்டில்[43], முஞ்ஞூரரான இராசநாராயணச் சதுர்வேதிமங்கலத்து உடையார் ஆடவல்ல நாயனார்க்கு, அம்பருடையான் மாதேவன் என்பான், ஐந்து நிலை குத்தி விளக்குக்கு ஈடாகப் பத்து திருவிளக்கு அந்தியம்பொழுது துடங்கி, அர்த்த சாமம் முடிய எரிப்பதற்காக அவர் பெற்று கொட்டைய்ளித்த நிலங்களில் **"தாழம்பட்டி என்று பேர் கூவப்பட்ட நிலம் குழி நூற்றி ஐம்பது"** என்று குறிக்கப்பெற்றுள்ளது.

"ஆயிரவன் செறு" என்று ஒரு நிலப் பெயர் காணப்படுகிறது. (S.I.I. Vol. XII, No.141)

41 Ibid, No 173

42 Ibid, No 175

43. Ibid, No 176

**வதிகள், வாய்க்கால்கள் மற்றும் ஆறுகள்**

மேற்கூறப்பெற்ற நிலங்கள் பேசப்படுகிறபோதெல்லாம் அந்நிலங்கள் எந்த இடங்களில், எந்தெந்த வதி, வாய்க்கால் களுக்கிடையில் எத்தனையாவது சதிரத்தில், எத்தனையாவது கண்ணாற்றின் அமைந்திருந்தன என்பது மிக விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. முதலில் வதி கூறப்பெற்று, பின்னர் வாய்க்கால் பேசப்படுகிறது. பெரும்பாலும் வதிகளின் கிழக்கிலோ அல்லது மேற்கிலோதான் நிலங்கள் அமைந்திருந் திருந்திருக் கின்றன. அதேபோன்று வாய்க்கால்களின் தெற்கிலோ அல்லது வடக்கிலோதான் நிலங்கள் இடம்பெற்றிருக்கின்றன. கண்ணாறுகள் வதிகளிலும் வாய்க்கால்களிலும் அமைந்திருந் திருக்கின்றன.

நிலங்கள் விற்பனை செய்யப்பட்டபொழுது, அந்நிலங்களின் அமைவிடங்கள் மிகச் சிறப்பாக விவரிக்கப்பட்டிருக்கின்றன. "நில விலைப் பிரமாணத் தீட்டுக் குடுத்த பரிசாவது, இன்னாயனாற்கு திருநாமத்துக்காணியாக, இற்றைநாளால் விற்றுக்குடுத்த நிலம், இவ்வூர் மேல் பிடாகை கங்கைகொண்ட சோழ பேரிளமை நாட்டு இளநாங்கூரான சுந்தர சோழ பாண்டிய நல்லூர்ப்பால் ஸ்ரீபஞ்சவன் மாதேவி வதிக்கு மேற்கு, சோளேந்திர சிங்கன் வாய்க்காலுக்குத் தெற்கு மூன்றாங் கண்ணாற்று முதல்ச் சதிரத்து என்னுடைய கொள்ளம் பள்ளம் என்னும் பேருடைய நிலத்துக்கு எல்லை" என்று வதி, வாய்க்கால், கண்ணாறு, சதிரம் ஆகியவை தெளிவாகக் குறிக்கப்படுகின்றன.[44]

மேலே கண்டது போன்று, காடவர் காலக் கல்வெட்டுக்கள், அக்காலத்தில் நிலங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்காகவும், நிலங்களிலிருந்து நீர் வடிவதற்காகவும் ஏற்படுத்தப்பெற்றிருந்த பல வசதிகளையும், வாய்க்கால்களையும் அக்காலத்தில் வெட்டப் பெற்றிருந்த சில ஆறுகளையும் தெரிவிக்கின்றன. அவற்றில் சில கீழே தரப்பெற்றுள்ளன.

44 S I I Vol XII, No 166

| வ. எண். | ஊர் | வதி | வாய்க்கால் | ஆறு |
|---|---|---|---|---|
| 1. | திருவெண்ணை நல்லூர் (S I I Vol XII, No.135) | வானவன் மாதேவி வதி (S I.I. Vol. XII, No 135) | அரசூர் கால் (S I.I Vol XII, No.135) | ——— |
| | | | ஊறு கால் ( Ibid) | ——— |
| 2. | திருவெண்ணை நல்லூர் (Ibid, No 141 ) | அருமொழிதேவி வதி (Ibid, No 141 ) | கங்கைகொண்ட சோழ வாய்க்கால் (Ibid, No 141 ) | ——— |
| 3. | பார்வதி நல்லூர் (Ibid, No.149 ) | பாலசுந்தர சோழவதி (Ibid, No 149 ) | சோளேந்திர ஸிம்ஹ வாய்க்கால் (Ibid, No.149 ) | ——— |
| 4. | வீரநாராயணச் சதுர்பேதி மங்கலத்து முகையூர் (Ibid, No.153 ) | சந்திரசேகர வதி (Ibid, No.153 ) | இராசாதிராச வாய்க்கால் (Ibid, No.153.) | ——— |

| வ. எண் | ஊர் | வதி | வாய்க்கால் | ஆறு |
|---|---|---|---|---|
| 5. | பெரும்பற்றிப்புலியூர்ப் பிடாகை கடவாய்ச் சேரியான தில்லை நாயக நல்லூர் (S.I.I Vol XII, No 154) | சந்திரசோழ வதி (Ibid, No.154 ) | சோழகுல சுந்தரளேந்திர வாய்க்கால் (Ibid, No 154.) | ——— |
| 6. | விரு....பாக்கம் (Ibid No.157 ) | வீரநாராயண வதி (Ibid, No 157 ) | கெருடன் வாய்க்கால் (Ibid, No 157 ) | ——— |
| 7. | விரு....பாக்கம் (Ibid, No.157.) | ஸ்ரீதர வதி (Ibid, No 157 ) | சந்திரசேகர வாய்க்கால் (Ibid, No 157.) | ——— |
| 8. | பளஎிப்படையான விக்கிரம சோழ நல்லூர் (Ibid, No.159 ) | சுந்தரசோழ வதி (Ibid, No 159.) | கண்டராதித்த வாய்க்கால் (Ibid, No 159.) | ——— |

| வ. எண் | ஊர் | வதி | வாய்க்கால் | ஆறு |
|---|---|---|---|---|
| 9. | பள்ளிப்படைப்பன் விக்கிரம சோழ நல்லூர் (Ibid, No 159 ) | சுந்தரசோழ வதி (Ibid, No 159.) | இராஜராஜ வாய்க்கால் (Ibid, No 160 ) | ——— |
| 10. | ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பிடாகை அளக்குடி (Ibid, No 160 ) | அம்பல வதி (Ibid, No 160.) | ஜயங்கொண்ட சோழ வாய்க்கால் (Ibid, No 160 ) | ——— |
| 11. | ——— | ——— | ——— | பெண்ணை ஆறு (Ibid, No.163,64.) |
| 12. | இராஜாங்கூரான சுந்தரசோழப்பாண்டிய நல்லூர் (Ibid, No 166 ) | ஸ்ரீபஞ்சவன் வதி (Ibid, No 166.) | சோளேந்திர ஸிவுரன் வாய்க்கால் (Ibid, No.166.) | சிபராந்தகப் பேராறு (Ibid, No 166 ) |

| வ. எண் | ஊர் | வதி | வாய்க்கால் | ஆறு |
|---|---|---|---|---|
| 13. | பள்ளிப்படையான விக்கிரம சோழ நல்லூர் (Ibid, No 159.) | பஞ்சவன்மாதேவி வதியினின்று நீர்பாய்கைக்கு வடக்கில் (Ibid, No.166, வரி, 32) | — | — |
| 14. | செஞ்சி (Ibid, No 170.) | மதுராந்தக வதி (Ibid, No 166 ) | — | — |
| 15. | கண்ணம்பாக்கம் (Ibid, No 170 ) | ஸ்ரீபூமி வதி (Ibid, No.170.) | திருநாராயண வாய்க்கால் (Ibid, No 170 ) | — |
| 16. | எருக்காட்டுக்சேரி யான ஜயங்கொண்ட சோழ நல்லூர் (Ibid, No.171.) | ஸ்ரீதிருச்சிற்றம்பல வதி (Ibid, No 171.) | ராஜராஜ வாய்க்கால் (Ibid, No 171.) | — |

| வ. எண் | ஊர் | வதி | வாய்க்கால் | ஆறு |
|---|---|---|---|---|
| 17. | — | — | — | மதுராந்தகப் பேராறு (Ibid, No 172 ) |
| 18. | — | — | — | சிபராந்தகப் பேராறு (Ibid, No 172.) |
| 19. | மிதனக்குடியான தான வினோத நல்லூர் (Ibid, No.173 ) | ஸ்ரீதிருச்சிற்றம்பல வதி (Ibid, No 173 ) | கண்டரா தித்த வாய்க்கால் (Ibid, No 173 ) | நிவாவாறு (Ibid, No.173 ) |
| 20. | அச்சேரிச்சாத்தங் குடியான மஹிபால குல நல்லூர் (Ibid, No.173.) | ஸ்ரீசுந்தர சோழ வதி (Ibid, No.173.) | சோழகுல சுந்தரி வாய்க்கால் (Ibid, No.173.) | — |

| வ. எண் | ஊர் | வதி | வாய்க்கால் | ஆறு |
|---|---|---|---|---|
| 21. | ஆலம்பாடியான குலோத்துங்கசோழ நல்லூர்ப் பிடாகை வீரநாராயணநல்லூர் (Ibid, No 174.) | வனவன்மாதேவி வதி (Ibid, No 174 ) | மும்முடி சோழ வாய்க்கால் (Ibid, No 174 ) | வெள்ளாறு (Ibid, No.174 ) |
| 22. | ——— | பஞ்சவன் மாதேவி வதி (Ibid, No 174.) | மும்முடி சோழ வாய்க்கால் (Ibid, No 174 ) | ——— |
| 23. | குமாரமங்கலமான தில்லை அழகு நல்லூர் (Ibid, No 175.) | ஸ்ரீஜனநாத வதி (Ibid, No 175 ) | சோழகுல சுந்தரி வாய்க்கால் (Ibid, No 175 ) | வடவனாறு (Ibid, No 175 ) |

| வ. எண் | ஊர் | வதி | வாய்க்கால் | ஆறு |
|---|---|---|---|---|
| 24. | முஞ்ஞூரான இராச நாராயணச் சருப்பேதி மங்கலம் (Ibid, No.176 ) | த்ரைலோக்கிய மாதேவி வதி (Ibid, No 176.) | அபிமானமேரு வாய்க்கால் (Ibid, No.176 ) | ——— |
| 25. | ——— | ——— | ——— | ஈஞ்சலாறு செய்யாறு (S.I.I. Vol. XII, No.119) |
| 26. | ——— | ——— | ——— | கழுமலவாய் ஆறு (Ibid, No 132.) |
| 27. | ——— | ——— | ——— | புதுக்கொள்ளிட ஆறு (Ibid, No.149.) |

**நீர்பாய்ச்சும் முறை**

வதி, வாய்க்கால், ஆறு ஆகியவற்றிலிருந்து நிலங்களுக்கு நீர் பாய்ச்சப் பெற்ற செய்தி விரிவாகச் சிதம்பரம் கல்வெட்டுக் களால்தான் தெரியவருகின்றன. மேலும் அவ்வாறு நீரை வயல்களுக்குப் பாய்ச்சுகையில் எந்தெந்த முறையில் நீர்பாய்ச்சப் பெற்றது என்பதும், என்னென்ன நடைமுறைகள் பின்பற்றப்பட்டன வென்பதும், சிதம்பரத்துக்கு அருகிலுள்ள சிங்காரத்தோப்பு பீமேஸ்வரர் கோயில் கல்வெட்டால்[45] உணர முடிகிறது.

தனியூர் பெரும்பற்றப்புலியூர் (சிதம்பரம்) ஆச்சன் பொன்னம்பலக் கூத்தன் நிருத்தரசன் என்பான், பெரும்பற்றப் புலியூர் பிடாகை பண்ணங்குடிச் சேரியான பரகேசரிநல்லூரில் எழுந்தருளியிருக்கும் நாயனார் திருக்களாஞ்செரி உடையார்க்குத் திருநாமத்துக்காணியாக ஒன்பது மா நிலம் விற்றுக் கொடுத்தபோது, "மேலை ஓடையில் ஒருவாய்த்துரவும் (பெருங்கிணறு), ஏத்தமும், ஏத்தநிலை சிக்குழியும், முன்னூரன்றி, பின்னூன்றியும், இந்த ஏத்தமே துடங்கி கிழக்கு நோக்கில் கோலகலத்தால் இறைச்சு கொடுபோகிற வாய்க்காலும் ஆக இத்தனையும் விற்றுக்குடுத்து கொள்வதான எம்மிலிசைந்த விலைப் பொருள் அன்றாடு நற்காசு 5000 இக்காசு ஐயாயிரமும் கொண்டேன்" என்று விலைப் பிரமாணத் தீட்டு எழுதித் தந்திருக்கிறான்.

மேற்கூறப்பெற்றதிலிருந்து சில நிலங்கள் பெருங் கிணற்றிலிருந்து ஏற்றம் மூலம் நீர் இறைத்துப் பாய்ச்சப் பெற்றிருக் கின்றன என்பது உணர முடிகிறது.

மேலே கண்டுள்ள நிலத்தை விற்றுத் தருகையில் நிலத்தை விற்பவரான ஆலச்சன் பொன்னம்பலக் கூத்தன் நிருத்தராசன் (ஆடல் வல்லான்) உறுதியளித்ததாகக் காணப்பெறும் செய்தி காடவர்கால ஆட்சியில் இருந்த நடைமுறையைத் தெளிவுப் படுத்துவதாக உள்ளது.

**1.** இன்னிலத்துக்கு மேற்படி பாயும் நீர் பாயவும், வாருநீர் வாரவும், இறைக்கு நீர் இறைக்கவும் பெறுவதாகவும்;

45 S.I I Vol. XII, No.166

2. இன்னிலத்துக்கு வந்த தடையும் இடையூறும் தீர்த்து ஆழ்விப்பதற்கு என் வாழ்வே ஆழ்ச்சி இறைப்புணை ஆவதாகவும்;

3. இதுக்கு இதுவே விலை ஆவணமும் பொருட் மா அறுதிப் பொருள் சிலவு ஓலையும் இதுவே ஆவதாகவும்;

4. இதுவல்லது வேறு பொருட் மா அறுதி பொருள் சிலவு ஓலை காட்டக் கடவதல்லாதாகவும்;

5. இப்படி ஸம்மதித்து முற்குறித்த காசு 5000மும் முற்குறித்தபடியே நேராகக் கைக்கொண்டு, முற்குறித்த நிலம் ஒன்பது மாவும்;

6. முற்குறித்த உடைமைகளும், உரிமைகளும் மூல ஓலைப்படிகளாலும் பொத்தகப்படியாலும் உள்ள உடைமைகளும் உரிமைகளும்

7. ஆக இத்தனையையும்" விற்றுத்தந்திருப்பது நில விற்பனை நேரத்தில் என்ன நடைமுறைகளை அக்கால மக்கள் கடைப்பிடித்தனர் என்பதைப் புலப்படுத்துகிறது.

## திருந்தவனம், திருத்தோப்பு, தோட்டம்

பல்லவர், சோழர் ஆட்சிக்காலங்களில் கூட, காடவர் காலத்தில் அமைக்கப்பெற்ற திருநந்தவனங்கள், திருத்தோப்புகள், தோட்டங்கள் போன்று ஒரு பகுதியில் மிகுந்த அளவில் ஏற்படுத்தப்பெற்றதாக அறிய இயலவில்லை.

திருநந்தவனங்களின் பட்டியல்:

| | | |
|---|---|---|
| 1. திருநிலை அழகியான் | திருநந்தவனம் | S.I.I. Vol. XII, No.149. |
| 2. தொடர்ந்து அடிமை கொண்டான் | திருநந்தவனம் | S.I.I. Vol. XII, No 174. |
| 3. மருந்தன் | திருநந்தவனம் | S I.I. Vol. XII, No.187. |
| 4. செம்பூதி கிழவன் | திருநந்தவனம் | S.I.I. Vol XII, No.163. |
| 5. வழியடிமை கொண்டான் | திருநந்தவனம் | S.I.I. Vol. XII, No.209. |
| 6. ராஜஸூர்யன் கழுகு | திருநந்தவனம் | S.I.I. Vol. XII, No.154. |
| 7. கயிலாய தேவன் | திருநந்தவனம் | S.I.I. Vol. XII, No.117. |

| | | |
|---|---|---|
| 8. திருச்சிற்றம்பலமுடையான் | திருநந்தவனம் | S.I.I. Vol. XII, No.216. |
| 9. வீரவேதியர் | திருநந்தவனம் | S.I.I. Vol. XII, No.226. |
| 10. சொக்கச்சீயன் கமுகு | திருநந்தவனம் | S.I.I. Vol. XII, No.215. |

## திருநந்தவனக்குடிகள்

திருநந்தவனங்களை உருவாக்கிப் பராமரிக்கும் **திருநந்தவனக்குடிகள்** பட்டியல்:

1. ஆளப்பிறந்தான் தெங்கு திருநந்தவனக்குடிகள் S.I I. Vol. XII, No.157.

## திருநந்தவனப்புறம்

திருநந்தவனங்களைப் பராமரிக்கும் திருநந்தவனக்குடிகளுக்கு அளிக்கப்பெறும் நிலக்கொடை **திருநந்தவனப்புறம்** என்று அழைக்கப்பெறும். S I I. Vol. XII, No.175.

## திருத்தோப்புப் பட்டியல்

கோயில் வழிபாட்டுக்கு வேண்டிய கமுகு, வாழை, தென்னை, பலா போன்றவற்றை வைத்து வளர்க்கும் இடத்துக்குத் தோப்பு என்று பெயர்.

| | |
|---|---|
| 1. குலோத்துங்கச் சோழன் திருத்தோப்பு | S I.I. Vol. XII, No.173. |
| | S.I.I. Vol. XII, No.245. |
| 2. கோப்பெருஞ்சிங்கன் தோப்பு | S.I.I. Vol. XII, No.206 |
| 3. ஆனைக்கு அரசு வழங்கும் பெருமாள் திருத்தோப்பு | S.I.I. Vol. XII, No.206. |
| 4. அழகிய பல்லவன் தோப்பு (கமுகு நிலம்) | S.I I. Vol XII, No.121. |

## திருத்தோப்புக்குடிகள்

மேற்குறிப்பிடப்பெற்ற தோப்புகள் போன்றவற்றை நன்கு பாதுகாத்து வருவதற்காகச் சில பணியாளர்கள் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். அவர்கள் **திருத்தோப்புக்குடிகள்** என்று அழைக்கப் பெற்றிருக்கின்றனர்.

1. திருத்தோப்புக்குடிகள் S.I.I. Vol. XII, No.209.

திருநந்தவனம், திருத்தோப்பு ஆகியவை மட்டுமல்லாது 'தோட்டம்' என்னும் பிரிவும் இருந்திருப்பது தெரியவருகிறது.

தோட்டம்

1. திருமலையழகியானான வீரர்கள்
   வீரப்பல்லவரையன் தோட்டம் S.I.I. Vol XII, No.189.

2. இவன் தம்பி சோழ நாயனான
   பாரரைசநாயன் தோட்டம் S I I Vol XII, No.189.

காடவ மன்னர்கள் தமிழ் மொழியைப் பேணுவதில் காட்டிய அளப்பரிய ஆர்வம் போன்றே கோயில் வழிபாட்டிலும் தமிழர் போற்றி வளர்த்த ஆகம முறையையே பின்பற்றியிருப்பர் போன்று தெரிகிறது. ஏனெனில் ஆகம முறையில்தான் 'பூ' வழிபாட்டுக்கு முக்கியத்துவம் தரப்பெற்றிருக்கிறது. இம்மன்னர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பெற்ற திருநந்தவனங்கள், திருத்தோப்புக்கள், தோட்டங்கள் ஆகியவற்றைப் பார்க்கையில், இவர்கள் காலத்தில் கோயில்களில் 'பூ' வழிபாட்டுக்குத்தான் பெரும் முக்கியத்துவம் தரப்பெற்றிருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது.

## நிலவிலைப்ரமாண இசைவுத் தீட்டு

கோயில்களில் வழிபாடுகள் செய்வதற்கும், மேற்கூறப்பெற்ற திருநந்நவனங்கள், திருத்தோப்புக்கள், தோட்டங்கள் அமைதல், நகரத்துச் சாலியர்க்குக்கு நத்தம் அமைதல்[45A], பிராமணர்களுக்கு நத்தம்[46] ஏற்படுத்துதல் போன்றவற்றுக்கு நிலங்கள் வாங்குவதும், கொடையளிப்பதுமாகப் பல பரிவர்த்தனைகள் நடைபெற்றிருப்பதை காடவர் காலக் கல்வெட்டுக்கள் வெளிப்படுத்துகின்றன.

நிலங்களை வாங்குபவர் நேரிடையாகவும்[47] வேறொருவர் பெயரிலும்[48] ஒரு இடத்துக்குப் பதிலாக வேறொரு இடத்தையும்[49],

45A S I I Vol XII, No 154
46 Ibid
47 S.I.I. Vol XII, No.153.
48 Ibid, No 173.
49. Ibid, No 159

ஒரு நிலத்துக்குப் பதிலாக வேறொரு நிலத்தையும் பெருவிலை (ஏலம்) மூலமாகவும்[50], இறைமுறையாலும்[51] வாங்கித் தாம் விரும்பும் செயல்களை நிறைவேற்றியிருக்கின்றனர். அரசுக்குச் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்தாது வெளியூர்களுக்குத் தப்பிச் சென்றுவிடுபவர்களின் நிலங்களையும் விற்பனை செய்து வரி செலுத்தியயிருக்கின்றனர்.[52]

## நேரிடை நிலப்பரிமாற்றம்

ஒருவர் தம் பேராலேயே நில வாங்குதலையோ விற்பனை செய்தலையோ நேரிடைப் பரிமாற்றம் என்று கொள்ளலாம்.

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் கோயில், சுந்தரேஸ்வரர் சந்நிதியின் தெற்குப் பக்கச் சுவரில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டு,[53]

> "ராசாதிராச வளநாட்டுத் தனியூர் பெரும்பற்றப் புலியூர் உடையார் திருப்புலி(சுவரமுடையார்) கோயில் ஆதிசண்டேசுவரர் திருவருளால் இக்கோயில் ஸ்ரீ மாஹேசுவரர்க் கண்காணி செய்வார்களும், தேவர்கன்மி, கோயில் கணக்கர் உள்ளிட்டாரோம் நிலவிலைப் பிரமாண இசைவுதீட்டு. வடகரை (கொள்ளிடத்தின் வடகரை) விருதராசபயங்கர வளநாட்டுத் தனியூர் திருநாரையூர் உடையார் ஸ்ரீமூலத்தானமுடையார் கோயில் ஆதிசண்டேசுவர தேவர் திருவருளால் இக்கோயில் ஸ்ரீமாஹேசுவரக் கண்காணி செய்வார்களுக்கும், ஸ்ரீகாரியஞ் செய்வார்களுக்கும், தேவர்கம்மிக் கோயில் கணக்கர் உள்ளிட்டார்க்கும் நில விலைப்ரமாணத் தீட்டுக் கொடுத்த பரிசாவது"

என்று தெரிவித்து; திருநாரையூர் உடையார் ஸ்ரீமூலத்தானமுடையார் கோயில், ஆதிசண்டேசுவர தேவர்கன்மிகளுக்கு உடையார்

50. Ibid, No 190
51 Ibid, No 222
52 Ibid, No 258
53 S I.I Vol XII, No.153

திருப்புலீசுவரமுடையார் கோயில் ஆதிசண்டேசுவர தேவர் கன்மிகள் அறுபது மா நிலத்தை விற்றுத் தந்திருக்கின்றனர் என்பதைப் புலப்படுத்துகிறது.

**தலைமாறு**

> "ஸ்ரீமாஹேஸ்வர வினாயகப் பிள்ளையார் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் சிவப்பிராமணர் குடியிருப்பு நத்தமும் நிலம் முக்காணி நீக்கி நிலம் நாலே ஆறுமாவின் பலபணி நிமந்தக்காறர்க்கு (பல பணிகளைச் செய்வார்க்கு) நிலமாய் மாறிக்கூட்டின நிலம் ஒன்றே நாலுமா முக்காணி அரைக்காணியும் முதலழிந்த கமுகு திருநந்தவனமும் சபைப்பொதுவும் பலரும் குடியிருப்பு நந்தமான நிலத்து ராஜாக்கள் தம்பிரான் திருவீதியில் தெற்கில் திருவீதியில் ஆளுடைய பிள்ளையார் மனை இறைகொண்டு வருகிற மனைகளாலும், நீர்நிலையாலும் மாறிக்காட்டின நிலம் மூன்றே ஒருமா அரையே அரைக்காணியும ஆக நிலம் நாலே ஆறுமா, எட்டாவது முதல் நகரத்துக்குக் (சாலியர்) குடியிருப்பு நத்தமாக காணியாகப் பெறவும். பலபணி நிமந்தக்காறர்க்கு ஜீவிதம் மாறிக்கூட்டின நிலத்துக்குத் தலைமாறு இவர்களுக்குச் சேர்வான இடங்களிலே ஜீவிதமடைத்துக் கொடுக்கவும்"

என்று ஒரு இடத்துக்குப் பதிலாக வேறோர் இடம் அளிக்கப்பெற்ற செய்தியைத் தெரிவிக்கிறது சிதம்பரம் கல்வெட்டொன்று.[54] இதில் பலபணி நிமந்தக்கரர் இருந்த இடத்தில் நகரத்துச் சாலியர்க்குக் குடியிருப்பு நத்தம் ஏற்படுத்தும் பொருட்டு, பலபணி நிமந்தக் காரர்களுக்கு அவர்களுக்கு விருப்பமான வேறொரு இடத்தை அளித்தது பற்றி அறிய முடிகிறது.

**சண்டேஸ்வரப் பெருவிலை, தலைமாறு, ப்ரதிக்ஷேத்ரம்**

சிதம்பரம் நடராசர் கோயில் மூன்றாம் பிரகாரத்தின் வடக்குப் பக்கச் சுவரில் வெட்டப்பெற்றுள்ள ஒரு கல்வெட்டு,[55]

54 S I I Vol XII, No 154.

55 S I I Vol. XII, No 159

நாயகர்(நடராசர்) திருக்கடலுக்குச் செல்லும் **விக்கிரமசோழன் தெங்குத் திருவீதியின்** தெற்குப் பக்கத்தில் எழுந்தருளிவித்த **பிடாரி திருச்சிற்றம்பல** மாகாளி ஸ்ரீகோயிலும் திருமுற்றமும், திருமடவிளாகத்தில் உள்ள பள்ளிப்படையான விக்ரம சோழ நல்லூர், **நிலவரவு கூட்டப் பெருமக்களும், கண்காணிக்குக் கடவாரும்** அளந்து கண்ட குழி நூற்று நாற்பதே முக்காலே (140¾) அரைக்காணிக்குத் **தலைமாறு** (மாற்றாக) வாரணவாசி மஹாதேவர் கோயில் தானத்தாரிடமிருந்து, திருச்சிற்றம்பல மாகாளி **சண்டேஸ்வரப் பெருவிலை** கொண்ட குழி 142, ப்ரதிக்ஷேத்ரமாக **(பதில் நிலமாக)** வாங்கப்பெற்றிருக்கிறது. இந்நிலத்தைச் சோழ கோன் கைக்கொண்டு, தேவர் திருமேனிக்கு (தம் அரசனான கோப்பெருஞ்சிங்கன் உடல்நலம் பெற்று விளங்க,) பெரும்பற்றப்புலியூர் ஆடவல்லானுக்குக் கொடையளித்திருப்பது இக்கல்வெட்டால் உணர முடிகிறது.

இக்கல்வெட்டின் சிறப்புச் செய்தியாவது ஒரு நிலத்துக்குப் பதில் வேறொரு நிலத்தைத் தலைமாறு (மாற்றல்) முறையில் வாங்குவதும், அவ்வாறு வாங்கப்பெற்ற நிலம் **'ப்ரதிக்ஷேத்ரம்'** என்று அழைக்கப்பெறுவதும், அவ்வாறு வாங்கும் முறை **சண்டேஸ்வரப் பெருவிலை** என்ற பெயரில் அழைக்கப் பெறுவதும் ஆகும்.

## அந்நிய நாமத்து விலை

**அந்நிய நாமத்து விலை** என்பது, ஒருவர் ஒரு பொருளை வாங்குகையில் தம் பெயரில் நேரிடையாக வாங்காமல், பிறிதொருவர் பெயரில் (Power of Attorney) வாங்குவதற்கு **"அந்நிய நாமத்து விலை"** என்று கல்வெட்டு[56] கூறுகிறது. இம்முறை "அந்நிய நாமகரண விலை" என்றும்[57] கல்வெட்டுக்களில் வழங்கப் பெற்றிருக்கிறது.

"தேவர் திருமேனிக்கு நன்றாகத் திருப் பூ மண்டபத்துக்கு முதலாகத் திருப்பள்ளித்தாமம் எண்ண திருச்செங்கழுநீர்....... திருஒடை செய்ய பெரும்பற்றப் புலியூர் பிடாகைகளில் **"அன்னிய**

56. S.I.I. Vol. XII, No.173. 57 S.I.I Vol. VI, No 356

நாமத்து விலை" கொண்ட கிடாரங்கொண்ட (சோழப்) பேரிளமை நாட்டு "மிதுனக் குடியான தானவினோதநல்லூரில்" என்று கல்வெட்டு கூறிச் செல்கிறது. மேற்கூறப்பெற்றுள்ள திருப்பள்ளித் தாமக் கொடையை, தேவர் திருமேனி நன்றாக இருப்பதற்குத் தேவர் முதலிகளில் பெருமாள் பிள்ளையான சோழ கோனார் செய்திருக்கிறார்.

## இறைமுறை ப்ரமாண இசைவுத்தீட்டு

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் திருக்கோடிகா, திருக்கோடீஸ்வரர் கோயில், முதல் பிரகாரக் கிழக்குச் சுவரில் காணப்பெறும் கல்வெட்டில், இந்நூல் ஆசிரியரால் இதுநாள் வரை அறியப்பெறாத, ஒரு ப்ரமாணம் பேசப்பட்டிருக்கிறது. இப் ப்ரமாணம், "இறை(வரி) முறை ப்ரமாணம்" ஆகும். இப் ப்ரமாணத்தின் மூலம் ஒரு நிலத்தின் வரி அறவே நீக்கப்பெற்று, (இறையிலி செய்யப்பெற்று) முறைப்படுத்தப்பட்டிருப்பது தெரியவருகிறது. அவ்வாறு வரிநீக்கம் செய்யப்பட்டு வெளியிடப் பெற்ற ப்ரமாணம் "இறை முறைப் ப்ரமாண இசைவுத்தீட்டு" என்று இக் கல்வெட்டில் எழுதப் பெற்றுள்ளது.

> "கங்கைகொண்ட சோழபுரத்து இருக்கும் மனுவூருடையார் வரந்தரும் கூத்தப்பெருமாளுக்கு இன்னாயனார் தேவதானம் திருக்கோடிகாவில் தியாக வினோத விழுப்பரையர் காணியான அறுபது (கல) வரிசையும், அந்தராயமும் இறுக்கும் கொல்லையில், இவர் பக்கல் விலைகொண்ட நிலம் அரைமாவும், இவர் தங்கள் குருக்கள் வரம்தரும் கூத்தப் பெருமாளுக்கு தானமாகக் குடுத்த நிலம் அரைமாவும் ஆக நிலம் ஒரு மாவினால் குழி நூறும் இக்குழி நூறும் இப்படியால் கொண்டு குருஸ்தானமாகத் திருப்பெருந்துறை ஆளுடையாரைத் தேவர் ஸ்வாமிதேவர் திருமுகமும் கொண்டு வந்து இன்னாயனார் கோயில் ஸ்தானத்தார்க்கும், இவ்வூர்த்திருக்காகள்ளி நியாயத்தார்க்கும் காட்டி இவர்கள்ஒடும் கூடத் திருப்பெருந்துறை ஆளுடையாரை ப்ரதிஷ்டித்தமையில் இன்னிலக்குழி நூற்றுக்கும்

> நெல்லு அறுகலத்துக்கும் இன்னிலக்குழி நூறும் ஸ்ரீகோயிலும் திருமுற்றமும் ஆகையில் இன்னிலத்தால் நெல்லு இறையிலி வேண்டுகையில், இந்நெல்லு ஆறு கலத்துக்கும் இன்னாயனார் தேவதானம் கண்ணமங்கலம் நூற்று அறுபதிந் கலவரிசை இறுக்கும் நிலத்து, தேவர்க்கு இறை முறையால் வரும் நெல்லு நீக்கி, இறைமிகுதி வரும் நெல்லு அறுகலத்துக்கும் பற்றி இன்நிலக்குழி நூற்றுக்குக் கொண்டு விட்ட நிலக்குழி இருநூற்றினால் நி........ லுக்கு உடலாகக் கொண்டு இக்கொல்லை நிலக்குழி நூறும் இவர் எழுந்தருளிவித்த திருப்பெருந்துறை ஆளுடையார் இறையிலியாக அனுபவிக்கக் கடவராகவும், இக்கொல்லை (நிலம்)...... னால் இறுக்கும் நெல்லு அறுகலத்துக்கு இன்னாயனார் தேவதானம் கண்ணமங்கலத்துக் கொண்டு விட்ட குழி இருநூற்றினால் நிலம் இரண்டுமாவும் திருநாமத்துக் காணியாக இன்னாயனார் அனுபவிக்கக் கடவராகவும் சம்மதித்து இறைமுறைமை ப்ரமாணம் பண்ணினமையில்"

என்று கல்வெட்டு தொடர்ந்து[58] செல்கிறது

## கல்வெட்டின் பொருள்

திருக்கோடிகாவில் இருந்த தியாக விநோத விழுப்பரையார் என்பாரிடம் விலை கொடுத்து பெற்ற அரைமா நிலமும், இவர் தம் குருவுக்குத் தானமாகக் குடுத்த அரைமா நிலமும் இறுக்க வேண்டிய இறையை இறையிலியாக ஆக்கித் தரும்படி, மனுவூருடையார் வரந்தரும் கூத்தப் பெருமாள், திருக்கோடிகா தேவகன்மிகளிடம் விண்ணப்பித்ததால், இவர் இறுக்கவேண்டிய இறையான ஆறு கலத்துக்குப் பதிலாக கண்ணமங்கலத்திலிருந்து வரும் இறையில் ஈடு செய்து, கூத்தப் பெருமாள் விண்ணப்பித்த வண்ணமே இறையிலி செய்து திருக்கோடிகா தேவகன்மிகள் இறை முறைமை செய்ததை இப்பிரமாணம் விளக்குகிறது.

58 S I I Vol XII, No 222

## நிலவரி கொடுக்க முடியாது ஓடிப்போதல்

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருவலஞ்சுழி கபர்தீசுவரர் கோயில் முன்பாக உள்ள மண்டபத்தின் வடக்குப் பக்கச் சுவர் அடிப்பாகத்தில் பொறிக்கப்பெற்றுள்ள இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தியக் கல்வெட்டு[59] நிலவரி செலுத்த முடியாது ஓடிப்போனவர்களின் நிலம், வீட்டுமனை ஆகியவைகளை விற்று அவ்வூர்ச் சபையினர் வரியை அரசுக்குச் செலுத்தியதை விரிவாக எடுத்துரைக்கிறது.

திருவலஞ்சுழியின் பிடாகையான (சிற்றூரான), விக்கிரமசோழ வளநாட்டு.......... கொற்றங்குடியான குலோத்துங்கச் சோழ நல்லூரில் காணி உடைய கோமடம் திருநட்டமாடி பட்டன், அவர் மகன் யஞாபட்டன், அவன் தம்பி சுந்தரத் தோளுடையான், இவர்கள் தாய் வண்டுவார்குழலிச்சானியும் அரசுக்கு நிலவரிச் செலுத்தாமல் காலம் கடத்தியபோது, தாங்கள் திருவலஞ்சுழி உடைய நாயனாரிடத்திருந்தும், வெள்ளைப் பிள்ளையாரிடமிருந்தும், அங்கு தங்கியிருந்த மலை மண்டலத்து (சேர நாடு) மலையாளரிடத்தி லிருந்தும் கடன் பெற்றுச் செலுத்தி விடுவதாக வாக்களித்தனர். அதன்படி நில வரியில் ஒரு பகுதியையே தங்களால் செலுத்த முடிந்ததால், மீத வரியைச் செலுத்த இயலாத நிலையில் ஊரைவிட்டு ஓடி விட்டனர்.

இதனையறிந்த அரசு, அகில நாயகிசருப்பேதி மங்கலத்துத் தேவதானம், அகில நாயகச் சேரி மஹாசபையாரைப் பொறுப்பாக்கி, அவர்கள் அந்நில வரியைச் செலுத்த வேண்டுமென்று அறிவித்து, **வல்லத்துத் தண்டலில்** (வல்லத்தில் இருந்த நிலவரி வசூல் அலுவலகம்) வைத்து விசாரிக்கையில், அரசு அதிகாரியான வத்தராயரிடம் ஒப்புதல் பெற்று, ஓடிப்போனவர்களின் நிலம் மற்றும் மனைகளை விற்றுத் தந்திருப்பது மேற்கூறப்பெற்ற கல்வெட்டினால் விளக்கமாகிறது.

## குற்றத்துக்குத் தண்டனை

கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டம், காட்டுமன்னார்கோயில், வீரநாராயண சுவாமி கோயிலின் வடக்குப் பக்கச் சுவரில் எழுதப்

59 Ibid, No.224.

பெற்றுள்ள கல்வெட்டு[60] பிரமமாராயன் என்பான் சில குற்றங்கள் புரிந்ததால், அவனைப் பிடித்துத் தண்டலில் (சிறை அல்லது நில வருவாய் வசூல் செய்யும் அலுவலகம்) வைத்து விசாரிப்பதென்றும், அவனது நிலத்தை விற்று சில காசு வரி முதலாகக் கொள்வதென்றும் அரசன் கூறியதற்கிணங்க, வரியாக அல்லது தண்டமாக (Fine) வசூலித்த காசைக் களரியில் (வரி வசூல் அலுவலத்தில்) செலுத்தியிருக்கின்றனர். பின்பு இவனிடமிருந்து வசூல் செய்யவேண்டிய முழுத் தொகைக்கும், இவனது காணியை வாங்குவாரிடமும், கோயில்களில் பணம் மிகுதியாக உள்ளவற்றிடமும் விற்பனை செய்து ஈடு செய்திருக்கின்றனர். அவ்வாறு விற்பனை செய்து வந்த தொகையைக் குண்டிகையில் (கருவூலத்தில்?) சேர்த்து, தரவு (பற்றுச் சீட்டு) பெற்றிருக்கின்றனர். அவ்வாறு வாங்கப்பெற்ற முப்பத்து நான்கு மா நிலமும் திருநாமத்துக் காணியாகக் கொண்டு, அந்நிலங்களின் எல்லைகளில் திருவாழிக் கல்[60A] நாட்டிட ஆணை வழங்கப்பெற்றிருக்கிறது. மேலும் அம் மன்னனார் கோயில் திருமாளிகையில் கல்லில் வெட்டிவிப்பதற்கும் ஆணை பிறப்பிக்கப் பெற்றிருக்கிறது.

இக்கோயிலானது வீரநாராயணர் கோயில், அதாவது திருமால் கோயில். ஆதலால்தான் இக்கோயில் நிலங்களின் எல்லையில் "திருவாழிக்கல்" நாட்டும்படி ஆணையளிக்கப் பெற்றிருக்கிறது. அப்படியிருக்க வீரநாராயணர் கோயில் நிலங்கள் "திருவிடையாட்டம்" என்றுதான் கூறப்பெற்றிருக்கும். ஆனால் இக்கல்வெட்டில் "திருநாமத்துக்காணி" என்று காணப்பெறுகிறது. இது ஒருவேளை சிறு தவறாக இருக்கலாமோ என்று எண்ணிடத் தோன்றுகிறது.

## வரி செலுத்த முடியாமல் வெளியூர் சென்றோரைக் காருண்யத்தால் (கருணையால்) மீள் குடியமர்த்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், ஆக்கூர் தான்றோன்றீசுவரர் கோயில் முன்பாக உள்ள மண்டபத்தின் கிழக்குச் சுவர் அடிப்பாகத்தில் காணப்பெறும் கல்வெட்டு[61] இரண்டு வகைகளில் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தெரிகிறது.

60 S I I Vol XII, No 254

60A S I I Vol XII, No.170.

61 S I I Vol XII, No 129

காடவப் பெருவேந்தன் முதலாம் கோப்பெருஞ்சிங்கன், போசளர்களைச் சிறையிலடைத்தும், பாண்டியர்களைத் தோற்கடித்து, அவர்களிடமிருந்து வரி பெற்றும் முடிந்த பிறகு, சோழ மண்டலத்திலுள்ள காவிரி ஆற்றின் தெற்குக் கரை மீதே கிழக்கு நோக்கிப் பயணித்து, அங்கிருந்த திருக்கோயில்களெல்லாவற்றையும் வணங்கியபிறகு, சைவக்கோயில்களுக்கும், வைணவக் கோயில்களுக்கும் உரிமையுடைய நிலங்களுக்கெல்லாம் வரி தவிர்த்து, அவைகளுக்குப் பல திருப்பணிகளையும் நிறைவேற்றி மகிழ்ந்திருப்பது முதலாவதாகும்.

இரண்டாவதாக, ஜயங்கொண்ட சோழவளநாட்டுப் பிரமதேயமான ஒரு ஊருக்குச் சென்று, தங்கியிருக்கையில், சோழ மண்டலத்தின் பற்றில் உள்ள பல நாடுகள் நெடுங்காலமாக வரி செலுத்த வேண்டிய நிலுவை (சிகை) நாலுகோடி காசு அளவுக்கு இருந்ததால், அந்நாடுகளில் வாழ்ந்த மக்கள் தேசாந்திரமாகக் கங்கைப் பகுதி வரை சென்றுவிட்ட மக்களை, தம் கருணை உள்ளத்தால், திரும்பவும் அவர்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பவும், அவர்களது காணிகளையும், மனைகளையும் திரும்பவும் பெறவும் கோப்பெருஞ்சிங்கன் ஏற்பாடு செய்திருப்பதாகும். இதைக் கல்வெட்டு,

> "காருண்யம் பண்ணி அருளி தேசாந்திரங்களிற் போன இவர்கள் தந்தாம் ஊர்களும் காணிகளும் மனைகளும் பெறுகவென்று திருவுள்ளமானபடியாலே, கெங்கை பரியந்தமாகப் போன ஜனங்கள் நேராகப் புகுந்து தந்தாம் ஊர்களும் காணிகளும் பெற்று ஒரு குறைகள் அற இருக்கும்படி செய்தருளினார் அழகிய பல்லவரான வீரப்ரதாபர்."

என்று கூறியிருக்கிறது.

## நில அளவு

காடவர் காலத்தில் நிலங்கள் வெவ்வேறு பகுதியில் வெவ்வேறு வகை அளவு கோல்களைப் பயன்படுத்தி அளக்கப் பெற்றிருக்கின்றன.

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம் திருக்கச்சூர் பகுதியில் நிலங்கள் பதினறுகாண்கோலால் அளக்கப்பெற்றிருப்பது

அவ்வூர்க் கல்வெட்டால்[62] தெரிய வருகிறது. பதினறு சாண் கோலால் அளக்கபெற்ற நிலம் குழி 195க்கு 7500 புதுக்காசு பெறப்பட்டிருக்கிறது.

கடலூர் மாவட்டம், சிதம்பரம், நடராசர் கோயில் இரண்டாம் பிரகாரத்து வடக்குச் சுவரில் வெட்டப் பெற்றுள்ள கல்வெட்டு[63] "கோயிலுக்கும் திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார்க்கும் வேசாலிப்பாடிப் பற்று பூபாலசுந்தர சோழ நல்லூரில் செய்வித்த **சொக்கசீயன் கமுகு திருநந்தவனம்** நிலம் 63 மா முக்காணிக் கீழ் முக்காலும் **சொக்கச்சீயன் கோலால்** அளந்த இடத்து" என்று கூறி தொடர்ந்து எழுதப் பெற்றிருக்கிறது. இக்கல்வெட்டு மூலம் சிதம்பரம் பகுதியில் நிலங்கள் கோப்பெருஞ்சிங்கன் பெயரால் வழக்கிலிருந்த அளவு கோலான "**சொக்கச்சீயன் கோலால்**" அளக்கப் பெற்றிருக்கின்றன.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருமங்கலக்குடி ப்ராணநாதேஸ்வரர் கோயில் சுற்றுப்புற வராண்டாவின் வடக்குச் சுவரில், பாண்டிகுலாசனி வளநாட்டு, ஆற்காட்டுக் கூற்றத்துப் பெருமங்கல முடையான் அரையன் உதையஞ் செய்தானான தொண்டைமான் விருதராச பயங்கர வளநாட்டு, மண்ணிநாட்டுத் திருமங்கலக்குடி உடையார் புராணநாயனார் கோயிலில், தான் எழுந்தருளிவித்த **ஆளப்பிறந்தீஸ்வரமுடையார்க்குத்** திருநாமத்துக்காணியாகச் **சதிரக்கோலால்** "ஐஞ்ஞூற்று ஒரு பத்திரண்டு குழி கொண்ட தொருமாவாக விலை கொண்டு கொடையளித்திருக்கிறான்.[64] அந்நாளில் கும்பகோணம் பகுதியில் "**சதிரக்கோல்**" என்னும் அளவு கோல் வழக்கில் இருந்ததுவும், அச்சதுரக் கோலால் 512 குழி கொண்டது 1 மா நிலம் எனக் கொள்ளப் பெற்றதுவும் புலப்படுகிறது.

திருவெண்ணைநல்லூர்க் கல்வெட்டு[65] ஒன்று "பதினறு சாண் கோலால்" குழி 10,000-த்தினால் நிலம் 20 மா" என்று தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு மூலம் குழி 10,000 = 20 மா என்பதும்; ஒரு மா நிலம் 500 குழி என்பதும் உணரமுடிகிறது.

---

62. S I I. Vol XII, No.287
63 Ibid, No 215
64 S I I Vol. XII, No.228
65 Ibid, No 170.

இக்கல்வெட்டு பிறிதோரிடத்திலும் குழி 3000த்தினால் நிலம் 6 மா என்று கூறயிருக்கிறது. மற்றோரிடத்தில் "தடி 2 னால் குழி 2000த்தினால் நிலம் 4 மா" என்று குறிப்பிடுகிறது.

இவ்வூரின் மற்றொரு கல்வெட்டிலும்[66] குழி 4750 – இந்நிலம் ஒன்பது மா அரை அதாவது, குழி 4750க்கு நிலம் 9½ மா என்று குறிக்கப்பெற்றிருக்கிறது.

ஆனால் சிதம்பரத்திலுள்ள ஒரு கல்வெட்டு[67] 100 குழி கொண்டது 1 மா நிலம் என்று பேசுகிறது.

**வரிவசூல்**

வரிகள், "இறை, கடமை, ஆயம்" என்று பொதுவாக அழைக்கப் பட்டிருக்கின்றன. "இறை" என்பது வரிகள் அனைத்துக்குமான பொதுப் பெயராகத் தெரிகிறது. "ஆயம் என்ற வரி "நெல்லாயம்" என்றும், "காசாயம்" என்றும் இருபிரிவாக வழங்கப்பெற்றன. "கடமை" காசாகச் செலுத்துவதைக் "காசுக்கடமை" என்றும் அழைக்கப் பெற்றிருக்கிறது. "நெல்லாயம், காசாயம்" ஆகியவை அரசனுடைய கருவூலத்தில் (பண்டாரத்தில்) செலுத்தப் பெற்றதாகத் தெரிகிறது.

மேலே கொள்ளப்பெற்ற செய்திகளை ஒருசேரத் தெரிவிக்கும் ஒரு அருமையான கல்வெட்டு, முதலாம் கோப்பெருஞ்சிங்கன் 17–ஆம் ஆட்சியாண்டில், ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம், சித்தூர் வட்டம் மேல்பாடி சோழநாதேஸ்வரர் கோயில் நுழைவாயிலின் வலப்பக்கத்தில் அமைந்துள்ள மண்டபத்தின் தெற்குச் சுவரில் பொறிக்கப் பெற்றுள்ளது. அக்கல்வெட்டு[68] கீழே தரப்பெற்றுள்ளது.

> "ஸ்வஸ்தி ஸ்ரீ சகலபுவனச் சக்கரவத்திகள் கோப்பெருஞ்சிங்க தேவர்க்கு யாண்டு 17–ஆவது ஸ்ரீமற் குவலாலபுர பரமேஸ்வரன், கங்க குலோற்பவன், காவேரி வல்லவன், நந்திகிரிநாதன், சீயகங்கர் ஓலை. மருதம் பாக்கத்து ஊரவர் கண்டு விடை தந்ததாவது. தங்கள் ஊர் தேவதான, திருவ்டையா[illegible] ஸ்ரீ பண்டாரபாதிக்கு

66 Ibid, No 189

67. Ibid, No 154

68 S I.I Vol XII, No 202

அந்தராயப்பாதி உள்பட ஊரடங்கில் நன்சை, புன்சை கடமையும், ஸ்ரீபண்டாரப்பாதி உள்பட வெட்டி, தனியாள், சிறுபாடிகாவல், கண்காணி, எடுத்துக் கொட்டி, அரிமுக்கை, கணக்கு மிகுதி உள்பட்ட பல நெல்லாயங் களும்; வெட்டிப் புடவை, முதற்தரங் ,காத்திகை காசு வகை, ந(த்)காசு, முள்ளடி, இனவரி, ஏரிமீன் பாட்டம், ஆசுகவிகள் பேரக்கடமை உள்ளிட்ட பல காசு கடமையும், அச்சுத்தறி, பறைத்தறி, சாலியத்தறி உள்ளிட்ட தறிக்கடமை; வேலிப்பயிறு, தரப்படி அரசி தூணி, நிலத் திறப்புக் கடமை, செக்குக் கடமை, போர்க்கடமை, இருந்து பரிமாறுவர் பேர்க்கடமையும்; வாணியர் பேர்க்கடமையும், வாலமஞ்சாடிக் கடமையும், பாலிக்கப் பாட்டமும், பழங்குடி நீக்கி, புதுக்குடியாய் ஏறிக்கொண்ட மன்றாடிகள் பேர்க் கடமையும், பொன்வரி, வேண்டுகோள், நல்லெருது, நற்கிடா, காணிக்கை ,காத்திகைப் பச்சை, புடவைமாடையும் மற்றும் நாம் கொள்ளும் எப்பேற்பட்ட அனைத்து வரிகளும் உட்பட இவ்வூர் நாற்பாற்கெல்லைக்கும் உள்பட்ட மேல்நோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும் உட்பட பதினேழாவது சித்திரை மாதம் முதல் சோளேந்திர சிங்கமுடைய நாயனார்த் திருநாளுக்கு வேண்டுவனவதுக்கு வெட்டும் அமராபரணரான சீயங்கன் விட்டேன்......"

இக்கல்வெட்டிலிருந்து தெரிய வரும் வரிகளின் பட்டியலைக் கீழே காணலாம்.

1. நஞ்சை, புஞ்சை கடமை
2. வெட்டி
3. தனியாள்
4. சிறுபாடி காவல்
5. கண்காணி
6. எடுத்துக்கொட்டி
7. அரிமுக்கை

8. கணக்கு மிகுதி, ஆகியவை நெல்லாகத் தரப்பெறும் வரிகள்
9. வெட்டி
10. புடவை, முதற்தரம்
11. கார்த்திகைக் காசுவகை
12. நற்காசு
13. முள்ளடி
14. இனவரி
15. ஏரிமீன் பாட்டம்
16. ஆசுகவிகள் பேர்க்கடமை ஆகியவை காசு கடமை (காசாகத் தரப்படும் வரிகள்)
17. அச்சுத்தறி
18. பறைத்தறி
19. சாலியத்தறி உள்ளிட்ட தறிக்கடமை
20. வேலிப்பயிறு
21. தரப்படி அரிசி தூணி
22. நிலத்திறப்புக் கடமை
22. செக்குக் கடமை, பேர்க் கடமை
23. இருந்து பரிமாறுவார் பேர்க்கடமை
24. செட்டிகள், வாணியர் பேர்க்கடமை
25. வாவ மஞ்சாடிக் கடமை
26. பாலிக்கப் பாட்டம்
27. புதுக்குடியாய் ஏறின மன்றாடிகள் பேர்க் கடமை
28. பொன்வரி
29. வேண்டுகோள்
30. நல்லெருது
31. நற்கிடா
32. காணிக்கை
33. கார்த்திகைப் பச்சை
34. புடவை மாடை

35. மற்றும் அரசர் கொள்ளும் அனைத்து வரிகளும்.

மொத்தம் 34 வகையான வரிகளின் பெயர்களும், மேலும் அரசர் கொள்ளும் வரிகள் என்று பெயர் கூறப்பெறாத சில வரிகளும் இதில் பேசப்பட்டுள்ளன.

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், தீர்த்தநகரிக் கல்வெட்டினால் மேலும் சில வரிகள் காடவர் காலத்தில் வழக்கிலிருந்தமை தெரியவருகிறது.

இக்கல்வெட்டு[69] இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனின் 22-ஆம் ஆட்சியாண்டில் எழுதப்பெற்றிருக்கிறது. இக்கல்வெட்டின் மூலம் கீழே குறிப்பிடப்படும் வரிகளின் விபரம் அறிந்துகொள்ள முடிகிறது.

I. திருத்தினை நகருடையார் தேவதானம், திருநாமத்துக் காணிகள் நிலத்து (நஞ்சை நிலத்து) வரிகள்,

அ) காற்கடமை (கால்-வாய்க்கால் கடமை)

ஆ) பாசனக் கடமை (நீர்ப்பாய்ச்சும் கடமை)

இ) வெட்டி

ஈ) கோயிற்றமப் பேறு

II. திருத்தினை நகர் வரிகள்,

அ) காற்கடமை

ஆ) பாசனக் கடமை

இ) புன்செய் நிலத்துக் கடமை

III திருமடை விளாகத்துக் குடியிருந்து பரிமாறுவார்

அ) வியாபாரிகள்

ஆ) தறி இறை

இ) தட்டாரப் பாட்டம்

69 Ibid, No 121

ஈ) செக்குக் கடமை

உ) ஆள்வரி

ஊ) சுற்றாயக்காசு

எ) வாவ மஞ்சாடி

ஏ) கண்மாலை

ஐ) நாவிசர்

ஒ) வண்ணார் கற்காசு உள்ளிட்ட கடமைகளும்

அ) வெட்டி

ஆ) கோயிற்றமப்பேறு

இ) பாடிகாவல்

ஈ) தச்சர்

உ) கொல்லர்

ஊ) குசவர் ஆகியோர் அரசர்க்குச் செய்யும் தேவைகளும் மற்றும் கடமைகளாயங்கள் உட்பட அனைத்தாயங்களும்

திருத்தினை நகருடையார்க்குச் செய்யும் சாத்துப்படி, திருமேற்பூச்சு, திருப்பரிசட்டம், பரிகலன்கள், பரிச்சின்னங்களுக்கும், அழகிய சீயன் என்று பெயர் பெற்ற திருநந்தாவிளக்கு மற்றும் சந்திவிளக்குகளுக்கும், திருப்பங்குனித் திருநாளைக்கும், விஷு (மாதம் முதல் நாட்கள்), அயந (உத்தராயநம், தக்ஷிணாயநம்), க்ரஹணங்களுக்குந், திருப்பணிகளுக்குமாக இறையிலியாக (வரி வசூலிக்காமல்) கோயிலுக்கே கொடையாக மன்னன் வழங்கியிருக்கிறான். "இவ்வாணையை மறுப்பார் தம் தந்தைக்குத் தாம் பிறந்தவர் அல்லர்" என்றும் கடுமையாக எச்சரிக்கப் பெற்றிருக்கிறது.

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் கோயில் கட்வெட்டு[70] "வெட்டி, பாடி காவல், அரிப்பாடிகாவல் உள்பட

70 S I I Vol XII, No 119

நெல்லாயங்களும் காசாயங்களும்" என்று சில வரிகளைக் குறித்துள்ளது.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், முன்னூர் ஆடவல்லேஸ்வரர் கோயில் கட்வெட்டில்[71] "இந்நாயனார் தேவதானமான ஊர்களும், மடப்புறமும், திருமடைவிளாகத்துத் தறியிறை, தட்டார் பாட்டமுஞ், செக்குக் கடமையும், வாணியர் பேர்க்கடமையும், தரகுப் பாட்டமும் மற்றும் அனைத்தாயங்களும் உட்பட பூசைக்குந் திருப்பணிக்கும் உடலாக அழிகிய பல்லவன் வீரராயனான கச்சியராயன் அளித்திருக்கிறான் என்பது குறிக்கப்பெற்றுள்ளது.

தறி நெய்வாரான சாலியரிடமிருந்து வசூலிக்கப்பெற்ற வரிக்கு 'இறை' என்றும், தட்டாரிடமும், தரகரிடமும் பெறப்பட்ட வரிக்குப் 'பாட்டம்' என்றும, செக்கிடமிருந்தும் (தொழிற்கூடம் வரி), வாணியரிடமிருந்தும் (தொழில் வரி) வாங்கப்பெற்ற வரி 'கடமை' என்றும் வழங்கப்பெற்றிருக்கிறது. எந்த அடிப்படையில் இவ்வாறு பெயர் சூட்டப்பெற்றன என்பது விளங்கவில்லை.

## அளவைகள்

நீட்டல், முகத்தல், எடுத்தல் (நிறுத்தல்) ஆகிய அளவைகளைச் சரியாகக் கணிப்பதற்குக் காடவர் காலத்திலும் சில அளவைக் கருவிகள் இருந்திருக்கின்றன.

நீட்டல் அளவைக் கணக்கிடப் 'பதினாறு சாண் கோல்'[72], 'சதிரக்கோல்'[73], 'சொக்கச் சீயன் கோல்'[74] போன்றவை இருந்தன என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். முகத்தல் அளவுக்கென சில அளவைக் கருவிகள் இவர்கள் காலத்தில் வழக்கிலிருந்திருப்பது சில கட்வெட்டுக்களால் புலனாகிறது.

திருவெண்ணைநல்லூர்க் கல்வெட்டு[75] "அதிகை நாயகன் மரக்காலால்" அளக்கப்பெற்ற கல அரிசியைக் குறிப்பிட்டுள்ளது. திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள ஜம்பை, ஜம்புநாதர் கோயில்

71 Ibid No [illegible]

72 Ibid, No 187

73 Ibid, No 228, 135

74 Ibid, No 215

75 S I.I. Vol XII, No 135

கல்வெட்டில்[76] "தோன்றி மரக்காலால்" (தான் தோன்றீஸ்வர முடையார் பெயரால் வழங்கப் பெற்ற மரக்காலாகலாம்) நெல்லு அறுபதின் கலத்துக்கும் என்று மரக்காலான அளவைக் கருவியின் பெயரைத் தெரிவித்திருக்கிறது.

கடலூர் மாவட்டம் சிதம்பரம் நடராசர் கோயில் கல்வெட்டில்[77] "ஊர் இளங்கால்" என்று ஒரு அளவைக் கருவியைக் குறிப்பிடுகிறது. இது சிறுமுகத்தல் அளவைக் கருவியாகலாம். இக்கருவியால் பத்து கலம் "போனகப் பழவரிசி" அளக்கப் பெற்றிருப்பது அறிய முடிகிறது.

## நிறுத்தல் அளவு

காடவர் காலத்தில், ஒரு பொருளின் எடையைக் கண்டறிய எடைக்கற்களும், துலாக் கோலும் பயன்படுத்தப் பெற்றிருக்கும் போன்று தெரிகிறது. சர்க்கரை போன்ற பொருட்கள் நிறையில் (துலாக் கோலில் வைத்து) எடை கண்டறியப்பட்டிருப்பதைச் சிதம்பரம் கல்வெட்டு "நாலு நிறை சர்க்கரை" என்று குறிப்பிட்டுள்ளது.

பொன் எடைபோடுவதற்குச் "சொக்கச் சீயன் கல்" என்னும் எடைக்கல் பயன்பாட்டில் இருந்திருப்பது, விழுப்புரம் மாவட்டம், திருவாமாத்தூர் அபிராமேஸ்வரர் கோயில் கல்வெட்டினால்[78] தெரிய வருகிறது. திருவாமாத்தூர் அழகிய நாயனார் கோயிலில் சுப்பிரமண்யப் பிள்ளையாருக்கு அவனி ஆளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன் திருவாபரணங்களைக் கொடையளித் திருக்கிறான்.

| | | |
|---|---|---|
| 1. திருநெற்றிப் பட்டம் | – 1 | பொன் ஐங்கழஞ்சு |
| 2. திருத்தோடு | – 2 | கல்லும் அரக்கும் நீக்கிப் பொன் ஐங்கழஞ்சு |
| 3. திரு ஆரம் | – 1 | கல்லும் அரக்கும் நீக்கிப் பொன் எழுகழஞ்சு |
| 4. திருக்காற்சரி திருக்கைச்சரி உரு | – 2 | பொன் எண் கழஞ்சு |

76 Ibid No 165

77 Ibid, No 171

78 S I I Vol XII, No 181

மேற்கூறப்பெற்ற ஆறு ஆபரணங்களும் **"சொக்கச் சீயன் கல் எடைப்படி"** பொன் 25 கழஞ்சு எடை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

## நாழி அளவை

கோயில்களுக்கு வழங்கப்பெறும் பால், நெய் போன்றவை நாழி, கால் என்ற அளவைகளால் அளக்கப்பெற்றிருக்கின்றன.

திருமுதுகுன்றமுடைய நாயனார்க்கு அந்நாயனார் மன்றாடிக் குடிமக்களில் உய்யவந்தான் மருதன் சூற்றிக்கோன் திருநுந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு 32 பசு பெற்றுக்கொண்டு நாள்தோறும் **"தேவாஸ்ரியன் நாழியால்"** உழக்கு நெய் அளிக்க ஒப்புக் கொண்டதை அக்கோயில் கல்வெட்டு[79] புலப்படுத்துகிறது.

திருக்கோவலூர் திருவிடைகழி எம்பெருமானுக்கு ஒரு சந்தி விளக்கு எரிப்பதற்காக மன்றாடிகள் மதகன் தேவனும் இவன் மக்கள் பூவனும், சுத்தனும், அழுதனும். வண்டனும் அளித்த ஆறு பசுக்களைப் பெற்றுக்கொண்டு வயிராவணக்கோன் உள்ளிட்டார், மாதம் ஒன்றுக்கு **"உலகளந்தான் நாழியால்"** நாழி உரி நெய் அளிப்பதாக ஒப்புதல் தந்திருக்கின்றனர்.[80] இச்"வுலகளந்தான் நாழி" இவ்வூர் மற்றொரு கல்வெட்டிலும்[81] பேசப்பட்டுள்ளது. இதில், எம்பெருமான் அடியாரில் (தேவரடியார்) நாச்சியான திருவேங்கடப் பெருமாள் மாணிக்கத்தின் மகன் சூழியமழகியானான இலங்கேஸ்வர தேவன், இவ்விறைவனுக்கு நாளொன்றுக்கு "உலகளந்தான் நாழியால்" ஆழாக்கு நெய்யமுது அளப்பதாகக் கூறி பதினாறு சாவமூவாப் பசு விட்டதைத் தெரிவிக்கிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் அருளாளப் பெருமாள் கோயிலில் காணப்பெறும் கற்பாறையின் வடக்குப் பக்கத்தில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டு[82] மற்றொரு நாழியைப் (அளவுக் கருவியை) பற்றித் தெரிவிக்கிறது. இந்நாழியை, **"அருமொழி நங்கை நாழி"** என்று குறிப்பிட்டுள்ளது.

---

79 S I I Vol XII, No 118
80 Ibid, No 147
81 Ibid, No 180
82 Ibid, No 169

காஞ்சிபுரம் திருவத்தியூரில் நின்றருளிய அருளாளப் பெருமாளுக்கு மலை மண்டலத்து நாயக்கன்மாரில் கொடுமுண்டை நாராயணன் சங்கரன் என்பான் திருநந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்காகப்

| | | |
|---|---|---|
| பாற்பசு (பால் பசு) | - உரு | - 10 |
| சினைப்பசு (கருவுற்ற பசு) | - உரு | - 10 |
| பொலிமுறை நாகு (கெடேரி என்றும் குராப்பசு என்றும் அழைக்கப் பெறுவது) | - உரு | - 12 |
| இஷபம் (காளை) | - உரு | - 1 |
| ஆக | - உரு | - 33 |

முப்பத்து மூன்று உருக்களைக் கொடையளித்திருக்கிறான். அவற்றைப் பெற்றுக்கொண்ட திருநந்தாவிளக்குக் குடியைச் (சுரபி மன்றாடிகள்) சார்ந்த மணவாள நாதனும், வீற்றிருந்தானும், இக்கோயிலுக்கு நாள் ஒன்றுக்கு "அருமொழிநங்கை நாழியால்" நெய் உழக்கும், தயிர் அமுது நாழியும் அளக்க ஒப்புதலளித்திருக் கின்றனர்.

திருவெண்ணைநல்லூர் வைகுந்தத்து எம்பெருமானுக்கு நெய்யமுதுக்காகக் கொடை வழங்கப் பெற்ற பசுக்களைப் பெற்றுக் கொண்டு சுரபி மன்றாடிகளும் மற்றும் மன்றாடிகளும் "அருமொழி தேவன் நாழியால் நெய் வழங்க உறுதியளித்திருக் கின்றனர்.[83]

இந்த "அருமொழிதேவன் நாழி", திருவெண்ணை கிருபாபுரீஸ்வரர் கோயில் நுழைவாயில் கோபுரத்தின் உட்புறச் சுவரில் எழுதப்பெற்றுள்ள கல்வெட்டிலும்[84] இவ்வூர் வைகுண்ட பெருமாள் கோயில் முன்பாக உள்ள மண்டபத்தில் காணப்பெறும் கல்வெட்டிலும்[85] இதே மண்டபத்து மற்றொரு

83 Ibid, No 158

84 Ibid, No 194

85 Ibid, No 219

86 Ibid, No 232

குறிக்கப்பெற்றிருக்கிறது. ஆதலால் விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூர்ப் பகுதியில், காடவர் காலத்தில் **"அருள்மொழிதேவன் நாழி"** பெரும் வழக்கிலிருந்த நாழியாகக் கருத ஏதுவாகிறது. இந்நாழி சோழப் பெருவேந்தன் முதலாம் இராசராசனது பெயரால் வழங்கப்பெற்றதாகலாம்.

காஞ்சிபுரம் மாவட்டம், புலிவனம் வியாக்ரபுரீஸ்வரர் கோயில் மடப்பள்ளியின் வடக்குச் சுவரில் எழுதப்பட்டுள்ள கல்வெட்டு **"ராஜகேஸரி"** என்னும் அளவுக் கருவியால் நெய் அளக்கப் பெற்றதைத் தெரிவிக்கிறது.[87] இம்மாவட்டம் சிறிய காஞ்சிபுரம் அருளாளப் பெருமாள் கோயிலில் உள்ள கற்பாறையின் கிழக்குப் பக்கம் காணப்பெறும் கல்வெட்டு[88] **"அரியென்னவல்லாநாழி"** யால் நெய் அளக்கப்பெற்ற செய்திதைத் தெரிவிக்கிறது. "அரி" என்றால் "சிங்கம்" என்று பொருள். இந்நாழி காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன் பெயரால் அழைக்கப்பெற்ற நாழியாக இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

நெய் அளக்கும் மற்றொரு அளவுக் கருவி **"தேவாசிரியன் கால்"** என்று குறிக்கப்படுகிறது. இவ்வளவைக் கருவி விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் கோயில் மடைப்பள்ளியின் வடக்குச் சுவரில் எழுதப்பெற்றுள்ள கல்வெட்டில்[89] காணப்பெறுகிறது. இவ்வளவை 'கால்' என்று கூறப்படுவதால், "நாழி"யை விடப் பெரிய அளவைக் கருவியாக இருக்கலாம்.

**பண்டைக்கால முகத்தல் அளவை வகைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| நெல் | - | 360 | = 1 செவிடு | |
| செவிடு | - | 2 | = 1 பிடி | S I I. Vol. V, No 577 |
| செவிடு | - | 5 | = 1 ஆழாக்கு | S I.I Vol. V, No.577 |
| ஆழாக்கு | - | 2 | = 1 உழக்கு | |
| உழக்கு | - | 2 | = 1 உரி | |

87 Ibid, No 198

88 Ibid, No 212

89 Ibid, No 144

| | | | | |
|---|---|---|---|---|
| உரி | – | 2 | = 1 நாழி | S.I I Vol V, No.577 |
| உழக்கு | – | 4 | = 1 நாழி | |
| நாழி | – | 2 | = 1 மரக்கால் | |
| மரக்கால் | – | 12 | = 1 கலம் | |
| மரக்கால் | – | 4 | = 1 காடி | S I I. Vol XVII, No.222 |
| மரக்கால் | – | 5 | = 1 பறை | |
| மரக்கால் | – | 400 | = 1 கரசை | |

மேலே காட்டப்பெற்றுள்ள முகத்தல் அளவை வகைகளைக் கருத்தில் கொண்டால் ஒவ்வொரு கோயிலிலும் பால் அமுது படிக்கும், நெய் அமுது படிக்கும், திருநந்தாவிளக்குக்கும் கொடை அளிக்கப்பெற்ற பால், நெய் அளவுகளை நாம் எளிதாக அறிந்து கொள்ள முடியும்.

**சுரபி மன்றாடிகள்**

கோயில்களுக்குக் கொடையளிப்போரிடமிருந்து பசுக்களைப் பெற்றுக் கொண்டு நெய்யோ அல்லது பாலோ அளிக்கும் மன்றாடிகளில் சிலர் **"சுரபி மன்றாடிகள்"** என்று அழைக்கப் பட்டுள்ளனர்.

திருவெண்ணைநல்லூர் வைகுண்டப் பெருமாள் கோயில் கல்வெட்டொன்று[90] அவ்வூர்க் கைக்கோள முதலி திருமலை அழகியானான வீரகள் வீரப்பல்லவரையன், அக்கோயில் **சுரபி மன்றாடிகளில்** மணவாளக்கோனிடம் பசு ஐந்து கொடையளித்து, வைகுந்தப் பெருமாளுக்குப் பால் அளிக்கும்படி கூறியதைத் தெரிவிக்கிறது.

மேற்கூறப்பெற்ற கோயிலின் மற்றொரு கல்வெட்டும்[91] மேற்கூறப்பெற்ற சுரபி மன்றாடியிடமே நான்கு பசு ஒப்படைத்து அருமொழி தேவன் நாழியால் மாதம் ஒன்றுக்கு நாழி நெய் அளக்க பெருங்ககோன் சிவந்தான் என்பவன் ஏற்பாடு செய்ததைக் குறிப்பிட்டிருக்கிறது.

90 Ibid, No 122

91 Ibid, No 232

இதே கோயில் மண்டபத்தில் காணப்பெறும் ஒரு கல்வெட்டிலும்[92] செவலை அகரத்துக் குரவசேரி ஈஸ்வரபட்டன், சுரபி மன்றாடிகளில் அண்ணாண்டை வசம் நான்கு பசுக்களை ஒப்படைத்து, இக்கோயிலுக்கு மாதம் ஒன்றுக்கு நாழி நெய் அளக்கும்படி கூறியதும் காணப்பெறுகிறது.

**உடைநிலைச் சுரவி**

இவ்வூர் இறைவன் ஆட்கொண்ட தேவர்க்கு பால் ஆடி அருளுவதற்காக அரசூரைச் சார்ந்த அகம்படியாரில் திருமழபாடி மகன் சுப்பிரமணியன் உடை நிலைச் சுரவியாகப் பசு ஒன்று அளித்திருக்கிறான்.[93] உடைநிலைச் சுரவி என்பது உடையாருக்குக் கோயிலிலேயே நிலையாக இருக்கக்கூடிய பசு, அதாவது, சாவா மூவாப் பேராடு போன்று சாவா மூவாப் பசுவாக இருக்கலாம். விழுப்புரம் மாவட்டம் சிங்காவரம் கல்வெட்டில்[94] சாவா மூவாப் பெரும்பசு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவ்வாறு வழங்கப்பெறும் பசு கோயிலிலேயேதான் நிலையாக இருக்கக்கூடியது; வேறொரு மன்றாடியாரிடம் அளிக்கப்பெற்று அவர் மூலம் நெய் வழங்கப்பெறுவது அல்ல என்பது விழுப்புரம் மாவட்டம் பிரமதேசம் பிரமபுரீஸ்வரர் கோயில் கல்வெட்டினால்[95] தெளிவாகிறது.

பிரமதேசம் தனியூர் இராஜராஜச் சதுர்வேதி மங்கலத்து உடையார் பிரமீஸ்வரமுடைய நாயனார்க்கு ஆமூர் நீலகங்கன் அம்மூரிகுந்தன் சோழங்கதேவன் ஒரு திருநுந்தாவிளக்கு எரிப்பதற்காக 14 பசுக்களையும், 10 நாகுகளை (கிடேரிகள் – பெண் பசுங் கன்றுகள்), 8 சேக்களையும் (காளைப் பசுங்கன்றுகள்), ரிஷபம் (காளை) ஒன்றையும், ஆக உரு முப்பத்து மூன்றையும் கோயில் பண்டாரத்திலே உட்நிலைச்சுரவியாகக் (கோயிலிலேயே இருக்கும் நிலையான பசுக்களாக) கொண்டு கோயிலுக்கு நெய் வழங்கக் கோயில் ஸ்ரீமாஹேஸ்வரர் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இப்பசுக்கள், கோயிலில் இருக்கும் "கோசாலையில்" வைத்து பராமரிக்கப் பெற்றிருக்கலாம்.

92 Ibid, No 219

93 Ibid, No 240

94 Ibid, No 139

95 Ibid, No 146

## நாட்டுக் கணக்கு

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, வட்டம் பொன்னூர் அழகப் பெருமாள் கோயில் நுழைவாயில் வலப்பக்க நிலைக் கல்லில் எழுதப் பெற்றிருக்கும் கல்வெட்டில்[96] இருவரிகள் எழுதப் பெறாமல் இருப்பதால் கல்வெட்டு முழுமையாக என்ன கூறுகிறது என்பதைச் சரியாக அறிய இயலவில்லை. ஆனால் இதில் உள்ள இரு செய்திகள் முக்கியத்துவம் உடையனவாகக் காணப்படுகின்றன. ஒன்று "நாட்டுக் கணக்கு" என்னும் ஒரு அலுவலர் காடவர் ஆட்சியில் பணிபுரிந்திருப்பது. மற்றொன்று "திருவடி பிடிப்பான்" என்று ஒருவனுடைய பெயர் வழங்கப்பெற்றிருப்பது.

கல்வெட்டின் இறுதியில் "இவை நாட்டுக் கணக்குச் செழியத்தரையன்" என்று நாட்டுக் கணக்கர் கையொப்பமிட்டிருக்கிறார். 'திருவடி பிடிப்பான்' என்னும் பெயர், பெருமாளின் திருவடிகளைக் கையால் தாங்கிச் செல்வதை நினைவுப்படுத்துவதாக உள்ளது.

## கோயிற் கல்வெட்டுக்கள்

தமிழ்நாட்டில் இதுவரை கண்டறியப்பெற்றுள்ள கல்வெட்டுக்களில் 95 சதவிகிதக் கல்வெட்டுக்கள் கோயிலுக்கு அளிக்கப்பெற்ற நிலக்கொடை, நந்தாவிளக்குக் கொடை, தெய்வங்களுக்கு வழங்கப்பெற்ற அணிகலன்கள் கொடை, அடுகலன்கள், பரிகலன்கள் மற்றும் ரிச்சின்னங்கள் கொடை பற்றிக் குறிப்பிடுவனவாகத்தான் இருக்கின்றன. இக்கல்வெட்டுக்களில் அதிக அளவில் சோழர்காலக் கல்வெட்டுக்களாகத்தான் உள்ளன.

## நடுநாட்டில்

நடு நாட்டில் (கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களின் பகுதிகள்) ஒரு குறிப்பிட்ட அளவில் காடவர் காலக் கல்வெட்டுக்கள் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. இவர்கள் லக்கல்வெட்டுக்களிலும் பெரும்பாலானவை கோயில்களுக்கு ித்த கொடை ித் தெரிவிப்பனவாகவே காணப்படுகின்றன.

96 Ibid, No 220

மிகக் குறைந்த அளவிலான கல்வெட்டுக்கள் ஏரிகள், குளங்கள், தடாகங்கள், திருநந்தவனங்கள், தோட்டங்கள் அமைக்கப்பெற்ற செய்திகளைத் தருகின்றன.

## காடவர் காலத்தில் முக்கியத்துவம் பெற்ற கோயில்கள்

காடவ வேந்தர்களின் தொடக்கக் கால முக்கியக் கோயிலாக இருந்தது கடலூர் மாவட்டம், விருத்தாசலம், விருத்தகீரிஸ்வரர் கோயிலும், விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணை நல்லூர் கிருபாபுரீஸ்வரர் கோயிலும் ஆகும். முதல் கோயிலின் கண்டராதித்தன் வாசலில் கி.பி. 1184–ல் ஆளப்பிறந்தான் வீரசேகரனான காடவரயன் காலத்தில் பொறிக்கப்பெற்றிருக்கும் கல்வெட்டிலும்[97], திருவெண்ணைநல்லூர், கிருபாபுரீஸ்வரர் கோயில், கோபுரத்தின் உட்பக்கச் சுவர் இடப்பக்கத்தில் பொறிக்கப்பெற்றுள்ள விருத்தாசலம் கல்வெட்டின் மறுபிரதியான கல்வெட்டிலும்[98], காடவகுல மன்னர்களின் வமிச முன்னோர்

1. வளந்தானாரான காடவராயர்
2. ஆட்கொள்ளியார் என்னும் காடவராயர்
3. ஏழிசை மோகன் காடவராயர்
4. அரசநாராயணன் கச்சியராயரான காடவராயர்

குறிக்கப்பட்டுள்ளனர்.

## முக்கியத்துவத்தில் இரண்டாம் நிலைக்கோயில்கள்

இவர்களது ஆட்சியில் விருத்தாசலம், திருவெண்ணைநல்லூர் கோயில்களையெடுத்து முக்கியத்துவம் பெற்ற கோயில்களாகத் திகழ்ந்தவை, விழுப்புரம் மாவட்டம், சேந்தமங்கலம் வாணிலை கண்டீசுவரமுடையார் கோயில்,[99] திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில்,[100] இதே மாவட்டம், செய்யாறு வட்டம், அத்தியூர் அகத்தீசுவரர் கோயில்,[101] இம்மாவட்டம்,

97 S I I Vol XII, No.263

98 Ibid, No 264

99. Ibid, Vol XXIV, No 6, நடன. காசிநாதன, காலசசுவடுகள, (1973), பககஙகள – 5–11.

100 S I I Vol VIII, No 69

101 S I I Vol XII, No 125

ஆரணி வட்டம், பூண்டி, பொன்னிநாதர் கோயில்,[102] கடலூர் மாவட்டம், சிதம்பரம் நடராசர் கோயில்,[103] நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், திருக்கடையூர், அமிர்தகடேசுவரர் கோயில்,[104] கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், திருவயிந்திபுரம், தேவநாயகப்பெருமாள் கோயில்,[105] இதே மாவட்டம், இதே வட்டம், தீர்த்தநகரி (திருத்திணைநகர்) சிவாங்குரேசுவரர் கோயில்,[106] காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், ஆத்தூர் முக்தீஸ்வரர்கோயில்,[107] ஆந்திர மாநிலம், கர்நூல் மாவட்டம், மர்காபூர் வட்டம், திரிபுராந்தகம், திருபுராந்தகேசுவரர் கோயில்,[108] இதே மாநிலம், கோதாவரி மாவட்டம், திராக்ஷராமம் கோயில்[109] ஆகியவைகளாகும்.

## தில்லை, திருவண்ணாமலைக் கோயில்கள்

மேற்கூறப்பெற்ற அனைத்துக் கோயில்களுள்ளும், கடலூர் மாவட்டம் தில்லை நடராசர் கோயிலும், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை, அண்ணாமலையார் கோயிலும் காடவப் பெரும் வேந்தர்களான முதலாம் கோப்பெருங்சிங்கன் மற்றும் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் ஆகியோரின் நேரடிக் கொடைகளை நிரம்பப் பெற்றவைகளாகும்.

## தில்லை நடராசர் பெருமான் தெற்குக் கோபுரத் திருப்பணி

தனியூர் பெரும்பற்றப்புலியூர் திருச்சிற்றம்பலம் உடையார்க்கு இந்நாயனார் கோயில் தெற்குத் திருவாயிலைச் **சொக்கச்சீயன் திருநிலை எழு(நிலை) கோபுரமாக மாற்றி அமைப்பதற்குத்** திருப்பணி முதலாக(உடலாக) ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து ஆற்றூர் நாட்டு ஆற்றூரான

102 S I I, Vol VII, No 62
103 S I I Vol VII, No 830
104 S.I I Vol XII, No 265.
105 Epi Indica, Vol VII, No 23
106. S I I. Vol XII, No 262
107 Ibid, No 119
108 S I I Vol XII, No 247
109 Ibid, Vol IV, Nos 1341, 1342 and 1342b

ராஜராஜநல்லூரைச் சேர்ந்த நிலம் 364 வேலியில், தேவர்கள் (சுவாமிகள்) தேவதானங்களும், திருவிடையாட்டங்கள், பிடாரிபட்டி, துர்க்கைபட்டி, பள்ளிச் சந்தம் உட்பட நிலம் 46 வேலியையும், அகரம் மஹாவிபூதிச் சதுர்வேதி மங்நிலம் 12 வேலியையும், பட்டவிருத்தி நிலம் 1 வேலியும், கடிகையார் இறையிலி நிலம் 3¼ ஜயும் சேர்த்து ஆக நிலம் 62¼ நீக்கி, மிகுதி நிலம் 301¾ வேலியை ஆழகிய சீயன் அவனி ஆளப்பிறந்தான் காடவன் கோப்பெருஞ்சிங்கன் கொடை வழங்கியிருக்கிறான்.[110] இந்த நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் கல்வெட்டுக்களைக் காஞ்சிபுரம் திருவேகம்பமுடையார் (ஏகாம்பரநாதேஸ்வரர்) கோயிலிலும், ஆற்றூர் திருமுத்தீஸ்வரமுடையார் கோயிலிலும் கல்லில் பொறிக்கும்படியும், தாம் கொடையளித்த நிலங்களின் நான்கு பக்க எல்லைகளிலும் 'திருச்சூலக்கல்' பதித்துக் கொள்ளவும் மன்னன் ஆணை பிறப்பித்திருக்கிறான். இச் செயலைக் கோப்பெருஞ்சிங்கனே நேரிடையாகச் செய்திருக்கிறான் என்பது, "இவை கோப்பெருஞ்சிங்கன் எழுத்து" என்று ஆற்றூர்க் கல்வெட்டில் காணப்பெறுவதால் அறியலாம்.

## தில்லைக் கீழைக்கோபுரம் எடுப்பித்தல்

ஜீயமகிபதி என்னும் முதலாம் கோப்பெருஞ்சிங்கனுக்கும் சீலாவதிக்கும் பிறந்த இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன், தில்லை நடராசர் கோயிலுக்கு ஆற்றிய சமயப்பணிகளில் தந்தையை மிஞ்சிய தனயனாக விளங்கியிருக்கிறான். தந்தை தெற்குக் கோபுரத்தை மேலும் உயரமாக ஏழுநிலையாக உயர்த்தித் திருப்பணிதான் புரிந்திருக்கிறான். ஆனால், மகனோ, கீழைக் கோபுரத்தையே மேரு மலை போன்று புதிதாக எடுப்பித்திருக்கிறான். அத்தோடு அக்கோபுரத்துக்குத் தம் பெயரையே சூட்டி மகிழ்ந்திருக்கிறான் என்பது ஆந்திர மாநிலம், கர்நூல் மாவட்டம், திரிபுராந்தகம், திரிபுராந்தகேசுவரர் கோயில் கல்வெட்டால்[111] அறியமுடிகிறது.

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் திராக்ஷராமம், காஞ்சிபுரம் (ஏகாம்பரநாதர் கோயில்), வீரட்டானம் (திருக்கோயிலூர்), சுவேத

110 S I I Vol XII, No 119

111 S I I Vol XII, No.247.

ஜம்பு (திருவானைக்கா) ஆகிய இடங்களிலுள்ள கோயில்களுக்கும் கொடையளித்து மகிழ்ந்திருக்கிறான் என்பதையும் இக்கல்வெட்டே புலப்படுத்துகிறது.

## திருநிலை அழகியான் திருநந்தவனம்

இம்மன்னன் காலத்திலேயே கோயிலுக்கும் (நடராசர் கோயில்), திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார்க்கும் சிறப்பாகச் சார்த்தியருள, திருப்பள்ளித் தாமம் வழங்க பொன்மேய்ந்த சோழச் சருப்பேதிமங்கலத்து, இராயூர்ச் சொட்டை நாயகரான ஸ்ரீகுமார பட்டன் திருநிலை அழகியான் திருநந்தவனத்தை அமைப்பதற்காக நிலக்கொடை வழங்கியிருக்கிறான்.[112] இம்மன்னன் எட்டாம் ஆட்சியாண்டில் தில்லை நடராசர் கோயிலுக்கும், பெரிய நாச்சியார்க்கும் திருபரிசட்டம் சாத்துவதற்கு நிலக்கொடை யளிக்கப்பட்டிருக்கிறது.[113]

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் சிதம்பரத்தில், நடராசர் திருக்கடலுக்குச் செல்லும் திருவீதியான விக்கிரம சோழன் தெற்குத் திருவீதித் தென்பக்கத்தில் பிடாரி திருச்சிற்றம்பல மாகாளி கோயில் ஒன்றை அமைத்துத் தந்திருப்பது, சிதம்பரம் நடராசர் கோயில் கல்வெட்டால்[114] தெரியவருகிறது.

தில்லை நடராசர் கோயிலில், திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார் கோயில் அந்தப்புரப்பெருமாள் திருவாசலுக்கு வடப்பக்கத்து எழுந்திருளி இருக்கும் அண்டாபரண தேவர்க்குத் திருப்பண்ணிகாரப் புறமாகவும், சிறப்பாகத் திருத்தோள் மாலை செய்து சாத்த திருநந்தவனம் அமைப்பதற்கு நிலமாகவும், நிலக்கொடை காடவ மன்னன் காலத்தில் தனிப்பட்டோர் நால்வரால் வழங்கப்பெற்றிருக்கிறது.

---

112. Ibid, No.149.
113. Ibid, No 154.
114 S.I.I Vol. XII, No 159.
115 Ibid, No 160.

மேலும் தில்லை நடராசர் கோயிலுக்கும் (நடராசர் கோயில், "கோயில்" என்ற சொல்லால் மட்டுமே கல்வெட்டில் குறிப்பிடப் பெற்றிருக்கிறது) திருக்காமக்கோட்டமுடைய பெரியநாச்சியார்க்கும், வேசாலிப்பாடிப் பற்றில் அமைந்திருந்த பூபால சுந்தர சோழ நல்லூரில் "சொக்கச் சீயன் கழுகு திருநந்தவனத்துக்கு" மேலும் எண்பது மா நிலம் கொடையளிக்கப் பட்டிருக்கிறது.[116] இது நடைபெற்றது இரண்டாம் கோப்பெருஞ் சிங்கன் காலத்திலாகும். இதுகுறித்த கல்வெட்டை, முதலாம் கோப்பெருஞ்சிங்கன் தம் நாளில் இத்திருநந்தவனத்தை ஏற்படுத்திய பொழுது, சிதம்பரம் கோயில் திருமாளிகையில் கல்வெட்டு வெட்டப்பெற்ற இடத்துக்கு அருகிலேயே வெட்டப்படுதல் வேண்டும் என்று ஆணையிடப் பட்டிருக்கிறது.

## திருவண்ணாமலை

காடவர் காலத்தில் திருவண்ணாமலை, திருவண்ணாமலையார் கோயிலுக்குப் பல திருப்பணிகள் நடந்தேறியிருக்கின்றன. குறிப்பாக, முதலாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்திலும், இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்திலும் இக்கோயில் இறைவனுக்குப் பல அணிகலன் கொடைகளை வழங்கி மகிழப்பட்டிருக்கின்றன. "அருணமால்வரைப் பெருமாள் தமக்கு (அருணமலை – சூரிய மலை ஈசருக்கு), காதணி, மணிமகுடம், மெய்யங்கி, பாகுவலையம், இடையாடை, பேதைபாதம், கண்டம், அவனியாளப் பிறந்தான் என்ற பெயர் கொண்ட திருவாசிகை (பிரபை), சிங்காசனம், கற்பக மரம், முத்தின் பந்தல், உமைக்குக் கழல், பெருமாளுக்கு (ஈசனாருக்கு) மாணிக்கம் நிறைந்த "பரதம் வல்ல பெருமான்" என்னும் திருவாசிகை; மாணிக்கம், வயிரம் ஆகியவைகளால் இழைத்து உருவாக்கப் பெற்ற திருமஞ்சனக் கூடம், உண்ணாமுலையாளான உமையவள் திருவுடையாடை, முருகன் மற்றும் அவரது தேவியர் மேனிகளுக்குப் பொன்னணிகலன்கள்" ஆகியவற்றை கூடல் அவனி ஆளப்பிறந்தானாகிய முதலாம் கோப்பெருஞ்சிங்கனும்;

"பெருமாள் இருக்கும் திருமண்டபம், திருப்பள்ளியறை, திருவமுது சமைக்கும் பெருமண்டபம் (திருமடைப்பள்ளி), திருக்காக்கள்ளி (ஆவணக்களரி?) அவனியாளப் பிறந்தான்

116. Ibid, No 215.

திருமண்டபம், நிச்சங்க மல்லன் பெரும்பண்டாரம், சிவபெருமானின் கங்காளமூர்த்தி திருமேனி, நெடுந்தெரு, தவத்தோர் உறைவதற்காகக் காங்கய்ன் மடம், "வாள்வல பெருமாள் நெடுந்தோப்பு", தீர்த்தமாகிய அமுத நன்னீர் அனைத்திலும் சிறந்ததாகிய "தமிழ்நாடு காத்த பெருமாள் தடாகம்", "காடவர் குமாரன் தோப்பு", "அவனியாளப் பிறந்தான் தோப்பு", "சேனைத் தலைவன் தோப்பு", "அம்மை மடமும்", "ஐயன் ஏரியும்", "வாள் வல்ல பெருமாள் கிணறு", "காடவ குமாரன் தடாகம்", "வென்று மலைகொண்ட பெருமாள் ஏரி", "பரதம் வல்ல பெருமாள் தோப்பு", "வீரராயன் தோப்பு", "நிச்சங்கமல்லன் ஏரி", "காங்கயன் தடாகம்", "காங்கயன் மடம்" ஆகியவற்றை காடவ குமாரனாகிய ஆட்கொண்ட தேவன் என்னும் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனும் உருவாக்கித் தந்திருக்கின்றனர்.[117]

கூடல் ஆளப்பிறந்தான் காடவராயன் சாடும்பெருமான் பிராட்டியார் (துணைவியார்) பெண்ணரசியரான உடையாழ்வார் திருமகளார், மீட்டாண்டார் துணைவியரான நாச்சியார் திருவண்ணாமலை உடைய நாயனாருக்கு திருநீற்றுக் கோயில் என்னும் அணிகலனைச் செய்தளித்திருக்கிறார்.[118] இப்பெருமாட்டியே இக்கோயில் இறைவர்க்குத் திரு ஆலத்தி தட்டு, இரண்டு வெள்ளித்தட்டு ஆகியவை கொடையளித்திருப்பது மற்றொரு கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது.[119] இக்கோயில் உண்ணாமுலை நாச்சியார்க்கு இவ்வம்மையாரே, சட்டுவம், தண்ணீரமுது வட்டில் ஆகியவை வழங்கி வணங்கியிருக்கிறார்.[120]

கோப்பெருஞ்சிங்கன்களின் முன்னோனான கூடல் அரசநாராயணன் ஆளப்பிறந்தானான வீரசேகரக் காடவராயன், திருவண்ணாமலை உடைய நாயனாருக்குச் சார்த்தி அருளுவதற்காக நூற்று முப்பது கழஞ்சு எடை கொண்ட "ஏகாவல்லிவடம்" ஒன்றைக் கொடை வழங்கியிருக்கிறான்.[121]

---

117 S I I Vol VIII, No 69

118 Ibid, No 77

119 Ibid, No 78

120 Ibid, No 98

121 Ibid, No 121

## திருவெண்ணைநல்லூர்

காடவர் காலத்தில் அடுத்த முக்கியத்துவம் பெற்றிருந்த கோயில், திருவெண்ணைநல்லூர் கிருபாபுரீஸ்வரர் கோயிலும் (தடுத்தாட் கொண்ட பெருமானார் கோயிலும்), வைகுண்டப் பெருமாள் கோயிலும் ஆகும். இக்கோயில்களுள் வைகுண்டப் பெருமாள் கோயிலுக்கு முதலாம் கோப்பெருஞ்சிங்கனின் திருத்தமக்கையார் அரசாழ்வார் மண்டபம் ஒன்றைக் கட்டித் தந்திருக்கிறார்.[122]

சோழ மன்னன் இரண்டாம் இராசராசனின் 12-ஆம் ஆட்சியாண்டில், ஏமப்பேரூரான ராஜேந்திர சோழநல்லூர்ப் பிடாக்கை சிறுபாக்கநல்லூரிலிருந்து 20 மா நிலத்தைத் திருவிடையாட்டமாக, வைகுந்தப் பெருமாள் கோயிலில், திருவாய்க் குலத்தாழ்வாரையும் (கண்ணன்) அவரது பிராட்டியாரையும் எழுந்தருளிவித்தற்காக, ஆட்கொளிக் காடவராயன் அளித்திருக்கிறான்.[123] இவன் ஆளப்பிறந்தான் வீரசேகரனான காடவராயனது பாட்டனாக இருக்கலாம் என்று ஊகிக்கப் பட்டிருக்கிறது.[124]

இதே கோயிலில் முதலாம் கோப்பெருஞ்சிங்கனது தாயார் திருநாமத்தால் வைகுண்டத்தெம்பெருமானுக்குப் பெரிய பிராட்டியாரை, மூன்றாம் குலோத்துங்கனின் 35-ஆம் ஆட்சியாண்டில் மொகாண்டாரான சோழிங்க தேவன் என்பான் எழுந்தருளி வைத்ததையும் மேற்கூறப்பெற்ற கல்வெட்டின் பிற்பகுதி தெரிவிக்கிறது.[125]

திருவெண்ணைநல்லூர் உடையார் ஆட்கொண்ட தேவர்க்குத் திருத்தோப்புக்கள் ஏற்படுத்துவதற்கு இரண்டாம் கோப்பெருஞ் சிங்கனே நேரிடையாக நிலம், நெல் மற்றும் காசுக் கொடையளித்திருக்கிறான்.[126] "ஆனைக்கு அரசு வழங்கும் பெருமாள் திருத்தோப்பு" அமைத்திட நிலம் 12 மா வழங்கியும், கீழகம்பட்டில் "கோப்பெருஞ்சிங்கன் தோப்பு" அமைக்க அமர்த்திய

---

122 S I I Vol VII, No 155

123 S.I I Vol XII, No 170

124 Ibid, No 170 inscription introduction

125 S I I Vol XII, No 170

126 Ibid, No.206 .முதலையாயகப்பட்ட யானையாக இருந்த அரசன் வழங்கிய சேகரனுக்கு அரசு மீண்டும் வழங்கி சிவபெருமான் அருளியது. (திருவிடைமருதூர் திருவிளையாடற் புராணம், மா.வேப்பசுபதி, பக்கம் 165)

ஆள் பதினான்கு பேருக்கும் செலவினத்துக்கு, சில வரிவிலக்களித்ததனால் கிடைக்கும் தொகையை ஈடுசெய்துக் கொள்ளவும் மன்னன் ஆணை வழங்கியிருக்கிறான்.

## தெய்வங்கள் எழுந்தருளிவித்தல்

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், திருவாமாத்தூர், அழகிய நாயனார் கோயிலில், பாதிரி மருத்தூரைச் சேர்ந்த குன்றமெடுத்தான் (கண்ணன்) வாணாதிராஜன் உடையான் ஸ்வராதிராஜன், சுப்ரமண்யப் பிள்ளையாரை இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் எழுந்தருளிவித்திருக்கிறான்.[127] இச்சுப்ரமண்யப் பிள்ளையாரை, அவனி ஆளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன் உடல்நலத்தோடு வாழ வேண்டும் என்பதற்காக மேற்கூறப்பெற்ற வயிராதராயன் எழுந்தருளி வித்திருக்கிறான் என்பது இவ்வூரின் மற்றொரு கல்வெட்டால் புலப்படுகிறது.[128] அவ்வாறு எழுந்தருளிவிக்கப் பெற்ற சுப்ரமண்யப் பிள்ளையாருக்கு மன்னன் கோப்பெருஞ்சிங்கனே, திருநெற்றிப் பட்டம், திருத்தோடு, திருஆரம், திருக்காற்சரி, திருக்கைச்சரி என 25 அணிகலன்களைக் கொடையளித்து மகிழ்ந்திருக்கிறான் என்பதும் இக்கல்வெட்டாலேயே தெரியலாகிறது.

## பிடாரி திருச்சிற்றம்பல மாகாளி

திருச்சிற்றம்பலம் உடையார் (நடராசர்) திருக்கடலுக்கு எழுந்தருளும் விக்கிரம சோழன் தெங்குத் திருவீதியின் தென் பக்கத்தில் காடவர் காலத்தில் பிடாரி திருச்சிற்றம்பல மாகாளி ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும், திருமட விளாகமும் அமைக்கப் பெற்றிருந்தது நடராசர் கோயில் கல்வெட்டு ஒன்றில் குறிக்கப்பெற்றிருக்கிறது.[129]

## ஆளப்பிறந்தீஸ்வர முடையார்

பாண்டிகுலாசனி வளநாட்டு, ஆற்காட்டுக் கூற்றத்துப் பெரும்மங்கலமுடையான் அரயன் உதையஞ் செய்தானான தொண்டைமான், விருதராசபயங்கர வளநாட்டு, மண்ணி நாட்டுத்

127 Ibid, No 142

128. Ibid, No 181.

129. Ibid, No 158.

திருமங்கலக்குடி பிராண நாயனார் கோயிலில், தாம் எழுந்தருளிவித்த உடையார் ஆளப்பிறந்தீஸ்வரமுடையார்க்குத் திருநாமத்துக் காணியாக நிலக்கொடை வழங்கியிருப்பது திருமங்கலக்குடி பிராண நாதேஸ்வரர் கோயில் கல்வெட்டொன்றினால்[130] அறியமுடிகிறது.

## நங்கையாழ்வீசுரமுடையார்க்குத் திருக்கோயில்

அவனி ஆளப்பிறந்தான் நீலகங்கரையர் தேவியார் கங்கையாழ்வார், தம் பெயரால் எழுந்தருளிவிக்கிற திருநங்கையாழ்வீசர முடையார்க்குத் திருக்கோயில் எழுப்புவதற்காகத் திருவண்ணாமலை உடைய நாயனார் கோயில் ஸ்ரீமாகேஸ்வரக் கண்காணி செய்வார்களும், தேவகன்மி, கோயில் கணக்கரும் சண்டேஸ்வரப் பெருவிலையாக (ஏலமுறையில்) நிலம் விற்றுத் தந்ததைத் திருவண்ணாமலைக் கோயில் கல்வெட்டு ஒன்று விவரித்துள்ளது.[131] விற்றுத் தந்த நிலத்தின் எல்லைகளைத் தெரிவிக்கையில், "திருக்காமக் கோட்டமுடைய தம்பிராட்டியார் கோயிலுக்குத் தெற்கு, திருமலையார் கூடத்துக்கு வடக்கு, வீராகரன் திருமதிளுக்குக் கிழக்கு, வாணாதராயன் திருமதிளில் வடமேலை மூலைக்கு மேற்கு" என்று தேவியின் கோயில், திருமலையார் கூடம், வீராகரன் திருமதிள் மற்றும் வாணாதராயன் திருமதிள் ஆகியவற்றை இக்கல்வெட்டு தெரிவித்திருக்கிறது.

காஞ்சிபுரம் மாவட்டம், திருநாகேஸ்வரம் கோயில் கல்வெட்டு, அக்கோயில் தேவரடியார் பொன்னாழ்வார் மகள் பிறையணிவாள் நுதலார் குட்டத்தில் தக்ஷிணாமூர்த்தி சிலையை எழுந்தளி வித்ததைத் தெரிவிக்கிறது.[131A]

## நிருத்தமண்டபம்

விழுப்புரம் மாவட்டம், ஜம்பைக் கல்வெட்டு[132] காட்டும் காலத்தில் நிகழ்ந்த ஒரு புதுமையான நிகழ்ச்சியைச் சித்திரிக்கிறது. இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனது 13-ஆம் ஆட்சியாண்டில்

130 Ibid, No.228

131 Ibid, No 108

131A. Ibid, No.204

132 Ibid, No.178.

சண்டையில், திருத்தான்தோன்றி ஆளுடைய நாயனார் கோயிலில் நிருத்த மண்டபம் (நாட்டிய சாலை) அமைப்பதற்காக, அவ்வூரைச் சேர்ந்த தேவரடியாள் பெற்றாழ்வியின் தம்பி ஆட்கொண்டான் தம் தலையை அரிந்துகொண்டதாக இக்கல்வெட்டு கூறுகிறது. இத்தீரச் செயலைப் போற்றுமுகத்தான் ஆட்கொண்டான் தம்பி அண்ணாமலைக்குக் கோயில் தானத்தார் நூற்றைம்பது குழி நிலம் இறையிலியாகத் தந்திருக்கின்றனர்.

## ஏழிசை மோகன் திருமண்டபம்

சோழப் பேரரசன் இரண்டாம் குலோத்துங்கனது 15-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1150), வடகரை விருதராஜபயங்கர வளநாட்டு, மேற்காநாட்டு இருங்கொளப்பாடியிலடங்கிய பருவூர்க் கூற்றத்து திருமுதுகுன்றமுடைய நாயனார்க்கு, அந்நாட்டுப் பிரமதேயம் உறுமூரான சோழபாண்டியச் சதுர்வேதி மங்கலமான எறும்பூரில் காணிஉடைய, பள்ளி, ஆளப்பிறந்தான் ஏழிசை மோகனான குலோத்துங்கச் சோழக் காடவர் ஆதித்தன், "மஹாஸ்தமனம்" (பெருநீராட்டு) செய்தருளுவதற்காகத் தன் பெயரால் "ஏழிசை மோகன் திருமண்டபம்" ஒன்றைத் திருக்கற்றளியாக அமைத்துத் தந்து, திருமுதுகுன்றமுடையார் தேவதானங்களிலிருந்து தமக்கு வரக்கூடிய பாடிக்காவல் உள்ளிட்ட அனைத்துவரிகளையும், அவ்விறைவன் கையில் நீர்வார்த்துக் கொடுத்திருக்கிறான்.[133] இக்கொடையை அவன் வமிசத்திலுள்ளாரும், அவனது சாதியைச் சார்ந்தாரும் மறுத்தல் கூடாது என்று ஆணையிட்டு எச்சரித்திருக்கிறான்.

இதே காடவராயன் சோழ மன்னன் இரண்டாம் இராசராசனது எட்டாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1154) எலவானாசூரிலும் தம் பெயரால் "ஏழிசை மோகன் திருமண்டபம்" என்று ஒரு மண்டபத்தை அமைத்துத் தந்திருப்பது எலவானாசூர்க் கிராமார்த்தநாதேஸ்வரர் கோயில் கல்வெட்டொன்றினால் புலனாகிறது.[134]

இதே காடவன், வடார்க்காடு மாவட்டம் (தற்போதைய திருவண்ணாமலை மாவட்டம்) திருவோத்தூர் வேதபுரீஸ்வரர்

133 S I I Vol VII, No 150

134 A.R.E 474 of 1937-38

கோயிலிலும் தம்பெயரால் "ஏழிசைமோகன் திருமண்டபம்" என்று ஒரு மண்டபத்தைக் கி.பி. 1150 இல் ஏற்படுத்தியிருக்கிறான்.[135]

## காடவர் காலத்தில் மடங்கள்

### "பிச்சா பிறைசூடி" ஆண்டார் திருமடம்

காடவ மன்னன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனது நான்காம் ஆட்சியாண்டில், திருவெண்ணைநல்லூர் உடையார் ஆட்கொண்ட தேவர் கோயிலுக்கு வடபக்கத்தில் அமைந்திருந்த ஆண்டார் "பிச்சா பிறைசூடி" ஆண்டார் திருமடமான திருவேடம் அழகியான் திருமடத்துக்கு, அணியன் மூவேந்தரையன் என்பான் 13 செறு அதாவது நான்கு மா நிலத்தை "மடப்புற"மாக, அனைத்து வரிகளையும் இறையிலி செய்து கொடை வழங்கியிருப்பது திருவெண்ணைநல்லூர்க் கல்வெட்டால் அறிய முடிகிறது.[136] இங்கு "பிச்சா" என்பது "பித்தா" என்பதன் மருஉ ஆகும். "பித்தா பிறைசூடி பெருமானே அருளாளாய்" என்பது தேவாரப் பாடலின் ஒரு வரி[136A]. அது திருவெண்ணைநல்லூர் இறைவன் மீது பாடப்பெற்றதாகும். அவ்வரியின் இரு சொற்கள் இங்கு மடத்துக்குப் பெயராக சூட்டப்பெற்றிருக்கிறது. இதைக் கல்வெட்டுத் துறையினரும், அறிஞர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் "பிச்சர் பிறைசூடி" என்று மாறுதலாகக் கொண்டிருக்கின்றனர்.

மேலும், இக்காடவர் காலத்தில் 'ஏழிசை மோகன் மடம்'[137] என்று ஒரு மடம் திருமுனைப்பாடியில் பெருந்தாமநல்லூரிலும், "திருநாவுக்கரசு தென்மடம்"[138] என்று ஒரு மடம் சிதம்பரம் அம்பல நாயகப் பெருந்தெருவிலும், "ஆண்டார் திருவுணாயகன்

135. Dr M S Govindasamy, Op Cit, p 150.

136. S I.I Vol. XII, No 141

136A "பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூர் அருட்டுறையுள்
அத்தா வுனக்காளா யினியல்லேனெனலாமே"
– சுந்தர மூர்த்தி நாயனார், திருவெண்ணைநல்லூர், பாடல் எண்.1.

137 A.R E 267 of 1939-40

138. S I.I. Vol XII, No 245, S I I Vol VIII, No 43

திருமடம்" ஒன்று விழுப்புரம் மாவட்டம், திருவாமாத்தூரிலும்[139], "வடக்கில் மடம்"[140] திருவண்ணாமலையிலும் அமைந்திருந்தன என்பது கல்வெட்டுக்களால் தெரிய வருகின்றன.

## திருநாட்களும், திருவிழாக்களும்

காடவர் காலங்களிலும் கோயில்களில் முக்கியத் திருநாட்களும், திருவிழாக்களும் முறையாக வெகு கோலாகலத்தோடு கொண்டாடப் பெற்றிருக்கின்றன.

## உத்தராயணத் திருநாள்

மிலாடாகிய ஜனநாத வளநாட்டுக் குறுக்கைக் கூற்றத்து நென்மலியான மிலாட மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்து கௌசிகன் பெருமாள் என்பானின் மனைவி சனகியாண்டாள், அந்நாட்டுத் திருக்கோவலூர்த் திருவிடைகழி நாயனார்க்கு **"உத்தராயணத்"** திருநாளுக்கு ஸர்வஞ்ஞ சம்யுக்தமாக (எல்லா ஆண்டுகளிலும்) ஒவ்வொரு ஆண்டும் தூணிப்பதக்கு (ஆறு மரக்கால்) அரிசியால் அமுது செய்தருளுவதற்கு, கோயில் பண்டாரத்தில் (கருவூலத்தில்) அன்றாடு நற்காசு (அன்று வழக்கிலிருந்த நற்காசு) இரண்டாயிரத் தெண்ணூறு வைத்தாள் என்பது திருக்கோயிலூர் திருவிக்ரமப் பெருமாள் கோயில் கல்வெட்டால்[141] உணரமுடிகிறது. இக்கொடையளிக்கப் பெற்ற நாள் தை மாதம், பூர்வ பக்ஷ ஏகாதசியும், வெள்ளிக்கிழமையும், கார்த்திகை நட்சத்திரமும் பொருந்திய நாளாகும். இந்தப் பஞ்சாங்கக் குறிப்புக்களைக் கொண்டு இக்கொடை வழங்கப்பெற்ற காலம் கி.பி. 1259, டிசம்பர்த் திங்கள், 26–ஆம் நாள், வெள்ளிக்கிழமை என்று கண்டறியப்பட்டிருக்கிறது.

## தைப் பூசத் திருநாள்

பெரும்பற்றப்புலியூர் திருச்சிற்றம்பலப் பெருமானுக்குத் தைப்பூசத் திருநாளில் திருப்பாவாடைச் சிறப்பு செய்வதற்காகத்

139 S I I Vol XII, No 143

140 Ibid, No 171

141 S.I.I Vol XII, No.203.

திருவண்ணாமலையில் வடக்கில் மடத்தில் இருந்த இராவளர் கைலாய தேவர், 10 கலம் போனகப் பழவரிசியும், 2 கலம் மணிப் பருப்பும், நாலு நிறை சர்க்கரையும், 100 தேங்காயும், 10 பலாக்காயும், 200 வழுதிலைக்காய் (கத்தரிக்காய்) ஆகியவற்றை அந்நாயனார் கோயில் குலோத்துங்கச் சோழன் திருமடைப்பள்ளி பண்டாரத்தில் சேர்த்திருப்பதைச் சிதம்பரத்திலுள்ள ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது.[142]

## சித்திரைத் திருநாள்

விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்டம், நெய்வணை ஸ்வர்ணகடேஸ்வரர் கோயில் கல்வெட்டு[143] அக்கோயிலில் **சித்திரைத் திருநாள்** நடைபெற்றதை எடுத்தியம்புகிறது. "சித்திரைத் திருநாள் திருவெழுச்சி திருச்சாந்து சாத்தியருள திருமந்திரபுவனம் திருப்பாவாடைக்கு" க் குத்தல் அரிசி இரு கலம்; அப்பத்துக்கு அரிசி குறுணி; கருப்புக்கட்டி, நெய், தயிர், உப்பு, மிளகு, அடைக்காயமுது (பாக்கு) ஆகியவற்றை, அரசன் திருத்தொண்ட நம்பியிடமிருந்து பெற்றுக்கொண்ட நெல் முப்பது கலத்தின் வட்டியைக் கொண்டு, திருநெல்வணை உடையார் **பொற்குடங்கொடுத்தருளிய நாயனார் கோயில்** முப்பது வட்டத்து (நாள் ஒன்றுக்கு ஒருவராக முப்பது நாளிலும் முப்பது பேர்) சிவபிராமணர் கொடுத்த செய்தி இக்கல்வெட்டு மூலம் புலனாகிறது.

## ஆனி, புரட்டாசித் திருநாட்கள்

திருமுனைப்பாடி திருவெண்ணைநல்லூர் நாட்டு பிரமதேயம் திருவெண்ணைநல்லூர் ஸ்ரீவைகுண்டத்து எம்பெருமானுக்குத் **திரு ஆனித்திருநாள்**, புரட்டாசித் **திருநாளைக்கும்**, அமுது படிக்கும் கறியமுதுள்ளிட்ட வியஞ்ஞனங்களுக்கும், திருவெள்ளறை காஸ்யபந் திரியம்பகன் திருச்சிற்றம்பலமுடையான் சுந்தரபாண்டிய பிரமமாராயன் தோட்ட நிலம் அளித்திருப்பதைத் திருவெண்ணை நல்லூர் வைகுண்டப் பெருமாள் கோயில் கல்வெட்டொன்று[144] கூறுகிறது.

142. S.I.I. Vol. XII, No.171

143 Ibid, No.244

144. S.I.I. Vol. XII, No.135.

## பங்குனித் திருநாள் மற்றும் சில முக்கியத் திருநாட்கள்

விழுப்புரம் மாவட்டம், திருத்தினைநகர் சிவாங்குரேஸ்வரர் கோயில் உண்ணாழியின் வடக்குச் சுவர் அடிப்பகுதியில் காணப்பெறும் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனது 22-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு[145] அந்நாயனாருக்கு "அமுதுபடி, சாத்துப்படி, திருமேற்பூச்சு, திருப்பரிசட்டம், பரிகலன்கள், பரிச்சின்னங்கள், அழகிய சீயன் நந்தாவிளக்கு, சந்தி விளக்கு ஆகியவற்றுக்கும், திருப்பங்குனித் திருநாளைக்கும் விஷு (மாதத் தொடக்க நாள் (அ) பகல், இரவு நாழிகை அளவில் ஒத்த நாள்), அயனம் (உத்தராயனம், தக்ஷிணாயனம்) ஸங்கிரம (சங்கிராந்திகள்) மற்றும் கிரஹணம் (சூரிய, சந்திர கிரஹணங்கள்) ஆகியவற்றுக்கும், திருப்பணிகளுக்கும் தேவதான, திருநாமத்துக்காணி நிலங்களிலிருந்து வரக்கூடிய அனைத்து வரிகளையும் இறையிலி செய்து இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனே அளித்தான் என்று கூறுகிறது.

## சந்தி வழிபாடு

கோயில்களில் "அந்தியம் போழ்து துடங்கி அர்த்தசாமம் அறுதியாக" விளக்குகள் நிலைபெற்று எரிவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருக்கின்றன.[146] அதே போன்று சந்தி வழிபாடு, சிறு காலை (விடியற்காலை) தொடங்கி அர்த்தசாமம் முடியவும் கோயில்களில் இன்றும் நடைபெற்று வருகின்றன. அத்தகைய வழிபாடுகளுள் ஒன்றான "சிறுகாலை வழிபாடு" திருவறையணி நல்லூரில் (அரகண்டநல்லூர்) நடைபெற்றிருப்பது அவ்வூர்க் கல்வெட்டால் தெரியவருகிறது.

திருவறையணிநல்லூர் இறைவன் ஒப்பொருவரும் இல்லாத நாயனாருக்கு, "சிறு காலைச் சந்தி", திருமந்திரப் போநகம், நித்தம் நிமந்தம், அமுதுபடி, மேற்பூச்சு, திருப்பரிசட்டம், திருவிளக்கு உள்பட்ட வெஞ்சநம் ஆகியவற்றைச் செய்வதற்கு நிலக் கொடை அளிக்கப்பெற்றிருகிறது.[147] கோயில்களில் நண்பகல் காலத்தில்

145 Ibid, No 221

146 S I I Vol XII, No 176

147 Ibid, No 137

உச்சிச் சந்தி வழிபாடு நடைபெற்றிருப்பது தஞ்சை மாவட்டம், பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டால்[148] பெறப்படுகிறது.

## அணிகலன்கள், பரிகலன்கள், பரிச்சின்னங்கள்

காடவர் காலத்தில் வழக்கிலிருந்த அணிகலன்கள் பற்றி முதலில் காணலாம். திருவாமத்தூர் அழகிய நாயனார் கோயிலில் புதிதாக எழுந்தருளிவித்த சுப்ரமண்ய பிள்ளையாற்கு இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன் செய்தளித்த திருவாபரணங்கள் கீழ்க்காணுமாறு:[149]

1. திருநெற்றிப்பட்டம் – 1, பொன் கழஞ்சு – 5
2. திருத்தோடு – 2, பொன் கழஞ்சு – 5
3. திரு ஆரம் – 1, பொன் கழஞ்சு – 7
4. திருக்காற்சரி, திருக்கைச்சரி – 2, பொன் கழஞ்சு – 8

## பிராயச்சித்தமாகச் செய்தளித்த நெற்றிப்பட்டம்

திருமுனைப்பாடிக் கீழாமூர் நாட்டுக் கூடல் அவனியாளப் பிறந்தானான கோப்பெருஞ்சிங்கன், பெரும்பலூரில் (பெரம்பலூரில்) போசள தண்ட நாயகர்களைப் போர்க்களத்தில் கொன்று, அவர்கள் பெண்டிர் பண்டாரங்களைக் கவர்ந்து கொண்டதற்குப் பிராயச்சித்தமாக (பரிகாரமாக) த் திருமுதுகுன்றமுடைய நாயனார்க்கு **"அவனியாளப் பிறந்தான்"** என்ற பெயரில் ரத்த **நெற்றிப் பட்டத்தையும்**, விளக்கெரிப்பதற்காகச் சில பசுக்களையும் கொடையளித்திருக்கிறான்.

இதே திருமுதுகுன்றமுடையார்க்குக் கோப்பெருஞ்சிங்கன் முதலிகளில் பெருமாள் பிள்ளையான சோழகோனார் செய்தளித்தத் திருப்பட்டம் ஒன்றினால் ஒன்பதே முக்கால் மாறி கல் எடை பொன் கொக்குவாய் உள்படப் பொன் முப்பத்தொரு கழஞ்சு என்று மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கிறது.[150]

---

148. Ibid, No 199

149 S I I Vol XII, No 181

*150 Ibid, No 167*

## கோப்பெருஞ்சிங்கன் மகள் கொடையளித்த ஆபரணங்கள்

திருவண்ணாமலை உடைய நாயானாருக்கு, கோப்பெருஞ் சிங்கன் மகளும், மீட்டாண்டார் தேவியுமான நாச்சியார், திருநீற்றுக் கோயில்-1, திருமுத்துவாளி-2, திருவாலத்தி-1, பட்டம்-2 ஆகியவற்றைக்[151] கொடை வழங்கியிருக்கிறார்.

## திருவண்ணாமலை உடையாருக்குக் கோப்பெருஞ்சிங்கன் சார்த்திய அணிகலன்கள்

அழகிய சீயன் அவனி ஆளப்பிறந்தான் தம் நான்காம் ஆட்சியாண்டில் திருவண்ணாமலை உடைய நாயனார்க்குச் சார்த்தியருள வழங்கிய பதக்கமாலை ஒன்றினால்,

| | | |
|---|---|---|
| நாயகக் கண்டம் | - 1 | |
| அருகுகண்டம் | - 6 | |
| கடைத் தொழில் | - 2 | |
| படுகண் | - 1 | |
| கொக்குவாய் | - 1 | இவற்றில் கட்டிய |
| கோமளம் | - 28 | |
| வயிரம் | - 1106 | |
| பருமுத்து | - 790 | |
| சிறுமுத்து | - 360 | |
| திரள் பவழம் | - 291 | |
| மாந்தோட்டுப் போத்தி | - 30 | |
| சிலந்தி | - 1 | |
| விதரம் | - 69 | |
| தடல் பளிங்கு | - 1 | |

151 S.I.I. Vol. XII, No 77

இவையும், பொன்னும், அரக்கும், நூலும் உட்பட பண்டாரக் கல்லால் எடை 302 பொன்.[152]

**பரிகலன்கள்**

திருவெண்ணைநல்லூர் உடையார் ஆட்கொண்ட தேவர்க்கு அவ்விறைவனின் தேவரடியார் அறமுடையார் மகன் திருமலையழகியானான வீரகள் வீரப்பல்லவரையன் செய்தளித்த பரிகலன்கள் கீழ்க்காணுமாறு:[153]

| | | |
|---|---|---|
| தூப மணி நாக்கும் நாராசமும் உட்பட பித்தளை | | எடை - 40 |
| தூபம் | - 1 | எடை - 14 |
| துடர் | - 1 | எடை - 18 |
| திருவாலத்தித் தட்டம் | - 1 | எடை - 16 |

இங்கு எடை 40 என்பது 40 பலத்தைக் குறிப்பதாக இருக்கும். அவ்வாறெனில், மொத்தம் 88 பலத்தில் பரிகலன்கள் செய்து அளிக்கப் பெற்றிருக்கின்றன.

திருக்கோவலூர் கைக்கோளன் நல்லார்க்கு நல்லன் கூத்தன் 42 பலம் எடைகொண்ட அபிஷேகக் கலசப் பானையொன்றை அரகண்டநல்லூர் இறைவனுக்குக் கொடையளித்திருக்கிறான்.[154]

திருவெண்ணைநல்லூர் உடையார் ஆட்கொண்ட தேவர்க்கு சிறுபுத்தூருடையான் பெருமாள் பழவாவணச் சொக்கன் (வயோதிகராக வந்து சுந்தரரைத் தடுத்தாட்கொண்டவர்) ராகுத்தராய வேளான் 118½ கழஞ்சு எடை கொண்ட வெள்ளித் தனிக்காளம் இரண்டைக் கொடை வழங்கியிருக்கிறான்.[155]

கூடல் அவனியாளப் பிறந்தான் காடவராயன் சாடும்பெருமாளின் திருமகளாரும், மீட்டாண்டாரின் நாச்சியார், உடையார் திருவண்ணாமலையுடைய நாயனாரைத் தெண்டன் பண்ணி (சேவித்து) விட்டு, அவரது பிராட்டியார் உண்ணாமுலை நாச்சியார்க்கு,

152. Ibid, No 103

153 S I I Vol XII, No.150

154 Ibid, No 45

155 Ibid, No 229

சட்டுவம் – 1, செலவுகல்லால் எடை 70 பொன்

தண்ணீரமுது வட்டில் – 1, செலவுகல்லால் எடை 30 பொன்

சட்டுவம் மாற்று – 8

வட்டில் மாற்று – 9½

ஆகியப் பரிகலன்களைச் செய்தளித்திருக்கிறார்.[156] இதே அம்மையார் திருவண்ணாமலை உடையார் கோயிலுக்கு மேலும் திருவாலத்தித்தட்டு-1 மற்றும் 2 தட்டுகள் ஆகியவற்றை வெள்ளியால் செய்து வழங்கி மகிழ்ந்திருக்கிறார்.[157]

**பரிச்சின்னம்**

சகலபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ கோபெருஞ்சிங்கதேவரின் 27-ஆம் ஆட்சியாண்டில், திருவெண்ணைநல்லூர் ஆட்கொண்ட தேவர்க்கு, மத்யஸ்தனான செஞ்சி உடையான் உதையன் ஸ்ரீ கைலாயமுடையான் "பிச்சன் என்று பாடச் சொன்னான்" என்ற திருச்சின்னம் இரண்டினை 55 கழஞ்சு எடை வெள்ளியால் செய்து வழங்கி வழிப்பட்டிருக்கிறான்.[158]

**கோயில் நிர்வாகிகள்**

தமிழ்நாட்டில் சில முக்கியக் கோயில்களில் அவற்றின் நிர்வாகத்தைக் கண்காணிப்பதற்கென்று சில நிர்வாகிகள் இருந்திருக்கின்றனர். உதாரணமாகச் சிதம்பரம் நடராசர் கோயில், திருவரங்கம் அரங்கநாதர் கோயில், திருவண்ணாமலை, திருவண்ணாமலையார் கோயில் ஆகியவற்றில் சில கோயில் அலுவலர்கள் இருந்து பணியாற்றியிருப்பது கல்வெட்டுக்களினால் தெரியவருகிறது.

சகலபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ அவனியாளப் பிறந்தாரான கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் சிதம்பரம் நடராசர் கோயிலில், "தென்னவன் பிரம்மமாராயர், ஐயதுங்கப் பல்லவரையர், உடையார் திருச்சிற்றம்பலமுடையார் கோயில் ஸ்ரீ மாஹேஸ்வர

156 S I I Vol VII, No 98

157 *Ibid*, No 78

158 Ibid, No.223

**கண்காணி, ஸ்ரீ கார்யஞ்செய்வார், ஸாமுதாயம் செய்வார், கோயில் நாயகஞ்செய்வார், திருமாளிகைக்கூறு செய்வார், கணக்கர்"** ஆகியோர கோயில் நிர்வாகிகளாக இருந்திருப்பதைச் சிதம்பரம் நடராசர் கோயில் கல்வெட்டுக்கள் மெய்ப்பிக்கின்றன.[159] இந்நிர்வாகிகள் குழுவில் மேலும் ஒருவரான **"பண்டாரப் பொத்தகம் உடையாரும்"** சேர்க்கப்பட்டிருந்தார் என்பது மற்றொரு கல்வெட்டினால்[160] புலனாகிறது. தில்லை நடராசப் பெருமான் கோயிலுக்கு யார் எத்தகையக் கொடை வழங்கினாலும் மேற்கூறப்பெற்ற நிர்வாகிகள் அதனை ஆய்ந்து அனுமதியளித்த பிறகே அது நிறைவேற்றப் பட்டிருக்கிறது. நிர்வாகிகள் அவற்றைப் பார்த்து அனுமதியளித்ததற்கு **"கண்டு விடு தந்ததாவது"** என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்பெற்றிருக்கிறது.

சோழர் காலத்தில் திருவரங்கம் அரங்கநாதர் கோயிலில் செயல்பட்ட நிர்வாகக் குழுவினர், அவ்வப்போது மாற்றியமைக்கப் பெற்ற விபரம் திருவரங்கம்[161] கல்வெட்டு ஒன்றினால் அறிய முடிகிறது.

திருவண்ணாமலை, திருவண்ணாமலை உடையநாயனார் கோயிலில் **"ஸ்ரீமாகேஸ்வரக் கண்காணி செய்வாரும், தானத்தாரும், தேவகன்மிகளும், கோயில் கணக்கரும்"** கோயில் நிர்வாகிகளாக இருந்திருப்பது சோழர் காலக் கல்வெட்டடால்[162] உணரமுடிகிறது.

## காடவர் காலச் சமூகம்

காடவர் காலத்தில் மக்கள் பல்வேறு பிரிவினர்களாகப் பிரிந்து வாழ்ந்திருக்கின்றனர் என்பது வெளிப்படை. அதுமட்டுமல்லாமல் அப்பிரிவனரில் உயர்வு, தாழ்வும் மிகவும் கொடூரமாக நிலவியிருந்திருக்கிறது என்பதும் மறுக்க இயலா உண்மையாகும். பிற்காலச் சோழர் காலத்தில் வழக்கிலிருந்த அத்தகைய பாகுபாடு காடவர் காலத்திலும் தொடர்ந்திருப்பதில் வியப்பதற்கொன்றுமில்லை.

159 S I I Vol XII, Nos 151, 201

160 Ibid, No 245

161 S I I Vol XXIV, Nos 202, 203, 267

162 S I I Vol VIII, No 83

தமிழ்நாட்டில் சோழர் ஆட்சி தமிழகம் முழுமைக்கும் நிலவிய காலகட்டத்தில்தான், காடவர் ஒரு சிறு பகுதியைத் தம் வசப்படுத்திக்கொண்டு தொடக்கக் காலத்தில் சோழர்க்கடங்கியும், நாளாக நாளாகச் சோழப் பேரரசிடமிருந்து விடுபட்டு தன்னாட்சியை நிலை நாட்டிக்கொண்டும், சிறிது காலமே ஆளமுடிந்தது. அந்த நிலையில் காடவர், தங்களது பேரரசு கடைப்பிடித்த மக்கள் பிரிவுகளையே இவர்களும் ஏற்றுக்கொண்டு தங்களது ஆட்சியைத் தொடர முடிந்தது. பிரிவுகள் (சாதிப் பிரிவுகள்) வேரூன்றி இருந்திருக்கிறது. சிலப் பகுதிகளில் இவ்வினப்பாகுபாடு சற்று கூடுதலாகவே இருந்திருப்பது கல்வெட்டுக்கள் மூலம் பெறமுடிகிறது.

சோழ மன்னன் மூன்றாம் இராசேந்திரன் ஆட்சிக்காலத்தில், அதாவது சக ஆண்டு 1180க்குச் சரியான கி.பி. 1258 இல் திருவண்ணாமலை மாவட்டம் செங்கமா ரிஷபேஸ்வரர் கோயிலில் (திருஇடவந்துறை நாயனார் கோயில்) தீட்டப்பெற்றுள்ள ஒரு கல்வெட்டு[163] அக்காலத்தில் தமிழகத்தின் ஒரு பகுதியில் நிலவிய மக்கள் பிரிவைப் பற்றி மிக விளக்கமாகக் கூறியிருக்கிறது.

இதில், "அந்தணன் தலையாக அரிப்பன் கடையாக" என்று கூறி அப்பொழுது மக்களிடையே இருந்த சாதிப் பாகுபாட்டைப் படம் பிடித்துக் காட்டுகிறது. "அரிப்பன்" என்பான் கழிவுநீர் அகற்று பவன் என்பது திருவண்ணாமலைக் கல்வெட்டால் புலனாகிறது.[164]

1. அடிவாரத்து மலையாளர் (மலையடிவாரத்து மக்கள்)
2. மலையாள முதலிகள் (அவர்களில் தலைவர்களாக இருப்போர்)
3. முதுநீர் மலையாளர் (மலையருவிகளின் அருகில் வாழ்வோர்)
4. மலையரண் முதலிகள் (மலையரண்களில் காவல் புரிவோர்)
5. செட்டிகள் (நிலையாக ஒரு இடத்தில் இருந்து வணிகம் செய்வோர்)

---

11 Vol VII, No 118

+ செங்கம கலவெட்டில கூறியிருபபதுபோ . திருவணணாமலைக கலவெட்டு ஒனறிலும, (S I I Vol VIII, Nos 151), "பூசிககு நமபியாா தலையாகக கழுநீர் போகயிடுவான கடையாக" எனறு பலசாதிகள இருநதமையை மறைமுகமாக உணாததுகிறது.

6. வாணிகர் ( பல்வேறு இடங்களுக்குச் சென்று வணிகம் செய்வோர்)

7. கணக்கர் ( கணக்கெழுதுபவர்)

8. கருமப்பேர் (காரியம் ஆற்றுவோர்)

9. பன்னாட்டவர் (வன்னியர்)

10. பன்னாட்டு முதலிகள் (வன்னியத் தலைவர்கள்)

11. பொற்கொ(ல்லர்) (பொன் அணிகலன்கள் செய்வோர்)

12. கைக்கோளர் (துணி நெய்வோர்)

13. ஆண்டார்கள் (மடத்துத்தம்பிரான்கள்)

14. சிவப்ராமணர் (கோயிற் பூசை செய்வோர்)

15. மன்றாடிகள் (இடையர்கள்)

16. உவச்சர் (கோயில்களில் பறையறைவோர்)

17. நாட்டவர் (வேளாளர்)

18. புலவர் (கற்றறிந்தோர்)

19. பண்ணுவார் (இசை எழுப்புவோர்)

20. நியாயத்தார் (நடுநிலை வகிப்போர்)

21. பெரும்வேடர் (வேட்டைத் தொழிலில் உயர்ந்தோர்)

22. பாணர் (பாட்டுப்பாடி நடிப்பவர்)

23. பறையர் (ஊர்களில் பறையறைவோர்)

24. பறை முதலிகள் (பறையறைபவர்களில் தலைவர்)

25. சக்கிலியர் (தோல் தொழில் புரிபவர்)

26. இருளர் (எலி மற்றும் பாம்பு பிடிப்போர்)

மேலே கண்ட 26 சாதிப்பிரிவுகள் கி.பி. 13– ஆம் நூற்றாண்டில் செங்கம் பகுதியில் இருந்தமை வெளிப்படுகிறது. மேற்கூறப்பெற்ற அனைத்துச் சாதியினரும் சேர்ந்து ஓர் உடன்படிக்கை செய்து

கொள்கின்றனர். இவ்வுடன்படிக்கையை யாராவது ஒருவர் ஒப்புக் கொள்ளவில்லையென்று கூறினாலும் அல்லது மறுத்தாலும், "அவர்கள் தங்கள் தாய்க்குத் தாங்களே மிணாளன் (மணவாளன்) என்றும்; அசல் வன்னியர் குதிரைக்குப் புல்லு பறிக்கிற பறையருக்கு எங்கள் பெண்டுகளைக் கொடுத்தோமாகில் படுக்க" என்றும் எச்சரிக்கப் பெற்றிருக்கிறது. இதில் கூறப்பெற்றுள்ள "அசல் வன்னியர்" என்ற சொல்லுக்கு முனைவர் இரா. நாகசாமி "உண்மையான வணிகர்" என்று தவறாகப் பொருள் கொண்டிருக்கிறார்.[164A] அசல் வன்னியர் என்றால் தூய்மையான வன்னியர் (பன்னாட்டார் (அ) பள்ளி என்போர்) என்று பொருள்.

## காடவர் காலத்தில் நிலவிய சாதிப்பிரிவுகள்

### பள்ளி

காடவ வேந்தர்களில் சிலர் தங்களைப் 'பள்ளி' என்றே அழைத்துக் கொண்டிருக்கின்றனர்.

விருதராயபயங்கர வளநாட்டுப் பிரமதேயம் உறுமுரான சோழபாண்டியச் சதுர்வேதி மங்கலமான எறும்பூர் காணி உடைய **பள்ளி ஆளப்பிறந்தான் ஏழிசை மோகனான குலோத்துங்கச் சோழக் காடவராதித்தன்**, சோழ மன்னன் இரண்டாம் குலோத்துங்கள் காலத்தில் வாழ்ந்திருக்கிறான்.[165]

இராஜராஜ வளநாட்டு திருமுனைப்பாடி மேலூர் நாட்டுத் திருநாவலூரான இராசாதித்தபுரத்து (திருநாவலூர்) உடையார் திருத்தொண்டீஸ்வரமுடையார்க்குப் பெறுகனூர் நாட்டுக் கூடலூர் **பள்ளி ஆளப்பிறந்தான் மோகனான குலோத்துங்க சோழக் கச்சியராயன்**[166] "மகர தோரணம்" ஒன்றைக் கொடை வழங்கியிருக்கிறான். மேலே குறிக்கப் பெற்ற விருத்தாசலம் கல்வெட்டில் காணப்பெறும் காடவராயனே இவனும் ஆவான். இக்காடவராயன் "பள்ளி" பிரிவைச் சேர்ந்தவன் என்பது தெளிவு.

164A Dr R Nagaswamy Studies in Ancient Tamil Law and Society, (1978) p 83

165 S I I Vol VII, No 150

166 Ibid, No 1004

கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் கல்வெட்டு, மேற்கூறப்பெற்ற காணியுடைய பள்ளி ஆளப்பிறந்தான் ஏழிசை மோகான குலோத்துங்கச் சோழக்காடவராயனே தம் உடல் நலத்துக்காகவும், தம் குடும்பத்தார் உடல் நலத்துக்காகவும், தம் பாடி காவல் வரி மற்றும் தமக்குச் சேரவேண்டிய வரிகளையும் கொடையாக விருதராயபயங்கர வளநாட்டு, மேற்காநாடு இருங்கொளப்பாடி, விளந்தைக் கூற்றத்து திருமுட்டம் இறைவனுக்கு வழங்கியிருக்கிறான் என்று தெரிவிக்கிறது.[167]

இந்நாயனார் கோயில் காவல் காணி உடைய பள்ளிகளில் நெற்குப்பை ஆழ்வான் மகன் அடைப்பு (அடைக்கலத்திலுள்ளவன்-அதாவது தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டில் காணப்பெறும் அடைகுடி) திருக்கற்றுறையுடையான் குன்றமுத்தரையன் திருநந்தாவிளக்கு அமைத்ததை விருத்தாசலம் கல்வெட்டு குறிக்கிறது.[168]

## வன்னியர்

பெண்ணையாற்றின் வடகரையில் அமைந்துள்ள செய்குன்றநாட்டு சேரி மண்டலத்து ஆவூர் உடையார் திருவகத்தீஸ்வரம் உடைய நாயனார்க்கு "வன்னியனார் ஆன மானாபரணச் சேதியராயர்" "கலியாணசுந்தரர்" திருமேனி செய்து அளித்திருக்கிறார்.[169]

இதே "வன்னியநாயன் சேதியராயன்" இதே இறைவனுக்குத் திருநாளைக்குத் திருச்சாந்து சாத்தவும் திருவாய்பழவம், திருமஞ்சன திரவியமும், சிதாரியும் இடுவதற்காக நிலக்கொடை வழங்கியிருக்கிறான்.[170] இவன் அளித்த கொடைக்கு மறுப்பு கூறுவார் "தான் ஏறும் குதிரைக்குப் புல்லு இடுகிற வெட்டியானுக்குத் தன் மிணாட்டியை (மணவாட்டியை) குடுத்திடுவான்" என்ற எச்சரிக்கை இந்த ஆவூர்

---

167 S I I Vol XII, Appendix- B , No 5

168 S I I Vol XII, No 131

169 Ibid, No 240

170 Ibid, No 241

(திருவண்ணாமலை மாவட்டம்) கல்வெட்டில் கூறப்பெற்றிருக்கிறது. இதன் மூலம் *"வெட்டியான்"* என்ற சமூகப்பிரிவும் தெரியவருகிறது. செங்கம் கல்வெட்டொன்று[170A] "வன்னிய மக்கள் நாயன்" கரிகாலச் சோழ ஆடையூர் நாடாழ்வானைக் குறிக்கிறது.

## பிற பிரிவுகள்

காடவர் காலக் கல்வெட்டுக்களில் வரிகள் பற்றிக் குறிக்கப்படுமிடங்களில் சில சமூகத்தினர் மீது விதிக்கப்பெற்றிருந்த வரிகள் பற்றியும் அறிய முடிகிறது. அப்பொழுது அச்சமூகப் பிரிவுகளையும் தெரிந்து கொள்ள அவை உதவுகின்றன. அத்தகைய *சில கல்வெட்டுக்களைப் பார்க்கலாம்.*

திருவண்ணாமலைக் கல்வெட்டு,[171] ஆயவற்கங்களைக் கூறுமிடத்து "தைச்சும் (தச்சர்) கொல்லும் (கொல்லர்), குசமும் (குயவர்), தோலொட்டும் (தோல் தொழில் செய்வார்), வெறுதண்டும் (குற்றத் தண்டம் விதிக்கப்பட்டோர்?), செக்கிறை (செக்கார்) ஆகிய சமூகப் பிரிவுகளைப் புலப்படுத்துகிறது.

திண்டிவனம் வட்டம், முன்னூர்க் கல்வெட்டில் "தறியிறை (நெசவாளர்), தட்டார்ப்பாட்டம் (தட்டார்), செக்குக் கடமை (செக்கார்), வாணியர் பேர்க்கடமை (வாணியர்) ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.[172]

ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம், மேல்பாடிக் கல்வெட்டொன்று, செட்டிகள், வாணியர், மன்றாடி(இடையர்) ஆகியோரைக் குறித்துள்ளது.[173] இவர்கள் திருவிளக்கு மன்றாடிகள்[173A], மன்றாடிக் குடிகள் என்றும் கல்வெட்டுக்களில்[174] காணப்படுகின்றனர். மேலும், "சுரபி மன்றாடிகள்" என்றும் பேசப்பட்டுள்ளனர்.[175]

---

170A S I I Vol VII, No 117

171 S I I Vol VIII, No 79

172 S I I Vol XII, No 134

173 Ibid, No 202

S I I Vol VIII, No 109

174 Ibid, No 168

175 Ibid, No 122

மேலும் வேளாளர்[176], பதினெண்பூமி திசை விளங்கு திறலாயிரத்து திகழ் வாணிகர்[177], அகம்படியார்[178], சாலியார்[179], சிவபிராமணர்[180] ஆகிய வெவ்வேறு பிரிவினரும் வாழ்ந்திருக்கின்றனர்.

மேற்கூறப்பட்ட பிரிவினர்களுள் சில பிரிவினரை அடித்தட்டு நிலையில் அக்காலச் சமூகம் கருதியிருக்கிறது. எடுத்துக்காட்டாகச் சில வாக்கியங்களைக் கீழே காணலாம்:

1. "கோமாங்ஸத்தை புஜித்தானுமாய், ஒருவனுக்கும் ஒருத்திக்கும் பிறவாதானுமாய், மோவாய் புக்கு முலையெழுந்தானுமாய்" என்று பசு மாமிசத்தைச் சாப்பிட்டவர்கள் மிகவும் கீழோராகக் கருதப்பட்டனர் என்பதைக் காட்டுகிறது[181]

2. "பெண்டிழந்தானுக்கு செருப்புமெடுத்து தம்பலமுந் தின்று அவன் காலடிக்கீழ் இருந்தானாவான்"[182]

3. "இது மாறுவான் மிணாட்டியை (மணவாட்டியை) பறையனுக்குக் குடுப்பான்"[183]

4. "கோமாங்ஸத்து பக்ஷித்து சமணர்க்கு குண்டிகை எடுப்பான்"[184]

5. "சக்கிலிக்கு தெரிசனம் காட்டி (நந்தனார்க்கு அருள்பாலித்தது) தோலாலே செய்த திருவடிநிலைக்கு மேல்) கடுக்குகைய்க்கு[184A] பத்துக்குப் போத செம்பொன்

176 Ibid, Nos 227, 229

177 Ibid, No 236

178 Ibid, No 140

179 Ibid, No 154

180 Ibid, Nos 154, 162, 177

181 S I I Vol VIII, No 90

182 Ibid, No 128

183 Ibid, No 139

184 Ibid, No 150

184A. "கடுக்கின" என்ற சொல் தஞ்சாவூர் பெருவுடையார் கோயில் கல்வெட்டில் காணப்படுகிறது. (S I I Vol II, Part II, No 60, p 245)

அறு கழஞ்சு"[185] (மூன்றாம் குலோத்துங்கச் சோழன் காலத்ததாகலாம் இக்கல்வெட்டு)

**6. "அசல் வன்னியர் குதிரைக்குப் புல்லுப் பறிக்கிற பறையற்கு எங்கள் பெண்டுகளைக் குடுத்தோமாகில் படுக்க"[186]**

**7. "இப்படிக்குத் தப்பினேனாகில் என் ஓட்டை, யான் யெடுத்துத் தம்பலமும் கலச் சோறுந் தின்றேனாவேன்** *விக்கிரம சோழச் சம்புவராயனேன்*[187]

8. "இப்படியால் வந்தவையிற்றில் உரி கடை (யாகவும்) நாழி தலையாகவும்; ஒரு காசு (தலையாகவும்) ஒரு சின்னம் கடையாகவும் கொள்வான் சிவத்துரோஹியுமாய்" மற்ற பாவங்களைச் செய்தானுமாய்க் கருதப்படுவான்.[188]

9. "இது இறக்குவான் மதுராந்தக வேளான் கலச் சோற்றைத் தின்பான்"[189] (மூன்றாம் குலோத்துங்கன் காலம்)

**10. "தன் ஓட்டை தாமே எடுத்து (பறைய)ற்கு செருப்பெடுத்துத் தம்பலமும் தின்று அவன் கட்டில் கீழிருந்தானாவான்"[190]**

சோழர் ஆட்சியின் பிற்பகுதியிலும், காடவர் ஆட்சிக் காலத்திலும் சமுதாயத்தில் மக்கள் பிரிவு (சாதிப்பிரிவு) எந்த நிலையில் இருந்திருக்கிறது என்பதையும், எத்தகைய மாந்தர் அச்சமூகத்தில் கீழ்நிலையில் வைக்கப்பெற்றிருந்தனர் என்பதையும் மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள கல்வெட்டுச் சான்றுகளால் உணர்ந்துகொள்ளலாம்.

185 Ibid, No 151

186 S I I Vol VIII, No 118

187 Ibid No 127

188 [illegible] Nos 90, 102, 123 148

189 Ibid No 137

190 Ibid, No 149

## காடவர் காலத்தியக் காசுகள்

இவர்கள் ஆட்சிக்காலத்தில் கழஞ்சு[191], பழங்காசு[192], புதுக்காசு[193], கண்டகோபாலன் புதுமாடை[194], அன்றாடு கண்டகோபாலன் வாசிபடா புதுமாடை[195], நெல்லூர் மாடை[196], பணம்[197] ஆகியவை வழக்கிலிருந்திருக்கின்றன. ஒவ்வொன்றும் எவ்வளவு மதிப்புடையது என்பதை அறிய இயலவில்லை. கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், திருநாரையூர் பொல்லாப்பிள்ளையார் கோயில், சுந்தரேஸ்வரர் சந்நிதியின் தெற்குச் சுவற்றில் பொறிக்கப்பெற்றுள்ள கல்வெட்டில்[198] இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனது ஏழாம் ஆட்சியாண்டில் நிகழ்ந்த நில விற்பனையில் 60 மாநிலம் 1,20,000 காசுகளுக்கு விற்கப்பட்டது என்பது தெரியவருகிறது. இதன் மூலம் ஒரு மாநிலம் 20,000 காசுக்கு விற்கப்பட்டிருக்கிறது. இக்காசு அக்கால வழக்கிலிருந்த பழங்காசா அல்லது புதுக்காசா என்பதும் புரியவில்லை.

## காடவர் கல்வெட்டுக்கள் காட்டும் சிதம்பரம் திருவீதிகள்

நடராசர் கோயில் அமைந்துள்ள சிதம்பரம் தனியூரில் 1) ராஜாக்கள் தம்பிரான் திருவீதி[199], 2) விக்கிரமசோழன் தெங்கு திருவீதி[200], 3) கோப்பெருஞ்சிங்கன் திருவீதி[201], 4) குலோத்துங்கச் சோழன் தெங்கு திருவீதி[202], 5) அம்பலநாயகப் பெருந்தெரு[203]

191 S I I Vol XII, No 181

192 Ibid, No 214

193 Ibid, No 187

194 Ibid, No 190

195 Ibid, No 190

196 Ibid, No 218

197 Ibid, No 205

198 Ibid, No 153

199 S I.I Vol XII, Nos 154, 245, S I I. Vol VIII, No 43

200 Ibid, No 159

201. Ibid, No 154

202 Ibid, No 154

203 Ibid, No 245; S I I. Vol. VIII, No 43

என்று பல வீதிகள் இருந்திருக்கின்றன என்பது கோப்பெருஞ்சிங்கன் காலக் கல்வெட்டுக்களினால் அறிந்துகொள்ள முடிகிறது.

## விக்கிரம சோழன் அக்கன் பள்ளிப்படை

இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனது பத்தாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பெற்றுள்ள சிதம்பரம் கல்வெட்டில்[204], "நாயகர் திருக்கடலுக்கு எழுந்தருளும் விக்கிரமசோழன் தெங்குத் திருவீதித் தென்பக்கத்து எழுந்தருளிவித்த பிடாரி திருச்சிற்றம்பல மாகாளி ஸ்ரீ கோயிலும் திருமுற்றமும் திருமட விளாகத்திலும் அகப்பட்ட பள்ளிப்படையான விக்கிரமசோழநல்லூர்" குறிக்கப்பட்டுள்ளது. "பள்ளிப்படை விக்கிரமசோழநல்லூர்" என்று இக்கல்வெட்டில் கூறப்படுவது, முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டில் காணப்பெறும் "அக்கன்பள்ளிப்படை" யாகத்தான் இருக்கும் என்றும்; இப்பள்ளிப்படையில் விக்கிரமசோழனது தமக்கையார் அடக்கம் செய்யப்பெற்றிருக்கலாம் என்றும் நடுவணரசு கல்வெட்டுத் துறையினர் கருதியுள்ளனர்.[205]

## பண்டாரங்கள் (கருவூலங்கள்)

"உடையார் திருச்சிற்றம்பலமுடையார் கோயிலுக்குச் செய்துவரும் கோயில் குடிமைகளு, மடவரிசி திருவாரங்களும், "தில்லைநாயகன் பெரும்பண்டாரத்துக்கு முதலாக அளக்கும் வீரபோக நெல்லும் இறுக்கவும் மூலபருடையார் எழுதிவைத்த நியோகம் (பட்டியல்), திருக்கை ஒட்டிப் பண்டாரத்தில் ஒடுக்கி" என்று சிதம்பரம் நடராசர் கோயில், மஹிஷாசுரமர்த்தனி சந்நிதி கல்வெட்டொன்று[206] கூறுகிறது. தில்லை நடராசப் பெருமான் கோயிலில் கோப்பெருஞ்சிங்கன் காலத்தில் இருந்த "தில்லை நாயகன் பெரும்பண்டாரம்" இதனால் அறிய முடிகிறது.

இதேபோன்று, இக்கோயிலில் திருமடைப்பள்ளிக் (சமையற்கூடம்) கெனத் தனியாகத் திருமடைப்பள்ளிப் பண்டாரம் இருந்திருப்பது, இக்கோயிலின் மற்றொரு கல்வெட்டால்

204 Ibid, No 159

205 Ibid, No 159, Introduction

206 S.I I Vol XII, Nos 175

புலனாகிறது.[207] அக்கல்வெட்டின் வாசகம் கீழ்வருமாறு காணப்படுகிறது.

"திருத்தைப் பூசத் திருநாளிலே திருப்பாவாடைச் சிறப்பாக அமுதுபடிக்கு ஊர் இளங்காலாலே (சிறு அளவைககருவி) பதின்கலனுக்குப் போனகபழவரிசியும், இருகல மணிப்பருப்பும், நாலு நிறை சற்கரையும், நூறு தேங்காயும் பத்துப் பாலாக்காயும் இச்..... தோறும் இருநூறு வழுதிலைக்காயும் "குலோத் துங்கச் சோழன் திருமடைப் பள்ளி பண்டாரத்திலே முதலிடவும்"

## காடவர் காலத்தியச் சில வழக்குச் சொற்கள்

1. சகலபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ அவனி ஆளப்பிறந்தாரான கோப்பெருஞ்சிங்க தேவற்கு யாண்டு 11ஆவது கோட்டு நாள் 113 னால்.[208]

2. இளந்தேவன் பொன்னம்பலக் கூத்தர் சிங்காரவள் முடிகவிழ்த்தான்[209]

3. கொடிபசு, சூளறவு[210]

4. தேவர் திருக்கை வழக்கம்[211]

5. உத்தேஸம்[212]

6. மூலப்படி[213]

7. சவளி அகரமான திருச்சிற்றம்பலசருப்பேதி மங்கலம்[214]

8. காட்டு[215]

207 Ibid, No 171
208 S I I Vol XII, No 167
209 Ibid, No 211
210 S I I Vol XII, No 150
211 S I I Vol XII, No 189
212 Ibid, No 135
213 S I I Vol XII, No 166
214 Ibid, No 154
215 Ibid, No 213

9. தட்டற[216]

10. பட்டான[216A]

11. *சிகை*[216B]

12. மெ(ய்)ப்பாட்டுத் திட்டு[216C]

13. ஆடி அருள[216D]

## மேற்கூறப்பெற்ற வழக்குச் சொற்களுக்கான பொருள்

1. கோட்டு நாள் : கூட்டல் நாளையோ அல்லது கோடு இட்டு கணக்கிடும் நாளையோ குறிப்பதாகலாம்.

2. இளந்தேவன் பொன்னம்பலக்கூத்தர் சிங்காரவள *முடிகவித்தான்: தில்லைத் திருச்சிற்றம்பலத்து ஐந்தெழுத்துப்* (நமசிவாய) படிக்கட்டில் உட்கார வைத்து சோழர்குல அரசர்களுக்கு முடி சூட்டும் பணி செய்தாருள் ஒருவராக இருக்கலாம்.

3. கங்கைக்கரையில் கொடிப்பசுக் கொன்றான் : ஒருவர் செய்த கொடையை யாரேனும் அழிக்க நினைத்தால் அவர் கங்கையாற்றங்கரையில் ஒரு பசுவின் கன்றைக் கொன்றார் பெறும் பாவம் பெறுவார். வல்லவரையன் சூளறவு : வல்லவரையன் சூளுரை (சத்தியம் – சபதம்)

4. திருக்கை வழக்கமாக : *கொடையாக*

5. உத்தேஸம் : தோராயம், ஏறக்குறைய, மிகுதிக்குறைமை

6. மூலப்படிகள் : மூல ஆவணங்கள் (Parental documents)

7. சவளி அகரமான திருச்சிற்றம்பல சருப்பேதி மங்கலம் : துணி நெய்வார் வாழ்ந்த இடமான பிராமணர் ஊர்

8. காட்டு : *பாதுகாவலர், முதுகண்*

9. தட்டற : தடைப்படாமல்

---

*216 Ibid, No 213*

216A. Ibid, No 199

216B. Ibid, No 199

216C Ibid, No 238

216D Ibid, No 124

10. பட்டான : பற்றான

11. சிகை காசு : நிலுவைக் காசு

12. மெ(ய்)ப்பாட்டுத் திட்டு : உறுதிமொழிச்சீட்டு

13. ஆடி அருள - அபிஷேகம்

## காடவர் காலத்தில் மக்கள் உறவுமுறை

காடவர் காலக் கல்வெட்டுக்களில் கீழே குறிப்பிடப்பெற்றுள்ள உறவுப் பெயர்கள் காணப்படுகின்றன.

1. பெரிய தேவர்[217] - தந்தை

1A. ஐய்ய தேவர்[217A] - தந்தை

2. மைச்சுனி[218] - மைத்துனி, மனைவியின் தங்கை

3. கொழுந்தன்[219] - கணவனின் சகோதரன் (உடன் பிறப்பு)

4. மகன்[220] - ஒருவரின் ஆண் மகவு

5. மகள்[221] - ஒருவரின் பெண் மகவு

6. பிராட்டியார்[222] - மனைவி

7. தம்பி[223] - ஒருவரின் உடன் பிறந்தாரில் இளையவர்

8. பாட்டி[223A] - ஒருவரின் தந்தையின் (அ) தாயின் அம்மா

## சிதம்பரம் கீழைக்கோபுரத்து நாட்டியக் கரணச் சிற்பங்கள்

ஆந்திர மாநிலம், கர்நூல் மாவட்டம், திரிபுராந்தகம்[224] என்னும் ஊரில் 1905 ஆம் ஆண்டுவாக்கில் ராய் பகதூர் வெங்கையாவால்

217 S I I. Vol XII, No 215
217A S I I Vol. VIII, No. 102
218 Ibid, No 218
219 Ibid, No 199
220. S.I I. Vol XII, No 199
221. Ibid, No 204, S I I Vol XII, No. 77
222 S I I. Vol XII, Nos 108
223. Ibid, No.237. 223A. A.R.E 379 of 1937-38
224. S.I.I. Vol. XII, No. 247, A.R.E for 1905, part II, (1906), PARA 5; A.R.E. for 1911-1914, part II, (1914), para 2

கண்டுபிடிக்கப்பெற்ற மூன்று மொழிக்கல்வெட்டுகளில் (வடமொழி, இந்தி மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில்) வடமொழியில் காணப்பெறுவது தென்னிந்தியக் கல்வெட்டுக்கள் தொகுதி 12-இல், பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

கிரந்த எழுத்தில் உள்ள கல்வெட்டில் மஹாராஜஸிம்ஹன் (இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன்) புகழ் விதந்து பாராட்டப் பட்டிருக்கிறது. இவன் ஜீயமஹிபதிக்கும் ஷீலாவதிக்கும் பிறந்தவன் என்றும், காடக (காடவ) குலத்தின் மிகச் சிறந்த அணிகலன் என்றும், காவிரி பாயும் நாடான சோழ நாட்டை வென்றதனால் கவரப்பட்ட பொருட்களைக் கொண்டு, கனக சபைக்குக் கிழக்கே, கீழைக் கோபுரத்தை மேரு மலை போன்றதும், தேவர் கூட்டங்களுடைய மகுடங்களோடு இடறக்கூடியதுமாகிய கோபுரத்தைத் தன் பெயரால், மிகவும் குறைந்த கால அளவிலலேயே எடுப்பித்தான் என்றும் கூறியிருக்கிறது.

கிழக்குக் கோபுரம் மற்றும் மேற்குக் கோபுரங்களின் நுழைவுவாயிலின் உட்பக்கச் சுவர்களில் நடன மங்கையர்களின் நாட்டியக் கரணங்கள் சிறு புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பெற்றிருக்கின்றன. கிழக்குக் கோபுரத்தில் மட்டும் 93 நாட்டியக் கரணச் சிற்பங்கள் காணப்பெறுகின்றன. அவற்றின் ஒளிப்படங்கள் 1914-ஆம் ஆண்டு இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கையில், பகுதி இரண்டில், பக்கம் 82 ஐ அடுத்து உள்ள ஏழு பக்கங்களில் வெளியிடப்பட்டிருக்கின்றன. கோபுரத்தில் வடிக்கப்பட்டுள்ள நாட்டியக் கரணச் சிற்பங்களுக்கு மேலே உள்ள வெற்றிடத்தில் கிரந்த எழுத்தில் அக்கரணங்கள் பற்றிய "பாரதீய நாட்ய சாஸ்த்ர" சமஸ்கிருத ஸ்லோகங்கள் எழுதப்பெற்றிருக் கின்றன.

"பாரதீய நாட்ய ஸாஸ்த்ரத்தில்" குறிக்கப்பெற்றிருக்கின்ற கரணங்கள்தான் இக்கோபுரத்தில் சிற்பங்கள் வடிவில் செதுக்கப்பெற்று காட்சி தருகின்றன என்று நம்பப்படுகிறது. இங்கு செதுக்கப்பெற்றுள்ள கரணச் சிற்பங்கள் எந்தெந்த கரணத்தை வெளிப்படுத்துகின்றன என்பதையும், அவற்றைப் புலப்படுத்தும் "பாரதீய நாட்ய ஸாஸ்த்ர" ஸ்லோகம் எது என்பது பற்றியும்

தெளிவாக மேலே கூறப்பெற்றுள்ள ஆண்டறிக்கையில் பக்கம் 74 லிலிருந்து 83 முடிய உள்ள பக்கங்களில் பட்டியல் போட்டு விளக்கப்பெற்றிருக்கின்றன.

முதலாம் கோப்பெருஞ்சிங்கனும், இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனும் பரதக்கலையில் மிகுந்த நாட்டம் உடையவர்கள். ஆதலால்தான் அவர்கட்கு பரதம் வல்ல பெருமான், பரதார்ணவ கர்ணதாரிணன், கலாநாம்யாக்ய வேதாம்பூதி, பரதார்ணவ பரீணன், பரதமல்லன் போன்ற விருதுப் பெயர்கள் வழங்கப் பெற்றிருக்கின்றன. இக்கீழைக் கோபுரத்தில் தந்தை, மகன் ஆகிய இரு கோப்பெருஞ் சிங்கன்களின் சிற்பங்கள் காணப்பெறுவதும், அந்நாட்டியக் கரணங்கள் அங்கு செதுக்கப்படுவதற்கு அவர்கள்தான் ஏற்பாடு செய்தனர் என்பதைக் காட்டுவதாக இருக்கின்றது.

இந்நாட்டியக் கரணங்களின் ஒளிப்படங்களும், அவை பற்றிய "பாரதீய நாட்ய சாஸ்த்ர" ஸ்லோகங்களின் கரணக் குறிப்புகளும் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன.

ooo

## பிற்சேர்க்கை எண் 1

# காடவர் காலப் பாடற் கல்வெட்டுக்கள்

**கல்வெட்டு - 1**

### காடவராயர்கள்

இடம் : தென்ஆர்க்காடு மாவட்டம், விருத்தாசலம் தாலுகா, விருத்தாசலம். வேதகிரீசுவரர் கோவிலின் இரண்டாவது கோபுரவாயில். இவ்வாயிலின் வலப்புறத்தில் உள்ள சாசனம்.

பதிப்பு : எண் 263. தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு. (No 263. S.I.I. Vol. XII.)

### சாசனச் செய்யுள்

அரசநாராயணன் ஆளப்பிறந்தான் வீரசேகரனான காடவராயன் கண்ட்ராதித்தன் வாசலில் கல்வெட்டுவித்தபடி.

**வரிவளை பொலம்பூண் கொடுத்த மங்கையர்**
**மயலுற மனந்தான் துடக்கி கின்றன**
**மதிகதி ரிரண்டாங் கெனச் சிறந்தொளிர்**
**வயிரமு மிசைத்தாங் கிடப் பிசைந்தன**
**பரிமள தளந்தான் சமைத்த குங்கும**
**பரிவொடு பசுஞ்சாந் தெழக் கமழ்ந்தன**
**பலிகொள விரந்தாங் குமிக்க சிங்கனர்**
**பரவையில் விழுந்தாங் கெடத் துடர்ந்தன**
**கரிபரி உடன்சேர்ந் தெடுத்த கங்கர்கள்**
**கருவரை யிடந்தான் புகக் கடந்தன**
**கனலென வுகந்தான் சுடத் துடங்கிய**
**கலிவலி பெலந்தான் புகத் துரந்தன**

வரிபெற விரந்தான் தடக்கை ஒன்றினி
லகலிட முகந்தாம் புனற் சொரிந்தன
வரசரை நெடுஞ்சரங் கிடக்கை கொண்டன
அழகிய வளந்தான் திருப்பு யங்களே. 1

இது வளந்தானாரான காடவராயர் கவி.

அங்குலவும் வயற்பெறுகை ஆட்கொள்ளி காடவர்கோன்
பங்குலவு மதசானை பதநிகளம் விடுகின்றா
னிலங்குமணி முடியரசர் யார்கொலோ வினையடியில்
விலங்கு கலின் கலினென்ன வீதிதொறும் வருவாரே. 2

இது இவர் மகனார் ஆட்கொள்ளியாரான காடவராயர் கவி.

பொருகாம னம்பு புகுந்துயிர்மே லன்றிச்
செருகா விடையாமஞ் செல்லா – தொருகாலும்
பாகாகா மாலியானைக் கண்டு பணிந்தானை
மோகாகா வந்திடா முன். 3

இது இவர் மகனார் நாலுதிக்கும் வென்றாரான ஏழிசை மோகன் காடவராயர் கவி.

துடக்கு மாரன் சொரிசரப் பாயல்மேற்
கிடக்கு மிவ்வுல கென்பதுங் கேட்டுமே
வடக்கு மேருவுந் தெற்கு மலையமுங்
கடக்கு மாணையான் கச்சிய ராயனே. 4

மும்மலை முன்பெறிந்தாய் பின்பு முரணிரட்டர்
தெம்மலை வாதாபி சென்றெறிந்தாய் – மெய்ம்மைச்
செருவரசே பின்னிச் சிலம்பா வெறிந்த
தொருவரைசே மேனா ளுடன்று. 5

இது இவர் தம்பியார் அரசநாராயணன் கச்சியராயரான காடவராயர் கவி.

இவர் மகன் சகரையாண்டு ஆயிரத்தொரு நூற்றெட்டினால் ஆடி மாசத்துப் பிறப்பத்தில் கண்டராதித்தன் வாசலுக்கு மேற்கே புறப்பட்டுக் கற்கடக மாராயன் கூடலும், அதியமாணாடும் அழித்து வெற்றிக்கொடி உயர்த்த அனுமனும் பொறித்தான் ஆளப்பிறந்தான் **வீரசேகரனான காடவராயன்.**

பாரள வல்ல பணைத்தோ ளளவு பகலவன்போந்
தேரள வல்லநின் செங்கோ லளவு திகிரிச் செங்கை
காரள வல்ல **பரவீர சேகர காடவநின்**
போரள வெவ்வள வாம்பர வேந்தர் புறத்தளவே. 6

**தாரார் மணிப்புயந் தண்ணந் துழாய்மண நாறுஞ்சந்தக்**
**காரார் திருநிறஞ் செய்யாள் திருமண நாறுங்கச்சி**
**யாரார் திகிரிக்கை யாளப் பிறந்தாற் கசஞ்சலற்குப்**
**பாரார் வடமன்னர் பொன்முடி நாறும் பதாம்புயமே. 7**

**விடையள விட்ட கொடிவீர சேகர காடவநின்**
**நடையள விட்டது ஞாலங்க ளேழையும் வாழிநின்போர்ப்**
**படையள விட்டது பத்துத் திசையும் பரியமுத்தக்**
**குடையள விட்ட திரிசுடர் சூழண்ட கூடத்தையே. 8**

**ஸ்வஸ்திஸ்ரீ. இக் கல்வெட் டழிப்பான் வல்லவரையன் சத்தியம்.**

குறிப்பு :- செய்யுள் **1.** இது வளந்தானார் ஆன காடவராயரின் புயத்தை (தோள்வலியைப்) புகழ்கிறது. செய்யுள் **2.** இதில் இரண்டாம் அடியில் மதசானை என்றிருப்பது மதயானை என்றிருக்கவேண்டும். வீரசேகர காடவராயன் அதிகமான் நாட்டையும் கூடலையும் அழித்தது சக ஆண்டு 1108 என்று கூறுகிறபடியால் அது நிகழ்ந்தது கி.பி. 1186- இல் ஆகும். அதிகமான் நாடு என்பது தகடூர் என்னும் தர்மாபுரி. கற்கடகமாராயன் என்பவன் யார் என்பது தெரியவில்லை.

கல்வெட்டு - 2

## கோப்பெருஞ் சிங்கனும்
## ஆட்கொண்ட தேவனும்

இடம் : வடஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை தாலுகா, திருவண்ணாமலை. அண்ணாமலையார் கோவில், முதல் பிராகாரம், மேற்குப் பக்கத்துச் சுவரில் உள்ளது.

பதிப்பு : எண் 69. தென் இந்திய சாசனங்கள், தொகுதி எட்டு. (No. 69 S.I.I. Vol. VIII.)

சாசனச் செய்யுள்

கார்வளர் மேனிக் கமலக் கண்ணன்
பார்வள ருந்திப் பல்லவர் பெருமான்
சகல புவனச் சக்கர வர்த்தி
கூட லவனி யாளப் பிறந்தான்
கோப்பெருஞ் சிங்கன் குரைகழற் காடவன்
சொன்மறை யாக்கன் சுடர்வா ளெடுத்துப்
பின்வர நடந்து பிலந்திறந் தருளிய
காவலர் தம்பிரான் கண்ணா ரமுத
ரருண மால்வரைப் பெருமாள் தமக்குச்
செய்த திருப்பணி தெரிந்தெடுத் துரைப்பிற்
காதிற் கம்பியுங் கதிர்மணி மகுடமும்
செங்கதி ரெரிக்கு மங்க சுத்தமும்
பாகு வலையமும் பைம்பொற் பலதொழிற்
திருவுடை யாடையுந் திருக்கழற் கீழிடும்
பேதை பாதமும் பிறங்கிருட் கண்டமு
மிளஞா யிற்றி னொழிலிறந் தோன்ற
வளர்மா ணிக்க வாளிவெயி லரும்பிய
விரிகட லவனி யாளப் பிறந்தான்
திருவா சிகையுஞ் சிங்கா சனமும்

கற்பக விருக்கமு முத்தின் பந்தலு
மோடரி மைக்க ளுமையிசை பாடி
ஆடிய வதிருங் கழற்பெரு மாளுக்
கினமா ணிக்க மிலங்கச் செய்த
பரதம் வல்ல பெருமா ளென்னுந்

திருவா சிகையுஞ் சிறந்த செங்கதி
ரொளி விளங்கு மாணிக்கமுந் துளங்கும்
வயிரமுங் கட்டிய பொலன் தருக் கூட
மஞ்சனமுங் கண்ணா ரமுதர்காமக் கோட்டத்
துண்ணா முலையா முமையவள் தனக்குப்

பருமணி நிரைத்த திருவுடை யாடையும்
வென்றிவேல் கொண்டு குன்றெறி முருகன்
செந்நிற மேனியுந் தேவியர் மேனியு
மைஞ்ஞிறத் தோகை வண்ணமு மடையப்
பொன்னிற மாக்கிய பொற்பணி பலவு

மல்லை காவல னிச்சங்க மல்லன்
பல்லவர் வேந்தன் பரதம் வல்லன்
கூட லவனி யாளப் பிறந்தான்
செய்தன விப்பணி யடங்கவு மிவன்சிறந்
தூழி காலம் வாழி; இவன்மகன்

வாடா வாகைக் காடவ குமாரன்
வான்புகழ் மல்லையு மயிலையுங் காஞ்சியுந்
தண்டக நாடுந் தன்புனற் பாலியும்
பெண்ணையுங் கோவலும் மெவுலகையு முடையவ
னெண்ணருஞ் சிறப்பில் யாவரு மதித்த

விருதரில் வீரன் விறல்வீ ராசனி
கரிய நாதன் காதற் குமரன்
குடதிசைக் கருநடர் தென்புலங் குறுகவும்
வடதிசைத் தெலுங்கர் வடக்கிருந் தழியவும்
போர்பல கடந்து பொருந்தா மன்னவ

ஈரெயிற் சேர்ந்தூர் மலையர ணழித்து
நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்
வெல்புக ழனைத்து மேம்படத் தங்கோன்
வாகையுங் குரங்கும் விசையமுந் தீட்டிய
வடல்புனை நெடுவே லாட்கொண்ட தேவன்

கடகரி முனைமுகங் கடந்த காங்கயன்
கண்ணா ரமுதர் கனங்குழை யாகத்
தண்ணா மலையற் கன்புகெழு நெஞ்சில்
விருப்புடன் செய்த திருப்பணிக் கோவை
யாவையு மெடுத்துப் பாவல ருரைப்பில்

நின்ற தொல்புகழ் நிலமுழு தளித்த
வென்றி புனைதோ ளாட்கொண்ட தேவன்
வேணா வுடையா னென்னும் பெயரா
ளீணாள் வாழ நிலைபெறச் செய்த
பெருமா ளமருந் திருமண் டபமும்

மருக்கமழ் கனகத் திருப்பளி யறையுந்
திருவமு தேற்றமும் பெருமண் டபமும்
விரிவுடன் செய்திருக் கர்க்கள்ளியும்
பெருவிற லவனி யாளப் பிறந்தான்
திருமண்டபமுஞ் செழுமலர் தொடுத்த

கண்ணி வாடாது கண்ணிமை யாது
மண்மிசை நடவா வானோர் வலம்வர
வெண்மதி நிலவில் விளங்குசுட ரெரிக்கும்
படித்தள மென்னவும் படிமூன் றுக்கு
மடித்தள மென்னவு மடையா மன்னவர்

மலைத்தளம் பறித்தம் மன்னவர் சுமந்தச்
சிலைத்தளங் கொண்டு செய்தசிலைத் தளமு
மெல்லையி லுகந்தொறுஞ் செல்வந் தொலையாது
வரும்படி வகுத்த நிச்சங்க மல்லன்
பெரும்பண் டாரமும் பிறைமுடிப் பெருமா

வின்னாள் வந்திருந் தமைதோன் றவு
முன்னா ளமைந்த முறைமை காணவும்
வாட்டங் கண்ணியர் மனைதொறும் பலிகொளக்
காட்டிய வடிவிற் கங்காள வேடமும்
வான்முகத் தமரர் வணங்கச் செய்த

நான்முகத் தெரு நாயகி தனக்கு
மப்படி வகுத்த வணிநெடுந் தெருவுஞ்
செப்பிய கதிரவர் திசைவலம் போதும்
சோதி நன்மணி வீதிகள் இலங்கக்
கலைபயில் தவத்தோர் நிலைபெற விருக்க

மலைவகுத் தனைய காங்கயன் மடமுங்
கானிற் பயிலுங் கடவுளர் தமக்கு
வேனிற் றென்றல் வியன்பெருங் கவரி
யிருமருங் கிரட்டவு மிமையவர் துதிக்கவு
மருமணம் பெருகிய வாள்வல பெருமாள்

திருநெடுந் தோப்புந் தீத்த மாகிய
வமுத நன்னதி யனைத்திலுந் தூய
தமிணாடு காத்த பெருமாள் தடாகமும்
வண்டிசை பாடல் மதுமலர் வாசங்
கொண்ட காடவ குமாரன் தோப்புங்

கவின் வெம்பரிக் கதிர்வழி தடுத்த
வவனி யாளப் பிறந்தான் தோப்பும்
தலநிகழ் சேனைத் தலைவன் தோப்பும்
வெம்மை நாளில் வெஞ்சுர னடைந்தவர்
தம்மனங் குளிரத் தண்டலை நிழற்செயு

மம்மை மடமு மைய்ய னேரியும்
வெற்பகந் துளைத்தெனக் கற்புடை யராகி
யடனெடும் பிலத்தி லமுதுவந் தெழுந்த
வடிவாள் வல்ல பெருமாள் கிணறு
மளிமுரல் கமலமு மாம்பலு மலர்ந்து

குளிர்புனற் காடவ குமாரன் தடாகமுங்
குன்று கரையன்ன கோடுயர் நெடுங்கரை
வென்று மலைகொண்ட பெருமா னேரியுஞ்
சுரர்தரு நெருங்கிய சோலையு மொவ்வாப்
பரதம் வல்ல பெருமாள் தோப்பும்

வளஞ்சிமி றார்க்கு மடலிளம் பாளை
விரைகமழ் வீர ராயன் தோப்புந்
தவநெறிச் சுந்தரர் தம்பெருங் குலத்திற்
த.......... ற்குச் செய்து குடுத்த
கடலென நிறைந்து கார்வயல் விளைக்கும்

விச்.. .சை நிச்சங்க மல்ல னேரியுங்
காங்கயன் தடாகமுங் காங்கயன் மடமும்
பூங்கமழ் சோலையும் பொற்புடன் விளங்க
யிவ்வகை யாவையுஞ் செய்தன னதனாற்
பாலவ பாகன் சேவடித் தாமரை

யணிந்த சென்னியர் பார்க்குங் கண்ணின
ரணிந்த நீற்றின ராகம நன்நெறி
படிந்த நெஞ்சினர் பரசமையங் கடலை
கடிந்த வாலணயர் கண்ணுதற் பெருமா
ளாதி நாதநாய் வேடங் கொண்டு

பாய்புனற் கங்கை யாயிர முகங்கொண்
டார்த்தெழு மன்னா ளேற்றுக் கொண்ட
திருந்திய பிறைமுடி யருந்தவச் சடாதர
ராதியி லஞ்செழுத் தோதிய தொண்டரென்
றெண்ணிய நாற்பத் தெண்ணா யிரவருந்

திருவரு ளிவன் மேல் வைத்தன
ரிருநிலந் தன்னி லினிதுவாழ் கெனவே.

குறிப்பு :– 51–ஆம் வரியில், "நல்லிசைக் கடாம்புனை நன்னன்" என்று கூறப்பட்டுள்ளது. இதில், நல்லிசைக்கடாம் என்பது சங்க காலத்து இலக்கியமாகிய பத்துப்பாட்டில் மலைபடுகடாம் என்னும்

பாட்டாகும், மலைபடுகடாம் பாடியவர், இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் என்பவர். இப்பாடலைப் பெற்றவன் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னன் என்னும் சிற்றரசன்.

வரி 43. 'மெவுகையு' என்பது 'உதகையு' என்றிருத்தல் வேண்டும்.

129 வரி முதல் 132 வரி வரையில், சிவபெருமான் நாய் வேடங்கொண்டு கங்கையை ஏற்ற செய்தி கூறப்படுகிறது. பல்லவர் காலத்துச் சிற்பங்களில் கங்காதரமூர்த்தி உருவத்தில், சிவபெருமான் கங்கையைத் தாங்குகிற சடைக்குப் பக்கத்தில் நாயின் உருவம் இருப்பதைக் காண்கிறோம். பிற்காலத்துக் கங்காதரமூர்த்தி சிற்ப உருவத்தில் நாய் உருவம் காணப்படவில்லை. இந்தச் சாசனத்தில் நாயின் உருவம் குறிப்பிடப்பட்டிருப்பது கருதத்தக்கது[1].

**கல்வெட்டு - 3**

### காடவராயர்

இடம் : வடஆர்க்காடு மாவட்டம், செய்யாறு தாலுகா, அத்தி கிராமம். இவ்வூர் அகத்தீசுவரர் கோயில், திருவுண்ணாழிகைத் தென்புறச் சுவரில் உள்ள சாசனம்.

பதிப்பு : எண் 125. தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு. (No. 125. S.I I Vol XII)

### சாசனச் செய்யுள்

ஸ்வஸ்திஸ்ரீ. கூடல் ஆளப் பிறந்தாரான காடவராயர் மகனார் தொண்டைமண்டலங் கொண்ட பல்லவாண்டாரான காடவராயர் கல்வெட்டு.

**தங்கோ நகர்பெறத் தம்புவி தாம்பெறத் தான்வணங்கிய**
**செங்கோல் வளைக்கை யரிவைய ரோடும் அடியுங் கையும்**
**பங்கேருக மன்ன பல்லவன் காடவன் பார்முழுதா**
**னெங்கோ னனுமதந் தோளிலிடா மன்ன ரெம்மன்னரே. 1**

1 இது கல்வெட்டறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களது கருத்து. இக்கருததை மறுப்பாரும் உண்டு

பொருதிக் கிலுஞ்சென்று போர்வென்ற பல்லவன் காடவர்கோன்
கருதிப் பொரச்சென்று சேவூரினிற் றிருக்கண் சிவக்கப்
பருதிக்கு மேலுமுயர் பிணக்குன்றிற் பரந்திழிந்த
குருதிப்புனல் தொண்டை நன்னாடங்கலுங் கொண்டதுவே. 2

கூராழி யேந்திய பல்லவற்குக் கூடல் மன்னவற்குப்
பாராழி சூழ்ந்திசை பரிக்குப் பந்தி பண்டடைந்த
நீராழி வேழங்க ணீராடு மாமடு நின்றகொற்றப்
போராழி வெற்பிவன் செங்கோல் நடக்கும் பெருவழியே. 3

தொழுதிய லாமன்னர் தொண்டைத் திருநாடு கொண்டவரூர்
கழுதிய லக்கண்ட காடவன் பல்லவன் காசினிமேற்
பழுதிய லாத்தனிச் செங்கோல் நடாத்திப் பராக்ரமஞ்சென்
றெழுதிய தூணங்க ளெண்டிசை சூழ்ந்த வெழுகிரியே. 4

கைம்மலை வெள்ளக் கடற்படைப் பல்லவன் காடவர்தஞ்
செம்மலை வந்து பணியா வடமன்னர் சேனைவிட்டுத்
தம்மலைவிட்டுப் புறமலை வேலித் தலத்துளஞ்சா
தெம்மலை யெச்சுரத்துப் புகுவார் புக்கிருப்பதற்கே. 5

வண்டற் புனற்பெண்ணை நாடுடையான்
வடவேங் கடவெற்பன்
தொண்டைத் திருநாடு தோள்வலியாற்
கொண்ட தொண்டைமன்னன்
கண்டற் கடற்கச்சிப் பல்லவன்
காடவன் காரிருளிற்
பண்டப் பிரமவர்க் கன்பிலாப்
பொற்பதாம் புயனே. 6

குறிப்பு :– இச்செய்யுட்களில் மூன்றாவதான "கூராழியேந்திய" என்னும் செய்யுள், வடஆர்க்காடு மாவட்டம், குடியாத்தம் தாலுகா, ரங்கம்பேட்டைக்கு அருகில் உள்ள மோரிஜோனை என்னும் இடத்தில் ஒரு பாறைமேல் எழுதப்பட்டுள்ளது (தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு, 127–ஆம் எண் சாசனம்).

அந்தச் சாசனச் செய்யுளின் மேலே சிதைந்துபோன சாசன வாசகம் எழுதப்பட்டிருக்கிறது. அதன் வாசகம் இது: "கூடல் ஆளப்பிறந்தார் மகனார் தொண்டமண்டலங் கொண்ட பல்லவாண்டாரான வீரர் வீரன் காடவராயர்.........."

3-ஆம் செய்யுள், கூடல் மன்னவன் என்பது மதுரை நகரின் மன்னவன் என்பது பொருள் அன்று. இந்தக் கூடல், தென்ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள கூடலூர் ஆகும்.

4-ஆம் செய்யுள். கழுது - பேய்.

5-ஆம் செய்யுள். கைம்மலை வெள்ளக் கடற்படைப் பல்லவன் என்பது, யானைப் படையையும் கடற்படையையும் உடையவன் என்பது.

**கல்வெட்டு - 4**

## கோப்பெருஞ் சிங்கன்

இடம் : வடஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி தாலுகா, வைலூர். இவ்வூர் ஏரி கரைமேல் உள்ள கல்லில் எழுதப்பட்டுள்ள செய்யுட்கள். இந்த வைலூர், செங்கற்பட்டிலுள்ள வாயலூர் அன்று. இது தெள்ளாற்றிலிருந்து 12 மைல் தூரத்தில் உள்ளது.

பதிப்பு : இந்திய சாசனங்கள், தொகுதி இருபத்து மூன்று. பக்கம் 174-182. (Epigraphia Indica Vol XXIII. Page 174-182.)

### சாசனச் செய்யுள்

ஸ்வஸ்திஸ்ரீ. சகலபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ கோப்பெருஞ்சிங்கன் சோழனைத் தெள்ளாற்றில் வென்று, சகல பரிச்சின்னமுங் கொண்டு சோழனைச் சிறையிட்டுவைத்து, சோணாடு கொண்ட அழகிய சீயன்.

பொன்னி நாடனு முரிமையும் அமைச்சரு
மிருப்பதுன் சிறைக்கோட்டம்.
பொருப் பிரண்டென வளர்ந்த தோள்
வலியினாற் கொண்டு சோணாடு

கன்னி காவிரி பகீரதி நின்பிரியா
தெண்டுறை வாவி காவல்
மன்னவர் திரையுட னுணங்குவ
துன்பெருந் திருவாசல்

வென்னிடாத போர்க் கன்னடர் வென்னிடப்
பொருததுன் பெருஞ்சேனை
விளங்கு செம்பொனி னம்பலக் கூத்துநீ
விரும்பிய தேவாரம்.

பின்னி காவல அவனி நாராயண
பேணு செந்தமிழ் வாழப்பிறந்த
காடவகோப் பெருஞ்சிங்க நின்
பெருமை யார் புகழ்வாரேய். 1

திரையிட் டிருமின்கள் தெவ்வேந்தர் செம்பொன்
திரையிடாப் பூம்புகார்ச் சோழன் - சிறைகிடந்த
கோட்டந்தனை நினைமின் கோப்பெருஞ்சிங்கன் கமல
நாட்டங் கடைசிவந்த நாள். 2

மீளிவன் கொண்ட விடைவேந்தர் மார்பினும்
தோளினுந் தீட்டிய தொண்டை மன்னவர்
வாளில் வென்றிடு சிறைவளவன் துங்கிய
நாளினும் பெரியதின் னாளெனப் புலம்புமே. 3

அறைகடலி னிசையுடனே யண்டர் வேயினாம்
பல்லிசை செவிகவர அந்திமாலை
நிறைமடியி னிலவென்னு நெருப்புப் பட்டால்
நீரிலை நின்றாற்றுவளோ நிருபதுங்கா
பிறைபொருத கனமகர கிம்புரிவன் கோட்டுப்
பெருங்களிற்றுச் சோழனையும் மமைச்சரையும் பிடித்துச்
சிறையிலிடக் களிறுவிடு மிண்டன் சீயா
திரிபுவனத் திராசாக்கள் தம்பிரானே. 4

ஒருநாளும் விடியாத நெடிய கங்கு
லூழியென நீண்டுவர உலகிற் புன்கண்
மருண்மாலை யிதுமுன்னே வந்ததென்றால்
மடந்தையிவ ளாற்றுவளோ மல்லைவேந்தே
பொருமாலை முடியரசர் கன்னிமாதர்
போற்றிசெய்யும் புவனமுழு துடையார் தாமுந்
திருமாதும் புணர்புயத்து மிண்டன்சீய
திரிபுவனத் திராசாக்கள் தம்பிரானே. 5

இது கோச் சீயன் ஆணை.

குறிப்பு :- செய்யுள் 1. அவனிநாராயணன் - இது கோப்பெருஞ்சிங்கனுடைய சிறப்புப் பெயர். இவனுடைய முன்னோனான தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனுக்கும் இந்தச் சிறப்புப் பெயர் உண்டு. பின்னி - பெண்ணையாறு; தென்பெண்ணையாறு. இச்செய்யுளின் ஈற்றுச்சொல், யகரமெய் பெற்றுப் புகழ்வாரேய் என்றிருக்கிறது. இது அக்காலத்து முறை.

செய்யுள் 2. தெவ்வேந்திர் - பகையரசர்களே.

செய்யுள் 3. கோப்பெருஞ்சிங்கனுடைய கொடி விடைக் கொடி. அதாவது ஏற்றுக்கொடி. அவனுடைய முத்திரையும் ஏறு (எருது). இவனால் வெல்லப்பட்ட மன்னருடைய மார்பிலும் தோளிலும் இவனுடைய முத்திரையாகிய எருதின் உருவத்தை (பச்சைகுத்தி) எழுதினான். இது, அவர்களை அவமதிப்பதாகும். இவ்வாறு அவமதிக்கப்பட்ட அரசர்கள், இவனால் சிறைப்பிடிக்கப்பட்டுச் சிறைச்சாலையில் இருந்து இறந்த சோழ அரசன் பட்ட துன்பத்தைவிடப் பெரிய துன்பமாகக் கருதினார்கள் என்பது இச்செய்யுளின் கருத்து. போரில் வெற்றிபெற்ற அரசர், தமது முத்திரையைத் தோற்ற அரசரின் மார்பிலும், தோளிலும் பொறிப்பது அக்காலத்து வழக்கம்.

செய்யுள் 5. மல்லை – மாமல்லபுரம். இப்போது மகாபலிபுரம் என்று வழங்கப்படுகிறது. இது, பண்டைக்காலத்தில் பல்லவ அரசர்களின் துறைமுகப்பட்டினம். சீயன் – சிங்கன்; அதாவது கோப்பெருஞ்சிங்கன்.

கோப்பெருஞ்சிங்கன் என்னும் பெயருடைய பல்லவ அரசர்கள் இருவர் இருந்தனர். அவ்விருவரில் இந்தக் கோப்பெருஞ் சிங்கன் முதலாமவன். இவன், ஏறத்தாழ கி.பி. 1232–இல் சிம்மாசனம் ஏறினான் என்பர். தெள்ளாற்றுப் போரிலே இவனால் சிறைப்பிடிக்கப்பட்ட சோழன், கி.பி. 1216–இல் முடிசூடிக்கொண்ட மூன்றாம் இராஜராஜன் என்பர்.

**கல்வெட்டு – 5**

## வீரவீர ஜினாலயம்

இடம் : வடஆர்க்காடு மாவட்டம், ஆரணி தாலுகா, பூண்டி. இவ்வூர் பொன்னிநாதர் ஆலயம் என்னும் ஜைனக் கோயிலின் மேற்குப்புறச் சுவரில் உள்ள சாசனச் செய்யுள்.

பதிப்பு : எண் 62. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. (No. 62 S I I. Vol VII)

### சாசனச் செய்யுள்

சிறப்பருளிக்
கொற்றவன் மகிழ்ந்த கொள்கைய னாகி
மெய்த்தவத் தீர்க்கு வேண்டுவன தியாதென
அத்தவ னுரைப்போ னின்னகன்றலை ஞாலத்துச்

5. செயங்கொண்ட சோழ மண்டலந் தன்னிற்
பயன்படு சோலைப் பல்குன்றக் கோட்டத்து
வேண்டியது சுரக்கு மெய்யூர் நாட்டுப்
பூண்டி யென்பது காண்டகு திருநகர்
**சீயன் சம்பமன் திரு... ற மாப்பொய்**

காலத்துப் புரந்துடன் வந்தது
அறநெறி வளர வருணமக் கென்ன
மறமலி தானை மன்னர் மன்னன்
சினவரன் றனக்குச் சொம்பொற் கோயி
னிவன்தக வருளிநின்று நீடு விளங்க

வீர வீர சினாலய மென்றுதன்
பெயர்பொறித் தமைத்துப் பெருஞ்சிறப் பியற்றி
முனிகள் பூண்டியென் றினிதினி னடப்ப
வெல்லை தழுவிய விரும்பே டுட்பட
நல்லறந் தழைப்ப நன்கமைத் தனனே

அஃதான்று
அணிநக ரகன்பெய ரெல்லை யாவதுங்
கணியிலுப் பைக்குக் காண்டகு மேற்கு
நெருநற் பாக்கத் தெல்லை வடமேற்கும்
பொருநற் குன்றிப் புனல்யாற்றின் வடக்குங்

குலாமலி குண்டிகைத் துறைக்கு வடகிழக்கு
மிலாறை யாதித்த மங்கலத் தெல்லைக்கேய் கிழக்கு
மிரும்புனற் பொய்கை மெயூரெல்லை... ந்த தென்கிழக்கு
மல்லற் றொல்சீர் மறையோ ராதை
யெல்லை நிலத்துக் கியைந்த தெற்கு

மிவ்வாத னூரி லகன்பெய ரெல்லையிற்
பீலி மடுவிற்குப் பிறங்குதென் மேற்கு
மெண்டிசை மருங்கினு மியன்ற வெல்லையிற்
குண்டிகைக் கல்லு நாட்டிக் கண்கவர்
கொல்லை நன்னிலங் குறைவின்றி விரிந்.....

னெல்லை முற்று மிறையும் வரியு
மந்த ராயமு மாயமு மமஞ்சியும்
வந்தன பிறவு மாற்றி வளமலி
மாளிகை யெடுக்கவு மணிக்குலை கமுகு
நாளி கேரமு நன்குட னாக்கவுங்

கரும்புஞ் செந்நெலு மொருங்குட ணடவுஞ்
சண்பகந் தமனகஞ் சாதி கேதகை
வண்கழு நீருடன் மலர்பல வியற்றவும்
..... ஞ் செக்கு மமைக்கவு மருளிச்
**சாலையுந் தவமுந் தருமமுந் தழைப்பச்**

**செம்பிலுங் கல்லிலுஞ் செய்து தன்புக**
**ழுலர்கதி ரளவுஞ் செல்ல**
**மலர்தலை யுலகின் வாழ்வமைத் தனனே.**

குறிப்பு :- வரி 5. செயங்கொண்ட சோழ மண்டலம் - தொண்டைமண்டலம். வரி 13. சினவரன் - ஜினன், அருகன். வரி 15. சினாலயம் - அருகன் கோவில்.

**கல்வெட்டு - 6**

## காடவர்கோன் பாவை

இடம் : தென்ஆர்க்காடு மாவட்டம், திருக்கோவலூர் தாலுகா, சிற்றாமூர். இவ்வூர் மலைநாதர் கோவிலின் பின்புறமுள்ள பொடவின் அடியில் உள்ள செய்யுள்.

பதிப்பு : எண் 830. தென் இந்திய சாசனங்கள், தொகுதி ஏழு. (No. 830 S.I I Vol. VII)

### சாசனச் செய்யுள்

காடவர்கோன் பாவை கனைகழற்காற் சோழற்கு
நீடுபுகழ்த் தேவியார் நீணிலத்துப் - பீடுசிறந்
தமரும் சிற்றாமூர் செய் திறங்கல் மீட்பித்
தறம்பெருக வாக்கு மவள்.

குறிப்பு :- காடவர்கோன் பாவை - பல்லவ அரசன் மகள். இவர் சோழ அரசனை மணந்தார் இவர். நிலத்தை அடமானத்தி லிருந்து மீட்டு அதனை இக்கோவிலுககுத் தானமாக வழஙகினார்.

**கல்வெட்டு – 7**

## பல்லவர் கோன்

### இடம் : தென்ஆர்க்காடு மாவட்டம், சிதம்பரம் தாலுகா, சிதம்பரம். நடராசர் கோவிலில் உள்ள சாசனம்.

பதிப்பு : தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு; முன்னுரை, பத்தாம் பக்கம். (Page 10, Preface, S.I.I. Vol. XII.)

### சாசனச் செய்யுள்

**சுந்தரத் தோரண நாட்டித் துகிற்கொடி சூட்டிமுத்துப்**
**பந்தர்ப் பாலிகை தீபம் பரப்புமின் பல்லவர்கோன்**
**செந்தளிர்க் கைக்கோத் தபையன் மகளுடன் தில்லையுலா**
**வந்தளிக்கும் பெருமாள் வெற்பர் மாதை மணஞ்செய்யவே.**

குறிப்பு :– அபையன் – அபயன், அபயன் மகள் – சோழ அரசன் மகள்.

**கல்வெட்டு – 8**

## கச்சியர்கோன்

இடம் : தஞ்சாவூர் மாவட்டம், மாயவரம் தாலுகா, கடையூர். அமிர்தகடேசுவரர் கோவில் வாயிலின் வலது புறத்துச் சுவரில் எழுதப்பட்டுள்ள சாசனம்.

பதிப்பு : தென் இந்திய சாசனங்கள், தொகுதி பன்னிரண்டு; எண் 265. (No. 265 S.I.I. Vol. XII.)

## சாசனச் செய்யுள்

வார்மன்னு வெல்கழல் மானவன் பாலுங்கள் மாமரபிற்
தார்மன்னர் பெற்ற தனுமக் கொடியித் தலம்புரக்கும்
கார்மன்னு செம்பொற் கனகொடை மோகதென் கச்சிநற்
போர்மன்னு வேள்பெற்ற தாரும் பெறாத புலிக்கொடியே.

சிவனன்று நல்கிய செஞ்சின வேற்றுக் கொடியுயர்த்த
தவனந் தருபரிக் கச்சியர் கோன்பச்சை யேயுறுர்வித்
தவனங் குலபதி தன்னுடன் போந்துதண் காவிரிநீர்ப்
புவனங் கொடுத்துக் கொண்டான் வன்பால் வெம்புலிக்கொடியே[1].

1. பிற்சேர்க்கை - 1. இல் தரபபெற்றுள்ள 8 கெல்வெட்டுக்களும், மறற குறிப்பு களும் மயிலை. சீனி வேங்கடசாமி அவர்களின் 'சாசனச் செய்யுட் மஞ்சரி' என்னும் நூலில் உள்ளவாறு காணப்பெறுகிறது.

## பிற்சேர்க்கை - 2

வடஆர்க்காடு மாவட்டம், செய்யாறு தாலுகா கரந்தையிலுள்ள குந்து தீர்த்தங்கரர் கோயிலின் கோப்பு வாசல் வலப்புறத்திலுள்ள கல்வெட்டு. ந. 140, 1939-40.

### கட்டளைக் கலித்துறை

1. **சுந்தரத் தோரணம் நாட்டித் துகிற் கொடிசூட்டிமுத்துப்**
**பந்தர்ப் பாலிகை தீபம் பரப்புமின் பல்லவர்கோன்**
**செந்தளிர்க் கைகோத் தலையன் மகளுடன் தில்லையுலா**
**வந்தளிக் கும்பெரு மான்வெற்பர் மாதை மணஞ்செய்யவே.**

பல்லவர் மன்னவனும் சோழன் மகளை மணந்து அவளுடன் தில்லை நகரிலே உலா வந்து மக்களுக்குக் கருணை செய்பவனும் ஆகிய கோப்பெருஞ் சிங்கனுடைய மலைநாட்டைச் சேர்ந்த தலைவரே! எம் உறவினர் எம் தலைவியை உமக்கு மணம் செய்து கொடுக்க ஒத்துக்கொண்டு விட்டனர். எனவே உம் இல்லத்தில் நடக்க இருக்கும் அத்திருமணத்திற்கு அழகிய தோரணங்கள், துணிக் கொடிகள், முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட பந்தர், பாலிகை, தீபம் இவற்றால் நும் இருப்பிடத்தை அலங்கரியுங்கள்' என்று தோழி தலைவியின் திருமணத் தீர்மானத்தைத் தலைவனிடம் கூறியது.

### நேரிசை வெண்பா

2. **திறையிட் டிருமின்கள் தெவ்வேந்திர் செம்பொன்**
**துறையிட்ட பூம்புகார்ச் சோழன் - சிறைகிடந்த**
**கோட்டந் தனைநினைமின் கோப்பெருஞ்சிங்கன் கமல**
**நாட்டம் கடைசிவந்த நாள்.**

பகை மன்னர்களே! பொன் கொழிக்கும் காவிரி பாயும் புகார் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்ட சோழர் மரபினனான மன்னன், கோப்பெருஞ் சிங்கனுடைய கடைக்கண் சிவந்த அளவிலே சிறையிலிடப்பட்டான். அச்சிறைச்சாலையை

நினைத்து நீங்கள் எம் மன்னனுக்குக் கப்பஞ் செலுத்தி நண்பர்களாகுங்கள்" என்று சான்றோர் பகை மன்னருக்கு அறிவுறுத்தியவாறு.

### நேரிசை வெண்பா

3. **செஞ்சாலி வேலிச் செழுந்தொண்டை நன்னாடர்**
**பஞ்சாயு தாசீயா பல்லவா - வஞ்சியான்**
**கோழியான் புக்க சிறைக்கூடம் புகக் கொதிக்கும்**
**ஆழியாய் நாழிகை ஓ ரஞ்சு.**

செந்நெல் வளம் மிக்க தொண்டை நாட்டரச! திருமாலின் அமிசமாதலின் கைக்கொண்டிருக்கும் ஐந்து ஆயுதத்தை உடையோய்! கோப்பெருஞ் சிங்கனே! பல்லவனே! சேர நாட்டை ஆளும் சேரன் சோழன் பட்ட சிறையிலே அகப்படுமாறு அவனைக் கோபிக்கும் ஆக்ருாசக்கரத்தை உடையவனே! பொழுது விடிய ஓரைந்து நாழிகையே உள்ளன- எனக் கோப்பெருஞ் சிங்கனைத் துயிலெழுப்புவோர் கூறியவாறு.

### ஆசிரியத் தாழிசை

4. **போரில் திகழ தெள்ளாறையில் வெள்ளாறு சிவக்கப்**
**புண்ணீர் புக வளவன் சிறை புகுதப் பொருவென்றிக்**
**காரில் கொடைதிகழ் காடவன் வேளத்து**
**ஒதுங்கா நற்குல மடவீர் கடைதிற மின் திறமின்.**

போரினால் சிறப்புற்ற தெள்ளாறு என்ற ஊரின் வெண்மையான வழிகள் சிவப்படையுமாறு குருதி பாயவும், சோழன் சிறைப்படவும் போரிட்ட வெற்றியையும், மேகம் போன்று விளங்கும் கொண்டையையும் உடைய கோப்பெருஞ் சிங்கனின் அந்தப்புரப் பணிப்பெண்கள் தொகுப்பில் சேராத நல்ல குல மகளிரே! அவன் வெற்றிப் புகழை யாம் பாட அதனைக்கேட்டு அவ்வெற்றியைக் கொண்டாட நும் இல்லத்துக் கதவுகளைத் திறந்து வெளியே வருக – என்று காடவன் வெற்றிப்புகழ் பாடுவோன் மடவாரை நோக்கிச் சொல்லியது.

### நேரிசை வெண்பா

5. **அங்கண் அமர் ஞாலத் தரசர்களெல்லாம்**
**செங்கண் விடையேறு தீட்டுமின்கள் - கங்கை**
**சடையேற்றி யாளுடைய சங்கரனும் சீயன்**
**விடையேற்றி ஆளுந்தன் வெற்பு.**

"அரசர்காள்! கங்கையை தன் சடையில் தாங்கி உலகை விபத்திலிருந்து காத்த ஆற்றலுடைய சிவபெருமானும் கோப்பெருஞ்சிங்கனுக்குரிய விடைக் கொடியை உயர்த்தியே தன் கயிலை மலையை ஆண்டு வருகிறான். அவனே, அங்ஙனம் செய்தலால் அழகிய இடத்தை உடைய விரும்பத்தக்க இவ்வுலகை ஆளும் அரசர்கள் யாவரும் சிவந்த கண்களை உடைய காளை வடிவைக் கொடியில் தீட்டிக் கோப்பெருஞ் சிங்கனுடைய நண்பர்கள் என்று குறிப்பிட்டு வாழுங்கள்" என்று சான்றோர் சிங்கன் பேராற்றல் கூறியவாறு.

### நேரிசை வெண்பா

6. **சீயன் கழல் பணியாச் சென்னி படவேறிப்**
**போய் பழியே பொருகடலே - நீயன்பர்**
**திண்டேர் வழியழிக்கை தீதன்றே யாமதனைக்**
**கண்டே உயிர்காத்த லால்.**

"கோப்பெருஞ் சிங்கனின் திருவடியைப் பணியாத சோழன் போரில் தோற்றமையால் பரந்துபட்ட பழிபோல அளப்பரிய பரப்பை உடைய கடலே! யாம் அன்பருடைய தேர்ச்சுவடு கண்டு ஆறுதலுற்று உயிர் வாழ்கிறோம். அத்தகைய எமக்கு நீ அலைகளால் தேர்ச் சுவட்டைக் கலைப்பது துயரந் தருவதாகும்" என்று தலைவன் சிறைப்புறத்தானாகப் பகற்குறிக்கண் தோழி தலைவியது ஆற்றாமை கூறித் தலைவனை மணக்குமாறு தூண்டியது.

## எண்சீர் ஆசிரிய விருத்தம்

7. உடனுறையும் மட வன்றில் முன்றி லாரப்
படரு மலர்ச் சண்பகத்தில் ஊடிப் பேடை
விட அகலிக் குயில் கூவி அழைப்பக் கேட்டால்
மெல்லிய லன்றாற்றுவளே வீர! வீரா!
வட வரசர் மதிலிடிந்து மாளிகைவேர் பறிந்து
மண் சிதைந்த பெருந்தூளி வான யாறு
திடரிய வெம்பரி நடத்து மிண்டன் சீயா
திரி புவனத் திராசாக்கள் தம்பி ரானே.

"வீரருள் வீரனே! வடநாட்டரசர்களுடைய மதில் இடிய மாளிகை தூள்பட அதனால் மேலெழுந்த மிக்க தூசியால் ஆகாய கங்கை நீர் வற்றித் திடராகும்படிக் கொடிய குதிரையைச் செலுத்தும் ஆற்றல் மிக்க கோப்பெருஞ் சிங்கனே! சேர சோழ பாண்டிய-நாட்டு மன்னர்களின் தலைவனே! வீட்டின் முகப்பில் இளைய அன்றில்கள் கூடி இன்புறவும், அதனைக் கண்டும், அடுத்துள்ள சண்பகச் சோலையில் பேடைக் குயில் சேவற் குயிலுடன் ஊடல் கொண்டு அகன்றுபோக, அதனைத் தழுவுவதற்குச் சேவற்குயில் கூவி அழைக்கவும் அதனைக் கேட்டும், நின் கோப்பெருந்தேவி, போர்க்களத்திலேயே காலத்தைக் கழிக்கும் நின் பிரிவு தாங்காமல் எங்ஙனம் பொறுத்திருக்க நேர்வாள்?" என்று பாணர்கள் பாசறை சென்று கோப்பெருஞ் சிங்கனின் வீரமும் அவன் தேவியின் பிரிவாற்றாமையும் பாடியவாறு.

## சந்த விருத்தம்

8. முட்டவிட்ட கடற்களிற்றணி
முத்த வெண்குடை மன்னிசூழ்
முரிதிரைக்கடல் பணி நிலத்தணி
முடிவழங்கு முகுந்த! போர்
வட்டவிற்சயி லத்துமா யத்தும்
அவன்மலை பலிவைத்த போர்

வளவனின்னொடு மாறுகொண்டு
மலைந்தநா ளவன்மாளிகை
கட்டணத்துறை மாதர் நின்னிரு
கவரிமாதர் இவன்குலக்
கருவுலகம் அடையக் கவர்ந்
ததுகைவழி அவனிகற்
பட்டவத்தன யானைநின்தடை
என்னும் யானை அவன் புயம்
பயிலு மாலைகள் நின் திருக்கழல்
பாடு மாலைக ளானதே.

ஒன்றோடொன்று மோதுமாறு பழக்கப்பட்ட மதம் பொருந்திய யானைத் தொகுதியையும், முத்துக்கள் தொங்கவிடப்பட்ட வெண் கொற்றக் குடையையும் கொண்டு, கடலால் சூழப்பட்ட உலகில் நின் அடிபணியும் அரசர்க்கு அவரவர் முடிகளை வழங்கிய திருமால ஒப்பவனே! வட்டமான ஒளி பொருந்திய சக்கரவாள மலையிலும் அதனோடு தொடர்புடைய ஏனைய மலைகளிலும் தனக்குரிய நெரிமலையில் பொறித்த புலி முத்திரையைப் பொறித்த போரில் பழம் பெருமையுற்ற சோழர் குடியில் பிறந்த மன்னன் உன்னோடு பகைமை கொண்டு போர் செய்த காலத்து அவன் மாளிகையில் சிறப்புற வாழ்ந்த பெண்கள் உனக்குக் கவரி வீசும் பெண்களாயினர். அவன் மரபிலும் உனக்குச் சந்ததி நேரும்படி அவன் மகளை நீ கைப்பிடித்தாய், அவனுடைய பட்டத்து யனை நின் பட்டத்து யானையின்மேல் ஏறும் படியாயிற்று. அவன் புயங்களில் அணிந்த மாலைகள் உன் திருவடிகளில் சூடப்பட்ட மாலைகள் ஆயின' எனப் பழஞ் சிறப்புடைய சோழனை வென்று அவன் ஆயங்களைக் கவர்ந்து அவன் மகளை மணந்து அவனது வழிபாடு பெற்ற கோப்பெருஞ் சிங்கனுடைய வெற்றிச் சிறப்பைப் புலவர் புகழ்ந்தவாறு.*

மேற்கண்டவாறு எஸ்.ஆர். பாலசுப்பிரமணயிம் தம் "பேணு செந்தமிழ் வாழப் பிறந்த காடவன் கோப்பெருஞ் சிங்கன்" என்னும் நூலில் இறுதியில் வெளியிட்டுள்ளார்.

* கலவெட்டு இலாக்காத தலைவருககு நன்றி.

## பிற்சேர்க்கை - 3

## ஆற்றூர்ச் சாசனம் (தமிழாக்கம்)

ஸ்வஸ்திஸ்ரீ – இது மூவுலகத்து அரசர்களுடைய முடிகளிலுள்ள மாணிக்கங்களுக்கு அலங்காரம் செய்வது.

பூமியிலுள்ள நரசிரேஷ்டரான (கோநரசிம்மன்) கட்க மல்லனுடைய சாசனம். மூன்று உலக அரசர்களுக்கும் தலைவன். எல்லா உலகத்திலுள்ள அரசர்களுடைய தலையிலுள்ள இரத்தினத்தில் தன்னுடைய திருவடித் தாமரைகளை வைத்தவன். சோழ இராச்சியத்தை ஸ்தாபித்தவன். பாண்டிய மண்டலாதிபதி. தொண்டை மண்டலமான தாமரைக்குச் சூரியன் போன்றவன்.

கர்நாடகமான சமுத்திரத்திற்கு அகத்தியர் போன்றவன். ஆந்திரமாகிய சமுத்திரத்திற்கு மந்தரமலை போன்றவன். சேதி மன்னனுடைய மலைக் கோட்டைகள், அகழிகள் இவற்றை அழித்து ஜயபேரிகை முழக்கியவன்,

எதிரி அரசர்களை அமுக்குவதில் இயந்திரப் பொறி போன்றவன். பகை மன்னருடைய பெருந்தேவியரின் கன்னம், காது, கழுத்து இவற்றிலுள்ள மங்கல அணிகளாகிய நரிகளுக்குச் சுழல் காற்று போன்றவன்,

அபிமான துங்கன், சங்கிராமராமன், அசகாயவீரன், ஆகவீதிரன், பரத மல்லன், பாரதமல்லன், கட்கமல்லன், பல்லவ குல பாரிசாதன், காடவகுல சூடாமணி, அவநி ஆளப்பிறந்தான், அவனிபாலன ஜாதன், மங்கள நிலையன், வீர விநோதன், தியாகத்தைச் சுவைப்பவன் (தியாக விநோதன்), பகை மன்னன் கண்டகோபாலனின் பண்டாரத்தைக் கவர்ந்தவன் (கண்டபண்டாரலுண்டாகன்), பகை

மன்னாின் அந்தப்புரத்தைச் சிறைப்பிடிப்பவன் (பரராஜ அந்தப்புர பந்திகாரன்), இலக்கியப் பெருங்கடல் (ஸாஹித்யரத்நாஹரன்), மல்லைக் காவலன் (மல்லாபுரி நாயகன்), காஞ்சிக் காவலன் (காஞ்சி புரிகாந்தன்), காவிரியை மணந்தவன் (காவேரி காமுகன்), பாற்கடலில் பிரிய நாயகன் (க்ஷீராபகா தக்ஷிண நாயகன்), பெண்ணைக் கேள்வன் (பெண்ணா நதி நாயகன்), கநக சபாபதி சபா சர்வகார்ய ஸர்வகால நிர்வாகன், கோப்பெருஞ்சிங்கன் (கோபிருது சிம்மகாராஜா:) ஸகலபுவன சக்கரவர்த்தி.

கட்கமல்லனான அரசன் தொண்டை மண்டலத்திலுள்ள அரசர்களால் பிரசித்தமான இராசராச நல்லூர் ஆகிய ஆத்தூர் நகரத்தையும், ஆளுடைய நாயனாருக்கு வெளிக்கோபுரம், மதில், இரு சுடரளவும் நிகழ்த்துவதற்குரிய பூசை முதலியவற்றையும் செய்வித்தவன்.

எல்லா அரசர்களிடமிருந்தும் திறைபெறும் ஜகதேக வீரனான கட்கமல்லன் பூமியை ஆண்ட காலத்தில் காஞ்சி கைப்பற்றப்பட்டது. அங்கம் கலங்கியது. மத்திய தேசம் முறியடிக்கப்பட்டது. அளகாபுரி மிகவும் நடுங்கியது.

## கோப்பெருஞ் சிங்கனின் திருப்பணிகள்

கோப்பெருஞ்சிங்கன் வைதிக மதத்தைச் சேர்ந்தவன். சிறந்த சிவ பக்தன். சிதம்பரம் நடராசப் பெருமானிடம் பெரும் பற்றுடையவன். இவன் "கநக சபாபதி சபா சர்வகார்ய சர்வ காலா நிர்வாஹன்" என்று பாராட்டப்படுகிறான். இவனுடைய ஐந்தாம் ஆண்டில் தோன்றிய ஆற்றூர்ச் சாசனம் தில்லையம்பதியின் தெற்குக் கோபுரத்தைக் கட்டுவதற்கு இவன் செய்த தானத்தைக் குறிக்கிறது. இக் கோபுரம் இவனது பெயரால் **'சொக்கச்சீயன் திருநிலை ஏழுகோபுரம்'** என்று வழங்கப்பட்டது. இது ஏழு நிலைகளையுடைய கோபுரம் ஆகும். இத்திருப்பணிக்கு உடலாக ஆற்றூர் ஆன இராசராச நல்லூரில் நிலம் முன்னூற்றொன்றே

முக்காலும், கொல்லைப் புன்செயும் சில்காசு ஆயங்களும் தேவதான இறையிலியாக இம் மன்னன் தனது ஐந்தாவது ஆண்டு ஆடி மாதம் முதல் (கி.பி. 1248) இடப்பட்டன. அச்சாசனம் பின்வருமாறு:

S.I.I. Vol. XII, No.119. 285/1921.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சகலபுவன சக்கரவர்த்தி கோப்பெருஞ் சிங்க தேவர்க்கு யாண்டு 5-ஆவது, தனியூர் பெரும்பற்றப் புலியூர் உடையார் திருச்சிற்றம்பல முடையாருக்கு அழகியசீயன் அவனியாளப் பிறந்தான் காடவன்,

2. கோப்பெருஞ்சிங்கன். இந் நாயனார் கோயில் தெற்கில் திருவாசல் சொக்கச்சீயன் திருநிலை எழுகோபுரமாகச் செய்யத் திருப்பணிக்கு உடலாக ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக் காட்டுக் கோட்டத்து ஆற்றூர் நாட்டு ஆற்றூரான ராஜராஜ நல்லூருக்கு எல்லை,

3. ஈஞ்சலாற்றுக் கீழ் கரைக்கு மேற்கும் செய்யாறு நீரோடுகாலுக்கு வடக்கும், வில்லியன் பாக்கத்து எல்லைக்குக் கிழக்கும் சாத்தனம் பாக்கத்தும் கோன்கோட்டு எல்லைக்கும் தெற்கும் நடுவுள்பட்ட தரப்படி நிலம் முந்நூற்றறுபத்து நால்வேலி. இதில் உள்ளூர்த்,

4. தேவர்கள் தேவதானங்களும் திருவிடை யாட்டங்களும் பிடாரிபட்டி துக்கைபட்டி பள்ளிச் சந்தும் உள்பட நிலம் நாற்பத்தறு வேலியும், அகரம் மஹாவிபூதிச் சதுர்வேதிமங்கலம் நிலம் பன்னிருவேலியும் செட்டலூர்ப் பிரான் பட்டனுக்கும் மாடபொசை வரதராச பட்டனுக்கும்,

5. வங்கிபுரத்துக் கருணாகர பட்டனுக்கும் பட்டவிருத்தி நிலம் ஒருவேலியும் கடிகையார் இறையிலி நிலம் மூன்றே காலும் ஆக நிலம் அறுபத்திரண்டேகால் நீக்கி நின்ற நிலம் முந்நூற்றொன்றே முக்காலும் கொல்லைப் புன்செயும், காசாயங்களும் வெட்டி, பாடி காவலும் அரிபொடி காவலும் உள்பட,

6. நெல்லாயங்களும், காசாயங்களும், இவ்வூர்த் தேவர்கள் தேவதானம் அகங்கள் உள்பட இறையிலிகளுக்கு முன்பு கொண்டுவரும் ஆயங்கள் உட்பட அனைத்தாயங்களும் உட்பட தேவதான இறையிலியாக 5-ஆவது ஆடி மாதம் முதல் சந்திராதித்தவரை செய்வதாக இட்டோம். உடையார் திரு வேகம்பமுடைய,

7. நாயனார் கோயிலிலும் ஆற்றூர் திருமுத்தீசுவர முடையார் கோயிலிலும் கல்லும் வெட்டி, நாற்பால் எல்லையிலும் திருச்சூல ஸ்தாபனமும் பண்ணி கோயில் பண்டாரத்தார்க்கு ஏறக் கடமை குடிமை போக்கறுப்பார்களாகச் சொன்னோம். இப்படிச் செய்வதே. இவை கோப்பெருஞ் சிங்கன் எழுத்து.

8. என்றும் இவை குருகுலராசன் எழுத்தென்றும்,

9. இவை வில்லவராசன் எழுத்தென்றும் வந்ததிரு,

10. முகப்படிக் கல்வெட்டியது.

(சடையவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு ஒன்றில் (S.I.I. Vol IV, No.624 -. 176/1892) பின்வருமாறு குறிப்புள்ளது.

"சுந்தர பாண்டியன் திருநிலை எழு கோபுரச் சந்நிதியில் சொக்கச் சீயன் குறளில், கீழ்ப்பக்கத்துக் கீழை மட சந்தானமாகத் திருநோக்கு அழகியான் திருமடம் என்னும் பெயரால் செய்வித்த மடத்துக்கு மட சேஷமாக நாயகரும் நாச்சியாரும் எழுந்தருளும் திருப்புற்குடையில் அத்யயனம் பண்ணிச் சேவிக்கவும்" ஒரு தானம் செய்விக்கப்பட்டது. இக் கோபுரம் சொக்கச் சீயனான கோப்பெருஞ் சிங்கன் கட்டிய தெற்குக் கோபுரத்தையே குறிக்கும்.

# பிற்சேர்க்கை - 4

## திரிபுராந்தகக் கல்வெட்டு

கோப்பெருஞ்சிங்கனுடைய திரிபுராந்தகக் கல்வெட்டில் அவன் சிதம்பரத்தின் கீழைக் கோபுரத்தை எழுநிலைக் கோபுரமாக எடுப்பித்த செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது. நான்கு திக்கிலும் உள்ள மன்னர்களை வென்று, கொண்ட பொருளால் துலாபாரம் செய்து இத்திருப்பணியைச் செய்வித்தான். இக் கோபுரம் கமார் கி.பி. 1262-இல் கட்டப்பட்டிருக்கலாம். இக் கல்வெட்டு வடமொழியில் அமைந்துள்ளது. அதன் தமிழாக்கம் பின்வருமாறு:

1-2. சகல புவன சக்கரவர்த்தியும், காடவகுல திலகனும் கர்நாடக ராஜமான மர்த்தனனும், சோழகுல கமலாகர திவாகரனும், பாண்டிய ராஜ்ய ஸ்தாபனா சூத்ரரானும், ஸகலகுண கண ரத்நாகரனும், ஸமஸ்தஜன உபகரணீபூத ஸாம்ராஜ்ய ஸம்பதனும், ஸரஸ ஸாகித்ய ஸாம்யாத்திகனும், பரதார்ணவ கர்ணதாரனும், பவித்ர கீர்த்தியனும், கநகசபாபதி நாத சரணாரவிந்த மதுகரமானவனும், ஸர்வக்ஞ கட்க மல்லனும் ஆகிய கோப்பெருஞ்சிங்கனால்.

3. இடப்புறத்தில் மனையாளான பார்வதி பார்த்துக் கொண்டிருக்கையில் மங்களகரமான ஆகாயம் என்னும் மேடையில் ஒப்பற்ற ஆனந்த வடிவோடு நடனம் செய்பவரும் சந்திர ஜடாதரருமாகிய

பரமேசுவரர், உலகைக் காப்பதில் விழிப்புடன் இருப்பவனும் ஒப்பற்ற சிவபக்திப் பெருக்கு நிறைந்தவனுமாகிய அவனியாளப் பிறந்தானை வெகுகாலம் காப்பாராக.

4.அவனியாளப் பிறந்தான் - காவேரி பாயும் நாட்டை வென்றதனால் சம்பாதிக்கப்பட்ட பொருள்களால் கனகசபைக்குக் கிழக்கே (கீழைக் கோபுரத்தை) மேருமலை போன்றதும், தேவர் கூட்டங்களுடைய மகுடங்களோடு இடறக் கூடியதுமாகிய கோபுரத்தை தன் பெயரால் சிறிது காலத்தில் எடுப்பித்தான்.

5-6. கூட்க மல்லனாகிய அரசன் ஏழு சமுத்திரங்களையுடைய அலைகளையும் கடக்கக் கூடிய திறமையுடைய புகழை உடையவன். அவன் ஏழு தீவுகளையும் வென்று ஈட்டிய பொருளால் ஏழு உலகங்களுக்கும் நலன் தரக்கூடிய ஆதிநடேசனான நடராசனுக்கு, நட்சத்திரக் கூட்டங்களை இடிக்கக் கூடிய, அன்பர்களின் விருப்பத்தைப் பூர்த்திசெய்யும் ஸ்ரீ கோபுரத்தை எடுப்பித்தான்.

7. நடராசனும், சபையிலுள்ள எல்லாத் தேவர்களும் நிரம்பியிருப்பதான காட்சியை உடைய கோபுரத்தை அவனியாளப் பிறந்தானும் நற்குணங்களுக்கு இருப்பிடமானவனும் ஆகிய காடவகுல மன்னன் - ஏழு உலகங்களையும் மக்கள்

கண்முன் கொண்டு வருவதற்காகவே ஏழுநிலை அடுக்குகளை உடைய கோபுரத்தைச் சுத்தமான தன்புகழால் எடுப்பித்தான்.

8. கிழக்குத் திக்கிலுள்ள அரசர்களை வென்று அவர்கள் கொடுத்த பொன்னைத் துலாபாரம் செய்து, நிச்சங்கமல்லன், பார்வதி சமேதராக இருக்கும் நடேசன் நித்யமான சபையின் கிழக்குப் பக்கத்தில் கீழைக் கோபுரக் கீழ்ப் பகுதியைச் சூரியன் முறிந்து விழுந்தது போன்று ஒளி மிக்கதாக நிர்மாணித்தான்.

9. கீழைக் கோபுரத்தின் தென்பாகத்தை – சோழ மன்னன் பயத்தினால் குழந்தையைப் போல நடுங்கவும், அவனைத் தூக்கி விட்டு உறுதியான புத்தியை உடைய இவ்வரசன் சோழ மன்னனின்றும் கவர்ந்த பணத்தினால் துலாபாரம் செய்து, அந்தத் தங்கத்தால் கோபுரத்தினுடைய தக்ஷிண பாகத்தை அழகியதாகச் செய்தான், இந்தத் திரிபுவனநாதன்.

10. சிவனுடைய கோபுரத்தின் மேற்குப் பாகத்தை, கர்நாடக ராஜ்யத்தை அழித்து அந்நாட்டு மன்னர்களுடைய பொன்னால் துலாபாரம் செய்து கிருபாணமல்லன் அத்தங்கத்தால் எடுப்பித்தான்.

11. கட்கமல்லன் – ஆந்திர நாட்டரசரைப் படைவலியால் வென்று, அவர்களால் அனுப்பப்பட்ட காணிக்கைப் பொருளால் துலாபாரம் செய்து, தப்ரசபாபதியின் ஸ்ரீ கோபுரத்தின் வட பாகத்தை – அந்தத் தங்கத்தால் மின்னல் கூட்டம் போல

நிர்மாணித்தான்.

12. ஒப்பற்ற புகழை உடைய மகாராஜஸிம்மன் கோபுரமாகிய ராஜ்யத்தில் நடராசனுடைய கோபுரத்துக்கும் கும்பாபிஷேகத்தைச் செய்தான். தோற்ற மன்னர்களின் கிரீடங்களால் கோபுரத்துக்குரிய தங்கக் கலசங்களைச் செய்தான்.

13. திராக்ஷாராமம், காஞ்சீபுரம், ஸ்வேதாரண்யம், திருவானைக்கா (ஜம்பு) வீரஸ்தானம், மதுரை, காளஹஸ்தி முதலிய இடங்களில் பூபோகஜா தனாகிய மன்னன், நிறைந்த தங்கமயமான படிச்சட்டம் ஆகியவற்றைத் திரிபுர ஸம்ஹாரியான பரமேசுவரருக்குக் கொடுத்தான்.

14. குணத்துக்கு இருப்பிடம், புண்ணிய நிலையம் ஆன ஜீய மகாராஜனுக்கு நல்லொழுக்கம் நிறைந்தவரான சீலாவதியிடம் பிறந்தவனும், அவனியை ஆளப் பிறந்தவனும், எல்லாவற்றையும் அறிந்தமைக்கு இருப்பிடமானவனுமான கட்கமல்லன் தங்கமயமான மேடையில் (கனக சபையில்) நாட்டிய நடனத்தில் ஆனந்தமாகப் பிரகாசிக்கிற பார்வதியினிடத்தில் அன்புடைய பரமேசுவரனால் நன்கு அனுகிரகிக்கப் பட்டவன். அவன் எல்லாத் திருப்பணிகளையும் செய்தான்.

15. நடராச மண்டபத்தின் மேற்றிசையில் மரகதக்கல் வடிவத்திலுள்ள பரமேசுவருக்குச்

சாசுவதமான இருப்பிடத்தைச் செய்தான். அது அவனியாளப் பிறந்தவனால் – மயில் தோகையின் கூட்டமானது ஆகாயத்தில் சூழ்ந்திருப்பதுபோல நீலமாகத் தோன்றிற்று. மங்களம்.

## பிற்சேர்க்கை - 5

# திரிபுவனிக் கல்வெட்டு

புதுவை நாட்டிலுள்ள திரிபுவனியில் வரதராஜப் பெருமாள் கோயிலின் தென்சுவரிலுள்ள கோப்பெருஞ்சிங்கனுடைய சாஸசனம் வடமொழி தென்மொழி என்ற இருமொழிகளிலும் உள்ளது. அது இம்மன்னனின் பல விருதுகளையும், இவன் வென்று ஆண்ட நாடுகளையும் (ஆந்த்ர கர்நாடக சோள மத்திய துண்டீர நாடுகள்) கூறுவதோடு திரிபுவனமாதேவி ஏரிக்கரையில் ஹேரம்ப கணபதிக்கு (யானைமுகம், 10 கரங்கள், சிம்ம வாஹனம் – இலட்சணங்கள் உள்ள சிற்பம் என்று சிற்பசாத்திரம் கூறும்) ஒரு கோயில் கட்டியதாகவும், உடைந்த ஏரிக்குக் கரை கட்டி, மதகுகள் அமைத்து, கலிங்குகள் செய்ததாகவும் குறிப்பிடுகிறது.

அது பின்வருமாறு :

முதல் நான்கு வரிகள் தமிழில் உள்ளன. ஏனைய 6 வரிகள் வடமொழியில் உள்ளன. தமிழ்ப்பகுதி பின்வருமாறு:

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஸகலபுவன சக்கரவர்த்தி அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ்சிங்கன்.

2. திரிபுவன மாதேவி ஏரிகரை பல இடங்களிலும் உடைந்து, ஏரியும் துருந்து, மதகுகளும் முறிந்து, 3. கலிங்குகளும் அழிந்து கிடக்கையில் உடைந்த மடைகளையும் அடைத்து, ஏரியும் கல்லி கரையும் கற்கட்டி மதகுகளும் அட்டுவித்துக் கலிங்குகளும் செய்தபடி.

**வடமொழிப் பகுதியின் தமிழாக்கம்**

5. சிறந்த கிராமத்தின் தடாகக் கரையில் ஹேரம்ப விநாயகருக்கு அவநியாளப் பிறந்தார் கற்களால் மண்டபத்தை எடுப்பித்தார்.

6. அவ்வவநியாளப் பிறந்தார் திரிபுவனமாதேவி என்ற கிராமத்தில் பல இடங்களிலும் கரைகள் உடைந்த தடாகத்தை ஆதிசேஷனுடைய படங்களிலுள்ள மாணிக்கம் தெரியும் வரையில் வெட்டினார். மறுபடியும் கரைகளை நன்கு விரிவாகக் கட்டியமைத்தார்.

7. காடவ வம்சத்தில் முத்துப் போன்றவரும் நில உலகத்தைப் பாதுகாக்கப் பிறந்தவரும் ஆகிய மன்னர் சோழநாடு, மத்திய நாடு, தொண்டை நாடு இவற்றை வென்று கவரப்பட்ட செல்வத்தால் இந்தக் கிராமத்தில், மலைப்பாறைகளால் சமுத்திரத்தில் சேதுபந்தனம் கட்டிய இரண்டாவது இராமரைப்போல, இந்த உத்தமமான கரையை நிர்மாணித்தார்.

8. கத்திச் சண்டையினால் ஆந்திர நாட்டையும் கர்நாடகத்தையும் வென்றவரும் பூமியைப் பாதுகாக்கப் பிறந்தவரும் ஆகிய இம் மன்னர் நீர் வெளியேறும் பாதைகளைக் கல்லமைப்பால் உறுதி[illegible]டுவித்தார்.

9. இம் மன்னருடைய கீர்த்தியாகிய நதியின் வெள்ளம் திசைகளாகிய சுவர்களைத் தாக்குகின்றது. இது மன்னர் கலிங்குகளை நூற்றுக்கணக்கான பாறைகளால் குளத்தில் நிர்மாணித்தார்.

மேலே கூறப்பெற்றுள்ள கல்வெட்டுக்களும் பொருளும் அறிஞர் எஸ்.ஆர். பாலசுப்பிர மணியம் அவர்களது நூலிலிருந்தே சேகரிக்கப் பெற்றவை.

# பிற்சேர்க்கை - 6
# காடவர் தலைநகர் சேந்தமங்கலம் அகழாய்வு

**ஊர் அமைப்பு**

*சென்னை - திருச்சி நெடுஞ்சாலையில், விழுப்புரத்தி* லிருந்து 30 கி.மீட்டர் தொலைவில் தெற்கிலும், உளுந்தூர் பேட்டையிலிருந்து 15 கி.மீட்டர். தொலைவில் வடகிழக்கிலும் அமைந்துளள சிற்றூர் சேந்தமங்கலம் *இச்சிற்றூர் கி.பி.* 13-14 ஆம் நூற்றாண்டுகளில் காடவர் குல வேந்தர்களுக்குத் தலைநகரமாகச் சிறப்புடன் திகழ்ந்திருக்கிறது. இத்தலைநகரில் கோடடை, அரண்மனை, கோயில் ஆகியவை ஏற்படுத்தப்பெறறு ஒரு பெருநகரமாகக் காட்சி தந்திருக்கிறது. தற்பொழுது விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தைச் சார்ந்த ஒரு ஊராக அமைந்திருக்கிறது.

**பெயர்க் காரணம்**

சேந்தன + மங்கலம் என்பதுதான் சேந்தமங்கலம் என்று வழங்கப் பெற்றிருக்கும். சேந்தன் என்பது பாண்டியர்களுடைய பெயர். செழியன் சேந்தன் என்று ஒரு பாண்டிய மன்னன் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் மதுரையை ஆட்சிப் புரிந்திருக்கிறான். அவனது பெயரைக் கொண்ட ஒரு மங்கலமாக (அநதணரகள் வாழ் ஊராக) இது இருந்திருக்கலாம். ஆதலால்தான் "சேந்தன் மங்கலம்" என்று வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வூரின் நிலப் பகுதியில் கள ஆய்வு செய்த பொழுது பாண்டியர்களின் செப்பு முத்திரை (இரு கயல், செண்டு, பிறை) ஒன்று கிடைத்திருப்பதும்

மேற்கூறப்பெற்ற அநுமானத்தை உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. இப்பகுதி திருமுனைப்பாடி நாட்டுப்பகுதியைச் சார்ந்ததாகக் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளது.

**சேந்தமங்கலத்தில் அகழாய்வு**

தமிழ்நாட்டரசு தொல்லியல்துறை சென்ற 1995-ஆம் ஆண்டில் இவ்வூரில் அகழாய்வு செய்து, மறைந்த நகரான சேந்தமங்கலத்தின் அமைப்பைக் கண்டறிய விரும்பியது. அப்பொழுது இத்துறையின் இயக்குநராக இந்நூலாசிரியர் பணிபுரிந்தார். இந்நூலாசிரியரின் வழிகாட்டுதலில் இங்கு அகழாய்வு மேற்கொள்ளபபட்டது. இவ்வகழாய்வு துறையைச் சார்ந்த தொல்லியல் அலுவலர்கள், காபபாட்சியர்கள், அகழாய் வாளர் ஆகியோர் மேற்பார்வையில் நடைபெற்றது.

இவ்வூரின் மேற்புறத்தே அமைந்திருந்த ஒரு மேட்டில் மொத்தம் 8 குழிகள் அகழப்பெற்றன. அவற்றில் சில கட்டடச் செங்கற் சுவர்களும், ஒரு கிணறும் கண்டறியபபட்டன சுவர்கள் கோட்டையைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது.

**கிடைத்த தொல்பொருட்கள்**

இங்கு நிகழ்த்தப் பெற்ற அகழாய்வில் பெரும் அளவில் சோழர் காலக் கூரை ஓடுகளும், இரும்பு ஆணிகளும், நூல் நூற்க உதவும் கருவிகளும் (தக்களிகள்) மணிகளும், சுடுமண் விளக்குகளும், பல வண்ணப்பானையோடுகளும், தந்தத்தால் செய்யப்பெற்ற தாயக்கட்டையும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

இங்கு கிடைக்கப்பெற்றுள்ள சுடுமண் பொம்மைகள் மிக மிக முக்கியமானவைகளாகும். ஒரு சுடுமண் உருவம் காலத்தால் மிக முந்தையதாகும். இதன் காலத்தைக் கி.மு.2-ஆம்

நூற்றாண்டு எனக் கணிக்கலாம். இது ஒரு **'மிதுன'** பொம்மையாகும். ஆணும் பெண்ணும் தங்கள் ஒரு காலைக் குத்திட்டு வைத்து, ஒரு காலை மடித்து வைத்துக் கொண்டு நெருக்கமாக நிற்கும் நிலையில் வடிக்கப் பெற்றிருக்கிறது.

பிற சுடுமண் சிற்பங்களில் குறிப்பிட்டுக் கூறவேண்டியவை **'தவழும் கண்ணன்'** பொம்மைகளாகும். இப்பொம்மைகள் சோழர்காலத்தில் செம்பால் செய்யப்பெற்ற தவழும் கண்ணன் சிலைகள் போலவே காட்சியளிக்கின்றன. இத்திருமுனைப்பாடிப் பகுதியில் காடவர் காலத்தில் வைணவமதம் செல்வாக்கோடு திகழ்ந்திருக்கும் போன்று உணரமுடிகிறது. மேலும் வைணவ ஆழ்வார்களோடு தொடர்புடையத் திருக்கோயிலூர், சேந்தமங் கலத்துக்கு அருகாமையில் உள்ள சிறந்த வைணவத்தலம் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

**அகழாய்வு காட்டும் சேந்தமங்கலம்**

இவ்வகழாயவில் கிடைக்கப்பெற்ற கட்டடப் பகுதிகள், தொல்பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டு பார்க்கையில், சேந்தமஙகலப் பகுதி கி மு. 3-ஆம் நூற்றாணடிலிருந்தே மக்கள் வாழ்விடப் பகுதியாக விளங்கியிருக்கிறது என்பதும், கி பி.13-ஆம் நூற்றாண்டளவில் கோட்டை, அரண்மனை போன்ற செங்கற் கட்டடங்கள் ஏற்படுத்தப்பெற்று ஒரு தலைநகரமாக வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதும், இங்கு சுடுமண் உருவங்கள் செய்யும் கலை, துணி நெய்யும் கலை, இரும்பை உருக்கி பொருட்கள் செய்யும் கலை ஆகியவையும்' கட்டடக்கலையும் சிறந்து விளங்கியிருத்தல் வேண்டும் என்பதும் உணர முடிகிறது.

# இந்நூலாசிரியரின் பிறநூல்கள் பட்டியல்

1. கல்வெட்டின் கதை
2. கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் (Vol. I)
3. கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் (Vol II)
4. கன்னியாகுமரிக் கல்வெட்டுகள் (Vol III)
5. கல்வெட்டியல்
6. கல்வெட்டு ஓர் அறிமுகம்
7. காலச் சுவடுகள்
8. ஆய்வுக் கொத்து
9. பூம்புகார்
10. மனோரா
11. ஆய்வுத்தேன்
12. முத்தரையர் - முதற் பதிப்பு
13. முத்தரையர் - இரண்டாம் பதிப்பு
14. தொல்லியல் கட்டுரைகள்
15. களப்பிரர்
16. தொல்லியல் கருத்தரங்கம் பகுதி – 11
17. இராசராசேச்சரம்
18. அருண்மொழி
19. கல்லெழுத்துக்கலை (தமிழ்நாடு அரசு பரிசு பெற்றது)
20. தமிழக வரலாற்றுச் சின்னங்கள்
21. கண்டி மன்னர் கல்லறை
22. வளரும் தமிழகத்தில் மலரும் மாவட்டத்தலைநகர் – நாகப்பட்டினம்
23. திருககோடிகா கல்வெட்டுகள்
24. கும்பகோணமும் மகாமகப் பெருவிழாவும்
25. தமிழகததில் தொலமாந்தர் பண்பாடு
26. தமிழ்க் கீர்த்தனைகள்
27. திருக்குறள் பழைய உரை
28. திருவீழிமிழலைக் கல்வெட்டுகள்
29. தமிழர் நாகரிகம்
30. தமிழர் காசு இயல் – முதல் பதிப்பு
31. தமிழர் காசு இயல் – இரண்டாம் பதிப்பு
32. பெருமுக்கல் க[illegible]கள்
33. தொ[illegible] [illegible]ரிய க[illegible]டுபிடிப்புக[illegible]
34. பூமபுகாரும், கடல அகழாய்வும்
35. அரசு கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலாக வெளியீடுகள் – மொத்தம் 51
36. தமிழர் தெய்வங்கள்
37. வன்னியர்

38. தடயம்
39. வரலாற்றுத் தடயம்
40. தொன்மைத் தடயம்
41. மாமல்லபுரம்
42. தமிழ் எழுத்தியல் வரலாறு
43 சோழ வேந்தர் பரம்பரை பிச்சாவரம்
வன்னியர் பாளையக்காரர் வரலாறு – முதல் பதிப்பு
44 பண்டைத் தடயம்
45. வன்னியர் மாட்சி
46 சமணத் தடயங்கள்
47. தமிழகச் சிற்பிகள் வரலாறு
48 வன்னிய வரலாறு முதல் தொகுதி
49. தமிழகம் அரப்பன் நாகரிகத் தாயகம்
(திருப்பூர் தமிழ்ச் சங்கம் பரிசு பெற்றது)
50. வேலூர் மாவட்டத் தடயங்கள் தொகுதி 1
51. வேலூர் மாவட்டத் தடயங்கள் தொகுதி 2
52. பெரம்பலூர் மாவட்டத் தடயங்கள்
53. வன்னியர் – இரண்டாம் பதிப்பு
54. தமிழக வரலாற்று வரிசை – 7 (களப்பிரர் காலத் தமிழகம்)
55. கடலூர் மாவட்டத் தடயங்கள் – தொகுதி 1
56. கடலூர் மாவட்டத் தடயங்கள் – தொகுதி 2
57. தொன்மைத் தமிழும், தொன்மைத் தமிழரும்
58 வன்னியர் வரலாறு – இரண்டாம் தொகுதி (பகுதி – 1)
59. வன்னியர் வரலாறு – இரண்டாம் தொகுதி (பகுதி – 2)
60. இராசராசேச்சுரம் – இரண்டாம் பதிப்பு
61. கல்வெட்டு ஓர் அறிமுகம் – இரண்டாம் பதிப்பு
62. சோழவேந்தர் பரம்பரை வன்னியப் பாளையக்காரர் வரலாறு
– இரண்டாம் பதிப்பு
63. கலலெழுத்துக்கலை – இரண்டாம் பதிப்பு
64 தமிழர் பண்பாட்டுச் சிதறல்கள்
65. நெல்லை அதன் வரலாற்றெல்லை
66. காஞ்சிபுரம் மாவட்டத் தடயங்கள்
67. வன்னியர் மாட்சி – இரண்டாம் பதிப்பு
68. இராசராசேச்சுரம் – மூன்றாம் பதிப்பு
69 [illegible] பாளையக்காரர்கள் வரலாறு
70. தமிழக வரலாற்றுத் தடயங்கள்
71. சோழர் செப்பேடுகள்
72. சோழர் செப்பேடுகள் – 19
73. காஞ்சிபுரம் மாவட்டத் தடயங்கள் (கலை)



காடவ வேந்தன் நந்திவர்மப் பல்லவமல்லன் அரியணையில் அமர்ந்திருத்தலும்,
அம்மன்னனே வீதியுலா எழுந்தருளலும், வைகுந்தப்பெருமாள் கோயில்,
காஞ்சிபுரம், கி.பி. 8-ஆம் நூற்றாண்டு.